# இடதுசாரிய நடவடிக்கை

நெருக்கடியின் முன் வர்க்கத்தின் தீர்வு





# இடதுசாரிய நடவடிக்கை

## நெருக்கடியின் முன்னால் வர்க்கத்தின் தீர்வு

முன்னிலை சோஷலிசக் கட்சி

# இடதுசாரிய நடவடிக்கை

## நெருக்கடியின் முன்னால் வர்க்கத்தின் தீர்வு

முதாலாவது பதிப்பு - ஆனி 2015

அச்சகம் : இஸ்பேக்றா அட்வேர்ட்டைசிங்
சாத்ஹர்மா திலகராம வீதி
கொனஹென
கடவத்த

வெளியீடு : மலிமா பப்ளிசர்
41/32, 1வது வீதி
ஹன்ட ஹென வாத்தே வீதி
தேபாநம
பனிப்பிட்டிய

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | தமிழ் வெளியீடுக்கான முன்னுரை | I |
| 01. | ஒரு வார்த்தை | 01 |
| 02. | மக்கள் சக்தி மற்றும் மக்களாட்சிக்காக தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டம் | 12 |
| 03. | மாற்றுப் பொருளாதாரத்திற்கான வேலைத்திட்டம் | 59 |
| 04. | இலங்கையின் தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கான வழி | 131 |
| 05. | உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிபடையாகக் கொண்ட, வெளிநாட்டுக் கொள்கையைத் தயாரிப்பது எப்படி? | 174 |

1

# முன்னுரை

”இடதுசாரிய நடவடிக்கை - நெருக்கடியின் முன்னால் வர்க்கத்தின் தீர்வு” என்ற இந்த நூல் 2014 அக்டோபர் மாதத்தில் முதன் முதலாக எழுதப்பட்டு, அம்மாத இறுதியில் சிங்களத்தில் வெளியிடப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்கு எல்லோரும் தயாராக இருந்த நிலையில், தேர்தலை அன்மித்து இந்நூல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மக்கள் செல்வாக்கை இழந்திருந்ததுடன், தனியாக போட்டியிட்டு வெற்றி பெறும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும் இருக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது என்ற கோஷத்தின் கீழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், கலைஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் லிபரல் கருத்துக்களை கொண்டவர்களும் ஒன்றிணைந்து நடத்திய ஜனநாயகம் சம்பந்தமான உரையாடல்கள் முன்னணிக்கு வந்ததும் இந்த கால கட்டத்தில்தான். மோசமான நிலையிலிருந்த

முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு கும்பலின் ஆட்சிக்குப் பதிலாக இன்னொரு முதலாளித்துவ கும்பலிடம் அதிகாரம் மாற்றப்படும் என்பதை நாங்கள் உணர்ந்திருந்தோம். லிபரல் புத்திஜீவிகள் எந்த புரிதலுமின்றி முகத்தை மாத்திரம் மாற்றும் இந்த கொடூர சமூக பொருளாதார முறைக்கு புத்துயிரளிப்பதற்கு அந்த திட்டத்தை சுற்றி அணிதிரண்டிருந்ததையும் நாம் அறிந்திருந்தோம். ராஜபக்ஷ ஆட்சியை தூக்கி எறியும் நோக்கத்தில் இருந்த மக்கள் சக்திகளுக்கும் இறுதியில் கிடைக்கப்போவது ஏமாற்றம் மட்டுமே என நாங்கள் நம்பினோம்.

ராஜபக்ஷ ஆட்சி தொடர்பிலான மக்கள் எதிர்ப்பு இரு முன்னணிகளில் உருவாகியிருந்தது. ஒன்று, அந்த ஆட்சியின் நவ தாராளமய பொருளாதார கொள்கைக்கு எதிரானது. மற்றது ஜனநாயத்திற்கு முரணான சர்வாதிகாரத்திற்கு எதிரானதாகும். தனியார் துறை ஊழியர்களின் சமூக பாதுகாப்பு சேவைகள் வெட்டப்படும் நவ தாராளமய கொள்கையை எதிர்த்து கட்டுநாயக தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தின்போது, போலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ரொஷான் சானக என்ற இளம் தொழிலாளி கொல்லப்பட்டதுடன் பொருளாதார உரிமைகள் சம்பந்தமான கோஷமும், ஜனநாயகம் சம்பந்தமான கோஷமும் ஒன்றிணைந்தது. தமது தொழிலுக்கான சமூக நலன்புரிகளை கேட்டு சிலாபம் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தை அடக்குவதற்கு பொலிஸார் சுட்டதில் அந்தோனி என்ற மீனவர் கொல்லப்பட்டமையினாலும், கல்வியை தனியாரிடம் ஒப்படைக்கும் நவ தாராளமய கொள்கைக்கு எதிராக மாணவர் அமைப்பு நடத்திய போராட்டத்தின்போது சானக மற்றும் சிசித ஆகிய மாணவர் தலைவர்கள் இரகசியமான முறையில் கொல்லப்பட்டமையினாலும், முதலீடுகளை வரவழைத்துக்கொள்வதற்காக சூழலையும் மனித வாழ்வையும் நாசமாக்கும் நவ தாராளமய பொருளாதார கொள்கைக்கு எதிராக கம்பஹா மாவட்ட ரத்துபஸ்வல

மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் சுட்டதில் மூன்று கிராமவாசிகள் கொல்லப்பட்டமையினாலும் அந்த கோஷங்கள் ஒன்றிணைந்தன. தவிரவும், சுற்றுலாத் துறையை விருத்தி செய்யும் நோக்கத்திற்காக தமது வீடுகளிலிருந்து விரட்டப்படுவதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த வனாதமுல்ல மற்றும் தெமட்டகொட மக்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பொருளாதார கொள்கைக்கு எதிராகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் ராஜபக்ஷ ஆட்சிக்கெதிராக மக்கள் போராடத் தொடங்கினர். காணாமலாக்கல், கடத்தல், அரசியல் கைதிகள், காணிக் கொள்ளை, ஊடக அடக்குமுறை, அரசியல் கொலைகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் பரவலாக ஆர்ப்பாட்டம் செய்தனர். ஐக்கிய தேசியக் கட்சி முதற்கொண்டு எதிர்க்கட்சியன் முயற்சியானது இந்த மக்கள் போராட்டத்தை பயன்படுத்தி அதிகாரத்திற்கு வருவதேயன்றி அந்த எதிர்ப்பிற்கு காரணமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக இருக்கவில்லை. இது குறித்து தேவையோ, ஆற்றலோ, தூ ரநோக்கோ அவர்களுக்கு இருக்கவில்லை.

லிபரல் ஜனநாயகவாத கோஷங்களால் மக்களுக்கு வெற்றி கிட்டாது என்பதையும், அதற்குப் பதிலாக அடிமட்ட வர்க்கங்களுக்கு ஜனநாயத்தை பெற்றுக் கொடுக்க போராட வேண்டும் என்பதையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உணர்த்துவதற்காகவும், மறுபுறம், மறக்கடிக்கப்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை, தேசியப் பிரச்சினை மற்றும் ஏகாதிபத்தியம் போன்ற தலைப்புகளை அரங்கிற்கு கொண்டுவருவதற்காகவுமே நாம் இந்த நூலை தொகுத்துள்ளோம். அரச அமைப்பு, பொருளாதாரம், தேசியப் பிரச்சினை, வெளியுறவுக் கொள்கை ஆகிய தலைப்புகளை இதில் உள்ளடக்கியது அதனால்தான். ராஜபக்ஷ ஆட்சியின் ஒடுக்குமுறையிலிருந்து மீளும் மார்க்கம் முகத்தை மாற்றுவதல்ல ஒட்டுமொத்த முறையிலும் மாற்றத்தை கொண்டுவருவதுதான்

என்பதை சமூகத்தில் உணர்த்துவதற்காக இதன் மூலம் முயற்சி செய்யப்படுகிறது. அதேபோன்று, ஜனநாயகம், பொருளாதாரம், தேசியப் பிரச்சினை, ஏகாதிபத்தியம் ஆகிய துறைகளில் தோன்றியுள்ள நெருக்கடிக்கு தீர்வு இடதுசாரிய மாற்றீடு மாத்திரமே என்பதுவும் இதனூடு விளக்கப்படுகிறது.

ஜனவரி 8ம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்பு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் ஜனநாயக எதிர்ப்பார்புகள் அனைத்தையும் அரசியலமைப்பு திருத்தத்திற்குள் சுருக்கிவிட்டு, அந்த அரசியலமைப்பு திருத்தத்தை கூட வாக்குறுதியளித்தவாறு நிறைவேற்றாது நீர்த்துப்போக செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரத்தை சட்டவாக்கச் சபையிடம் ஒப்படைக்க ஆலோசிக்கப்பட்டது. ஆனால், அதன் மூலம் ஜனநாயகம் நிலைநாட்டப்படாது என்பதுடன், அது போதுமானதாக இல்லை என்பதே எமது நிலைப்பாடாக இருந்தது. ஆனால், வாக்குறுதியளித்தவற்றை கூட அவர்கள் நிறைவேற்றவில்லை. ஜனாதிபதி முறையை ஒழித்துக் கட்டும் வாக்குறுதி அதன் தீர்க்கமான அதிகாரத்தை நீக்கும் ஆலோசனையாக குறுகலாகியதுடன், பின்னர் 19வது அரசியல் திருத்தத்தின்போது அந்த அதிகாரங்களில் முக்கியமானவற்றின் மீது கைவைக்காமல் பாரத்துக் கொள்ளப்பட்டது. தவிரவும், ஒரு தனிக்கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை உறுதி செய்யும் புதிய தேர்தல் முறை 20வது அரசியலமைப்பு திருத்தத்தில் தயாரிக்கப்படுவதனால், ஜனாதிபதிக்கான அதிகாரமும், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலமும் கொண்ட அதிகார வர்க்கத்தின் அதிகாரம் மேலும் மேலும் அதிகரிக்கக் கூடும். இதன்படி, ஜனநாயகம் சம்பந்தமான வாக்குறுதி புறந்தள்ளப்பட்டு ஆள்பவர்களின் அதிகாரம்

வலுப்படுத்தப்பட்டுள்ளது. நவ தாராளமய பாதையிலேயே பயணிக்கும் இந்த அரசாங்கம் மக்களின் பொருளாதார கோஷங்களை வெறுமனே ஊழல் எதிர்ப்பிற்குள் முடக்கும் வழியை கடைபிடிக்கின்றது. ஆனால், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் கடக்காத நிலையில், மக்கள் மத்தியிலிருந்து தமது உண்மையான பிரச்சினைகளுக்கான போராட்டங்கள் தலை தூக்கிக் கொண்டிருக்கின்றன. அவை, யாழ்ப்பாணம் மற்றும் கஹவத்தை பிரதேசங்களில் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான போராட்டம், கொலன்னாவை குப்பை கொட்டுதலுக்கு எதிரான போராட்டம், கல்வி தனியார்மயத்திற்கு எதிரான மாணவர் போராட்டம், விவசாயத்துறை தனியார்மயத்திற்கு எதிரான தம்புள்ளை விவசாயிகளின் போராட்டம், சுண்ணாகம் - காலி ஹபராதுவ - குருநாகல் கொபைகனே சூழல் அழிப்புக்கெதிரான போராட்டம் என்ற வகையில் வெடித்துக் கொண்டிருக்கின்றது. தவிரவும், அரசியல் கைதிகள், காணாமலானவர்கள், அடக்குமறை காரணமாக நாடுகடந்தவர்கள், அரசியல் படுகொலைகள் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் போராட்டங்களும் இவற்றில் அடங்கும்.

இந்நிலையில் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு உள்ள மாற்றீடு சம்பந்தமான பேச்சுக்களை மீண்டும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அரசியலமைப்பு திருத்தங்களுக்குள் வரையறுக்கப்பட்டுள்ள ஜனநாயம் சம்பந்தமா பிரச்சினையை அரங்கிற்கு கொண்டுவருதல், மறக்கடிக்க முயலும் பொருளாதாரப் பிரச்சினையை மீண்டும் அரங்கிற்கு கொண்டுவருதல் போன்றவை அத்தியாவசிய காரணிகளாக உள்ளன. "இடதுசாரிய நடவடிக்கை" நூலின் தமிழ் பிரதி இப்படியான சந்தர்ப்பத்தில்தான் வெளியிடப்படுகிறது. இந்த இடதுசாரிய மாற்றீடு சம்பந்தமான கருத்தாடலை முன்னெடுக்க வேண்டிய தருணம் இதுதான் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. இந்நூல் தமிழ் மொழி

பேசும் பாட்டாளி வர்க்கம் முதற்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் அக்கருத்தாடலை வளர்க்க ஏதுவாக இருக்குமேயானால், இதற்காக பாடுபட்ட அனைவரினதும் எதிர்ப்பார்ப்பு நிறைவேறியதாக இருக்கும்.

முன்னிலை சோஷலிஸக் கட்சி
2015 ஜூன்

# 1

## ஒரு வார்த்தை

சமூக பொருளாதார- அரசியல் - கலாச்சாரம் என எதை எடுத்தாலும் இலங்கை சமூகம் நெருக்கடியில் மூழ்கியிருக்கும் தருணமிது. நெருக்கடிகள் மேலும் மேலும் ஆழமாகிக் கொண்டே போகின்றன. இந்த நிலைமையில்தான் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான பேச்சுக்களும் முன்னெடுக்கப்படுகின்றன. போலி ஏகாதிபத்திய எதிர்ப்பும், போலி தேசாபிமானமும் ஆடை அலங்காரத்துடன் வந்து போலி அபிவிருத்தி என்ற மாயையின் ஊடாக தனது வீழ்ச்சியை மறைக்க முயன்றாலும், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி குறித்து மக்களின் வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கத்தான் செய்கிறது. அந்த வெறுப்புக்கு காரணமாக இருப்பது ராஜபக்ஷ ஆட்சிக்கே உரித்தான போனபொட்வாத செயற்பாடுகள் மட்டுமல்ல நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்டத்தை செயற்படுத்துவது சம்பந்தமாக எழுந்துள்ள சிக்கல்களும் தான்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி நிச்சயிக்கப்படாதபோதிலும், அனைத்து அரசியல் சக்திகளும் தமது நிலைப்பாட்டிலிருந்து பல்வேறு அணிதிரள்வுகளில் ஈடுபட்டுள்ளன. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் பல்வேறு அரசியல் வடிவங்கள், வல்லாதிக்கம், ஊழல்-மோசடிகள், உறவினர்களை அரவணைத்தல், சட்டத்தை கையில் எடுத்தல், இனவாதத்தையும் மதவாதத்தையும் பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு எதிராக விமர்சனங்கள் குவிகின்றன. எதிர்க் கட்சியை சார்ந்த அரசியல் கட்சிகள் லிபரல் அரசியலமைப்பு, அரசியல் சீர்திருத்தம், அரசின் பரிசுத்தத்தன்மை, நல்லாட்சி, சட்டத்தின் ஆதிக்கம் போன்ற மேல்ப் பூச்சு தீர்வுகளையே முன் வைக்கின்றன. இவை பிரச்சினைக்கான தீர்வு அல்ல. இவ்வாறான ஆலோசனைகளை முன்வைக்கும் முதலாளித்துவ, சிறு முதலாளித்துவ சக்திகள் தமது ஆலோசனைகள் தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதிலோ, போதுமான நம்பிக்கையை வளர்ப்பதிலோ வெற்றி காணவில்லை. இவை, தமது அதிகார பேராசைக்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைப் பற்றிய சிந்தனைகளோடு செயற்படுகின்றன. அதைத் தவிர, தீர்வுக்கான முயற்சியோ, திட்டமோ, தேவையோ இந்த அரசியல் சக்திகளிடம் இல்லை. இந்நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் தற்போதைய ஆட்சி சம்பந்தமாகவும், முன்வைக்கப்பட்டுள்ள மாற்றீடு குறித்தும் நம்பிக்கை இழந்துள்ளனர். மக்கள் அரசியலில் வெறுப்படைந்து நம்பிக்கையிழந்து செயலற்றிருக்கிறார்கள். இந்நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்து, இன்றைய நெருக்கடியின் வேர்களைத் தேடி உண்மையான தீர்வை முன்வைக்க வேண்டிய கடமை இடதுசாரிய இயக்கத்திடம் ஒப்படைக்கப்பட்டள்ளது. எனவே நாளுக்கு நாள் உக்கிரமடையும் நெருக்கடிக்கு தீர்வு இடதுசாரிய மாற்றீடைத் தவிர வேறு எதிலும் கிடையாது.

ஆனால், இடதுசாரிய இயக்கம் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நிறுவன மற்றும் கருத்தியல் ரீதியில் பின்தங்கியுள்ளது. நீண்டகால தடம்புரளல், சரிவுகள் போன்றவற்றின் பிரதிபலனாக 1990களின் ஆரம்பத்தில் சோவியத் தேசம் முதற்கொண்டு இடதுசாரிய முகாம் சரிந்ததோடு சர்வதேச கம்யூனிஸ இயக்கமும் பின்னடைந்தது. 25 வருடங்கள் கடந்த நிலையிலும் இவற்றில் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. சோவியத் முகாம் வீழ்ச்சிடைந்த நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட வல்லாதிக்க முகாம் உலக பலவானாக மாறியதோடு, உலக மூலதனம் அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து, உலகம் பூராவும் மூலை முடுக்கெல்லாம் சென்று தனது கொடூர சுரண்டலை செயற்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது. என்றாலும், 2008 செப்டம்பரில் தொடங்கிய உலக பொருளாதார நெருக்கடி நவ தாராளமயத்தினதும், ஏகாதிபத்தியத்தினதும் இயலாமையை வெளிப்படுத்தியது. அந்த பொருளாதார வீழ்ச்சியோடு இடதுசாரிய கருத்தியலுக்கு புத்துயிரளிக்கப்பட்டாலும், உலக கம்யூனிஸ இயக்கம் நிறுவன கருத்தியல் ரீதியாக பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டமையால்அதனை சமூக மறுசீரமைப்பிற்கு பயன்படுத்த இயலவில்லை. அதோடு பின்னடைந்த நிலையிலிருந்து தட்டுத்தடுமாறி ஓரளவு தலைதூக்கினாலும், இடதுசாரிய அரசியல் திட்டத்தை சர்வதேச மட்டத்தில் உறுதியாக நிலைநிறுத்த முடியவில்லை.

இடதுசாரிய இயக்கம் சர்வதேச ரீதியில் பலியானதைப் போன்றதொரு நிலையை இலங்கையிலும் காணமுடியும். முதலாளித்துவ கட்சிகளும், ஆட்சியும் சரிந்து விழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள போதிலும், முதலாளித்துவ முறை கடுமையான நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையிலும், அந்த நெருக்கடி புரையோடிய நிலையில் ஒட்டுமொத்த சமூகத்தையும் திரும்பிப் பார்க்க வற்புறுத்தும் நிலையிலும் முதலாளித்துவ வர்க்க

ஆட்சிக்கு எந்தச் சவாலும் விடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. முதலாளித்துவ ஆட்சி ஒப்பீட்டளவில் நிலைத்திருப்பதாகத் தெரிகிறது. முதலாளித்துவ ஆட்சி எவ்வித எதிர்ப்புமின்றி சமூகத்தின் அனுமதியுடன் முன்னேறுவதாக கருதப்பட மாட்டாது. என்றாலும், இடதுசாரிகள் இது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா இடத்திலும் மக்கள் எதிர்ப்பு பூதாகரமாக அதிகரிக்கும் போது,அந்த எதிர்ப்புகள் இடதுசாரிய அமைப்பின் நிறுவன, கருத்தியல் அல்லது அரசியல் தலைமை இல்லாத வெறும் சம்பவங்களாக மாத்திரமே இருக்கும். இது ஒரு புறத்தில் கவலையளிப்பதாக இருப்பதோடு, இடதுசாரிய அமைப்பை வலுப்படுத்தவதன் வாயிலாக மாத்திரமே எழுச்சி பெறும் மக்கள் எதிர்ப்புகளை, முழுமையான சமூக மாற்றத்திற்காக வழிநடத்தவும், சமூக ரீதியிலான வெற்றிகளை பெறவும் முடியும். அதற்காக இடதுசாரிய அமைப்பை வலுப்பெறச் செய்ய வேண்டும். இன்றைய நெருக்கடிக்கு தீர்வு இடதுசாரிய மாற்றீடின் வசமே இருப்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். ஆகவேதான், ஜனாதிபதித் தேர்தலை மையமாக கொண்டு உருவாகியிருக்கும் கருத்தாடல்களுக்குள் நாம் நுழைய வேண்டியுள்ளது.

இடதுசாரிய அமைப்பு இந்த கருத்தாடலுக்குள் நுழையாத வரை, தற்போதைய சமூக பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பும் அதிருப்தியும் இன்னொரு முதலாளித்துவ குழுவை அதிகாரத்திற்கு கொண்டுவரும் திட்டத்திற்காக முகாமைத்துவம் செய்வதாகவே அமையும். இன்றைய நிலையில், ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதற்கு இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைதான்காரணம் என்ற மக்கள் மனநிலையை மாத்திரம் உள்ளடக்கும் அரசியல் திட்டமும், ஜனநாயகம் சம்பந்தமான விடயத்தை வெறும் லிபரல் எல்லைக்குள் சுருக்கி, அதனை பொருளாதார உபாயம்

சம்பந்தமான பேச்சுக்களிலிருந்து ஒதுக்கிவிடும் அரசியல திட்டமும் அதற்காகவே வகுக்கப்பட்டுள்ளது. எவ்வித கோஷமுமின்றி அரசாங்க எதிர்ப்பை மாத்திரம் தூக்கிப் பிடிக்கும் திட்டம் அதன் ஒரு பகுதியாக இருப்பதோடு, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அவ்வாறான வேறு முதலாளித்துவ குழுவிற்கோ ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்பதோடு,மாற்றுக் கருத்தை முன் வைக்கும் எந்தவொரு அணுகுமுறையையும், அரசாங்கத்தோடு மறைமுகமாக ஒத்துழைப்பதாக கருதி குற்றஞ்சாட்டும் முயற்சியையும் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்க எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கோஷத்திற்கான சாத்தியங்களும் இத்தருணத்தில் காணப்படுகின்றன. ராஜபக்ஷ ஆட்சிக்கே உரித்தான இயல்புதான் இதற்கு அடிப்படையாக இருக்கின்றது. தற்போதைய ஆட்சி, சமூகத்திலுள்ள சகலவித முதலாளித்துவ மற்றும் சிறு முதலாளித்துவ குள்ளநரித்தனத்தையும், பிற்போக்குத் தனத்தையும் கைப்பிடியில் வைத்துக் கொண்டு தனது அதிகாரத்தை நிலைநாட்டி பொனபாட் ஆட்சிக்கான அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளது. அரசுக்கு வருமானம் தரக்கூடிய முக்கியமான நிறுவனங்களில் அதிகமானவற்றை ராஜபக்ஷ குடும்பத்தின் வசமாக்கி, தனது அரசியல் அதிகாரத்திற்காக இராணுவத்தில் சிறப்புக் குழுவை அமைத்து அரசியலை ராணுவமயமாக்கி, அரசியலமைப்பின்படியான சர்வாதிகாரம், பாரிய ஊழல், மோசடிகள் மற்றும் செப்படி வித்தைகளின் ஊடாக போலி அபிவிருத்தியை காட்டி, மக்களை ஏமாற்றி, அரசியல் அதிகாரத்தை தக்க வைப்பதற்காக இனவாதத்தையும் மதவாதத்தையும் வரையறையின்றி பயன்படுத்தி, சமூகத்தில் மேல் மற்றும் கீழ் வர்க்கத்திற்கு பொது எதிரியை உருவாக்கி அதனூடாக சர்வாதிகாரத்தை கொண்டு வர முயற்சித்தல் மட்டுமல்லாது, தேசாபிமானம் என்றும் ஏகாதிபத்தியம் என்றும் கோஷங்களை உருளதல், ஏகாதிபத்திய

திட்டத்தை செயற்படுத்தல் என பட்டியலிடக் கூடிய அனைத்து பொனபாட்வாத அடையாளங்களும் ராஜபக்ஷ ஆட்சியில் காணப்படுகின்றன.

இந்த பின்னணியில், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, குடும்ப ஆட்சிக்கு எதிராக, இனவாதம் மற்றும் மதவாதத்திற்கு எதிராக, ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராக கோஷமொன்றை சமூகம் கேட்டு நிற்கிறது. பல்வேறு முதலாளித்துவ மற்றும் சிறு முதலாளித்துவ பிரிவுகள் தமது அதிகார நப்பாசைக்காக மேற்படி சமூக தேவையைத்தான் பயன்படுத்துகின்றன. இலங்கையை போன்ற பொருளாதாரத்தில் நலிவடைந்து பின்தங்கிய முதலாளித்துவ நாட்டில் நவதாராளமய முதலாளியத்தை செயற்படுத்தும்போது தன்னிச்சை. ஊழல், உறவினர் கவனிப்பு, அநீதி, இனவாதம் உள்ளிட்ட அனைத்தும் செயற்படுவது சம்பந்தமாக இடதுசாரிய அமைப்பு மக்களிடம் எடுத்துச் சொல்லாவிடின், மேற்படி கோஷ ங்கள் சமூக தேவைகளிலிருந்து விலகிய புஸ்வாணமாவதை தடுக்க முடியாது. இலங்கையில் நவதாராளமய முதலாளியத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்த முயலும் எந்தவொரு ஆட்சியாளனும் கூட்டியோ, குறைத்தோ இந்த பண்புகளை வெளிக்காட்டுவான் என்பதில் சந்தேகமில்லை. தனிநபர் சிறப்புகளின் மீது அவற்றின் விகிதம் மாறுபட்டாலும் தரமான மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. எனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை உட்பட அரசியலமைப்பின்படியான ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, அடக்குமுறைக்கு எதிராக, ஊழல்- மோசடிகள்- முறைகேடுகளுக்கு எதிராக, மதவாதத்திற்கும் இனவாதத்திற்கும் அல்லது பழைய அரசாட்சியை மீள அழைக்கும் பிற்போக்குத்தனத்தனம், குடும்ப ஆதிக்கம் என்ற வகையில் சமூகத்திலிருந்து வெளிப்படும் மனக்குமுறலை நவ தாராளமய முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ளல் வேண்டும். அவ்வாறானதொரு

கூட்டுப் போராட்டத்திற்கான கோஷத்தையும், போராட்டத்திற்கான தலைமையையும் இடதுசாரிய இயக்கத்தினால் மாத்திரமே வழங்க முடியும். முன்வைக்கப்பட்டிருக்கும் முதலாளித்துவ, சிறு முதலாளித்துவ மாற்றீடுகளுக்கு பதிலாக இடதுசாரிய மாற்றீடொன்றை சமூகமயப்படுத்துவதற்கு எம்மை தூண்டிய காரணிகள் இவைதான்.

சமூகம் ஓர் அரசியல் கோஷத்தின் அடிப்படையில் செயற்படத் தொடங்கும் சந்தர்ப்பங்களில், நடைமுறையிலுள்ள சமூக பொருளாதார நிபந்தனைகள் விடயத்தில் அதிருப்தியும் எதிர்ப்பும் தோன்றும் சந்தர்ப்பங்களில் அது, எப்போதும், முதலாளித்துவ நிகழ்ச்சி நிரலின்படியே முகாமைத்துவம் செய்யப்பட்டது என்பதுதான் வரலாறு. ஒரு குழுவிடமிருந்து இன்னொரு குழுவின் கைக்கு அதிகாரத்தை மாற்றியும், புத்தெழுச்சியுடனும் முதலாளித்துவமுறை நடைபோடுகிறது. எழுச்சி பெறும் மக்கள் போராட்டங்கள் அனைத்தும் முறைக்கு புத்துயிரளிப்பதற்காகவேவரலாறு பூராவும் பயன்படுத்தப்பட்டது. இவை சமூகத்தில் தானாகவே நடக்கும் செயற்பாடுகளல்ல. இடதுசாரி அமைப்புகள் தனது நிகழ்சிநிரலை முன்வைக்காதமை சம்பந்தமான பிரச்சினையாகும். வரலாறு பூராவும் தோன்றிய மக்கள் எதிர்ப்புகள் முதலாளித்துவ நிகழ்ச்சிநிரலுக்காக முகாமைத்துவம் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் இடதுசாரிய இயக்கம் அதனை சார்ந்தே செயற்பட்டது, அந்த நிகழ்ச்சிநிரலுக்கு நேரடியாக உடன்படாத சந்தர்ப்பதங்களில் கூட காலம்கடந்தாவது மறைமுகமாக அந்த நிகழ்ச்சிநிரலையே செயற்படுத்த நேரிட்டது. முதலாளித்துவ கட்சிகளுடன் தேர்தல் முன்னணிகளை அமைத்ததன் ஊடாக மட்டுமல்ல, முதலாளித்துவ சிந்தாந்தத்தின் பலிக்கடாவாக ஆக்கப்பட்ட கோஷங்களை மீண்டும் கையிலெடுத்தமை போன்ற தடம் புரளல்கள் ஊடாகவே இடதுசாரிய இயக்கம் முதலாளித்துவ நிகழ்ச்சி நிரலுக்கு பலியாகியது. இடதுசாரிய அமைப்பு தனது

கடமையை நிறைவேற்ற தவறியதன் விளைவாக சமூகத்தில் தோன்றிய எதிர்ப்புகளும், மக்களின் அபிலாஷைகளுமே முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை நிரந்தரமாக்க உதவின. அந்த கோஷங்கள் நீண்டகால மற்றும் நிரந்தர வெற்றியை தருவதில்லை. இடதுசாரிய இயக்கம் விட்ட மாபெரும் தவறுதான், அடிக்கடி முகத்தை மாற்றி முதலாளித்துவத்தின் ஆணைகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்கியமை. அந்த வரலாற்றை மாற்ற வேண்டும் என்பதிலும், இடதுசாரிய இயக்கம் இடதுசாரிய மாற்றீடை சமூகத்தில் உறுதி செய்து மக்களுக்கு வெற்றியை தரும் நிகழ்ச்சி நிரலை தயாரிக்க முயற்சி செய்ய வேண்டுமென்பதிலும் விவாதமில்லை.அதற்கான நுழைவாகத்தான் முன்னிலை சோஷலிஸக் கட்சி என்ற வகையில் நாம் இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறோம். ஒடுக்கப்பட்ட வர்க்க சக்திகளும், சமூகத்திலுள்ள இடதுசாரிகளும், முற்போக்காளர்களும் இதற்காக முன்வந்தால் மாத்திரமே இதனை நிறைவாக்க முடியும்.

நெருக்கடிக்கு மாற்றீடாக முன்வைக்கப்படும் இந்த திட்டம் அரச அமைப்பு, பொருளாதாரம், தேசியப் பிரச்சினை மற்றும் வெளியுறவுக் கொள்கை ஆகிய நான்கு துறைகள் சம்பந்தமாக அவதானித்து வருகிறது. ஏனைய துறைகள் சம்பந்தமாக பேசுவது முக்கியமல்ல என இதனால் கருதப்படமாட்டாது. கருத்தாடலை தனி மையத்திற்குள் சுருக்கிவிடாது, ஆகக் குறைந்தது இந்த தலைப்பு சம்பந்தமாக கூட்டு கருத்தாடல் செய்ய வேண்டுமென கருதுகிறோம். இத்தருணத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்ற தனி கோஷத்தின் மீதான கருத்தாடலையே முதலாளித்துவ குழுக்கள் தமது ஆலோசனையாக முன்வைக்கின்றன. அதனை ஏனைய அத்தியாவசிய துறைகளோடு கட்டாயமாக உள்ளடக்க வேண்டுமென்பதே எமது கருத்தாகும். உதாரணமாக, இலங்கையில நவதாராளமய முதலாளித்துவம் செயற்படத் தொடங்கியதிலிருந்து

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை பிரிக்க முடியாதவாறு அதனோடு பிணைந்துள்ளது. நவதாராளமய முதாலாளித்துவ மறுசீரமைப்புக்குத் தேவையான முதல் நிபந்தனையாகவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையுடனான 1978 அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ரத்துச் செய்யும் புதிய அரசியலமைப்பு சம்பந்தமான ஆலோசனை பொருளாதாரத் துறையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுடன் பிணைந்துள்ளது. மறுபுறம், ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது சம்பந்தமாக முன்வைக்கப்படும் எந்தவொரு திட்டத்திலும் தேசிய பிரச்சினையை தவிர்த்துச் செல்ல முடியாது. உலக கட்டமைப்போடு பிணைக்கப்பட்டே இலங்கையில் நவ தாராளமய முதலாளித்துவம் செயற்படுகிறது. என்றாலும், இங்கே வெளியுறவுக் கொள்கை முக்கிய விடயமாக இருக்கிறது. அதனால் தான், இந்த ஆக்கத்தில் மேற்படி துறை சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டுவது சம்பந்தமான ஆலோசனைகள், ஒன்று, அதனை வேறு பெயரில் செயற்படுத்துதல் (ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கும் நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமர் போன்ற), அல்லது நாடாளுமன்றத்தை வலுப்பெறச் செய்யும் ஆலோசனையோடு முடித்துவிடுதல். இது விடயத்தில் இடதுசாரிய மாற்றீடானது மக்கள் சக்திக்கான ஆலோசனையோடு முன்வைக்கப்படுகிறது. சுருக்கமாக சொல்வதாயின், மக்களின் இறையாண்மை பலத்தை போலி பிரதிநிதிகள் நிறுவனங்களின் ஊடாக எஜமானியத்தினால் கொள்ளையடிக்கும் முறைக்கு பதிலாக, அந்த அதிகாரம் மக்களாலேயே செயற்படுத்தப்படும் முறையொன்று ஆலோசிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயத்தில் பெரும்பாலான மக்கள் பொருளாதார ஜனநாயகப்படுத்தல் என அறிவது ஊழல் மோசடிகள்,

முறைகேடுகளற்ற நல்லாட்சியைத்தான். உண்மையான பொருளாதார ஜனநாயகம் என்பது உற்பத்தியின்போது தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டில் உழைப்பாளியும் இணைந்து கொள்ளும் உரிமையை ஏற்றுக் கொள்வதும், உற்பத்தியின் பலன் நீதியாக பிரிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வதுமாகும். மாத்திரமல்ல, எதிர்கால சந்ததியினருக்கு உலகை பாதுகாத்து கொடுப்பதற்காக இன்றைய உற்பத்தி செயற்பாடுகளுக்கு வரையறைகள் இருப்பதை ஏற்றுக் கொள்வதுமாகும். அந்த அடிப்படையிலேயே இங்கு பொருளாதாரத் துறை சார்ந்த ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேசிய ஒடுக்குமறை, மதவாதம் மற்றும் இனவாதம் போன்றவை சம்பவிப்பதற்கு காரணமான சமூக மூலங்களுக்கு தீர்வு காண்பது சம்பந்தமாக இங்கு தேசிய பிரச்சினை பகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளது. சமத்துவத்தினதும் ஜனநாயகத்தினதும் அடிப்படையில் அதற்கு தீர்வு காண்பது சம்பந்தமாக சமூக பொருளாதார தேகத்தில் ஆழமானதும் புரட்சிகரமானதுமான மாற்றத்துடன் உள்ளடக்கப்படும் விதம் குறித்து விளக்கமளிக்கப்படுகிறது. ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்களுக்கு பலிக்கடாவாகி ஏகாதிபத்திய திட்டத்தின் பகடைக்காயாக ஆகியிருக்கும் தற்போதைய வெளியுறவுக் கொள்கைக்குப் பதிலாக பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் வெளியுறவுக் கொள்கையை தயாரிப்பது குறித்து ஆலோசனையும் இதில் அடங்கியுள்ளது.

இன்றைய நிலையில் சமூகத்தில் உக்கிரமடைந்துள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும், இல்லாவிட்டாலும் விவாதத்திற்குட்பட்டுள்ள சில துறைகள் சம்பந்தமாகவாவது தீர்வுகளை முன்வைக்கவும், அந்த பிரச்சினைகள் சம்பந்தமாக பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தில் ஆராய்வதற்கும் இந்த ஆக்கம் முயற்சித்துள்ளது. அந்த பிரச்சினைகளுக்கான தீர்வு,

நவ தாராளமய முதலாளியத்தை தோற்கடிப்பதன் ஊடாகவும், இடதுசாரிய மாற்றீடை கட்டியெழுப்புவதன் ஊடாகவுமே உள்ளதென்பது உறுதியாகும் நிலையில் மேல்பூச்சு அரசியல் செல்லுபடியாகாதென்பது மேலும் உறுதியாகிறது. போலி பயனீட்டுவாத பெயர் பலகையோடு சரிந்து விழும் நாறிக்கிடக்கும் சமூக முறைக்கு முட்டுக் கொடுக்க நாம் தயாராக இல்லை என்பதுடன், ”செய்யக் கூடியது என்ன?’ என்ற கேள்விக்கு விடை காண்பதை விட ”செய்ய வேண்டியது என்ன?” என்ற கேள்விக்கு விடை தேடுவதே எமது நிலைப்பாடாகும். உலக கம்யூனிஸ நாடுகளின் தோல்விகள், பின்வாங்குதல்கள் மற்றும் சரிவுகளின் முன்னால் 25 வருடங்களுக்கு பின்னர் இலங்கை இடதுசாரிய அமைப்பினால் எடுக்கப்படும் இந்த நடவடிக்கை சமூகம் என்ற வகையில் பாரிய வளர்ச்சிப் பாய்ச்சலின் முதலாவது நிமிடமாவதைக் காண்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

2

# மக்கள் சக்தி மற்றும் மக்களாட்சிக்காக தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டம்

## நுழைவு:

இலங்கை அரசியலின் சமீபகால வளர்ச்சிக்கேற்ப எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் நடக்கவிருப்பது தெளிவாக தெரிந்த நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறை குறித்து கருத்தாடலொன்று உருவாகியிருக்கிறது. இக்கருத்தாடல் நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்வது சம்பந்தமான அபிலாஷைகளுடன் பிணைத்து முன்வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்வதற்காக நிறைவேற்று ஜனாதிபதி முறையின் அதிகாரங்கள் மீளமைக்கப்பட்டு, ஆனால், அதனை நடாத்திச் செல்லும் ஆலோசனையும், அதனை முற்றாக நீக்கும்படியான ஆலோசனையும் கருத்தாடலில் அடங்கியுள்ளது. சுருக்கமாக சொல்வதாயின் இக்கருத்தாடலின் அடிப்படை அரசியல் முறை சம்பந்தமான பிரச்சினையாகும். அதன் பிரதான வடிவமாக இருப்பது ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினை முதலாளித்துவ

தாராளமய பொருளாதாரத்திற்குள் மாத்திரம் வரையறுத்தல், பொருளாதாரத்துடன் அதற்குள்ள தொடர்பை துண்டித்தல், மக்களின் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமான பிரச்சினையை வெறுமனே அரசியலமைப்பு மீளமைப்பிற்குள் மாத்திரம் சுருக்குதல் ஆகியனவாகும். ஜனநாயகத்தை அதன் விரிவான அர்த்தத்தின்பால் அதாவது பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின்பால் அல்லது உண்மையான ஜனநாயகம் வரை உயர்த்தி வைத்தலும், இக்கருத்தாடலை அரசியலமைப்பு சீர்த்திருத்திற்கு மாத்திரம் வரையறுக்காது அதனை ஒட்டுமொத்த சமூக - பொருளாதார உபாயங்களோடு பிணைப்பதையும் உள்ளடக்கியே இங்கு எமது பிரவேசம் அமைந்திருக்கிறது. அதன்படி இதற்கு மாற்றீடாக மக்களது நேரடியான அரசியல் செயற்பாடும், மக்கள் பலத்திற்கான புதிய அரச முறையொன்று எங்களால் முன்வைக்கப்படுகிறது. அது அரசியலமைப்பையும் கடந்த பொருளாதார உபாயம், தேசிய பிரச்சினையால் உருவான நெருக்கடிக்கு தீர்வு காணல், வர்க்கச் சக்திகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உடனடி நடவடிக்கை எடுத்தல், வெளியுறவுக் கொள்கையில் பயன்தரக்கூடிய மாற்றங்களை கொண்டுவருதல் போன்றவற்றோடு பிணைந்துள்ள முழுமையான வேலைத்திட்டமாகும். அப்படியான, முழுமையான வேலைத்திட்டத்தின் வாயிலாக மட்டுமே மக்களின் ஜனநாயக உரிமைகள் குறித்து லிபரல் கருத்தையும் கடந்த, மக்களுக்கான உண்மையான ஜனநாயகத்தை கட்டியெழுப்ப முடியும். விஷேடமாக அரசமுறையை ஜனநாயகப்படுத்தும் பொருளாதார ஜனநாயகத்தோடு இது பிணைந்துள்ளது. பொருளாதாரத் துறையில் மறுசீரமைப்பின்றி அரசியலமைப்பு முறையை திருத்தி ஜனநாயகத்தை கட்டியெழுப்ப முன்வைக்கப்படும் ஆலோசனைகள் தனியாகவும், வெளிப்படையாகவும் செயற்படுத்துவதனால் எதிர்ப்பார்க்கும் பிரதிபலன் கிடைக்கமாட்டாதென்பதை குறிப்பிட வேண்டும்.

## தற்போதைய அரசியல் முறை:

### 01. அரச முறை குறித்து லிபரல் கருத்து

1978 அரசியலமைப்பு சட்டத்திற்கேற்ப, தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட, நிறைவேற்று அதிகாரத்தை தன்வசம் வைத்திருக்கும் நிறைவேற்று ஜனாதிபதியொருவரும், மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றம் சட்டவாக்கச் சபையாக செயற்படும் அரசியலமைப்பும் தற்போது இலங்கையில் செயற்படுகிறது. கருத்தாடலில் முக்கிய விடயமாக இருப்பது நிறைவேற்று ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரங்களாகும். அரசமைப்பு, நிறைவேற்று அதிகாரம் சட்டவாக்கச் சபை மற்றும் நீதிமன்றம் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் அரச அதிகாரத்தை அரிஸ்டோடில் தனது பொலிடிக்ஸ் (Politics) என்ற நூலில் முதன் முதலாக வகைபடுத்தியிருந்தார். அதன்படி, கொள்கைகளை தீர்மானித்தல் மற்றும் அவற்றை செயல்படுத்தும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்திற்கும், சட்டங்கள் தயாரிக்கும் அதிகாரம் சட்டவாக்கச் சபைக்கும், சட்டத்தை அமுலாக்கும் மற்றும் நீதியை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கும் வழங்கப்படுகிறது. உலகின் முதலாளித்துவ நாடுகளை எடுத்துக் கொண்டால் அவற்றை பிரதானமாக பலவாறாக வகைப்படுத்த முடியும்.

(1) நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கச் சபை மற்றும் நீதிமன்ற அதிகாரம் தனி நபர் அல்லது ஒரு சபையின் வசமுள்ளதும், அவ்வதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுமான அரசியலமைப்பாகும்.

(2) ஒன்றுக்கொன்று வேறுபட்ட மூன்று நிறுவனங்களால்

நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கச் சபை மற்றும் நீதிமன்ற அதிகாரங்களை அனுபவிக்கும் மற்றும் அவற்றுக்கிடையிலான சார்ப்பு மற்றும் ஒப்பான அரசியலமைப்பாகும் (முழுமையான அதிகாரப் பகிர்வுடனான அரசியலமைப்பு).

(3) விஷேடமாக நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்கச் சபையின் அதிகாரங்கள் சம்பந்தமாக பொதுவானதும் கலக்கப்பட்டதுமான அரசியலமைப்பாகும் (வெஸ்டமினிஸ்டர் பாராளுமன்ற முறை பெரும்பாலும் இவ்வடையாளங்களை கொண்டுள்ளது).

இது தொடர்பில் லிபரல் கருத்தை வளர்த்த மொன்டெக்ஸ்யு பெரனின் கருத்துப்படி சட்டவாக்கச் சபை மற்றும் நிறைவேற்று அதிகாரம் தனி நபரிடம் அல்லது ஒரு சபையிடம் இருப்பது பிரச்சினையாக இருக்கிறது. எனவே அவர் அதிகாரப் பகிர்வை முன்வைக்கிறார். ஏகாதிபத்தியத்தை தடுப்பதற்கு நிறைவேற்று அதிகாரமும், சட்டவாக்கச் சபையும் ஒன்றுக்கொன்று கூடியளவு தூரம் பிரிந்திருக்க வேண்டியதோடு சமச்சீர் முறையொன்றுக்காக அவற்றுக்கிடையிலான சார்பு மற்றும் ஒப்பீடு சம்பந்தமான கருத்தாகும்.

அதேபோன்று லிபரல் அரசியலில் ஜோன் லொக் முன்வைக்கும் கருத்தை அடிப்படையாகக் கொண்ட "பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின்" மீதான மேலுமொரு பிரதான அடிப்படை இருக்கிறது. அதன்படி மக்கள் தமது வாக்குகளினால் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளிடம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மக்களின் இறையாண்மை ஒப்படைக்கப்படுவதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அது சமூகம் மற்றும் அரசுக்கிடையிலான ஒப்பந்தமாக இந்த சமூக உடன்பாட்டு நியதியின் மூலம் கூறப்படுவதோடு, அரசயிலமைப்பு என்பது அவ்வொப்பந்தத்தின் எழுத்து வடிவமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இங்கே மறக்கடிக்கப்படும் இரண்டு முக்கிய கேள்விகள் இருக்கின்றன.

1. மக்களால் ஒப்படைக்கப்படும் இந்த அதிகாரம் யாருக்காக பாவிக்கப்படுகிறது?
2. அவ் அதிகாரத்தை எடுப்பது நேர்மையாகவா, இயல்பாகவா அல்லது வஞ்சனையாகவா?

இக்கேள்விகளுக்கு பதிலளிக்காது அரசமுறை சம்பந்தமான பிரச்சினையை கலந்துரையாடுவது எம்மை ஏமாற்றத்திற்குள் தள்ளிவிடும். அப்போது ஜனநாயமாக கருதப்படுவது ஒடுக்குமுறை அதிகாரம் தனிநபரிடம் இருப்பதற்குப் பதிலாக பல நபர்களின் கைகளுக்கு சென்றுவிடும். மாத்திரமல்ல, மக்களின் உண்மையான ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படமாட்டாது. ஒருபுறம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பதே பொய். உதாரணமாக இலங்கையில் விசாலமான அரிசி ஆலை வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்த மைத்திரிபால சிரிசேன பொலன்னறுவை விவசாயிகளின் பிரதிநிதியாக தற்போதைய நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். புத்தகங்களில் எதை எழுதியிருந்தாலும் அவர் நாடாளுமன்றில் விவசாயிகளின் அபிலாசைகளை பிரதிநிதிப்படுத்துவதில்லை என்பது நாடறிந்த ரகசியமாகும். மீனவர்களின் பிரதிநிதியாக தோற்றுபவர்கள் பீலிக்ஸ் பெரேரா போன்றவர்களாகும். அவர் அப்பிரஜைகளின் பிரச்சினைகளையோ குரலையோ ஒருபோதும் பிரதிநிதித்துவம் செய்வதில்லை. உண்மையிலேயே நடப்பது என்னவெனில், அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக செயற்படுவதற்கு பதிலாக அதற்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் எஜமானர்களாகவும் மக்களுக்கு எதிரான சக்தியாகவுமே செயற்படுகிறார்கள். மக்களிடமிருந்து பெற்றுக் கொண்ட இறையாண்மையை மக்களுக்கு எதிராக செயற்படுத்துவதும், அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்ட முறையும் மோசடியாகும். பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தேர்தல்களின்போது ஒரு கருத்தை பரப்பவும் வாக்குகளை பெற்றுக்கொள்ளவும் இலஞ்சமாக பெருமளவு

பணத்தை வேட்பாளர்கள் செலவு செய்கிறார்கள். கூரைத் தகடுகள், கைப்பேசிகள் பகிர்ந்தளிப்பதிலிருந்து அன்னச் சத்திரங்கள் நடத்துவது வரை பாரியளவில் லஞ்சம் வழங்கப்படுகிறது. மறுபுறம் பணம், ஊடகங்கள், குண்டர் பலம், அதிகார பலம் போன்ற அனைத்தையும் பாவித்து பாரிய பரப்புரையின் மூலம் செயற்கையான மக்கள் கருத்து நிர்மாணிக்கப்படுகிறது. லிபரல்வாத அரசியல் கோட்பாட்டுக்குள் தேர்தல் என்பது மக்கள் கருத்தை பிரதிபலிக்கும் கருவியாக கருதப்படினும் தேர்தல் செயற்பாட்டின் ஊடாக போலி மக்கள் கருத்தே நிர்மாணிக்கப்படுகிறது. இதில் பாரதூர விடயம் என்னவெனில், நிலவும் நவ தாராளமயத்திற்கு பொருத்தமான மனிதர்களே உருவாக்கப்படுகின்றனர். அது தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளின் பரப்புரைகளினால் ஏற்படும் நிலைமையல்ல. அது முதலாளித்துவ முறையின் எழுச்சியோடு நிர்மாணிக்கப்பட்டு தொடரும் நிலையாகும். கூட்டுறவுக்கு எதிரான தனித்துவத்தை தூ க்கிப் பிடிக்கும் எண்ணக்கரு இந்த முதலாளித்துவ சிந்தனையின் அடிப்படையாகும். கூட்டுறவுக்கு எதிரான பயனீட்டுவாத சிந்தனை தற்போதைய முறையை பாதுகாக்கவே எப்போதும் செயற்படுகிறது. பிரதான முதலாளித்து மற்றும் சிறு முதலாளித்துவ கட்சிகள் அனைத்துமே இந்த சிந்தனைக்கு எதிரான அரசியல் தலையீட்டுக்கோ, போராட்டத்திற்கோ அழைப்பு விடுப்பதில்லை. எனவே, இவ் அனைத்து அமைப்புகளும் அரசியல் சிந்தனையில் மாற்றத்தை அடிப்படையாக வைத்து செயற்படுவதற்கு பதிலாக தனிநபர் காரணி, பணபலம், ஊடகபலம் போன்ற மாற்றங்கள் மீதே செயற்படுகின்றன. இப்படியான நிலையில் நாடாளுமன்றத்திற்குள் உண்மையான மக்கள் பிரதிநிதித்துவம் செயற்படும் என நினைப்பது முட்டாள்தனமாகும். மக்கள் பிரதிநிதித்துவம் என்ற பெயரில் உண்மையிலேயே நடப்பது என்னவெனில், பணம்படைத்த சிலரின் தேவைகளின் நிமித்தம் சட்டவாக்கச் சபை, நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றம்

செயற்படுவதோடு, அவற்றுக்கு பெரும்பாலோனோரின் விருப்பம் என்ற பெயரில் சாயம் பூசப்படுகிறது.

## உ. நிறைவேற்று ஜனாதிபதி முறை

1978 ஜூலையில் நடந்த தேர்தலின் பின்னர் அதிகாரத்திற்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி 1978இல் இருந்து இலங்கையில் நவ தாராளமய சீர்த்திருத்தத்தை ஸ்தாபித்ததுடன் அதற்கு தேவையானவாறு அரசியலமைப்பொன்றையும் முன்வைத்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் உலக அரசியல் ஏகாதிபத்திய முகாம் என்றும் சோஷலிஸ முகாம் என்றும் இரண்டாக பிரிந்ததோடு, சோஷலிஸ முகாமில் செயற்பட்ட, இலாபத்தை அடிப்படையாக கொண்ட முறைக்கு எதிராக, பொது மக்களின் சமூக - பொருளாதார வாழ்க்கையை உயர்த்தும் வேலைத் திட்டத்தை எதிர்கொள்வதற்கு கென்ஸிய முதலாளித்துவம் என பிரசித்தி பெற்ற அரச நலன்புரி முதலாளித்துவத்தையே முதலாளித்துவ நாடுகள் செயற்படுத்தின. அந்த முறையின் கீழ் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் அரச தலையீடு காணப்பட்டது. அதேநேரம் அரச தலையீட்டுடன் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, முதியோர் மற்றும் சிறுவர் நலன்புரி போன்ற சமூக பாதுகாப்பு சேவைகளையும் நடாத்தியது. என்றாலும் அது இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார உபாயத்திலிருந்து விலகியிருக்கவில்லை. ஆகவேதான் நடக்க வேண்டிய விதத்தில் பல்தேசிய கம்பனிகளின் இலாப விகிதம் வேகமாக சரிந்ததோடு, பாரிய பொருளாதார நெருக்கடியும் தலைதூக்கியது. இவ்வாறு முதலாளித்துவ முறைக்குள் தோன்றிய நெருக்கடிக்கு சமமாக 1970 தசாப்தத்தில் உக்கிரமடைந்த உலக பொருளாதார நெருக்கடியின் காரணமாக கென்ஸிய பொருளாதார உபாயத்தை தொடர்ந்து செயற்படுத்துவதனால் முன்னரைப் போன்று இலகுவாக இலாபம் சம்பாதிக்க முடியாத நிலை உருவானது. இதன் மூலம் ஏகாதிபத்தியத்திற்கேற்ப, கென்ஸிய பொருளாதார மாதிரியின்

தோல்வி உறுதியான நிலையில் உலக முதலாளித்துவத்திற்கு மாற்று வழியொன்று தேவைப்பட்டது. உலக முதலாளித்துவம் தேச எல்லைகளை கடந்து உலகம் பூராவும் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதும், சமூக பாதுகாப்பு சம்பந்தமான விடயத்திலிருந்து அரசு விலகுவதும், சேவைகளை தனியாரிடம் ஒப்படைப்பதன் ஊடாக அனைத்தையும் விற்பனைப் பண்டங்களாக மாற்றுவதும் உள்ளிட்ட மேலும் பல அடையாளங்களை கொண்ட நவ தாராளமய முதலாளித்துவம் தனது பாத்திரத்தை செவ்வனே தொடங்குகிறது. இலங்கையில் 1975ல் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவின் பரிந்துரைகளின் கீழ் அதற்கான முயற்சி எடுக்கப்பட்டாலும் 1977ல் அதிகாரத்திற்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் இலங்கை முழுமையாக நவ தாராளமய முதலாளித்துவத்திற்குள் நுழைந்தது. நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட ஜனாதிபதியொருவரை அரச தலைவராக அங்கீகரிக்கும் தற்போதைய அரசியலமைப்பு அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டது. அன்று 1978ல் பிரதமர் ஜே.ஆர். ஜயவர்தன மக்கள் அனுமதியை பெறாமல் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்த 5/6 பலத்தை கொண்டு தன்னை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பிரகடனப்படுத்திக் கொண்டார்.

1978 அரசியலமைப்பு சட்டத்தின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் அபரிமிதமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன. அதன் ஸ்தாபகரான ஜே.ஆர். ஜயவர்தனவின் கூற்றுப்படி அந்த சர்வ வல்லமை கொண்ட அதிகாரங்களினால் ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மட்டுமே மாற்ற முடியாது. அதைத் தவிர இந்த அதிகாரத்தின் மூலம் எதை வேண்டுமானாலும் செய்யலாம். இலங்கையைப் போன்ற பலகீனமான பொருளாதாரமும், பலகீனமான சமூகத்தையும் கொண்ட பின்தங்கிய முதலாளித்துவ நாட்டில் நவதாராளமய மறுசீரமைப்பிற்காகவும், மேலும் பல விடயங்களுக்கும் மேலதிகமாக கிடைக்கும்

எல்லா சந்தர்ப்பங்களிலும் பலாத்காரத்தை பயன்படுத்துவதை புரிந்துகொள்ள முடியும். எனவே ஒரு தனிநபரிடம் நிறைவேற்று அதிகாரம் மட்டுமல்ல, சட்டவாக்கச் சபை மற்றும் நீதிமன்ற அதிகாரத்தையும் கட்டுப்படுத்தக் கூடிய சர்வாதிகார அரசியல் சாஸனம் உருவாக்கப்பட்டமை ஜே.ஆர்.ஜயவர்தனவினது அல்லது வேறொருவருடைய தனிநபரது அபிலாஷைகளின் பிரச்சினை மட்டுமல்ல, அதற்கான காரணிகளும் சமூகத்தின் வரலாற்றுப் பின்னணியும் உள்ளது. அப்படியான ஒரு அரசியலமைப்பு, இலங்கையை போன்ற நாட்டில் நவ தாராளமய முதலாளித்துவத்தை நடாத்திச் செல்வதற்கு தேவையான காரணியாக மாறியது. அரசியல்வாதிகளின் பிற்போக்குத்தனங்களால் இது மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. ஜே.ஆர்.ஜயவர்தன தன்னை ”பிரபு” என அழைக்கப்படுவதிலிருந்து, ஆர்.பிரேமதாச தனது பெயருக்கு முன்னால் ”அதிமேதகு” என்ற கௌரவ நாமத்தையும் பாவித்தமை மற்றும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மன்னராக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது வரை இந்த பிற்போக்குத்தனம் செயற்படுவது சம்பந்தமான உதாரணங்கள் தேவையானளவு உள்ளன. இலங்கை சமூகத்தின் பிற்போக்கும் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமான உரையாடல்களின் பலகீனமும் காரணமாக ஏகாதிபத்தியம் உருவாவதற்குத் தேவையான மேலதிக காரணிகள் முழுமையாக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை என்பது, இவ்வனைத்து காரணிகளும் சேர்ந்து அமைந்த அதிகார பலமாகும். அது உருவாவதற்கு குறிப்பிட்ட சமூக - பொருளாதார காரணிகளும் ஓரளவு காரணமாக இருந்ததோடு, அது மேலும் தொடர்வது இலங்கை சமூக - பொருளாதார அல்லது அரசியல் வளர்ச்சிக்கு தடையாக இருப்பது தெளிவு. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை சம்பந்தமாக முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய விமர்சனம்தான், அனைத்து அதிகாரங்களும் ஒரு தனிநபரின் வசம் இருக்கிறது என்பது. 1978 அரசியலமைப்பிற்கு

ஏற்ப ஜனாதிபதி,

1. அரசின் தலைவராகும்
2. அரசாங்கத்தின் தலைவராகும்
3. நிறைவேற்று அதிகாரத்தின் தலைவராகும்
4. ஆயுதப் படைகளின் சேனாதிபதியாகும்
5. அமைச்சரவையின் தலைவராகும்
6. யுத்தத்தையும் சமாதானத்தையும் அறிவிக்கும் அதிகாரியாகும்.
7. வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் அரச தூதுவர்களை நியமித்தல், வரவேற்றல் மற்றும் அதிகாரங்களை ஒப்படைத்தல் போன்றவற்றுக்கு அதிகாரமுடைய நபராகும்.
8. குடியரசின் அரச முத்திரையை தம்வசம் வைத்துக் கொள்ளும், அந்த முத்திரையுடன் காணிபூமி, சொத்துக்களை ஒப்படைத்தல் அல்லது நியமிக்கும் அதிகார ஆவனங்களில் ஒப்பமிடும் உரிமை பெற்ற நபராகும்.
9. முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ் மாஅதிபரை நியமிக்கும் அதிகாரமுடைய நபராகும்.

இவ்வளவு அதிகாரங்களுடன் சட்டவாக்கச் சபையையும் நீதிமன்றத்தையும் கட்டுப்படுத்தும் அதிகாரமும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருப்பது இந்த முறை சம்பந்தமாக உருவாகியுள்ள பாரதூர விமர்சனமாகும். நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கச் சபை மற்றும் நீதிமன்றம் ஆகிய ஒட்டுமொத்த அரச அதிகாரங்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் தனி நபருக்கு உரித்தாகிறது.

## நிறைவேற்று அதிகாரம்:-

1978 அரசியலமைப்பு சட்டத்தின்படி ஜனாதிபதி, அமைச்சரவை

மற்றும் அரச சேவை ஆகிய மூன்று பிரிவுகளும் நிறைவேற்று அதிகாரத்தில் அடங்கியுள்ளன. அவை அனைத்தும் மீண்டும் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

1. பிரதமரை நியமிப்பது ஜனாதிபதி. ஆகவே, பிரதமர் பெரும்பாலும் ஜனாதிபதியின் பொம்மையாக செயல்படுகிறார்.

2. அமைச்சர்களை நியமிப்பதும், அவர்களுக்கான அமைச்சுக்களையும் கடமைகளையும், அமைச்சுக்களின் எண்ணிக்கையையும் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது.

3. அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களை நியமித்தல், அவர்களுக்கான விடயங்களை தீர்மானித்தல் போன்ற அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது.

4. அமைச்சரவை அல்லது அமைச்சரவை அந்தஸ்தில்லாத ஒரு அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்ட விடயங்களை தனக்குக் கீழ் வைத்துக் கொள்ளும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதோடு, தமது பொறுப்பில் வைத்துக் கொள்ளும் அமைச்சுக்கள் எவை என்பதையும், அமைச்சுக்களின் எண்ணிக்கையையும் தீர்மானிக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடமே உள்ளது.

5. அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அமைச்சரவையின் தேவைகள் எப்படிப்பட்டதாக இருப்பினும், ஒட்டுமொத்த அமைச்சுக்களையும் தமது விருப்பத்தின்படி நிர்வகிக்கும் அதிகாரத்தை இதன் மூலம் ஜனாதிபதி அபகரித்துள்ளார்.

6. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள அனைத்து அரச அதிகாரிகளையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதோடு, அரச ஊழியருக்கு நியமனம் வழங்கல், சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களின் ஒழுக்காற்று நெறியை நிர்வகித்தல் சம்பந்தமான

அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச சேவை ஆணையத்தின் அதிகாரங்களில் குறிப்பிட்டளவு 18வது அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர் ஜனாதிபதியின் கைக்கு சென்றுள்ளது.

### சட்டவாக்க சபையின் அதிகாரம்:-

1. நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்த பின்னர் எந்தவொரு சந்தர்ப்பதில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.
2. நாடாளுமன்ற கூட்டத் தொடரை நிறைவு செய்யும் அதிகாரம் ஜனாதியிடம் இருப்பதால் அரசியல் ரீதியில் தமக்கு நன்மை பயக்காத சந்தர்ப்பத்தில் 3மாத காலத்திற்கு கூட்டத் தொடரை நிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.
3. காலத்துக்குக் காலம் ஒரு அறிவிப்பின் மூலம் நாடாளுமன்றத்தை கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.
4. அரசின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு பெயரளவில் இருந்தாலும் அரச நிதி கட்டுப்பாடு சார்ந்த பிரதான அதிகாரியான கணக்காய்வாளரை நியமிக்கும் அதிகாரமும், நீக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு.

### நீதிமன்ற பலம்:-

1. பிரதம நீதியரசரை ஜனாதிபதியே நியமிக்கிறார்.
2. மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.
3. உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.
4. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரமும், நீதிமன்ற சேவை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப அவர்களை

சேவையிலிருந்து நீக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு.

5. உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகள் தவிர்ந்த ஏனைய நீதிபதிகளை நியமிக்கும், இடமாற்றம் செய்யும் மற்றும் சேவையிலிருந்து நீக்கும் அதிகாரத்துடனான நீதிமன்ற சேவைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள் மூவரை நியமிப்பதும் ஜனாதிபதியே. அதன் ஒரு உறுப்பினராக அதிகாரபூர்வமாக நீதியரசர் நியமனமாவதுடன், அவரை ஜனாதிபதியே நியமிக்கிறார். ஆணையத்தின் ஏனைய இரு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமும் தேவைப்படின் மாற்றும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு.

6. சட்டமா அதிபரை நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடமே இருக்கிறது.

7. எந்தவொரு நீதிமன்றத்திலும் வழங்கப்படும் தண்டனையிலிருந்து குற்றவாளியை விடுதலை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்ட கோனவல சுனில் என்ற நபர் ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியால் விடுதலை செய்யப்பட்டமை மற்றும் கொலை வழக்கொன்றில் குற்றவாளியாக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அமைச்சர் மில்ரோய் பர்னாந்துவின் மனைவி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியால் விடுதலை செய்யப்பட்டமையும், இந்த அதிகாரம் சட்டத்தையும் மீறி செயற்பட்டமைக்கு இரு தசாப்தங்களாக நிலவும் பிரபல உதாரணங்களாகும்.

8. அரசியலமைப்பிற்கு ஏற்ப ஜனாதிபதிக்கெதிராக எந்தவொரு நீதிமன்றிலும் வழக்கு தொடர முடியாது.

இவற்றை நோக்கும்போது, நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குள் நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கச் சபை, நீதிமன்றம் ஆகிய அனைத்து அரச அதிகாரங்களும் ஒரு தனிநபரிடம் இருப்பது தெரிகிறது. அரசியலமைப்பின் வாயிலாக இரும்புக்கரம்

கொண்ட ஒரு ஏகாதிபத்தியவாதி நிர்மாணிக்கப்பட்டிருப்பதோடு, இலங்கையின் நிலை அரசியலமைப்பின்படி ஏகாதிபத்தியத்திற்கு இருப்பது அதனால்தான்.

## 3. நாடாளுமன்றத்தை பலப்படுத்துவதற்கான ஆலோசனை

நிறைவேற்று சர்வாதிகார முறையை எதிர்ப்பவர்களால் முன்வைக்கப்படும் தீர்வானது, நாடாளுமன்ற ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வாகும். நிறைவேற்று அதிகாரத்தையுடைய பிரதமரின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் அமைச்சரவைக்கு உரித்தாகும் முறையொன்றை ஐக்கிய தேசியக் கட்சியும், நாடாளுமன்றத்தின் ஊடாக அமைச்சரவையின் அதிகாரத்தை கட்டுப்படுத்தும், நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் முறையொன்றை மக்கள் விடுதலை முன்னணியும் முன்வைப்பதோடு, பொது வேட்பாளராக முன்வர தயாராக இருப்பதாகக் கூறும் மாதுளுவாவே சோபித தேரர் நாடாளுமன்ற ஜனநாயகம் சம்பந்தமான கருத்தை முன்வைக்கிறார். முதலாவதாக நிறைவேற்று அதிகாரத்தையுடைய பிரதமர் சம்பந்தமாக பேசுவதாயின், அதற்கு சிறந்த உதாரணம் 1972 முதலாவது குடியரசு அரசியலமைப்புதான். நிறைவேற்று பிரதமருக்கு உரித்தான அரசியலமைப்பு குறித்து இலங்கை வரலாற்றில் தேவையானளவு உதாரணங்கள் இருப்பதோடு, சமகால உலக அனுபவங்களிலிருந்தும் தேவையானளவு உதாரணங்களை பெற்றுக் கொள்ள முடியும். எவ்வாறாயினும் 1972 அரசியலமைப்பிற்குள் இலங்கையின் அனுபவங்களை பேசுவது முக்கியமாக இருக்கும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கும் நிறைவேற்று பிரதமரின் ஊடாக அதிகாரத்தை மையப்படுத்தும் நாடாளுமன்ற முறைக்கும் மத்தியில் எவ்வித வித்தியாசமும் இல்லை என்பதை நன்கு ஆராய்ந்தால் அறிந்து கொள்ள முடியும். இலங்கையில் முதன் முதலில் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஸ்தாபிக்கப்பட்டது

1978 அரசியலமைப்பின் வாயிலாக அல்ல. 1977 அக்டோபர் 20ம் திகதி 1972 அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது திருத்தத்தின் வாயிலாக பிரதமரால் ஜனாதிபதியை நியமிக்கும் உறுப்புரை நீக்கப்பட்டு, தேர்தலின் மூலம் ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற உறுப்புரை சேர்க்கப்பட்டது. ஜனாதிபதியை அமைச்சரவை உறுப்பினராக நியமித்து, அமைச்சரவை தலைவராக இருந்த பிரதமருக்கு பதிலாக ஜனாதிபதி அமைச்சரவை தலைவராக்கப்பட்டார். அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் எளிய மாற்றங்களினால் மாத்திரம் கூட நிறைவேற்று ஜனாதிபதியை நிர்மாணிக்கும் அதிகாரம் 1972 அரசியலமைப்பின் மூலம் பிரதமருக்கு கிடைத்திருந்தது. இதற்கு 1977ல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றில் கிடைத்திரும் 5/6 பெரும்பான்மை பலம் தீர்மானமிக்க காரணியாக இருந்தது. 1972 அரசியலமைப்பின்படி ஜனாதிபதி

1. அரசின் தலைவராவார்.
2. நிறைவேற்று அதிகாரத்தின் தலைவராவார்.
3. ஆயுதப்படைகளின் சேனைாதிபதியாவார்.
4. போரையும் சமாதானத்தையும் அறிவிக்கும் அதிகாரம் படைத்தவராவார்.
5. தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் அரச தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம், அதகாரங்களை ஒப்படைக்கும் மற்றும் வரவேற்கும் பூரண அதிகாரமுடைய நபராகும்.
6. முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மாஅதிபரை நியமிக்கும் அதிகாரமுடைய நபராகும்.
7. குடியரசின் அரச முத்திரையின் பொறுப்பை ஏற்றுள்ள மற்றும் அதன் பொதுக் கடமைகளை நிறைவேற்றும் நபராகும்.

**(அ) நிறைவேற்று அதிகாரம்**

1972 அரசியலமைப்பின்படி பிரதமர் அரசாங்கத்தின் தலைவராக இருக்கும் அதேநேரம் அமைச்சரவையின் தலைவராகவும் செயற்படுகிறார். அந்த அரசியலமைப்பின்படி ஜனாதிபதி என்பவர் பிரதமரின் கைப்பாவையாக இருப்பதனால் முழு அதிகாரமும் பிரதமரிடமே இருந்தது. தவிரவும், ஜனாதிபதியின் ஊடாக மறைமுகமாகவும் நேரடியாகவும் செயற்படக் கூடியதும், நாடாளுமன்றத்தையம் நீதிமன்றத்தையும் வற்புறுத்தக் கூடியதுமான ஆற்றலும் நிறைவேற்று அதிகாரமும் பிரதமரிடம் இருந்தது.

நிறைவேற்று அதிகாரத்தின் துறையை எடுத்துக் கொண்டால் அமைச்சர்களை நியமித்தல், அவர்களுக்கான விடயங்கள் மற்றும் அமைச்சுக்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கையில் இருந்தது. அமைச்சரவையின் ஆலோசனைப்படி ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டுமென அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களையும், மொத்த அமைச்சரவையையும் தமது விருப்பப்படி மாற்றும் அதிகாரம் பிரதமரிடமிருந்தது. அனைத்து அரச ஊழியர்களுக்கும் நியமனம் வழங்கல் தொடர்பில் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கும் அரச சேவைகள் ஒழுக்காற்றுச் சபையொன்று சட்டப்படி அமைத்திருந்தாலும், அவ்வாலோசனைகளை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் அமைச்சரவைக்கு இருக்கவில்லை. இதன்படி முழு அதிகாரமும் பிரதமரின் வசமிருந்தது.

### (ஆ) நாடாளுமன்ற அதிகாரம்

அக்காலத்தில் நாடாளுமன்றின் அதிகாரம் மத்தியப்படுத்தப்பட்டிருந்த தேசிய அரச பேரவை சம்பந்தமான நிலையும் இதுதான். தேசிய அரச பேரவையை கூட்டுதல், கூட்டத் தொடரை முடித்தல் மற்றும் கலைக்கும் அதிகாரமும் ஜனாதிபதி வசம் இருந்தது. ஜனாதிபதி வசமிருந்த அந்த பெயரளவிலான அதிகாரத்தை செயற்படுத்துபவர் என்ற வகையில்

தமக்கு நன்மை பயக்காத சந்தர்ப்பங்களில் மாதக் கணக்கில் நாடாளுமன்றத்தை கூட்டாதிருக்கும் அதிகாரம் பிரதமரிடமிருந்தது. 1972 அரசியலமைப்பில் பிரதமரின் அதிகாரம் ஓரளவாவது கட்டுப்படுத்த முடிந்தது தேசிய அரச பேரவை வசமிருந்த நிதிக் கட்டுப்பாட்டின் அதிகாரத்தின் காரணமாகத்தான். அதன் அனுமதியின்றி எந்தவொரு பணமும் கூட்டு நிதியிலிருந்தோ நிச்சயமற்ற சந்தர்ப்ப நிதியிலிருந்தோ செலவளிக்க முடியாமை தான் இதற்கு காரணம்.

### (இ) நீதிமன்ற அதிகாரம்

நீதிமன்ற அதிகாரத்தை எடுத்துக் கொண்டால் பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளை ஜனாதிபதியே நியமித்தார். குற்றவியல் நீதிமன்றத்தினதும் அரசியலமைப்பு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடமிருந்தது. ஏனைய நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமித்தல் நீதிமன்ற சேவைகள் ஆலோசனை சபையின் பரிந்துரையின்படி அமைச்சரவையினால் நியமிக்கப்படல் வேண்டும். நீதிமன்ற சேவைகள் சபையின் தலைவர் பதவியை இயல்பாகவே பிரதம நீதியரசர் வகிப்பதோடு, ஏனைய நான்கு உறுப்பினர்களும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். தற்போதைய உயர் நீதிமன்ற பதவிக்கு சமமாக, அப்போதிருந்த குற்றவியல் நீதிமன்ற ஆணையாளர்களை நியமித்ததும் ஜனாதிபதிதான். சட்டமா அதிபரை நியமிக்கும் அதிகாரமும், குற்றவாளிக்கு மன்னிப்பளிக்கும் அதிகாரமும் ஜனாதிபதி வசமிருந்தது. பெரும்பாலானோர் இது குறித்து பேசாதபோதிலும் 1972 அரசியலமைப்பின் 23 உறுப்புரைக்கேற்ப ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்கும் உரிமை நீக்கப்பட்டுள்ளது.

என்றாலும், ஜனாதிபதி என்பது பிரதமரின் அதிகாரத்தை பாவிக்கும் கருவியாக மட்டுமே இருப்பதால் நிறைவேற்று அதிகாரம் மாத்திரமல்ல, நாடாளுமன்றத்தினதும் நீதிமன்றத்தினதும்

அதிகாரத்தை கட்டுப்படுத்தும் அதிகாரமும் பிரதமர் வசமிருந்தது. அதன்படி நிறைவேற்று பிரதமரின் அதிகாரம் எவ்விதத்திலும் மறைக்கப்பட்டதாகவோ சமநிலையில் இருந்ததாகவோ 1972 அரசியலமைபு சட்டத்தில் காணப்படவில்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு மாற்றீடாக நிறைவேற்று அதிகாரத்தை பிரதமரிடமோ, அமைச்சரவையிடமோ ஒப்படைக்கும் முறை, தற்போதைய நிலையையும் விட மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல் சம்பந்தமான சிறு மாற்றம் மட்டுமே என்பது நிச்சயம். 1972 அரசியலமைப்பு சட்டத்திலிருந்து உதாரணத்தை எடுத்தாலும், அதற்குள் ஜனநாயகம் தொடர்பில் காணப்பட்ட எல்லைகள் சம்பந்தமாக அனுபவங்கள் இலங்கையர்களுக்கு உண்டு. அரச ஊழியர்கள் தொடர்பில் அனைத்து தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரம் அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டமையால் அரசியல் பழிவாங்கல் போன்ற பிற்போக்குத்தனத்திற்கு பாதை திறக்கப்பட்டது. அதில் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான அத்தியாயம் அடங்கியிருப்பினும், அவை மீறப்பட்ட சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தை நாடும் உரிமை உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் சட்ட திட்டங்கள் அரசியலமைப்பு சட்டத்திற்கு பொருந்தக் கூடியதா என்பதை ஆராய்வதற்கு தனியான அரசியலைப்பு சட்ட நீதிமன்றம் இருந்தாலும், சாதாரண மக்களால் அவ்வுரிமையை பாவிக்க முடியவில்லை. அந்நீதிமன்றத்தின் தீர்மானத்தை பெறும் உரிமை சபாநாயகருக்கும் பிரதிச் சபாநாயகருக்கும் மட்டுமே இருந்தது. நாடாளுமன்றத்தின் அதியுயர் தன்மையின் பெயரால் அதுவரை நிலவிய சோல்பரி அரசியலமைப்புக்குள் நிறைவேற்றப்பட்டிருந்த ஒரு சட்டத்திற்கு சவால்விடும் மக்களின் உரிமை ரத்து செய்யப்பட்டது.

இதனால் கருதப்படுவதாவது, தனிநபரிடம்

அதிகாரங்கள் குவிவதும் நாடாளுமன்றிற்கு அதிகாரத்தை ஒப்படைப்பதற்குமிடையில் வித்தியாசம் கிடையாது என்பதே. என்றாலும், ஒப்பீட்டளவில் மறுசீரமைப்பிற்கான வாய்ப்பு இருக்கின்றது. ஆனால், அவ்வாறான கோஷங்களை பாவிப்பது தொடர்பில் இடதுசாரிகளின் நிலைப்பாடு தீர்மானிக்கப்படுவது, அது முற்றாக முதலாளித்துவ திட்டங்களின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் இருந்துதான். அது சோஷலிஸத்தை கட்டியெழுப்புவதற்கான இறுதி நோக்கத்தோடு பிணைப்பதற்குள்ள வாய்ப்பின் மீதுதான். இவ்வாறான கோஷங்கள் முதலாளித்துவ ஆட்சியை நிர்மாணிப்பதற்கு இப்போது பயன்படுத்தப்படுகின்றன. அதன் மூலம் தற்போதைய முறையின் சமூக பொருளாதார அடிப்படை மாறாது, மேலோட்டமான மாற்றங்களின் மூலம் மட்டுமே ஜனநாயகத்தை உறுதி செய்ய முடியுமென்ற பொய்யின் பக்கம் சமூகம் தள்ளப்பட்டுள்ளது. பிரதான எதிர்க்கட்சி உட்பட எதிர்க்கட்சியை சேர்ந்த ஏனைய கட்சிகளும், குழுக்களும் இந்த நிலைக்குள் வீழ்ந்துள்ளன. ஆகவே, இடதுசாரிய இயக்கமொன்று சோஷலிஸ அதிகாரத்தை கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு செயலாற்றும் ஒரு மக்கள் அமைப்பிற்குள் இருந்து, ஒப்பீட்டளவிலான மறுசீரமைப்பிற்காக தோற்றி நிற்பதும், தற்போதைய இலங்கை அரசியல் கட்டமைப்பிற்குள் இவ்வாறான கோஷங்கள் மொத்தமாக முதலாளித்துவ ஆட்சி மாற்றத்திற்கு தயார்படுத்தப்பட்டுள்ள நிலையில் செயற்படுவதும் வித்தியாசமான கண்ணோட்டத்துடன் கவனத்திலெடுக்க வேண்டிய விடயங்களாகும்.

## 4. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள மாற்றீடு

ஜனநாயக உரிமைகளை உறுதி செய்வதற்கு எனக்கூறி முக்கியமாக சில மாற்றீடுகள் முதலாளித்துவ மற்றும் சிறு முதலாளித்துவ அரசியல் சக்திகளினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

### (அ) நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையில் திருத்தம்

கொண்டு வருதல்

ஜாதிக ஹெல உருமய போன்ற கட்சிகள் முன்வைக்கும் இந்த ஆலோசனை நவ தாராளமய முதலாளியத்தினதும், அதற்கு பின்புலமாக செயற்படும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நடாத்திச் செல்வதற்கு முன்வைக்கப்படுவதாகும். அதன் மூலம் தற்போதைய நிலையில் எவ்வித மாற்றமும் நிகழப்போவதில்லை என்பது உறுதி.

## (ஆ) நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமரை நியமித்தல்

இது ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்படும் ஆலோசனையாக இருப்பதோடு, அதன் நோக்கம் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையின் அரசியல் உள்ளடக்கத்தை வேறு பெயரில் நடாத்திச் செல்வதுதான் என்பதை பற்றி நாம் பேசினோம். நிறைவேற்று அதிகாரமுடைய பதவி குறித்து உருவாகியிருக்கும் மக்கள் எதிர்ப்பை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து, அதன் உள்ளடக்கத்திற்கு பொருத்தமான அரசியல் அதிகாரத்தை அப்படியே நடாத்திச் செல்வதுதான் இதன் நோக்கம். தனி ஆளாக தீர்மானங்களையும் முடிவுகளையும் செயற்படுத்துவதற்குப் பதிலாக இங்கு சிலரோடு உடன்பட்டு செயற்படும் நிலை இதன் மூலம் உருவாகும். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவிக்கு எதிராக உருவாகியுள்ள எதிர்ப்பின் காரணமாக, அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் அவ்வாறான நிலைமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி பெயரளவிலாவது இணங்கியிருப்பது தெரிகிறது,

## (இ) நாடாளுமன்றத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்தல்

நிறைவேற்று அதிகாரத்தில் கணிசமான பகுதியை நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கும் அல்லது நிறைவேற்று அதிகாரத்தையுடைய நபர் நாடாளுமன்றிற்கு பொறுப்புக்கூற வேண்டுமென்ற கருத்தை உள்ளடக்கிய இவ்வாறான

ஆலோசனையை மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளும் முன்வைக்கின்றன. இவர்கள் சம்பிரதாய முதலாளித்துவ முறையினால் முன்வைக்கப்படும் நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றம் ஆகியன ஒன்றையொன்று சார்ந்து சமநிலை என்ற அடிப்படையின் மீது தமது கருத்துக்களை முன்வைப்பது தெரிகிறது. தற்போதைய நாடாளுமன்றம் குறித்த உண்மைக்கு ஏற்ப, நிறைவேற்று அதிகாரம் நாடாளுமன்றத்திடம் செல்வதனால் பயனுள்ள மாற்றம் நிகழுமென கூறமுடியாது. நிறைவேற்று அதிகாரத்தை தாங்கும் நபர் நாடாளுமன்றிற்கு பொறுப்பு கூறுவதன் மூலமோ அல்லது அந்த அதிகாரம் நாடாளுமன்றின் மூலம் பயன்படுத்துவதனாலோ, ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற சிந்தனை, நாடாளுமன்றம் என்பது மக்கள் பிரதிநிதிகள் நிறுவனமென்ற லிபரல்வாத கோட்பாட்டினால்தான் உருவாகிறது. சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவற்றுக்கும் நடைமுறைக்கும் உள்ள வேறுபாட்டை இன்றைய இலங்கை நாடாளுமன்றம் சம்பந்தமான அனுபவங்கள் எமக்கு கற்றுத் தருகின்றன. தேர்தல்கள் மூலம் மக்கள் தமது கருத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்பதே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் அடிப்படை. தேர்தல் என்பது இன்றைய மக்கள் கருத்தை வெளியிடும் சந்தர்ப்பமாக இல்லை என்பது வெளிப்படை. தேர்தல்களின்போது நடக்கும் மோசடிகளையும் கள்ள வாக்குகளையும் ஒருபுறம் வைத்தாலும், அதன் மூலம் பணபலம், குண்டர்பலம், குடும்ப பலம், ஊடக பலம், அரச பலம் போன்ற அனைத்தும் பாவிக்கப்பட்டு மக்கள் கருத்து செயற்கையாக நிர்மாணிக்கப்படுகிறது. தேர்தல்கள் என்பன பிரபுத்துவ அரசியலாக மாறியிருப்பதோடு. போலி மக்கள் கருத்தே நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்கிறது. பல்வகைப்பட்ட முதலாளித்துவ சித்தாந்தங்களின் மூலம் தற்போதைய முறையோடு பிணைக்கப்படும் சமூகமும் அதற்கு எதிராக செல்லாத மனிதனும் நிர்மாணிக்கப்படுகிறான். ஆகவே ஒருவிதத்தில் ஜனநாயகம்

சம்பந்தமான பேச்சுக்கள் போலியாகவே இருக்கின்றன. இந்த நிலையில் ”நாடாளுமன்றத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்தல்” போன்ற லிபரல் கருத்துக்கள் ஊடாக ஜனநாயகத்தை உறுதி செய்ய எடுக்கப்படும் முயற்சி தற்போதைய முறையை மாற்று வழியில் நிலைநாட்டுவதாகவே இருக்கும்.

### (ஈ) நாடாளுமன்றத்தை சட்டவாக்க சபையாக்குதல்

மாதுளுவாவே சோபித தேரர் தான் ஜனாதிபதியாகி 6 மாதத்திற்குள் அதிலிருந்து விலகி நாடாளுமன்றத்தை கலைத்து, இடைக்கால அரசாங்கத்தின் கீழ் தேர்தலை நடத்துவதாகவும், அதன் பின்னர் ”நீதியான” தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படும் புதிய நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய அரசியலமைப்பை தயாரிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் கூறுகிறார். இது வெறும் மனக்கோட்டைதான்.

1. பொது வேட்பாளரொருவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்பு 6 மாதத்திற்குள் கேட்டு விலகுவார் என்பது என்ன நிச்சயம்?

2. ஜனாதிபதி முறையை ரத்துச் செய்யும் முறை ஜனாதிபதியிடமே இல்லாதபோது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்துச் செய்யக் கூடிய நம்பிக்கையான முறை எது? அப்போது, மீண்டும் தற்போதைய நாடாளுமன்றத்தின் மீது தங்கியிருக்கும் நிலையை தவிர்த்துச் செல்லும் முறையொன்று இருக்கின்றதா? இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேர் ஜனநாயகம் சம்பந்தமாக தெளிந்த சிந்தனையோடு செயற்படுகிறார்கள்?

3. ஜனாதிபதி விலகிய பின்பு நடக்கும் தேர்தல் முழுமையான ஜனநாயக அடிப்படையில் நடைபெற தயாரிக்கப்பட்டுள்ள சட்டரீதியான வேலைத்திட்டம் என்ன?

4. புதிதாக தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றத்தின் மூலம்

அரசியலமைப்பை தயாரிப்பதாயின் நாடாளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாக செயற்பட வேண்டும். அதற்கு தற்போதைய சட்டத்தின்படி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலத்தையுடைய பிரிவு இருக்கின்றதா? அதற்கான உத்தரவாதம் என்ன? தற்போதைய சட்டத்தை மதிக்காமல் புரட்சிகர அரசியலமைப்பு சபையின் மூலம் அரசியலமைப்பு சட்டத்தை தயாரிப்பதாயின் அது சோபித தேரர் கூறுவதைப் போன்று தேர்தல் செயற்பாட்டின் ஊடாக அல்ல. அதற்காக பாரிய மக்கள் சக்தியை வெளிப்படுத்தும் சமூக செயற்பாடு தேவை. அவ்வாறன்றி, எளிய பெரும்பான்மையின் மூலம் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படுவதால் அந்த அரசியலமைப்புச் சட்டம் மக்களால் புனிதமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இக்கேள்விகளுக்கு பதில் வழங்கப்படாதமையால் சோபித தேரரின் ஊடாக முன்வைக்கப்படும் ஆலோசனை நடைமுறை சாத்தியமற்றது என்பது வெளிப்படை. அதாவது, அக்கருத்தினால் எழக்கூடிய வரையறைகளுக்கு அல்லது அதனை நிறைவேற்ற நம்பிக்கையானதும் தர்க்கரீதியானதுமான வேலைத்திட்டத்தை சமர்ப்பிக்க முடியாது.

நாம் முன்பே கூறியதைப் போன்று, அரச முறைக்கும் பொருளாதாரத்திற்குமிடையில் பிரிக்க முடியாத தொடர்பு இருக்கின்றது. நவ தாராளமய முதலாளித்துவ உபாயத்தோடு கட்டுப்பட்டுள்ள தேவைகளை அப்படியே விட்டுவிட்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையோ அல்லது அதன் மூலம் பொறுப்பேற்று செயற்படும் சக்தியையோ மாற்ற முடியாதிருப்பது, அவ்வாறான ஏகாதிபத்திய பதவியை அல்லது அவ்வாறான அதிகாரப் பயன்பாட்டை உருவாக்கியதே மேற்படி பொருளாதார உபாயத்தின் அரசியல் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கம் இருப்பதால்தான். அதனை மாற்றுவதாயின் அவ்வாறான ஜனாதிபதி பதவியின்

பெயரை மட்டும் மாற்றி அந்த அதிகாரம் வேறு பெயரில், வேறு விதத்தில் செயற்படுவதை நிராகரிக்க வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, நிறைவேற்று அதிகார பிரதமர், நிறைவேற்று அதிகார நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு கூறல், அதிகாரம் செலுத்தும் அரச நிறுவனங்களுக்கிடையில் சார்பும் சமநிலையும் போன்ற பல்வேறு ஆலோசனைகள் இறுதியில் ஒரே மாதிரியான பிரதிபலன்களையே பெற்றுத்தரும். இந்த ஆலோசனைகளை வழங்கும் அரசியல் சக்திகள் ஒருபுறம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்கு எதிராக உருவாகியிருக்கும் மக்கள் கருத்தை தமது அரசியல் திட்டங்களுக்காக முகாமைத்துவம் செய்கின்றனவேயன்றி, ஆகக் குறைந்தது முதலாளித்துவ ஜனநாயகம் சம்பந்தமான அடிப்படைகளையாவது ஸ்தாபிக்க முயலுவதில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அல்லது அதற்கு சமமாக உருவாகியுள்ள அரசியல் மேலாதிக்கம் உருவாவதற்கு உண்மையான வரலாற்று மற்றும் புறநிலை காரணங்கள் சம்பந்தமாக சரியான புரிதல் இல்லாத வெறும் கற்பனை மட்டுமே காரணம்.

மக்களின் ஜனநாயக உரிமைகளை உண்மையாகவே உறுதி செய்வதாயின், தற்போதைய சமூக முறைக்கு எதிர்மறையானதும் முழுமையானதுமான மாற்றம் தேவைப்படுகிறது. அந்த மாற்றம் தேவைப்படுவது அரச அமைப்பிற்குள் மட்டுமல்ல. அவ்வாறான மாற்றம் எதார்த்தமாவதற்காக பொருளாதாரத்திலும் சமூகத்திலும் அடிப்படையில் வெளிப்படையான மாற்றங்கள் உருவாக வேண்டும். இலங்கையில் அரசியலமைப்புச் சட்டப்படி ஏகாதிபத்தியமொன்று உருவானது சம்பந்தமாக நடத்தப்படும் பேச்சுக்களில் அவ்வாறான அடிப்படையின் மீதிருந்தே எமது பங்களிப்பு கிடைக்கிறது. நவ தாராளமய பொருளாதார உபாயத்தை தோற்கடிக்கும், சமவுடமை பொருளாதாரத்தை கட்டியெழுப்பும், மக்களின் இறையாண்மையை நடைமுறைபடுத்தும் புதிய அரச அமைப்பை நிலைநாட்டும் தொடர் செயற்பாட்டின் ஊடாகவே மக்களின் உண்மையான ஜனநாயக

உரிமைகளை பாதுகாக்க முடியும்.

## 5. உழைக்கும் மக்கள் சக்திக்கான ஆலோசனை

### 1. அரச அமைப்பு சம்பந்தமான சோஷலிஸ கோட்பாடு

புதிய அரசியலமைப்பு சம்பந்தமான பிரச்சினையில் இடதுசாரிகள் இரு விடயங்களை முன்வைத்து பிரவேசிக்கின்றனர்.

I. அரசியல் ஜனநாயகம் கட்டாயமாக பொருளாதார ஜனநாயகத்தோடு பிணைந்திருப்பதுடன் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கக் கூடிய அரச முறையொன்றை நிர்மாணித்தல் என்பது, சமூக - பொருளாதார - அரசியல் கலாச்சாரத் துறைகளில் மேற்கொள்ளப்படும் புரட்சிகர மாற்றத்தோடு பிணைந்திருக்கிறது. ஆகவே, அரசியல் முறை சம்பந்தமான பேச்சுக்கள் பொருளாதார ஜனநாயக செயற்பாட்டுடன் உள்ளடக்கப்படல் வேண்டும்.

II. உண்மையான ஜனநாயகத்தை வெல்வதற்காக நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றத்தை பலப்படுத்தல் சம்பந்தமான சம்பிரதாய லிபரல் சிந்தனைக்கும் அப்பால் சென்ற, மக்களின் அரசியல் பங்களிப்பை பலப்படுத்தும் புதிய மாதிரியொன்று தேவைப்படுகிறது.

ஜோன் லொக், தோமஸ் ஹொப்ஸ் போன்ற லிபரல் சித்தாந்தவாதிகளால் முன்வைக்கப்பட்ட கோட்பாடாவது ”அதிகாரப் பகிர்வு” (Seperation to Power) கோட்பாடாகும். அதற்கேற்ப நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றின் அதிகாரங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுவதோடு, அவற்றை செயற்படுத்துவதற்கு தனி நிறுவன அமைப்பு உருவாக்கப்படுகிறது. என்றாலும், இதற்கு எதிராக இடதுசாரிகளுக்கு மத்தியில் பயன்படுத்தப்பட்டது பிரான்ஸிய

தத்துவாதியான ரூசோவினால் முன்வைக்கப்பட்டு பாரிஸ் கம்யூனின் ஊடாக வளர்த்து செயற்படுத்தப்பட்ட ”அதிகாரப் பரவலாக்கல்” (Devolution to Power) கோட்பாடாகும். முதலாவதில் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்வதோடு, செங்குத்தாக அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இரண்டாவதில், ”பொது மக்கள் எதிர்பார்ப்பு” (Popular Will) பொதுவாக கவனத்தில் எடுக்கப்படுவதோடு, நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றின் அதிகாரங்களுக்கிடையிலான பிணைப்பு முதலாவதை விட அதிகமாகும். அந்த அதிகாரம் நேராக மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் அரச முறைகளிலிருந்து மக்கள் அலகுகள் வரையிலும், அவற்றிலிருந்து பல்வேறு அரச முறைகள் வரையிலும் வியாபித்து, மீண்டும் ஒன்றிணைந்து செயற்படும் அரசியலமைப்பாக பயன்படுத்தப்படுகிறது.

லிபரல் கோட்பாட்டிற்குள் மக்களின் இறையாண்மை பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு குறித்த காலத்திற்கு ஒருமுறை ஒப்படைக்கப்படுவதோடு, சோஷலிஸ கோட்பாடு என்பது மக்கள் தமது இறையாண்மையை அன்றாடம் நடைமுறையில் கொண்டு வருவதுதான். ”பிரதிநிதித்துவ ஜனநாயகம்” குறித்து சம்பிரதாய லிபரல் கருத்துக்கு ஏற்ப மக்களின் இறையாண்மை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த முறையிலுள்ள சிக்கல்களும், போலி பிரதிநிதிகள் நிறுவனங்களில் நடக்கும் அதிகாரத் துஸ்பிரயோகங்களும் நிறைந்து காணப்படுகின்றன. எனவே இவற்றை கவனத்தில் எடுத்தே புதிய ஆலோசனைகள் தயாரிக்கப்படல் வேண்டும். அதன்போது மக்கள் தமது இறையாண்மையை செயலுருவாக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டியதோடு, சார்பும் சமநிலையும் நிர்மாணிக்கப்படும் முறைக்கு பதிலாக மக்களின் இறையாண்மை செயற்படும் விதத்திலான முறையொன்று சம்பந்தமாக ஆலோசிக்க வேண்டும். இப்படியான முறையின் மூலம் பொது மக்களில்

பெரும்பாலானோரை அரசியல் செயற்பாட்டில் இணைத்துக் கொள்வதோடு மக்கள் பங்களிப்பும் அதிகரிக்கப்படல் வேண்டும். வேலைத்தலங்கள், விவசாய நிலங்கள், மீன்பிடித் துறைமுகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் கிராம, நகர மட்டத்தில் மக்களால் தெரிவு செய்யப்படும் மக்கள் சபைகள் அமைக்கப்பட வேண்டியதோடு, தேசிய ரீதியில் சட்டங்கள் தயாரிக்கும் அதிகாரம் கொண்ட தேசிய சட்டவாக்கச் சபை மத்தியில் செயற்படும். நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றத்தின் அதிகாரம் நாட்டின் ஒவ்வொரு அலகுக்கும் விகிதாசாரத்தின்படி பரவலாக்கப்படுவதோடு, அதனை அடிப்படைச் சட்டத்திற்கு முரணாகாத விதத்தில் அரச கொள்கைகளை செயற்படுத்தும் அதிகாரமும், மக்கள் நீதிமன்றங்கள் போன்ற முறைகள் ஊடாக நாட்டின் ஒவ்வொரு அலகிலும் நடைமுறையில் கொண்டுவர தூ ண்டப்படும். தேசிய அரசியல் நிர்ணய சபையின் அதிகாரம் மீண்டும் மக்களின் இறையாண்மைக்கு உட்படுத்தல், பிரதிநிதிகளை மீள அழைக்கும் உரிமை (Right to Recall) நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு சவால் விடும் அதிகாரம் (Judicial Review) தேவையான கையொப்பங்களை பெற்ற மனுவின் ஊடாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு மற்றும் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் அரசியலமைப்பு சட்டப்படி மக்கள் மன்றத்திற்கு வழங்கப்படும். அவர்களின் சொத்துக்கள், வங்கி இருப்புக்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள மக்களுக்குள்ள உரிமையை பாதுகாத்தல், எந்தவொரு மக்கள் பிரதிநிதியையும் நீதிமன்ற செயற்பாட்டின்போது சாதாரண மக்களுக்கு சமமாக நடத்துதல், எந்தவொரு மக்கள் பிரதிநிதியையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்துதல், அவர்களது பிரதிநிதித்துவத்தை மீளப்பெறுவதற்கான மக்கள் உரிமையை பாதுகாத்தல் போன்ற முறைகள் பயன்படுத்தப்படும். இப்படியான முறைகளினால் மக்கள் மன்றங்கள் வெறும் பேச்சுக் கடைகளாக ஆகியிருப்பதிலிருந்து மீட்டு மக்கள் பிரதிநிதிகளை ஆட்சியிலும் நிர்வாகத்திலும் நேரடி பங்காளிகளாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வீழ்ச்சியடைந்துள்ள சோஷலிஸ நாடுகளின் அரசியலமைப்புச் சட்டம் ஜனநாயக அடையாளங்களை கொண்டிருந்தாலும், அது செயலுருவாக்கப்படவில்லை என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. சோவியத் தேசத்தில் அல்லது அதைப்போன்ற சோஷலிஸ நாடுகளில் காணப்பட்டதும், இன்றும்கூட செயற்படும் அதிகாரிவாத அடையாளங்கள் குறித்தும் பாரதூரமான விமர்சனம் இருக்கிறது. எனவே, அவ்வாறானதொரு அரசியலமைப்பு முறையை முழுமையாக எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. என்றாலும், இந்த விடயம் சம்பந்தமான விமர்சனங்களுக்கும், முதலாளித்துவ சித்தாந்திகள் ஊடாக முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்குமிடையில் வித்தியாசம் இருக்கின்றது. முதலாளித்துவ விமர்சகர்கள் தமது விமர்சனத்தின் எல்லையாக எடுத்துக் கொள்வது கட்சிக்கும் மற்றும் பொது மக்களில் பெரும்பான்மையோரான ஒடுக்கப்பட்ட மக்களுக்குமிடையேயான உறவையேயாகும். ஆனால் சோஷலிஸ அரசாங்க முறையிலுள்ள பலம்வாய்ந்ததும் முக்கியமானதுமான காரணியாக இருப்பது கட்சி மற்றும் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களுக்கிடையிலான உணர்வு பூரணமான உறவாகும். அது ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கும் கட்சி என்ற வகையில் அல்ல, மக்களிடமிருந்து வேறுபட்டு நிற்கும் அதிகாரிகளாக அல்ல, மக்கள் மத்தியில் முறையாக தடம் பதிக்கும், மக்களில் பெரும்பான்மையோர் உறுப்புரிமையை கேட்டு நிற்கும், மக்கள் மத்தியிலிருந்தே உருவான மக்களுக்காகவே சேவை செய்யும் கட்சியாகும். சுதந்திர தேர்தலின் மூலம் பிரதிநிதிகளை தெரிவு செய்வதாகக் கூறினாலும், பிரதிநிதிகளாக கம்யூனிஸ கட்சி உறுப்பினர்களே உண்மையில் நியமிக்கப்படுகிறார்களென முதலாளித்துவ விமர்சகர்கள் சோஷலிஸ ஆட்சி முறை சம்பந்தமாக தமது விமர்சனத்தில் உதாரணத்திற்கு கூறுகிறார்கள். வர்க்கத்தின் விரைவான பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படுவதோடு, அந்த உறவின் மூலம்தான் அராஜக நிலை உருவாவதை தடுக்க முடியும். உதாரணமாக சிறு குழுவினரால் பெரும்பாலானோர்

ஆளப்படும்போது பிரதிநிதித்துவம் சம்பந்தமான கோட்பாடும், பெரும்பாலோரினால் ஆளப்படும்போது பிரதிநிதித்துவம் சம்பந்தமான கோட்பாடும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகும். இரண்டாவதில் வர்க்கத்தின் ஆட்சி நடப்பதோடு, கட்சிக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான ஜனநாயக செயற்பாட்டு உறவுகளின் தன்மையின் மீதே அதன் சுக்கான் கட்சியின் கைக்கு கிடைக்கும். ஒடுக்கப்பட்ட வர்க்கத்தில் பெரும்பாலானோர் ஆட்சியில் பங்கேற்பதும், படிப்படியாக ஒட்டுமொத்த ஆட்சி அதிகாரமும் காலாவதியாதும், வெகுஜன சமூகம் சுயாட்சியில் காலடி எடுத்து வைத்தலை இலக்காகக் கொள்வது என்ற அடிப்படையின் மீதே சோஷலிஸ அரசியல் சட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை நாம் மறக்கக் கூடாது. எனவே, மக்களில் பெரும்பாலானோரான வர்க்கத்திற்கு அதிகாரத்தை ஒழுங்கமைக்கும் பயிற்சியை வழங்குவதோடு, சமூகத்திற்குள் அரச நிர்வாகம் உள்ளிட்ட அனைத்துவித கட்டுப்பாட்டு அதிகாரங்களும் நீர்த்துப் போகச் செய்யும் இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டியுள்ளது.

தற்போதைய முதலாளித்துவ முறையிலிருந்து வேறுபட்ட சோஷலிஸ ஆட்சி முறையில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமொன்று இருக்கின்றது. அதாவது, அரச நிர்வாக முறை மூலம் பிரதிநிதித்துவம் செய்வது, இலாபத்தையோ சுரண்டலையோ அடிப்படையாகக் கொண்ட சிறு குழுவினரின் தேவைகளை பிரதிநிதித்துவம் செய்யும் உற்பத்தி முறையையோ விநியோக முறையையோ அல்ல. பெரும்பாலோரின் தேவைகளை முதன்மையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் விநியோக முறையாகும். இதனை அடிப்படையாக ஏற்றுக் கொள்ளும் அரச முறையொன்றினால் மாத்திரமே இவ்வாறு செயற்பட முடியும். தற்போதைய சமூகத்தில் சிறு குழுவினரான சுரண்டலாளர்களின் ஆட்சி துடைத்தெறியப்பட்டு சமூகத்தில் ஒடுக்கப்பட்டுள்ள பெரும்பான்மையின் ஆட்சி தேவைப்படுகிறது. அந்த பெரும்பான்மையின் அதிகாரம் வெளிப்படுத்தப்படும்

மற்றும் பாதுகாக்கப்படும் விதத்திலான சோஷலிஸ அரசாங்க முறையொன்றின் அரச அமைப்பு உருவாகும். அது அரசியலமைப்பு முறையால் மாத்திரமே செய்யக் கூடிய காரியமல்ல. எனவே, பொது மக்களை இந்த அரச நிர்வாக செயற்பாட்டோடு தொடர்ந்து இணைத்துக் கொள்வதற்கான பொறிமுறையொன்று தேவைப்படுவது அதனால்தான். மேற்குறித்த மூலங்களின் அடிப்படை மீதே அவ்வாறான பொறிமுறையொன்றை அமைக்க முடியும். ஜனநாயக மத்தியப்படுத்தலுக்கேற்ப அரசாங்க முறையொன்றை அமைப்பது என்பது இதுதான். அதன் மூலம் மத்தியப்படுத்திய ஆட்சி நிலவுவதோடு, விரிவான ஜனநாயக அடிப்படை மீதே அது எப்போதும் செயற்படும். நான்கு வருடத்திற்கு, ஐந்து வருடத்திற்கு அல்லது ஆறு வருடத்திற்கு ஒரு முறை மாத்திரமல்ல, தொடர்ந்து செயற்படும் பொறிமுறையினால் மக்கள் சக்தியை செயற்படுத்துவதே இதன் நோக்கமாகும். அது, சமூகத்தின் பெரும்பான்மையினரது பங்களிப்புடன் நடைபெறும். சோஷலிஸ அரசொன்றின் மூலம் எடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளும் ஒவ்வொன்றாக மக்களின் கேள்விக்கு உட்படுத்துதல் போன்ற நிலைகள் இதன் மூலம் கருதப்படமாட்டாது. என்றாலும், அவ்வாறான திட்டங்கள் ஜனநாயத்தின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு தரங்களின் அமைப்புகளை காலத்திற்கு காலம் தெரிவு செய்தல். தேவையேற்படுமிடத்து மீண்டும் கலைத்து விடல். சில முக்கிய தீர்மானங்களின்போது நேரடியாக பங்கேற்பதன் மூலம் இந்த ஜனநாயக பண்பு வெளிப்படுத்தப்படும்.

பாரிஸ் கம்யூனின் பிரதிநிதிகளை நியமிக்கும் விடயத்தில் முதலாவதாக நடைமுறைபடுத்தப்பட்ட இந்த கோட்பாடு பிற்காலத்தில் தோன்றிய பல்வேறு சோஷலிஸ ராச்சியங்களில் பல வகைகளில் உள்ளடக்கப்பட்டது. ஆதலால், சோவியத், சீனா, யூகோஸ்லேவியா, கியூபா ஆகிய நாடுகளின் சோஷ லிஸ அரசியலமைப்பில் பல்வேறு மட்டங்களில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. உழைக்கும் மக்கள் முதன்மையாக ஒடுக்கப்பட்ட

மக்களின் உண்மையான ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க இறையாண்மையை நடைமுறைபடுத்தும் முறையொன்று தேவைப்படுகிறது.

## 2. அரசியலமைப்பு சட்டம் தயாரித்தல்

புதிய அரசியலமைப்பு சட்டத்தை தயாரிக்கும் விடயத்தில் சோஷலிஸ மற்றும் இடதுசாரிய கோட்பாடாக இருப்பது, அதற்கு விரிவான மக்கள் பங்களிப்பை பெற்றுக் கொள்வதேயாகும். இதுவரை இலங்கையில் அமுல்படுத்திய சோல்பரி, 1972, 1978 ஆகிய எந்த அரசியலமைப்பு சட்டத்திலும் அவ்வாறான பங்களிப்பு இருக்கவில்லை. மாத்திரமல்ல, அந்த அரசியலமைப்பு சட்டத்திற்கு மக்கள் அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, அவை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடப்படாமல் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. அது சம்பந்தமான எமது கருத்துக்களை இவ்வாறு குறிப்பிட முடியும்.

01. புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு அரசியலமைப்பு நிர்ணய சபையொன்றை உடனடியாக நிறுவ வேண்டும்.

02. அந்த அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு பிரதிநிதிகளை தெரிவு செய்யும் விடயத்தில் உழைக்கும் மக்கள் முதன்மையாக ஒடுக்கப்பட்ட சக்திகள் பிரதிநிதித்துவம் செய்யும் ஜனநாயக முறையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். உதாரணமாக, தொழிற்சங்க பேதமின்றி வேலைத்தலங்களில் தொழிலாளர்களின் நேரடி வாக்குகளினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அல்லது, விவசாய நிலங்களில் விவசாயிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பிரதிநிதிகள் மாநாட்டில் அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு தொழிலாளர் அல்லது விவசாய பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும்.

03. அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு மக்கள் கருத்துக்களை எழுத்து வடிவிலும் வாய்மூலமும் முன்வைக்கக் கூடிய வெளிப்படையான முறையொன்றை தயாரிக்க வேண்டும்.

04. இறுதியாக தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தை கருத்தாடலுக்கு உட்படுத்தி மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் அங்கீகரிக்க வேண்டும்.

அனைத்து சோஷலிஸ நாடுகளிலும் விரிவான மக்கள் கருத்தாடலின் பின்னர் ஜனநாயக ரீதியில் அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரிக்கப்படுகிறது. உதாரணமாக சோவித்தேசத்தில் 1936 அரசியலமைப்பு சட்டம் குறித்து கருத்தாடுவதற்கு 5,27,00 கருத்தாடல்களை ஏற்பாடு செய்ததோடு, அவற்றில் 365,000 மக்கள் பங்கேற்றனர். மக்கள் முன்வைத்தை 154,000 திருத்தங்களுடன் அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டது. சீன அரசியலமைப்பை 1954 மார்ச் மாதம் பல்வேறு பொது அமைப்புக்கள் கருத்தாடலுக்கு எடுத்ததோடு, 1954 ஜூன் மாதத்திலிருந்து வெளிப்படையான மக்கள் கருத்தாடலுக்கும், அது சம்பந்தமான கூட்டங்களுக்கும் விடப்பட்டது. கருத்தாடல்களில் மக்கள் இலட்சக் கணக்கில் பங்கேற்றனர். மக்களிடமிருந்து கிடைத்த திருத்தங்களுடன் செப்டம்பர் 9ம் திகதி அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டது. அக மற்றும் புற காரணங்களினால் சோவியத் தேசத்தில் நிலவிய உருக்குலைந்த சோஷலிஸம் சரிந்தமையாலோ, சீனாவில் இன்றைய முதலாளித்துவ பயணத்தினாலோ மக்கள் பங்களிப்பு அரசியலமைப்பொன்றை அங்கீகரிக்கும் விடயத்தில் அவர்கள் அன்று கடைப்பிடித்த ஜனநாயக ரீதியிலான முறைகளை நிராகரிப்பது முட்டாள்தனமாகும். முன்னைய சோஷலிஸ முகாமிலிருந்தோ, இன்றைய சோஷலிஸமென கூறிக்கொள்ளும் சீனாவிலிருந்தோ கற்றுக் கொள்வதும், ஈர்த்துக் கொள்வதும் இலங்கை சோஷலிஸத்தை கட்டியெழுப்புதற்குத் தேவையான அனுபவங்களையே அல்லாது ஒதுக்கித் தள்ள

வேண்டிய அனுபவங்களையல்ல. முதலாளித்துவ முறையை கட்டியெழுப்பும்போது உருவான ஜனநாயகம் சம்மந்தமான பரந்த கோட்பாட்டை அப்படியே சோஷலிஸ சமூகமொன்றை நிர்மாணிப்பதில் பயன்படுத்த வேண்டியுள்ளது.

### I. அரசின் உலகாயத வடிவம்:

01. அரசின் உலகாயத வடிவத்தை உறுதி செய்தல் வேண்டும். சமய நடவடிக்கைகளில் அரசியல் தலையீடும், அரசியல் நடவடிக்கைகளில் சமய நிறுவனங்களின் தலையீடும் தடுக்கப்படும்.

02. சமயம் மக்களின் தனிப்பட்ட விடயமாக இருப்பதோடு, ஒவ்வொருவரும் தான் விரும்பிய சமயத்தை பின்பற்றும் உரிமை உறுதி செய்யப்படல் வேண்டும். சமயம் சார்ந்த காரணங்களால் வேறுபாடு காட்டுவதை தடை செய்ய வேண்டும்.

03. அனைத்து சமயங்களையும் சமமாக கவனிப்பதுடன் எந்தவொரு சமயத்திற்கும் முன்னுரிமையளித்து வரப்பிரசாதங்கள் வழங்கக் கூடாது.

### I. அடிப்படை மனித உரிமை:

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தில் ஒருவழிபாட்டையோ சமயத்தையோ பின்பற்றும் உரிமை, சித்திரவதைகளுக்கோ, கொடூர, மனிதநேயமற்ற கவனிப்பு மற்றும் அவமானப்படுத்தலிருந்து விடுதலை. சட்டத்தின் பாதுகாப்பு, இனம் - சமயம் - மொழி - குலம் - பாலியல், அரசியல் கருத்து அல்லது பிறப்பிடம் மீதான வேறுபாட்டுக்கு ஆளாகாத சுதந்திரம் ஆகிய உரிமைகள் 3வது அத்தியாயத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளன. மொழி உரிமை, கருத்துச் சுதந்திரம், கூட்டம் கூடுதல் மற்றும் கூட்டிணைவின் உரிமை, தொழிற் சங்கங்கள் அமைக்கும் உரிமை ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன. நடைமுறையில் செயற்படுத்துவது

எப்படியிருந்தாலும், அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இலங்கையின் அரசியலமைப்பில் குறைந்தளவு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பிரகடனத்தின் மட்டத்திற்காவது நெருக்கமாக இருக்கின்றது. உதாரணமாக, ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாம் உறுப்புரையில் காணப்படும் "வாழ்க்கைக்கு, சுதந்திரத்திற்கு மற்றும் உயிர் பாதுகாப்புக்கான உரிமை" தற்போதைய அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பில் ஆகக் குறைந்தது கீழ் காணும் உரிமைகள் அரசியலமைப்பு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

01. மரபுவழி, சமூக நிலை, இனம், சமயம், மொழி, கல்வி ஆண் - பெண் தன்மை, தொழிலின் தன்மை ஆகிய எந்த பேதமுமின்றி அனைத்து பிரஜைகளையும் சம நிலையில் ஏற்றுக் கொள்ளல்.

02. ஆண் - பெண் சமத்துவத்தை ஏற்றுக் கொள்வதோடு, பெண்களுக்காக சுகாதார மற்றும் தொழில் பாதுகாப்புக்கான நடவடிக்கை, பெண்களின் உழைப்பு விடயத்தை அவர்களது தாய்மையோடு ஒன்றிணைக்கக் கூடிய தொழில் நிபந்தனைகளை வழங்கல், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறு குழந்தைகளையுடைய தாய்மார்களுக்கு சம்பளத்துடனான விடுமுறை மற்றும் வேலைநேரத்தை குறைத்தல் உள்ளிட்ட விஷேட சந்தர்ப்பங்களை வழங்குவதை உரிமையாக ஏற்றுக் கொள்ளல்.

02 (1) வீட்டு நடவடிக்கையில் ஈடுபடும் பெண்களின் உழைப்பு சமூக கைத்தொழிலாக கருதப்படும். அதாவது பல்வேறு நிலைகளில் குழந்தைகளை கவனிப்பதில், குடும்பத்தின் அத்தியாவசிய கருமங்களை மேற்கொள்ளும்போது விரயமாகும் உழைப்பு சமூக அபிவிருத்திக்கு அத்தியாவசியமான ஒன்றாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும். அதன் மூலம்

வீட்டு வேலைகளில் ஈடுபடும் பெண்ணை சமமற்ற விதத்தில் கவனிப்பதற்கு பதிலாக அவளது உழைப்பின் சமூக மதிப்பு சரியான விதத்தில் கணிக்கப்படும்.

03. வேலை செய்யும் உரிமை, தனது திறமை, ஆற்றல் மற்றும் சமூகத் தேவைக்கு ஏற்ப தொழிலொன்றை தெரிவு செய்யும் உரிமை. தொழில் இல்லாமலாதல் மற்றும் தொழிலின்மையின் ஆபத்திலிருந்து விடுதலையாகும் உரிமை.

03 (1) சமூகத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் திருப்தியோடு தமது உழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது உறுதி செய்யப்படும். அதேபோன்று பல்வேறு கைத்தொழில்களிலும், தொழிற்துறைகளிலும் ஈடுபடும் உரிமை அரசியலமைப்பிலேயே உறுதி செய்யப்படும். இவ்வாறு தமது தொழிலிலோ, உழைப்பிலோ திருப்தியடையக் கூடிய நிலையை உருவாக்குவதன் மூலம் உழைப்பில் சிறந்த பலனை பெறக் கூடியதாக இருப்பதோடு, உழைக்கும் நேரத்தை குறைப்பதுடன், குடும்ப மற்றும் சமூக நடவடிக்கைகளில் மகிழ்ச்சியுடன் பங்கேற்கக் கூடிய மனிதன் உருவாக்கப்படுவான்.

04. எந்த குறைந்த மதிப்புக்கும் ஆளாகாது சம உழைப்புக்கு சம சம்பளம் பெறக் கூடிய உரிமை, சமூக பாதுகாப்புடனான நியாயமான சம்பளம் பெறும் உரிமை.

05. நாளாந்த வேலை நேரத்தை வரையறுத்தல் மற்றும் விடுமுறை நாட்களுடன் போதுமான ஓய்வு பெற்றுக் கொள்ளும் உரிமை.

06. மூப்படைதல், அங்கவீனமடைதல் மற்றும் நோய்வாய்ப்படல் போன்ற நிலைகளில் வேலை செய்ய முடியாத அனைவருக்கும் சமூகம் என்ற வகையில் பராமரிப்பு பெற்றுக் கொள்ளும் உரிமை.

07. தொழில் செய்தவர் மரணித்துவிட்டால் மேற்படி உரிமைகளை அக்குடும்பம் பெற்றுக் கொள்வதற்கான உரிமை.

08. தனது தொழிலில் தொழில் ரீதியான நோய்களிலிருந்தும் திடீர் விபத்துக்களிலிருந்தும் விடுபட்டு பாதுகாப்புடன் வேலை செய்யும் உரிமை.

09. நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கவும் நோய் நொடிகளுக்கு சிகிச்சை பெறவும் மனிதர்களுக்குள்ள சம உரிமை (இலவச மருத்துவ சேவையை பெறுவதற்கான உரிமை).

10. கல்வி கற்பதற்கு ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள உரிமை. அனைத்து துறைகளிலும் தரமான உயர் கல்வி பெறும் உரிமை. இதன்போது கல்வி முதலாளித்துவ பொருளதாரத்தின் தொழிலாளியாவதற்கான பயிற்சிக்கும் அப்பால் சென்ற மனித சமூகத்தின் அறிவையும் அனுபவங்களையும் எதிர்கால சமுதாயத்திடம் கையளிக்கும் முறையாக மாற்றப்படும்.

11. விளையாட்டில் ஈடுபடுவதற்கான பயிற்சியை பெறவும் விளையாட்டுக்களை பார்வையிடவும் உள்ள உரிமை.

12. மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கவும், தகவல்களை பெறவும் உள்ள உரிமை. அரசாங்கத்தின் தடைகளுக்கோ, வரையறைகளுக்கோ அடிபணியாது அச்சு, இலத்திரனியல் மற்றும் காந்த அலைவரிசைகளை பயன்படுத்த மக்களுக்குள்ள உரிமை.

13. தனது கடிதங்கள், மின்னஞ்சல், பெக்ஸ், தொலைபேசி உள்ளிட்ட தொலை தொடர்பு ஊடகங்களில் அரச நிறுவனங்களோ, வேறு எவருமோ இரகசியமாக நுழைவதை தடுப்பதற்கான உரிமை. தனிநபர் உரிமை சட்டத்தால் பாதுகாக்கப்படும்.

14. கலாச்சார வாழ்க்கையில் சுதந்திரமாக நுழையவும், கலையை ருசிக்கவும் விஞ்ஞான முன்னேற்றத்தின் பங்காளிகளாவதற்கான உரிமை. உடல் மற்றும் மனநிலை பாதிப்புக்குள்ளான மக்களுக்கு கலாச்சார உரிமைகளை அனுபவிக்கும்

உரிமையை உறுதி செய்ய விஷேட ஏற்பாடுகள் செய்யப்படும்.

15. மக்கள் தமது வீடுகளை அலங்கரிப்பதற்கான உரிமை. வீட்டிலுள்ளோரின் விருப்பமின்றி, சட்ட ரீதியான அனுமதியின்றி வீட்டுக்குள் நுழைய எவருக்கும் உரிமை கிடையாது.

சோஷலிச சமூக முறைக்குள் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு மேலதிகமாக, அடிப்படை கடமைகள் சம்பந்தமாக அத்தியாயமொன்று உள்ளடக்கப்படும். அதன்படி வேலை செய்வது உரிமை மட்டுமல்ல, கடமையுமாகும். கல்வி என்பது உரிமை மட்டுமல்ல, கடமை. துணை பிரஜைகளினதும் தமதும் உரிமைகளை பாதுகாத்தலும், சோஷலிஸத்தை நடாத்திச் செல்லலும் கடமையாகும் என்ற ரீதியில் விஷேட அத்தியாயமொன்று அதில் உள்ளடக்கப்படும்.

## 5. பிரதிநிதிகள் சிறப்பு வரப்பிரசாதங்களை அனுபவித்தல்

1) அனைத்து அரச அதிகாரங்களினதும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கும் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதன் மூலம் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும். 16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளும் பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் பங்கேற்கவும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளும் பிரிதிநிதிகளாவதற்கும் உரிமை உண்டு.

2) மக்கள் மற்றும் பிரதிநிதிகள் அரச நடவடிக்கைகளிலும், நிர்வாகத்திலும் செயல் ரீதியில் பங்கேற்கச் செய்யப்படுவர்.

3) குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் தெரிவு செய்யப்படும் பிரதிநிகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீக்கும் அதிகாரம் வாக்காளர்களுக்கு உண்டு.

4) அதிகாரவாதம் வளர்வதை தடுக்க கீழ்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

A. மக்கள் பிரதிநிகள் எந்த வகையிலும் சாதாரண பொது

மக்களை விட வேறு வரப்பிரப்பிரசாதங்கள் அனுபவித்தலை ரத்துச் செய்தல்.

B. அப்பிரதிநிதிகளின் சம்பளம் பயிற்றப்பட்ட தொழிலாளியின் சம்பளத்தை விட அதிகரிப்பதை நிறுத்துதல்.

C. அப்பிரதிநிதிகளின் சொத்துக்கள் வங்கி இருப்புக்கள் சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ளும் மக்கள் உரிமையை பாதுகாத்தல்.

D. எந்தவொரு மக்கள் பிரதிநிதியையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்த மக்களுக்குள்ள உரிமையை ஏற்றுக் கொள்ளல்.

## 6. மக்கள் பங்களிப்போடு நிர்மாணிக்கப்படும் அரசியல் அமைப்பு

அரசியலமைப்பு சட்டம் சம்பந்தமான சோஷலிஸ கொள்கை ஜனநாயக மத்தியப்படுத்தலின் அடிப்படையில் தயாரிக்கப்படும். அது மத்தியப்படுத்தப்படினும், சர்வாதிகார ராச்சியங்களைப் போன்று அல்லாது ஜனநாயக முறையிலேயே மத்தியப்படுத்தப்படும். அவ்வாறான அரசியலமைப்பு ஒரேயடியாக ஜனநாயக ரீதியில் மக்கள் பங்களிப்பின் அடிப்படையில் செயற்படுவதோடு, உடனடி தலையீடுகளுக்கு ஏற்றவாறு மத்தியப்படுத்தப்படும். சீனாவின் அரசியலமைப்பு சம்மந்மாக மாவோ கூறுகையில், அதன் அடிப்படை ”ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு மத்தியப்படுவதோடு, மையப்படுத்தப்பட்ட வழிகாட்டுதலின் கீழ் ஜனநாயகத்தை உறுதி செய்தல்” என்றார். அது, மைய அமைப்புகளின் தீர்மானங்களை பாதிக்காத வகையில் நாட்டின் அமைப்புகளுக்கு விரும்பியவாறு முடிவெடுக்க இடமளித்து, நடைமுறை அரசியலமைப்பில் செயல்முறைபடுத்தப்பட்டது. உதாரணமாக, சோவியத் சோஷ லிஸ கூட்டாட்சி சங்கத்தின் பிரதான அரசியலமைப்புக்கு பங்கமேற்படாதவாறு அரசியலமைப்பொன்றை தாம் விரும்பியவாறு தயாரித்துக் கொள்ள சோவியத் தேசத்தில் சுயாட்சியுடைய கூட்டரசாங்கங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. பிரதேச

அலகுகள் தமது பிரதேசத்தில் சுயேட்சையாக செயற்படும் உரிமையும், மத்தியிலுள்ள அலகுகளின் நடவடிக்கைகளில் பங்கேற்கும் வாய்ப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளமை இந்த அரசியல் அமைப்பில் காணப்படும் சிறப்பம்சமாகும். மத்தியப்படுத்தல் என்பது, பிரதான அரச கொள்கை விடயத்திலும், பொது வழிகாட்டுதல் விடயத்திலும் ஒட்டுமொத்த அரசுக்குமாக ஒழுங்கமைக்கப்படும் பொருளாதாரத்தின் மூலமும் அனைத்து அலகுகளையும் ஒரே வேலைத் திட்டத்தில் இணைத்தலாகும். ஜனநாயகம் என்பது, ஒவ்வொரு அலகும் ஒன்றுக்கொன்று பொறுப்புக்கூற வேண்டியதோடு, ஒட்டுமொத்த அமைப்பும் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். ஒவ்வொரு அலகும் ஒவ்வொரு பிரதிநிதியும் மக்களாட்சிக்கும் பதவி நீக்கத்திற்கும் கட்டுப்பட வேண்டும். சுருக்கமாக சொல்வதாயின், ஜனநாயக மத்தியப்படுத்தல் என்பது, பிரதிநிதிகள் நிறுவனங்கள், ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்படல், அனைத்து பிரதிநிதித்துவ நிறுவனங்களும் மக்கள் அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் பொறுப்பு கூறல், அனைத்து பிரதிநிதித்துவ நிறுவனங்களும் தமக்கு மேலுள்ள பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு பொறுப்பு கூறல், ஒவ்வொரு பிரதிநிதித்துவ நிறுவனங்களும் தனது சுய சுற்று வட்டத்திற்குள் சுதந்திரத்தை அனுபவித்தல் (தமக்கு மேலுள்ள பிரதிநிதித்துவ நிறுவனங்களின் தீர்மானங்களுக்கு முரண்படாத வகையில்) ஆகிய அனைத்தினதும் உள்ளடக்கமாகும்.

### மக்கள் மன்றங்கள்

இந்த அமைப்பின் அடிப்படைக் கூறாக இருப்பது வேலைத்தல மட்டத்தில், விவசாய நில மட்டத்தில், மீன்பிடி துறைமுக மட்டத்தில், பல்கலைக்கழக அல்லது வேறு கல்வி நிறுவனங்களின் மட்டத்தில், கிராம அல்லது நகர மட்டத்தில் வசிக்கும் மக்கள் சுதந்திர தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படும் மக்கள் மன்றமாகும். பெரும்பாலான சோஷலிஸ நாடுகளில் அரச

அமைப்பின் அடிப்படை கூறாக இருப்பது பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்படும் மக்கள் மன்றங்கள்தான். இம்மன்றங்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை தீர்மானிப்பது நிலத்தின் அளவு, சக்திகளின் இயல்பு, மக்கள் தொகை போன்ற பௌதீக காரணிகள் மீதேயாகும். இந்த மக்கள் மன்றங்களின் பிரதிநிதித்துவத்தில் முன்னுரிமை கிடைப்பது தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் போன்ற சக்திகளுக்குத் தான். அதேபோன்று உள்ளடக்கத்தில் இன, சமய, கலாச்சார மற்றும் மொழி பன்முகத்தன்மை கவனத்தில் கொள்ளப்படும். இவ்வாறு ஆரம்பத்தில் மக்கள் மன்றத்தால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் பிரதிநிதிகளை கொண்டு வட்டார சபைகள், மாவட்ட சபைகள் ஆகியன நிறுவப்படுவதோடு, அதன் புவியியல் எல்லைகள் விஞ்ஞான அடிப்படையில் மீளமைக்கப்படும். இலங்கை சம்பந்தமாக தற்போதைய மாவட்டங்கள், தேர்தல் வட்டாரங்கள், மாகாணங்கள் ஆகியவற்றின் எல்லைகள் பிரித்தானிய காலனித்துவவாதிகளின் நிர்வாகத் தேவைகளின்படி வகுக்கப்பட்டமையால், மக்கள் தொகையின் பௌதீக அமைப்புக்கு ஏற்ப மீள நிர்ணயிக்க வேண்டும். எவ்வாறாயினும், முழு இலங்கையிலும் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய முழுமையான மக்கள் மன்ற சம்மேளனம் செயற்படுவதோடு, தேசிய சட்ட நிர்ணய சபைக்கு (சோஷலிஸ நாடாளுமன்றம்) மக்களின் நேரடி வாக்குகளால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

அடிமட்ட மக்கள் மன்றங்கள், பிரதேச மற்றும் மாவட்ட சபை பிரதிநிதிகள் அடங்கிய மக்கள் மன்ற சம்மேளனம் மக்கள் பலத்தை அரசு சார்ந்து செயற்படுத்தும் ஆரம்ப அமைப்பாகும். தேசிய சட்டவாக்க நிர்ணய சபை அரசின் நிறைவேற்று அதிகார மற்றும் சட்டமியற்றும் அதிகாரத்தை உள்ளடக்கிய அமைப்பாகும். இந்த இரு அமைப்புகளுக்குமிடையிலான தொடர்பு மக்களின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் மிக

முக்கியமாகும். தேசிய சட்ட நிர்ணய சபைக்கு நடத்தப்படும் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் அனைத்து மக்கள் மன்ற மாநாட்டின் மூலம் தெரிவு செய்யப்படுவது இந்த தொடர்பின் ஒரு பகுதியாகும். தேசிய சட்ட நிர்ணய சபை உள்ளிட்ட பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகளை மீள அழைக்கும் அதிகாரம், நிறைவேற்றப்படும் சட்டங்கள் குறித்து கேள்வி கேட்கும் அதிகாரம் இந்த தொடர்பின் இரண்டாவது பகுதியாகும். இவ்விதமாக மொத்த மக்கள் மன்ற மாநாட்டுக்கும், தேசிய சட்ட நிர்ணய சபைக்குமிடையில் நிலவும் வலுவான உறவு, மக்களின் இறையாண்மையை அடிக்கடி உறுதி செய்யும் நிலையை மற்றும் கீழ் வர்க்க மக்களினால் அரச அதிகாரம் ஒழுங்குபடுத்தப்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சட்டங்கள் வகுக்கும் சட்ட நிர்ணய அதிகாரம் தேசிய அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு உரித்தாவதோடு, நாட்டின் அடிப்படை சட்டத்திற்கு பங்கம் ஏற்படாதவாறு பிரதேச மற்றும் கலாச்சார தேவைகளுக்காக பிரகடனங்களை தயாரிக்கும் அதிகாரமும் அதற்கு உண்டு. ஒவ்வொரு அலகுகளினதும் சட்டங்களை தயாரிப்பதில் உள்ள எல்லைகள் விடயத்திலும் சட்டம் அமுல்படுத்தப்படும். நாட்டின் ஒவ்வொரு அலகுகளிருந்து தேசிய சட்ட நிர்ணய சபை வரை அனைத்து நிறுவனங்களினதும் பிரதிநிதிகளை மீள அழைத்துக் கொள்ளும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவதன் ஊடாக அவை தொடர்பில் சோஷலிஸ சமூகத்தின் உறுப்பினர்களது அதிகாரம் உறுதி செய்யப்படும். தேசிய சட்ட நிர்ணய சபையில் நடக்கும் கருத்தாடல்கள் உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் மக்கள் நேரடியாக பார்க்கக் கூடியதாகவும், ஊடகங்கள் ஊடாக பார்க்கக் கூடியதாகவும் இருக்கும். தேசிய அரசியல் நிர்ணய சபையால் நிறைவேற்றப்படும் சட்ட திட்டங்கள், கட்டளைகள் சம்பந்தமாக மக்களுக்கு முன்னறிவுறுத்தல் செய்யப்படும். சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்பும், அதற்குப் பின்பும்

அவற்றை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தும் அதிகாரம் மக்களிடம் ஒப்படைக்கப்படும் (Judicial Review). தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்கள் தயாரிக்கப்படும்போது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்த சட்ட நிர்ணய சபை தீர்மானிக்கும். தவிரவும், குறித்துரைக்கப்பட்டுள்ள ஒப்பங்களுடன் மனுவொன்றை சமர்ப்பித்து மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை கேட்கும் அதிகாரம் மக்களுக்கும் கிடைக்கும். கியூபா போன்ற நாடுகளின் சட்ட நிர்ணய சபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை பகுப்பாய்வு செய்யும் அதிகாரத்துடன் 10,000 ஒப்பங்களுடன் புதிய சட்டங்களை முன்வைக்கும் அதிகாரம் மக்களுக்கு உண்டு. தேசிய சட்டவாக்கச் சபையின் காலம் 5 வருடமாக இருக்கும். அதன் பின்னர், அதற்கு பிரதிநிதிகள் மீண்டும் தெரிவு செய்யப்படுவர்.

## தேசிய கவுன்ஸில் மற்றும் தேசிய சட்ட நிர்ணய சபைக்கும் மத்தியில் தொடர்பு

தேசிய சட்ட நிர்ணய சபை எப்போதும் கூடுவது கஷ்டமாக இருப்பதால், சட்ட நிர்ணய சபைக்கு பொறுப்பு கூறும், அதன் மூலம் தெரிவு செய்யப்படும், அதன் உறுப்பினர்களிலிருந்து அமைக்கப்படும் எண்ணிக்கையில் சிறிய அமைப்பொன்று இருக்கின்றது. அதுதான் தேசிய கவுன்ஸில். தேசிய கவுன்ஸிலின் உறுப்பினர் எண்ணிக்கை சோஷலிஸ அரசியலமைப்பு சட்டத்தில் உள்ளடக்கப்படும். கவுன்சிலின் தலைவர் அரச தலைவராக இருப்பார். சட்டங்களை செயற்படுத்தும் அதிகாரம் அல்லது நிறைவேற்று அதிகாரம் தேசிய சட்டநிர்ணய சபையால் தெரிவு செய்யப்படும் கவுன்ஸிலிடம் ஓரளவு ஒப்படைக்கப்படுவதோடு, கீழ் மட்ட அலகு வரை கொள்கைகளையும், சட்டங்களையும் அமுல்படுத்தும் அதிகாரம் பல விகிதாசாரங்களில் பரவலாக்கப்படும்.

கவுன்ஸிலின் தலைவர் கவுன்ஸிலுக்கு பொறுப்பு கூற வேண்டியதோடு, ஏனைய பிரதிநிதிகள் மீள அழைக்கப்படுதலுக்கு கட்டுப்படுதல் வேண்டும். இதிலுள்ள சிறப்பம்சம் என்னவெனில், தீர்மானமெடுக்கும் அதிகாரம் ஒரு சபையிடம் ஒப்படைக்கப்படும். அந்தச் சபை அதற்கு மேலுள்ள சபைக்கு பொறுப்பு கூற வேண்டும். அதியுயர் சபையான தேசிய சட்டவாக்க நிர்ணய சபை மக்களுக்கு பொறுப்பு கூற வேண்டும். இது சர்வாதிகாரத்தை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் பாதிப்பில்லாத முறையாகும்.

சிறு அலகுகளாக வரையறுக்கப்படும் மக்கள் மன்றங்கள் போன்ற அமைப்புகளை அடிப்படையாக வைத்து தேர்தல்களை நடத்தும்போது, அத் தேர்தல்கள் அதிக செலவில், பாரிய பிரச்சாரத்துடன் நடத்தப்படும் தேர்தல்களை விட வேறுபட்டதாகும். மக்கள் தமது அன்றாட அனுபவங்களை வைத்தே பிரதிநிதிகளை தெரிவு செய்வதால், தேர்தல் மோசடிகளும், பிரச்சார நடவடிக்கைகள் ஊடாக நடக்கும் கோட்பாட்டு திட்டங்களுக்கான இடைவெளிகளும் மட்டுப்படுத்தப்படும்.

## 07. சிவில் நிர்வாக சேவை, இராணுவம் மற்றும் பொலிஸ்

1) பழைய காலனித்துவ முறையின் நீட்சியாக நடைமுறையிலுள்ள சிவில் நிர்வாக சேவை மக்கள் பிரதிநித்துவ நிர்வாக முறையின் ஊடாக மீளமைக்கப்படல் வேண்டும்.

2) தற்போதைய நிர்வாக பிரதேசங்களை பிரித்து விஞ்ஞான ரீதியில் மீள அமைக்கப்படல் வேண்டும்.

3) மக்களை அடக்கும் நோக்கில் நடாத்திச் செல்லும் இராணுவம், பொலிஸ், புலனாய்வு பிரிவு மற்றும் தொண்டர் படை போன்ற நிறுவனங்களை கலைத்து மக்களின் பாதுகாப்புக்கு மக்கள் படையணியை நிர்மாணித்தல் வேண்டும். அவற்றில் சமத்துவத்தையும் தோழமையையம் உறுதி செய்வதோடு. அதன் நிர்வாகம் அதிகாரிகளால் அல்லாது படைவீரர்

குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4) தற்போது அரச படைகளில் (அடக்குமுறை நிறுவனங்களில்) சேவையிலுள்ளவர்களை அவர்களின் ஆற்றல் மற்றும் திறமைக்கு ஏற்ப உழைப்புப் படையணியின் பல துறைகளில் இணைத்தல் வேண்டும்.

5) மக்களை துன்புறுத்தும் நிறுவனமாக செயற்படும் முதலாளித்துவ பொலிஸுக்கு பதிலாக மக்கள் பங்களிப்புடனான தொண்டரடிப்படையில் சமாதான சேவையொன்றை உருவாக்க வேண்டும்.

## 08. நீதிமன்றத் தொகுதி

தற்போதைய நீதிமன்ற முறைக்குள் ஆசியான் முறையினால் புகுத்தப்பட்ட பிற்போக்கு அடையாளங்கள், காலனித்துவ யுக எச்சங்கள், ரோமானிய, ஒல்லாந்த சட்டத்தின் அடிப்படையைக் கொண்ட சமத்துவமின்மையின் அடையாளங்களும், அதிகாரிவாதங்களின் அடையாளங்களும் வேரூன்றியுள்ளன. அதற்குப் பதிலாக நீதி வழங்கும் விடயத்தில் பிரஜையின் சுய கௌரவம் பாதிக்கப்படாதவாறு, அதிக பணத்தை பகற்கொள்ளையடிக்க இடமளிக்காதவாறு வினைத்திறன் மிக்கதாக ஆக்க வேண்டும். அதற்காக புதிய நீதிமன்றத் தொகுதியொன்றை அமைப்பதற்கு முக்கியத்துவமளித்தல் வேண்டும். நீதிபதிகளை சட்டத்திற்கு மாத்திரம் சார்பானவர்களாகவும், சுதந்திர மனிதர்களாக ஆக்கவும் நீதிமன்ற செயற்பாடுகள் மீது தொடுக்கப்படும் சகலவித அழுத்தங்களையும் கழைய வேண்டியது அத்தியாவசியமாகும்.

- மக்கள் நீதிமன்றம்:- நீதித்துறையைச் சார்ந்தவர்கள் அடங்கிய நீதிமன்றமும் மக்கள் நீதிமன்றமும் அமைக்கப்படும். அனைத்து நீதிமன்றங்களினதும் நீதிபதிகள் அனைவரும் சமநிலை வகிப்பர். நீதிமன்ற செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படையானதும் மக்களுக்கு பொறுப்புக் கூற

வேண்டிய செயற்பாடாகவும் மாற்றப்படுவதோடு, நீதிபதிகளை மீள அழைப்பதற்கான அதிகாரம் அவர்களை நியமித்த அமைப்புக்கு உரித்தாகும். கீழ் நீதிமன்றங்கள் அடிப்படை மற்றும் திறமையின் அடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்படும் நீதிபதிகளைக் கொண்டதாக இருக்கும். இது ஜூரிகள் சபைக்கு இணையாகாது. ஜூரிகள் சபை முறையில் நீதிபதி மற்றும் ஜூரிகள் சபை வேறுபட்ட துறைகளுக்கு ஏற்ப வேறுபட்ட தீர்மானங்களை எடுப்பர். இந்த முறையில் இரு சாராரும் சேர்ந்து கலந்துரையாடியே தீர்மானங்களை எடுப்பர்.

- நீதிமன்ற அமைப்பு- இலங்கை சோஷலிஸ சமூக முறையில் நீதிமன்ற முறையை தீர்மானிப்பதில் சோஷலிஸ நாடுகளில் பயன்படுத்தப்பட்ட முறைகளில் நன்மைபயக்கும் முறைகளை ஈர்த்துக் கொள்வதும், இலங்கை வரலாற்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்மைபயக்கக் கூடிய அனைத்தையும் ஈர்த்துக் கொள்வதும் அவசியமாகிறது. உதாரணத்திற்கு, நீதிமன்றத்தை நீதியை வழங்கும், மக்கள் உரிமைகளை பாதுகாக்கும் மற்றும் அரசியலமைப்பின் பாதுகாப்பரணாக இருக்கும்படி செய்தல் வேண்டும். பொதுவாக சோஷலிஸ நாடுகளின் நீதிமன்றத் தொகுதி பிரமீட்டின் வடிவத்தை எடுக்கிறது. அதன் உச்சியில் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் இருப்பதோடு, அடித்தளத்தில் பிரதேச மக்கள் நீதிமன்றங்கள் இருக்கின்றன. சோவியத், சீன அரசியலமைப்புகளில் இந்த ஒவ்வொரு மட்டத்திலும் நீதிமன்றங்களில் சட்ட வல்லுனர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளும், பொதுத் தேர்தலால் தெரிவு செய்யப்படும் மக்கள் நீதிபதிகளும் இருப்பார்கள். யூகோஸ்லாவியாவில் ஒரு மட்டத்தில் விடயம் சம்பந்தமான நிபுணர்களை மாத்திரம் பங்கேற்கச் செய்கின்றனர். சோவியத் தேசத்தில் மக்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை பகுப்பாய்வு செய்ய தனி மக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றம் இருக்கிறது. எவ்வாறாயினும், இந்த அனைத்து நாடுகளிலும் ஒட்டுமொத்த

நீதிமன்ற பகுப்பாய்வுக்கான அதிகாரம், உயர் நீதிமன்றத்திடமே இருந்தது. முதலாளித்துவ நாடுகளில் நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் நீதிபதிகள் நியமிக்கப்படுவதோடு சோஷலிஸ நாடுகளில் அந்த அதிகாரம் சட்ட நிர்ணய சபையிடமும் மக்களிடமுமே உள்ளது.

- சீர்திருத்த சபைகள்- சோஷலிஸ நாடுகளில் மேலதிகமாக சீர்த்திருத்த சபைகள் (protectorates) உண்டு. இந்த சீர்திருத்த சபைகளின் ஊடாக பிரஜைகளால் ஒரு மக்கள் பிரதிநிதிகள் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அவை சட்டரீதியான நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசுக்கு ஆலோசனை வழங்குவதோடு மக்கள் வழக்குத்தொடுநரினதும் அரச வக்கீலினதும் கடமை நிறைவு பெறுகிறது. இதற்கான உதாரணம் சீனாவிலிருந்து கிடைக்கிறது.

- தோழமை நீதிமன்றம்- சில சோஷலிஸ நாடுகளில் தொழல்சாலைகள், சிறைக் கூடங்கள், மாடி வீடுகள், கப்பல்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் மக்களால் நியமிக்கப்படும் ”தோழமை நீதிமன்றங்கள்” செயற்பட்டதோடு, அவற்றின் அதிகாரம் இணக்கப்பாட்டிற்கு கொண்டுவருதல், பகிரங்கமாக எச்சரித்தல், குற்றஞ்சாட்டுதல் ஆகியனவாகும். ஒவ்வொரு அலகினதும் மக்கள் மன்றத்தினால் மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.

- மத்தியஸ்த நீதிமன்றம்:- இவற்றை தவிர ”மத்தியஸ்த நீதிமன்ற”மும் உண்டு. அங்கு இருசாராரும் தத்தமது சார்பில் இரு நீதிபதிகளை நியமிக்க முடிவதோடு, அந்த இருவரும் சேர்ந்து மூன்றாமவரை தெரிவுசெய்வர். அந்த மூவரைக் கொண்ட மத்தியஸ்த்த சபையின் பெரும்பான்மையால் தீர்ப்பு வழங்கப்படுகிறது. இலங்கையிலும் தொழில் மற்றும் வர்த்தக நீதிமன்றங்கள் இந்த முறையை செயற்படுத்துவதோடு, உயர் நீதிமன்றத்தின் ஊடாக மத்தியஸ்தசபையின் தீர்ப்பு

செயற்படுத்தப்படுகிறது.

- ப்ரொகியுரேடர் அலுவலகம்:- சோவியத் தேசத்தில் ப்ரொகியுரேடர் அலுவலகமும் நீதி வழங்கும் விடயத்தில் விஷேட தலையீடு செய்கிறது. அதியுயர் சோவியத் சபையினால் நியமிக்கப்படும் ப்ரொகியுரேடர் ஜெனரலின் தலைமையில் ப்ரொகியுரேடர் அலுவலகம் செயற்பட்டதோடு, சட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் எந்தவொரு முறைகேடு சம்பந்தமான முறைப்பாடுகளும் அதன் மூலம் விசாரிக்கப்பட்டன. இந்த அதிகாரிகளின் பதவிக்காலம் 5 வருடத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இந்த அனுபவங்களை இலங்கையின் நீதித்துறையை முறைப்படுத்தும்போது எமக்கும் பயன்படுத்த முடியும்.

இவ்வாறு சட்ட நிர்ணய சபை, நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்ற அதிகாரம் மக்களுக்கு பொறுப்பு கூற வேண்டிய விதமாகவும், மக்கள் தலையீட்டுடனும் மேலிருந்து கீழாக மக்களின் சுயேட்சையான ஜனநாயக அமைப்போடு இணைப்பது உழைக்கும் மக்கள் முதலாக ஒடுக்கப்பட்ட மக்களின் அதிகாரத்திற்கான முதல் அடியாகும். மக்கள் இறையாண்மையின் அதிகாரம் மக்களுக்காக, மக்கள் சார்பில் பயன்படும் விதத்தில் அரச அமைப்பில் மாற்றம் கொண்டு வருவதை புதிய அரசியலமைப்பின் அடிப்படையாக ஆக்க வேண்டியது அதனால்தான்.

3

# மாற்றுப் பொருளாதாரத்திற்கான வேலைத்திட்டம்

நாட்டில் பொருளாதார நெருக்கடியும் அந்நெருக்கடியின் தர்க்கரீதியான விளைவுகளான சமூக, கலாச்சார, அரசியல் நெருக்கடிகள் குறித்தும் பாட்டாளி வர்க்கத்தின் தீர்வு என்னவென்பது குறித்தும், அதன் அடிப்படை குறித்தும் விளக்குவதே இந்த சிறு நூலின் நோக்கமாகும். 1990களின் ஆரம்பத்தில் சோவியத் நாடு உட்பட அன்றைய சோஷலிஸ முகாம் வீழ்ச்சியுற்ற பின்னர் ஏகாதிபத்தியம் முதற்கொண்டு முதலாளித்துவம் தற்காலிக வெற்றியை பெற்றுக் கொண்டதாக தெரிந்தது. சோஷலிஸ முகாம் எனவும் ஏகாதிபத்திய முகாம் எனவும் பிளவுபட்டிருந்த எதிர்மறையான உலக அரசியல் மோதல் தனி ஏகாதிபத்திய மையத்திற்குள் நிலைபெற்றது. இதனால், உலகம் ஒருநிலைப்படும் நிலை உருவாகியது. என்றாலும், ஏகாதிபத்திய முகாமுக்குள் நடந்த உள்வீட்டு மோதல்களின் காரணமாக உலக அரசியலில் பல பொருளாதார மையங்கள் நிர்மாணிக்கப்பட்டு, பல நிலைகளை கடந்து செயற்பட்டு வருகின்றன. சோஷலிஸம் குழிதோண்டி புதைக்கப்பட்டு விட்டதாகவும், முதலாளித்துவமே

நிரந்தரமானது எனவும் பிதற்றிய பொருளாதார மற்றும் அரசியல் விற்பன்னர்களுக்கு சோஷலிஸ முகாம் சரிந்து 18வருடங்கள் கடப்பதற்கு முன்னர் அமெரிக்காவின் வோல் வீதியில் என்ன நடக்கிறது என்பதை கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2008ல் தொடங்கிய அமெரிக்க பொருளாதார நெருக்கடி ஐரோப்பா முழுவதும் பரவியதுடன், இன்றுவரை அவர்களால் அதிலிருந்து மீள முடியவில்ல. சோஷலிஸ முகாமுக்குள் நிலவிய தவிர்க்கவியலாத குறைபாடுகள் உட்பட சில உள்ளக பிரச்சினைகளையும் அதற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையும் வைத்து அது வீழ்த்தப்பட்டாலும் முதலாளித்துவம் வென்றதாக கருத முடியாது., உலகில் அடிக்கடி உருவாகும் பாரிய பொருளாதார நெருக்கடிகளாலும் ஒடுக்குமுறைகளினாலும் சமூக, பொருளாதார கலாச்சார பிரச்சினைகளாலும் உலகின் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையை பார்க்கும்போது முதலாளித்துவம் வெற்றிபெற மாட்டாது என்பது தெரிகிறது.

உலக முரண்கள் வளர்ச்சியடையும் நிலையில் அமெரிக்கா உட்பட மேற்கத்திய முகாமுக்கும், சீன முகாமுக்கும் மத்தியில் விளையாட நுழைந்த இன்றைய ராஜபக்ஷ ஆட்சி, தொடர்ந்தும் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருக்கின்றது. தனது ஆட்சி நிலை பெறுவதற்காக உலக வங்கி மற்றும் நாணய நிதியத்தின் கட்டளைப்படி நாட்டை ஆட்டுவித்த "ராஜபக்ஷ ஆட்சி", தேசபக்தி, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற மேலாடைகளை அணிந்திருக்கின்றது. இலங்கையில் பொருளாதார முரண்பாடுகள் பாரதூரமாக வளர்ந்து வருகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த ஆட்சியால் கடுமையாக சுரண்டப்படுகிறார்கள். சுரண்டுதலுக்கான எல்லைகள் விரிவாக்கப்படுகின்றன. தமது அடிப்படை தேவைகளை ஓரளவாவது நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்பதற்காக மேலதிக நேரம் வேலை செய்யவும், பணம் சம்பாதிக்கவும் பல்வேறு வழிகளை கையாளும் ஒடுக்கப்பட்ட

மக்கள் மனிதர்களாக வாழக் கூடிய சந்தர்ப்பங்கள் படிப்படியாக பறிக்கப்படுகின்றன. இன்றைய ஆட்சி வரிச்சுமை மற்றும் தண்டப்பணத்தால் முடிவின்றி பொதுமக்களின் பின்னால் விரட்டுகிறது. வறுமை, போஷாக்கின்மை வாழ்வதற்கு வீடில்லாமை போன்றவற்றை கணக்குப் புதிர்களை போட்டு மூடி மறைத்தாலும், நிலைமை மோசமாகத்தான் உள்ளது, இவ்வாறு அதிகரிக்கும் பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களுக்கு எதிராக போராடும் மனிதனுக்கு பதிலாக, இந்த சமூக முறைக்குள்ளேயே சீரழிந்து போகும் மனிதன் உருவாக்கப்படுகிறான். இனவாதம், மதவாதம், மற்றும் குறுகிய தனித்துவங்களினால் நுகர்வுக் கனவினாலும், பலதரப்பட்ட மாயைகளினாலும் உழைக்கும் மக்களின் போர்க்குணம் மழுங்கடிக்கப் பட்டுள்ளது, இவற்றுக்கு மத்தியில் உழைக்கும் மக்களை தற்போதைய முறைக்குள் அடிமைகளாக வைத்துக் கொள்ளும் முயற்சியும் இடைவிடாது தொடர்கிறது. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள மாயைகளின் கண்ணாடியை தூ க்கி எறிந்து போராடுபவர்கள் மீது அடக்குமுறையின் கரங்கள் நீளுகின்றன. ஆட்சியாளர்கள் முன்பாக மண்டியிடுபவர்களுக்கு வரப்பிரசாதங்களையும் நன்கொடைகளையும் வாரி வழங்கும் இன்றைய போனபட் ஆட்சியாளர்கள், பெரும்பாலான பொது மக்களை ஆழ் துயிலில் ஆழ்த்தக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

இந்த அனைத்து நிலைகளுக்கு மத்தியில் இலங்கை உட்பட உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்க மக்கள் அரசியல் செயற்பாட்டிலிருந்து பின்தள்ளப்பட்டுள்ளனர். பொதுவில், உழைக்கும் மக்கள் வீழ்ந்திருக்கும் இந்த அவல நிலை காரணமாக, ஆட்சியாளர்கள் நினைத்தவாறு தீர்மானங்கள் எடுக்கவும், அவற்றை மக்கள் மீது திணிக்கவும் வாசல் திறக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் மீட்பளர்களாக பெரும் பலனவர்கள் முன்வருவார்கள். ஆனால், உழைப்பாளியின் மீட்பர் உழைப்பாளியாகவே இருக்க வேண்டும்.

போலிகளால் ஒருபோதும் மீடபர்களாக முடியாது. இன்னும் பலர் இந்த மீட்பரின் பாத்திரத்திற்கு உயிரூட்டுவதாகக் கூறி, சிறு குழுவினர் பெரும்பான்மை மக்களை துன்பத்துக்குள்ளாக்கும் இந்த முறையை நிரந்தரமாக்க முயற்சிப்பார்கள். என்றாலும் அதனை வேரோடு பிடுங்கி எறியும் ஆற்றல் பாட்டாளி வர்க்கம் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் கைகளிலேயே உள்ளது. அதனை மறைப்பதே அனைத்து திட்டங்களினதும் நோக்கமாகும். வரலாற்று மேடைகளை அமைத்த, ஆனால், இறுதியில் பார்வையாளர்களாக ஆக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தை மீண்டும் தமக்குரிய வரலாற்று மேடைக்கு அழைத்து செல்வதே எமது நோக்கம்.

எனவே, மேற்படி பொருளாதார நெருக்கடிக்கு பாட்டாளி வர்க்கம் முன்வைக்கும் தீர்வு என்ன என்பது குறித்து சுருக்கக் குறிப்பை வரைந்து கொள்ள வேண்டும். ஆரம்பக் கட்டமாக பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்துக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டு அல்லது இன்னொரு கணக்குப் புதிரால் இந்த நெருக்கடியை தீர்க்க முடியுமென உளறிக் கொட்டும் இன்றைய ஆட்சியும், அல்லது அதனுடன் கொள்கையளவில் முரண்படாத “தெற்கின்” நுழைவையும், பொருளாதார மற்றும் ஏனைய சமூக முரண்களையும் ஒழிப்பதனால் மாத்திரமே நெருக்கடியை தீர்க்க முடியுமெனக் கூறும் “இடதுசாரிய” நுழைவும், இந்த நூலின் மையக் கருத்தின் மீது அவதானம் செலுத்தக் கூடும்.

ஒரு காலை வலது பக்கத்திலும், மறுபுறம் இடது - வலது ஆகிய இரு பக்கத்திலும் ஒரு காலை வைத்துள்ள அனைவரும், எதிர்கால தேர்தல் சூழ்நிலைகளுக்குள் பல்வேறு கருத்துக்களையும் கொள்கைகளையும் முன்வைப்பார்கள். சமூக முரண்கள் நீக்கப்படும், வறுமையை ஒழிக்கப்படும், இலவசக் கல்வியை பாதுகாக்கப்படும், சமூக நீதியை நிலைநாட்டப்படும் போன்ற கருத்துக்களும் கொள்கை விளக்கங்களும் அடிக்கடி முழக்கப்படும். என்றாலும், நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களை

பட்டப் பகலில் படுகுழியில் தள்ளவே இந்த முழக்கங்களை பயன்படுத்துகிறார்கள் என தர்க்க ரீதியில் நாங்கள் கூறுகிறோம். ஆகவே, மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் அவர்களது மேடை அலங்கரிப்புகள் மாத்திரமே என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

சமூக முரண்களை ஒழிப்பது எங்ஙனம்? இந்த முரண் எங்கிருந்து பிறக்கிறது? என்ற கேள்விகளை, தங்களை ஏமாற்ற வரும் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் பொது மக்கள் முன்வைக்க வேண்டும். நிகழ்கால இலங்கையில் செயற்படும் நவ தாராளமய முதலாளித்துவ பொருளாதாரமுறை குறித்து வார்த்தை தவறாது அவர்கள் உதிர்க்கும் வார்த்தைகளின் உள் ரகசியத்தை அவர்களை கொண்டே வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் அவர்களது திட்டங்களிலுள்ள பொய்யை வெளிப்படுத்திக் கொள்ள முடியும்.

சோஷலிஸம் என்றால் என்ன? அது யாருக்காக? அது எப்படியான சமூக முறை? என்பது குறித்து ஆழமான உரையாடலொன்று தேவைப்படும் காலமிது. "சோஷ லிஸ"த்தைப் பற்றி பேசும்போது பல்வேறுபட்ட கனவான்களை நாம் சந்திக்க நேரிடும். முதலாளித்துவ கூட்டத்திற்கு தளம் வெட்டி அத்திவாரமிட்டு அது தோல்வியடைந்த பின்னர் தமது அரசியல் நிர்வாணத்தை மறைக்க சோஷலிஸத்தின் கொடியை மீண்டும பயன்படுத்தும் ஏமாற்று பேர்வழிகளான இவர்கள் இப்போதே அரங்குக்கு வந்துள்ளனர். நவீன சோஷலிஸம் தொடர்பில் உளறிக் கொட்டும் இவர்கள் மீண்டும் ஓர் அல்லது இன்னோர் முதலாளித்துவ கூட்டத்தின் மடியிலோ அல்லது எந்த நிலையிலும் தற்போதைய நாசமாய்ப்போன முதலாளித்துவத்தை எதிர்க்காத வேலைத் திட்டத்திற்குள் இந்நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் அபிலாஷைகளை திரட்டி வருகிறார்கள். அவர்களது நவீன சோஷலிஸம் என்பது பல்வேறு வார்த்தைகளால்

அலங்கரிக்கப்பட்ட முதலாளித்துவத்தை பரிசுத்தமாக்கும் வெற்றிபெற முடியாத முயற்சியே அன்றி வேறொன்றுமல்ல. மிகச் சிறந்த முதலாளித்துவத்தை இலங்கை மக்கள் மத்தியில் கட்டியெழுப்பும் ஆற்றல் காலாவதியாகி வருடங்கள் பல கடந்துவிட்டதை தசாப்த காலமாக மக்கள் பெற்ற அனுபவங்கள் ஊடாக அறிந்து கொள்ளக் கூடிய உண்மையாகும். ஆகவே மக்கள் அப்படியான ஏமாற்றுப் பேர்வழிகளிடம் கவனமாக இருக்க வேண்டும்.

சோஷலிஸம் சம்பந்தமாக மனிதர்களுக்குள் உருவாக்கப்பட்டுள்ள மூடநம்பிக்கையை, அவநம்பிக்கை, முயற்சியின்மை போன்றவற்றை தோற்கடிப்பது இலேசான காரியமல்ல என்பதை நாங்கள் அறிவோம். உண்மையான சோஷ லிஸம் சம்பந்தமான கருத்தை சீர்குலைப்பதற்காக, பொது மக்கள் மத்தியில் பல்வகைப்பட்ட கருத்துக்களை வளர்ப்பது முதலாளித்துவத்தின் இயல்பாகும். அதற்கு வரலாற்று காரணிகள் வசதிகளை செய்து கொடுத்துள்ளன. இதற்கு தேசிய மற்றும் சர்வதேச அனுபவங்களும் உறுதுணையாக இருந்துள்ளன. முன்னைய சோஷலிஸ முகாமின் வீழ்ச்சியினால் சோஷலிஸம் குறித்து குழப்ப நிலையொன்று உருவாகியுள்ளமையும் இதற்கு காரணமாகும். முன்னைய சோஷலிஸ நாடுகளினதும், இன்றைய சோஷலிஸ நாடுகள் எனக் கூறிக்கொள்ளும் சில நாடுகளின் இயலாமையும் இவ்வாறான கருத்துக்களை பொது மக்கள் மத்தியில் உறுதி செய்வதற்கு உந்துசக்தியாக இருந்துள்ளன. சோஷலிஸத்தை கட்டியெழுப்புவதாகக் கூறி, இலங்கையில் இதுவரை இருந்த பல்வேறு முதலாளித்துவ ஆட்சிகளோடு கூட்டு சேர்ந்து, தற்போதைய அழிவுகளுக்கு பல்வேறு நிலைகளில் உறுதுணையாக இருந்த இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் கட்சிகளின் செயற்பாடுகள், சோஷலிஸம் குறித்து பொதுமக்கள் மத்தியில் சரியான கருத்துக்களை தோற்றுவிப்பதில் தடையாக உள்ளன. ஆகவே உண்மையான சோஷலிஸம் சம்பந்தமாக

சரியான கருத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவது சவாலாக உள்ளது. சோஷலிஸம் என்பது ஏகாதிபத்தியம் எனவும், சுதந்திரமும் ஜனநாயகமும் இல்லாத நிலை எனவும், பொருளாதார சமத்துவம் என்பது. நுகர்வின் மீது விதிக்கப்படும் எல்லை எனவும் திரிபுபடுத்தி, அதன் மூலம் சோஷலிஸம் சம்பந்தமான கோட்பாடு தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகிறது. எனவே சோஷலிஸத்தைப் போல் தாக்குதலுக்கான எந்தக் கோட்பாடும் உலகில் கிடையாது. இதற்குக் காரணம் சோஷலிஸம் நிர்மாணிக்கப்படுதல் என்பது முதலாளியத்தின் அழிவு என்பதாகும். இவ்வாறான நிலைமையில் பாட்டாளி வர்க்கம் தாமே அதிகாரத்தை கையிலெடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது வரலாற்றில் மிகக் கடினமான காரியமாகும். என்றாலும் அதில் கை வைக்கத்தான் வேண்டும். காணாமல் போன ஒன்றை காணாமல் போன இடத்திலேயே தேட வேண்டுமே அல்லாது விளக்குக் கம்பத்தின் கீழ் தேடுவதில் பயனில்லை என்ற சொல்லடையொன்று உள்ளது. பாட்டாளி வர்க்கம் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட வர்க்கத்திற்கு மறுக்கப்பட்ட உலகமொன்று உள்ளது. எனவே தொழிலாளர் வர்க்கம் உட்பட உழைக்கும் மக்களின் ஐக்கியத்தை, சுதந்திரத்தை, மகிழ்ச்சியை பறித்துள்ள முதலாளித்துவ சமூகத்திற்கு எதிராக போராடியே பெற வேண்டும். மறுபுறம் பாட்டாளி வர்க்கம் உட்பட ஒடுக்கப்பட்ட மக்கள் அதற்கு தலைமைத்துவம் வழங்க வேண்டும். நாட்டு மக்களில் சிறு குழுவினருக்கு இந்த உலகம் உல்லாசபுரியாக இருக்கும்போது, பெரும்பான்மையான மக்களுக்கு இது நரகமாக்கப்பட்டுள்ளது. என்றோ ஒரு நாள் இந்த நிலையை நிச்சயமாக மாற்றியமைக்க வேண்டும்.

சோஷலிஸ பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், அல்லது பொருளாதார நெருக்கடிக்கு பாட்டாளி வர்க்கத்தின் தீர்வு, பொருளாதார முரண்கள் அனைத்தையும் நீக்குவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பாரிய உற்பத்திகளின் உரிமையை மக்கள்மயமாக்கல், சமூகத் தேவைகளுக்கு ஏற்ப

பாரிய உற்பத்திகளுக்கான புதிய துறைகளை ஆரம்பித்தல். சிறு மற்றும் நடுத்தர சொத்துக்களின் உரிமையை பொதுவானதும் நீதியானதுமான சொத்துடமை முறைக்கு உள்ளீர்த்துக் கொள்ளல், ஏகாதிபத்திய பல் தேசிய கம்பனிகளுக்கு ஏற்புடையதாக ஒழுங்குபடுத்தப்படும் பொருளாதாரத்திற்கு பதிலாக, பொது மக்களின் தேவையை முதன்மையாகக் கொண்ட பொருளாதாரத்தை நிர்மாணித்தல், சர்வதேச பொருளாதார நடவடிக்கைகளின் போது ஏகபோகிகளுக்கு பொது மக்கள் பலியாகாத பொருளாதார கொள்கைகளை நிர்ணயித்தல், சர்வதேச பொருளாதார மற்றும் நிதி நிறுவனங்களுடன் மேற்படி கொள்கையை அடிப்படையாகக் கொண்ட உடன்பாடுகளுக்கேற்ப மாத்திரமே செயற்படல், சம்பள முரண்பாட்டை ஆகக் குறைந்த மட்டத்திற்கு கொண்டு வருதல், திட்டமிட்ட பொருளாதார முறையொன்றை ஏற்படுத்தல், பொதுமக்களின் தேவைகளை அதிகரித்து இலாபத்திற்கு பதிலாக மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தல், அதற்காக, உற்பத்தியாளர்களுக்கு மத்தியில் நடக்கும் கடுமையான போட்டிக்கு பதிலாக, பொதுமக்களின் தேவைகளை முடிந்தளவு நிறைவேற்றும் போட்டிகளை ஒழுங்கமைத்தல், அதன் மூலம், நுகர்வுப் பொருட்களின் தரத்தையும், பயனீட்டுத் தன்மையையும் அதிகரித்தல், சில பொருட்கள் சம்பந்தமாக சமூகத்தில் திணிக்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரத்தை ஒழித்து, அதற்கு முன் மண்டியிடும் இயல்பை நீக்க நடவடிக்கை எடுத்தல், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பதன் ஊடாக சமூகத்தில் ஒவ்வொருவரும் அவற்றை பெற்றுக் கொள்ள வசதி செய்தல், கொடுமையான உழைப்புப் பிரிவுகளை ஒழித்தல், தாம் விரும்பிய பொருளாதாரத் துறையில் அல்லது துறைகளில் ஈடுபடத் தேவையான சுதந்திரத்தையும் பயிற்சியையும் உறுதி செய்தல், உற்பத்திகளின் போது தீர்மானமெடுப்பதில் மக்களை நேரடியாக பங்கேற்கச் செய்வதன் ஊடாக உற்பத்தியை மீளமைத்தல், வேலை நாட்களில் வேலை நேரத்தை முடிந்தளவு

குறைப்பதன் மூலம் குடும்ப நடவடிக்கைகளிலும், பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கான நேரத்தை அதிகரித்து, அதன் மூலம் திருப்தியடைந்த மனிதனையும் சமூகத்தையும் உருவாக்கல் போன்றவற்றின் அடிப்படையில் இந்த நூலில் இது சம்பந்தமாக எதிர்காலத்தில் விளக்கமளிக்கப்படும்.

நூலின் ஆரம்பத்தில் இன்றைய ராஜபக்ஷ ஆட்சி தொடங்கியுள்ள நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்டமும், அதற்கு எதிராக தற்போது முன் வைக்கப்பட்டிருக்கும் விமர்சனங்களும், அந்த விமர்சனத்தை பாட்டாளி வர்க்க அடிப்படையின் மீது உயர்த்தி வைப்பதும், அதற்கு பாட்டாளி வர்க்க தீர்வு என்ன என்பதும், அந்த தீர்வின் பக்கம் திரும்பக்கூடிய நடைமுறை சாத்தியமானதும், வெளிப்படையானதுமான அணுகுதல் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் குறித்துரைக்கின்றது.

பாடசாலை பாடநெறிகளில் கூட சோஷலிஸம் சம்பந்தமான கருத்துக்களை பண்டைய உலகோடு இணைத்து கற்பிக்கப்படும் பின்னணியில், உழைக்கும் மக்கள் உட்பட பாட்டாளிகளுக்குள் அது குறித்து பரந்த நம்பிக்கையை உருவாக்குவது இலேசான காரியமல்ல. புதிதாக கட்டியெழுப்பப்படும் சமூகத்தினது மொத்த வடிவத்தையும் அதனை கட்டியெழுப்புதற்கு முன் முழுமையாக முன்வைக்க முடியாமல் போகலாம். அவ்வாறான சமூகமொன்றை கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொள்ளும் கோட்பாடுகள் மற்றும் குணவியல்புகள் குறித்து பூர்வாங்க கருத்துக்களை கட்டியெழுப்புவதே எமது பணியாகும். திருப்தியற்ற, துன்பகரமான இன்றைய முதலாளித்துவ சமூகத்தை விட இந்த சமூகத்திலுள்ள பூர்வாங்க வித்தியாசத்தை விளக்குவதுமாகும். இன்றைய சமூகத்தில் நீடிக்கும் பொருளாதார மற்றும் சமூக ஒடுக்கத்திற்கான காரணத்தை தெளிவுபடுத்தி கட்டியெழுப்பப்படும் சோஷலிஸ சமூகத்தில் அந்த சமூக ஒடுக்கத்தை ஒழிப்பது எங்ஙனமென்பதை உறுதி செய்வதாகும். அதிருப்திக்கும் தனிமைக்கும் இன்றைய

சமூகம் பலியானதற்கான காரணிகளை ஒழிப்பதன் மூலம் ஒற்றுமை நிறைந்த மகிழ்ச்சி பொங்கும் வாழ்க்கையை நோக்கி இந்த சமூகத்தை இட்டுச் செல்வது எப்படி என்பதை விளக்குவதாகும். இங்கே எடுத்துக் காட்டப்படும் உதாரணங்கள் மேற்படி கொள்கை கோட்பாடுகளை விளங்கிக் கொள்ளவே பயன்படுத்தப்பட்டது. பாட்டாளி வர்க்கம் உட்பட ஒடுக்கப்பட்ட பெரும்பாலான மக்களால் இந்த நிலைமைக்கு எதிராக நடத்தப்படும் வர்க்கப் போராட்டத்தின் மூலம் சோஷலிஸம் குறித்து கட்டியெழுப்பப்படும் அசைக்க முடியாத நம்பிக்கையோடு பிணைப்பதன் ஊடாகவே சோஷலிஸத்தை கட்டியெழுப்ப முடியும்.

## நவ தாராளமயமும் அதன் இரண்டாம் கட்டமும்

### நவ தாராளமய அரசியல் நுழைவு

"திறந்த பொருளாதாரம்" அல்லது "திறந்த சந்தைக் கோட்பாடு" என்ற பெயரிலேயே நவ தாராளமய முதலாளித்துவ கொள்கைகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் பரந்துபட்ட சமூக - பொருளாதார அடிப்படையில் கூறுவதாயின், "நவ தாராளமய முதலாளித்துவம்" என கூறுவதே பொருத்தமாகும். இது முதலாளித்துவத்திற்கு உரிமையான அடிப்படைப் பண்புகளிலிருந்து வேறுபடும் கட்டமாக இல்லாததுடன், முதலாளித்துவத்தின் உயர்ந்த காலகட்டமாக அறியப்பட்டிருந்த ஏகாதிபத்திய யுகத்தின் இன்னொரு வெளிப்பாடு, அல்லது வடிவம் எனவும் அறிந்து கொள்வதில் தவறு கிடையாது. நவ தாராளமய முதலாளித்துவத்திற்குள் நுழைவதற்கு முன்னர், அதாவது, 1977க்கு முன்னர் இலங்கையில் நடைமுறையில் இருந்த முதலாளித்துவம், அல்லது பொதுவில் "நலன்புரிவாத முதலாளித்துவம்" என்ற பெயரில் கலந்துரையாடலுக்கு உட்பட்ட சகாப்தத்தை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு, உழைக்கும் மக்கள் உட்பட அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் வெளிப்படையாக சுரண்டித் தின்பதற்காகவே

நவ தாராளமய முதலாளித்துவம் பிறந்தது. நவ தாராளமய முதலாளியத்தினால் இதுவரை விற்கப்படாதவற்றை விற்றல், சர்வதேச சந்தைக்கு இலங்கையை முற்றாக திறந்துவிடல், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிக இலாபம் தரக்கூடிய விதமாக உழைப்பை கொள்ளையடிக்க வசதிகளை செய்து கொடுத்தல், இலங்கையர்களின் உழைப்பை உலக சந்தையில் குறைந்த விலைக்கு விற்றல், அரசின் வசமுள்ள பொருளாதாரத்தின் பங்கை முடிந்தளவு குறைக்க அவற்றை தனியார் முதலீட்டாளர்களுக்கு விற்றல், கைத்தொழில் மற்றும் விவசாய உற்பத்திகளிலிருந்து அரசாங்கம் விலகி, அதன் ஏகபோக உரிமையை தனியார்துறை பெறவழி சமைத்தல், கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற சேவைகளின் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகி தனியார் வியாபாரிகளின் இலாபத்திற்காக அவற்றை திறந்துவிடல், முதலீட்டாளர்கள் உழைப்பை கொள்ளையடிப்பதற்காக, அவர்கள் விருப்பப்படி, தேவையான அடிப்படை வசதிகளை அதிகரித்தல், அவர்கள் விடயத்தில் பல்வேறு வரிச் சலுகைகள் உட்பட வேறு வசதிகளை ஏற்பாடு செய்தல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## ஜே. ஆர். ஜயவர்தனவும் ஐதேகவும்

இதற்கான வாய்ப்பு 1977 ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு கிடைத்தது. 1977 பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி படுதோல்வியடைந்ததோடு, ஆறில் ஐந்து பலத்தோடு ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்திற்கு வந்தது. ஜே.ஆர்.ஜயவர்தன பிரதமாரானார். பொருளாதாரத்தில் தாராளமய முதலாளித்துவ கொள்கையை கடைப்பிடித்ததுடன், தேர்தலின் மூலம் மக்கள் அபிப்பிராயத்தை அறியாமல், நிறைவேற்று அதிகாரத்தை உடைய ஜனாதிபதி பதவியுடனான சர்வாதிகார அரசியல் அமைபைக் கொண்டு வந்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் சுரண்டப்படுவது அளவிலும்

தரத்திலும் அதிகரித்த நிலையில், அதற்கெதிராக தலைதூக்கும் எதிர்ப்பை மூடிமறைக்க அன்றைய அதிகாரம் போதுமானதாக இருக்கவில்லை என்பது தெரிகிறது. இலங்கை தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளை கொள்ளையடிக்க உலக முதலாளித்துவத்திற்கு இடமளிக்கும்போது அதற்கெதிராக தோன்றும் எதிர்ப்பை அடக்குவதற்கு இந்த சர்வாதிகாரம் கட்டியெழுப்பப்பட்டமை தெரிகிறது. பின்னர் “எதிர்ப்பவர்க்கு அடக்குமுறை” என்ற கொள்கை 80 தசாப்தம் பூராவும் ஆட்டம் போட்ட விதத்தை வரலாறு தொட்டுக் காட்டுகிறது.

### 1994க்கு பிந்திய காலம்

சந்திரிகா பண்டாரநாயக ஆட்சி பீடம் ஏறுவதற்கு முன்னரும் தனது ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்திலும் பொருளாதாரத் துறை சார்ந்து முன்வைக்கப்பட்ட முக்கிய கோஷமானது “திறந்த பொருளாதாரத்திற்கு மனித நேய வடிவத்தை கொடுப்பதே” என்பதாகும். ஊழல், மோசடி, மற்றும் நாட்டில் நிலவிய பயங்கர நிலையை நீக்குதல், கூட்டாளித்தன முதலாளியத்தை தோற்கடித்து நல்லாட்சியை உருவாக்கல் போன்றவையே அவரதும் அவரை சுற்றியிருந்த சிவில் சமூக செயற்பாட்டாளர்களினதும் பிரதான முழக்கமாக இருந்தது. 17 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சி கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாக வைத்து இலங்கை சமூக - பொருளாதார - அரசியல் சரீரத்தில் ஏற்படுத்திய படுகாயங்களுக்கு எதிராக உருவாகிவரும் பிரபல விமர்சனத்தை தனது அதிகார பலத்திற்காக சந்திரிகா பயன்படுத்தினார். பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசியக் கட்சியால் நிலைநாட்டிய நவ தாராளமய முதலாளித்துவத்தினால் நிறைவேற்ற முடியாத விடயங்களை சந்திரிக்காவின் அரசாங்கம் நிறைவேற்ற முயன்றது. ஆனால், அவற்றை தேவையான அளவிலும் தரத்திலும் நிறைவேற்றிக் கொள்வதில் பல தடைகள் காணப்பட்டன. ஒருபுறம் தேசிய பிரச்சினையால் பிறந்த யுத்தம்

பெருந்தடையாக இருந்தது. தனது ஆட்சியின் தொடக்கத்தில் போலி சமாதான செயற்பாட்டின் ஊடாக இதில் நுழைய முயற்சித்த போதிலும், பல்வேறு காரணங்களால் அது தோல்வியடைந்தது. யுத்த வெற்றியின் ஊடாக அதனை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைக்கு சந்திரிகாவின் ஆட்சி தள்ளப்பட்ட போதிலும் அதனை தேவையான அளவில் நிறைவேற்றிக் கொள்ள இயலவில்லை. மறுபுறம் 1994ல் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணியின் அரசாங்கம் மிகச் சிறிய பெரும்பான்மையை கொண்டு ஆளவேண்டிய நிலையில் இருந்தது. எனவே, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியின் பலத்தை வைத்து தனது ஆட்சியை பாதுகாக்க வேண்டிய நிலை ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டது, 2002ல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி தாவியதோடு சந்திரிகாவின் நாடாளுமன்ற அதிகாரம் இழக்கப்பட்டது. ஆகவே, நவ தாராளமய மறுசீரமைப்புகள் தொடர்பில் சந்திரிகாவின் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்த நிலையில், பெரும்பாலும் முன்னைய செயற்பாடுகளையே முன்னெடுக்க வேண்டி ஏற்பட்டது.

## ராஜபக்ஷ காலமும் இரண்டாம் கட்டமும்

2001ல் ஆட்சியை கைப்பற்றிய ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐதேக அரசாங்கம் நவ தாராளமய முதலாளித்துவ பயணத்தில் இன்னொரு அடி எடுத்து வைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. “மீளெழும் சிறி லங்கா” (Regaining Sri Lanka) ன்ற பெயரில் ஐதேக முன்வைத்த திட்டம் இதில் வெளிப்படுத்தப்படும் வேலைத் திட்டமேயாகும். இது இன்னொரு விதத்தில் சர்வதேச மூலதனத்தின் தேவைக்காக நாட்டையும், நாட்டு மக்களையும் “மீள் பலியிட” கொண்டு வந்திருந்தமை தெளிவு. இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஜனாதிபதியின் அதிகாரமின்றி யுத்தத்தை தற்காலிகமாகவேனும் நிறுத்தி, இடைக்கால சமாதானத்தை

கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2002ல் விடுதலைப் புலிகளோடு செய்து கொண்ட சமாதான ஒப்பந்தம் மூலமாகவும் அதற்காகவே முயற்சிக்கப்பட்டது. என்றாலும், மக்கள் விடுதலை முன்னணியின தலையீட்டினால் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயற்பாடுகளினால் ஐக்கிய தேசியக் கட்சியின் பயணம் இரு வருடங்களிலேயே தடைபட்டு, ராஜபக்ஷ சகாப்தத்திற்கான பின்புலம் உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து 2009ல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு யுத்தம் முடியும் வரை பொருளாதார திட்டமொன்றில் கை வைக்க வாய்ப்பு கிடைக்காவிடினும், நவ தாராளமய முதலாளித்துவ மறுசீரமைப்புகளை தொடர்ந்தும் செயற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் கைகூடிய காலமாக கருத முடியாது.

2009ல் யுத்தம் முடிவுக்கு வந்தமையும், அதன் பின்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் ஆட்சியை கைப்பற்றிய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் ஊடாக நவ தாராளமய முதலாளித்துவ பொருளாதாரத் திட்டங்களில் நிறைவேற்றப்படாதவற்றை நிறைவேற்றத் தேவையான நிலைமை உருவாகியது. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி அரசாங்கத்தின் பக்கம் தாவியதன் காரணமாக ராஜபக்ஷ ஆட்சி இன்று அனுபவிக்கும் மூன்றில் இரண்டு பலம் இதற்கு மேலதிக பலத்தை வழங்கியது.

## இரண்டாம் கட்டத்திற்காக அதிகாரத்தை கட்டியெழுப்பல்

இந்த பின்னணியில்தான் அவர்கள் நவ தாராளமய “முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்ட”த்திற்கு தயாரானார்கள். அதன்போது அரசியலமைப்பு ரீதியில் அரசியல் அதிகாரத்தை மேலும் அதிகரித்துக் கொள்ளவும், புதிய நிலைமையின் காரணமாக உருவாகும் மக்கள் எதிர்ப்பை சந்திப்பதற்கும் வழமை போல் அடக்குமுறையை தீவிரப்படுத்த புதிய சட்டமூலம்

கொண்டுவரப்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்திய 1978 அரசியலமைப்பின்படி, இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்த ஒருவர் மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த எல்லை நீக்கப்பட்டமை, பல்வேறு காரணங்களால் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபரை 24 மணி நேரம் மாத்திரமே தடுத்து வைக்க முடியும் என்றிருந்த வரையறையை 48 மணித்தியாலங்களாக நீடித்தமை, சுயாதீன ஆணைக் குழுக்களை பெயரளவில் மாத்திரம் வைத்திருந்தமை ஊடாக அவற்றை செயலிழக்கச் செய்தமை, வெகுஜன பிரச்சினைகளில் தலையிட்டு அவற்றை தீர்த்து வைக்கும் அதிகாரத்தை இராணுவத்திற்கு வழங்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமை ஆகியன இந்த நிலைமை வெளிப்படக் காரணமான உதாரணங்களாக கொள்ள முடியும்.

ராஜபக்ஷ ஆட்சி தனதும் தனது கட்சியினதும் அரசியல் அதிகாரத்தை நிரந்தரமாக்கும் நோக்கில் கொண்டு வரும் ஜனநாயகத்திற்கு முரணான அரசியலமைப்பு சூழ்ச்சிகள், நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான அதிகாரம் என்ற வகையில் ஒருநிலைப்பட்டுள்ளன. முழு நாட்டையும் இராணுவ மயத்திற்குள் தள்ளும் நோக்கில், யுத்தத்திற்கு பின்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவ தலையீட்டையும் அதிகாரத்தையும் மேலும் நீடிக்கின்றமை, முப்படைகளினதும் உயரதிகாரிகளுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்களை அதிகரித்தமை, பொதுவில் இராணுவத்திலும், சமூகத்திலும் போர்வீரர் மனநிலையை வளர்ப்பதன் மூலம் தமது அரசியல் தேவைகளுக்கேற்ப இராணுவ மனநிலையை வழிநடத்துகின்றமை, பல்கலைக் கழக மாணவர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கும் இராணுவ பயிற்சியின் மூலம் மக்களை இராணுவமயத்தின் புதிய கட்டத்தின்பால் ஈர்த்து வைத்துள்ளமை, நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு எனக்கூறி தமது அரசியல் இருப்பிற்காக நாடு பூராவும்

CCTV கமெராக்களை பொருத்தி, ஒட்டு மொத்த சமூகத்தையும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சோதனைக்குட்படுத்தி இராணுவ கண்காணிப்பை தீவிரப்படுத்துகின்றமை, ஜனநாயத்திற்கு முரணான கைவிரல் அடையாள அட்டையின் ஊடாக சாதாரண பொதுமக்கள் சம்பந்தமான தகவல்களை சேகரிப்பதன் ஊடாக இந்த இராணுவ வற்புறுத்தலை தீவிரப்படுத்துகின்றமை போன்றவற்றை இந்த செயற்பாடுகள் தொடர்வதற்கான உதாரணங்களாக கூறமுடியும். தாக்குதல்கள், கடத்தல்கள், காணமாக்கல். கொலை செய்தல் ஆகியன இன்றைய ஆட்சியின் தனிப்பட்ட பண்புகள் என்ற வகையில் மக்கள் மீதான அடக்குமுறையின் இன்னொரு பக்கத்தை காட்டுகின்றன.

இந்த அனைத்து செயற்பாடுகளினதும் அரசியல் தேவையாக இருப்பது நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்தை உறுதி செய்வதும், இன்னொரு சுற்றில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது தொடுக்கப்படவிருக்கும் பொருளாதார தாக்குதலுக்கான பின்புலத்தை உருவாக்குவதுமாகும். 2011 நவம்பரில் முன்வைக்கப்பட்ட “தேசிய இயற்பியல் திட்ட”த்தை (தேசிய பௌதீக திட்டம்) இந்த பொருளாதாரத் தாக்குதலுக்கு தேவையான அடிப்படையை உருவாக்க தயாரிக்கப்பட்ட திட்டமாக கருத முடியும். இத்திட்டத்தை 20 வருட காலத்திற்குள் செயற்படுத்துவதற்காக பல்வேறு பொருளாதார, சமூக மறுசீரமைப்புகள் தொடர்பிலான கருத்தாக்கத்தை இது தருகிறது. திட்டத்தில் எழுத்து வடிவில் அடங்கியிராத பல விடயங்கள் இருக்கக் கூடுமென்பதை “ராஜபக்ஷ ஆட்சியின்” இயல்பிற்கு ஏற்ப கருத முடியும். ஆகவே, இத்திட்டத்தையும், அவர்களது நாளாந்த அரசியலையும் ஒன்றாக வைத்து பார்த்தால் மாத்திரமே அவர்கள் இந்த செயற்பாட்டை நிலை நாட்டுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மதிப்பிட முடியும்.

## உ. பொருளாதாரம் தொடர்பில் இலங்கை ஆளும் வர்க்க

## வியூகம்

1. தற்போதைய ஆட்சியாளர்களின் பொருளாதார வியூகத்தை அறிந்து கொள்வதிலும், இலங்கையில் அதற்கான வாய்ப்பை திறந்துவிடும் காரணத்தை அறிந்து கொள்வதிலும் இலங்கையின் பொருளாதார வரலாற்றை திறனாய்வு செய்வது அவசியமாகும். 1815ல் பிரித்தானியர்களால் இலங்கை கைப்பற்றப்பட்டதிலிருந்து கடந்த இரு தசாப்தங்களில் இலங்கை பொருளாதாரம் ஆரம்ப முதலாளித்துவ வடிவங்களை கொண்டதாக இருந்தது. இயற்கை கனிம வளங்கள், யானைத் தந்தங்கள், முத்து ரத்தினங்கள் போன்ற இயற்கை செல்வங்களும், கைத்தொழில் மூலப் பொருட்கள், கருவா, மிளகு, ஏலக்காய் போன்ற வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதியால் கிடைத்த வருமானம் காலனித்துவ காலத்தில் பிரதான வருமானமாக இருந்தது. மக்களிடமிருந்த அறவிடப்பட்ட வரிகள்,சாராய உரிமம், வில் உரிமம், மீன்பிடி உரிமம், நிலக்கூலி, சுங்கவரி ஆகியவற்றின் வரிகளும் வருமானத்தில் அடங்கியிருந்தன. நாட்டின் உள்ளுர் வியாபாரம் மற்றும் வெளிநாட்டு வியாபாரம் ஐரோப்பியர்களின் கையிலும், இந்தியர்கள் அராபியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர் கையிலும் இருந்தது. முதலாளித்துவ கலாச்சாரமொன்றை உருவாக்குவதற்காக பல்வேறு ஆடம்பரப் பொருட்கள், ஆடை அணிகலன்கள், உணவு வகைகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டமையால் இறக்குமதிச் செலவு அதிகரித்து காணப்பட்டது. இதன் ஆரம்ப காலத்தில் பொருளாதாரம் வர்த்தக வடிவத்தை கொண்டதாக இருந்தது. அங்கு அரச ஏகபோக வடிவமும் காணப்பட்டது.

2. 1830 தசாப்தம் ஆகும்போது இங்கிலாந்தில் லெசேபெயார் அல்லது சுதந்திர வணிகம் தொடர்பிலான சம்பிரதாயங்கள் வலுப்பெற்று வந்தன. முதலாளித்துவ வர்க்க வணிக முதலாளிகள் மற்றும் கைத்தொழில் முதலாளிகளுக்கிடையில்

உருவான கருத்து மோதல்களினால் வணிகவாதத்தையும் கடந்து கைத்தொழில் முதலாளித்துவம் முன்னிலைக்கு வந்தது. காலனித்துவ நாடுகளின் உற்பத்திகளை விலைக்கு வாங்குவதற்கு பதிலாக இங்கிலாந்துக்குள்ளேயே கைத்தொழில் உற்பத்திகளை விரிவாக்கும் வியூகத்தை அமைத்துக் கொண்டமையால் இலங்கை பொருளாதாரத்தை உற்பத்தியின் மீது மற்றும் இறக்குமதியின் மீது விதிக்கப்படும் வரிகளினால் மாத்திரம் பராமரிக்க முடியாத நிலை உருவாகியது. லெசேபெயார்வாதியான கோல்புரூக் மற்றும் பெந்தம்வாதியான கமரூனும் இணைந்து 1829 - 1832க்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் உழைப்பு சுரண்டலுக்குத் தேவையான மறுசீரமைப்பிற்கான ஆலோசனைகள் இந்த பின்னணியிலேயே முன்வைத்தனர். அந்த மறுசீரமைப்புகளின் ஊடாக ஆசியான் உற்பத்தி முறையை சார்ந்த பொருளாதாரத்தின் மீது முதலாளித்துவ உறவுகள் கட்டமைக்கப்பட்டன.

3. 1835ன் பின்னர் அரசாங்கம் பொருளாதாரத்திலிருந்து விலகியதோடு இலங்கை பொருளாதாரம் சுதந்திர போட்டிக்கு திறந்துவிடப்பட்டது. கோப்பி, கருவா, மிளகு போன்ற வணிகப் பொருட்களை பயிர் செய்வதில் அரசுக்கிருந்த ஏகபோகம் ரத்தானதுடன், தோட்டங்கள் தனியார் துறைக்கு விற்கப்பட்டன. ஏற்றுமதிக்கு வரிச்சலுகைகள் வழங்கியதன் மூலம் வெளிநாட்டு வியாபாரம் தொடர்பில் தனியார் துறை ஊக்குவிக்கப்பட்டது. பல்வேறு சட்டதிட்டங்கள் ஊடாக மக்களிடமிருந்த காணிகள் பறிக்கப்பட்டு பெருந்தோட்ட கம்பனிகளுக்கு விற்கப்பட்டது. இவ்வாறு சுதந்திர போட்டியின் வடிவத்திற்குள் இலங்கை முதலாளித்துவ வளர்ச்சிப் பயணம் தொடங்கியது. பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்த பெருந்தோட்டப் பயிர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதற்கு அடித்தள வசதிகள் செய்வதற்காக வேண்டி கொழும்பு கண்டி

நெடுஞ்சாலை, புகையிரத சேவை, தபால் சேவை தந்தித் தொடர்ப்பு சேவை ஆகியன ஆரம்பிக்கப்பட்டன. பெருந்தோட்ட பயிரச்செய்கைக்கு இலங்கையர்களிலிருந்து உழைப்பாளர்களை பெற்றுக் கொள்வது சிரமமாக இருந்தமையால், மூலதன திரட்டுக்கு தேவையான தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

4. 1880களின் இறுதிப்பகுதியில் சாம்பல் நோயினால் கோப்பி பயிர் செய்கை அழிந்தது. அதற்குப் பதிலாக தேயிலை பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் பொருளாதாரத்தில் பாரிய மாற்றமொன்று நிகழ்ந்தது. கோப்பி பயிர் செய்கையை போன்றல்லாது தேயிலை பயிர் செய்கைக்கு தொடக்கத்தில் பெருந்தொகை பணம் தேவைப்பட்டதனால், பொருளாதாரத்தில் அதுவரை தனியார் தோட்ட உரிமையாளர் வகித்த இடத்தை பிரித்தானிய தங்கப்பவுண் கம்பனிகள் போன்ற பாரிய ஏகபோக கம்பனிகள் கைப்பற்றிக் கொண்டன. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏகபோக கம்பனிகளால் வழிநடத்தப்பட்ட பொருளாதாரத் தன்மையை இலங்கை கைப்பற்றிக் கொண்டது. பெருந்தோட்ட பயிர் செய்கை ஊடாக திரட்டிய மூலதனம் வேறு துறைகளில் ஈடுபடுத்தப்பட்டமையின் விளைவாக கொழும்பை அடிப்படியையாகக் கொண்ட நகர்ப்புற தொழிலாளர் வர்க்கமொன்று உருவாகியது. பெருந்தோட்ட பயிர் செய்கைக்கும், காரீயம் போன்ற கைத்தொழில்களுக்கும் வசதிகள் மற்றும் சேவைகள் வழங்குவதன் ஊடாக செல்வத்தை திரட்டிய இலங்கையர்களுக்கு மத்தியில் இலங்கையின் முதல் முதலாளித்துவ வர்க்கம் வளர்ந்தது. இதற்கு தொழிலாளர்களை வழங்குதல், மாட்டு வண்டி போக்குவரத்து சேவைகளை வழங்குதல் போன்ற சேவைகளுக்கு மேலதிகமாக இலங்கையின் மூலதன திரட்சிக்கு பிரதான வழி சாராய உரிமம் பெற்றுக் கொள்வதாகும். 20ம் நூற்றாண்டு ஆரம்பமாகும் போது இலங்கையிலிருந்த

நிலச்சுவான்தார்கள் 13 பேரும் சாராய விற்பனையால் பணம் திரட்டியவர்களாகும். முதல் உலக யுத்தம் காரணமாக காரீய விலை உயர்ந்தமையால் இலங்கை முதலாளித்துவ வர்க்கம் வளர்வதற்கு தேவையான காரணிகளும் வளர்ந்தன. இவ்வாறு முதலாளி - பாட்டாளி உறவுகளின் அடிப்படையில் பொருளாதாரம் வளர்ச்சி பெறும் நிலையில், கிராமப்புறம் ஆசியான் உற்பத்தி முறைக்குள்ளேயே நிலைத்தது. இதன் விளைவானது, இலங்கை முதலாளித்துவம் பிறப்பிலேயே பிற்போக்குத் தன்மையை கொண்டிருந்தமைதான்.

5. 1948ல் இலங்கையின் ஆளும் வர்க்கத்திடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும்போதும், இலங்கை பொருளாதாரம் பாரிய உழைப்புச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் பொருளாதாரமாக இருக்கவில்லை. தேயிலை, தெங்கு, இறப்பர் போன்ற பெருந்தோட்ட பயிர் செய்கைகளே பொருளாதாரத்தின் அடிநாதமாக இருந்தன. 1948 ஆகும்போது நாட்டின் மொத்த வெளிநாட்டுச் செலவாணியில் 90% பெருந்தோட்ட பயிர் செய்கை ஊடாகவே கிடைத்தது. இலங்கையின் பிற்போக்கான முதலாளித்துவ வர்க்கத்திடம் மீள் கைத்தொழிலுக்கான தொழில் நுட்பமோ, பாரியளவிலான கைத்தொழில்களுக்குத் தேவையான மூலதனமோ இருக்கவில்லை. எனவே சில காலம் செல்லும்வரை காலனித்துவ நிலையிலிருந்து முற்றாக வெளியேற இயலவில்லை. 1956 வரை விமான நிலையம் போன்ற முக்கிய இடங்களில் பிரித்தானிய இராணுவம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 1972 வரை தோட்டப் பயிர் செய்கை பிரித்தானிய தங்கப்பவுன் கம்பனிகளின் வசமே இருந்தது. இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்திற்கு அதன் இயல்பின் காரணமாக சுயாதீன முதலாளித்துவ பொருளாதார திட்டமொன்று இருக்கவில்லை. உலக மூலதன

தேவைகளின் கைப்பாவையாகவே அது வளர்க்கப்பட்டது. ஏகாதிபத்திய கம்பனிகளுக்கு மூலப் பொருட்கள் வழங்கும், இலாபமான உழைப்பை வழங்கும், அதன் பொருட்களுக்கு சந்தையை ஒழுங்கு செய்யும் நிலைக்கு பொருளாதாரம் மட்டுப்பட்டிருந்தது. அநேகமாக, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப பொருளாதாரத்திற்கான திசை தீர்மானிக்கப்பட்டது.

6. 1948 இலிருந்து 1978 வரையிலான மூன்று தசாப்தத்திலும் பொருளாதார வடிவமானது அரச ஏகபோக முதலாளித்துவ வடிவமாகவே இருந்தது. அது உலக பொருளாதாரத்தினதும் பிரதான வடிவமாக இருந்ததுடன், சோஷலிஸ முகாமிலிருந்து தோன்றும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதற்காக நலன்புரிவாத அணுகுமுறையை கையாள வேண்டிய நிலை முதலாளித்துவ நாடுகளுக்கு ஏற்பட்டது. இலங்கையை பொறுத்த வரையில், அரசை மையமாகக் கொண்ட வடிவமொன்றை நிறுவுவதற்கு முக்கிய காரணம், இலங்கை முதலாளித்துவ வர்க்கத்தின் பலகீனமும், ஆற்றலின்மையுமேயாகும். பாரிய கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு தேசிய மூலதன ஆற்றல் போதாமையால் மீள் கைத்தொழில்களும், ஒட்டுமொத்த ஜனத்தொகையும் உள்ளடங்கும் விதத்தில் பரந்தளவிலான சேவைகளை நடத்தும் ஆற்றல் தனியார் முதலாளிகளிடம் இருக்கவில்லை. தனியார் முதலாளிகளின் பலவீனமான துறைகளில் அரசு தலையிட்டதுடன், அந்த மூன்று தசாப்தங்கள் பூராவும் பொருளாதார வடிவமானது அரச பணத்தால் முதலாளித்துவத்தை நடாத்திச் செல்வதாகவே இருந்தது. அதன்படி, பாடசாலை கல்வி, உயர் கல்வி, காதார சேவை, பேரூந்து போக்கவரத்து போன்ற சேவைகளும், பிரதான கைத்தொழில்கள் மற்றும் மொத்த, சில்லரை வியாபாரங்களும் அரச ஏகபோகத்தின் கைக்குச்சென்றது.

என்றாலும், இலங்கை முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்குத்தனத்தால் இந்த கட்டமைப்பும் கடுமையான நெருக்கடியில் வீழ்ந்தது. பாரியளவில் கொமிஸ், இலஞ்சம், உறவினர் உபசரிப்பு, ஊழல் மோசடி, விரயம், திறமையின்மை மற்றும் அதிகாரவாதத்தின் வளர்ச்சி போன்றவையே இதற்கு காரணம்.

7. 1956 ஆகும்போது, முதலாளித்துவ ஆட்சியாளர்களினால் கிராமப்புற சிறு முதலாளித்துவ அபிலாஷைகளை, தமது அதிகாரத்திற்காக முகாமைத்துவம் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின. நாட்டின் கல்வித் தரம் உயர்ந்ததுடன் உழைப்பு படையணியின் தரம் உயர்ந்தமையும், இறக்குமதியை முடிந்தளவு கட்டுப்படுத்தி விவசாயத்தில் தன்னிறைவு அடைவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும், 1970 தசாப்தம் ஆகும் போது இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இணையான கைத் தொழில்களை விரிவாக்க மேற்கொண்ட முயற்சிகளும், கைத் தொழிற்துறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் ஊடாக சிறு முதலாளித்துவ தளம் அளவோடு பெற்ற வளர்ச்சியும் காரணமாக தனியார் முதலாளிகளின் மூலதன திரட்சிக்கான ஆற்றலும் வளர்ந்தது. பொருளாதாரத் துறை சார்ந்த பிரிவுகளுக்கு இதனால் ஏற்பட்ட தாக்கம் 1955 - 1975க்கு இடைப்பட்ட காலத்தில் வெளிப்படையாக தெரிந்ததுடன், இந்த இருபது வருட காலத்தில் கைத் தொழிற்துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 40 வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது.

8. ஆனால், பொருளாதாரத்தில் அரச மைய வடிவம் மூலதன விரிவாக்கத்திற்கு தடையாக இருந்தமையால் அது விரைவிலேயே காலவதியாகத் தொடங்கியது. அதன் உச்சக்கட்டம் 1973 உலக பொருளாதார

நெருக்கடியாகும். இந்நெருக்கடியால் உலக மட்டத்திலும். இலங்கையிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் பாரிய பொருளாதார அழிவுக்குள் தள்ளப்பட்டனர். நெருக்கடி உலக மட்டத்தில் தீவிரமடைந்ததோடு, இலங்கையிலும் அதன் தாக்கம் வெளிப்பட்டது. அதற்கு தீர்வாக உலக மூலதன விரிவாக்கத்திற்கு தடையாக இருந்தவற்றை நீக்கும் புதிய வடிவமொன்று அதற்கு சமமாக முன்வைக்கப்பட்டது. 1973 செப்டம்பர் 24ம் திகதி அன்றைய உலக வங்கியின் தலைவர் ரொபட் மக்னமாரா தனது பிரபல நைரோபி உரையின்போது “நவ தாராளமய” முதலாளித்துவம் சம்பந்தமான கருத்தை முன்வைத்தார். 1975ல் அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தத்துவசிரியரான பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகவும் அதற்கு சமமான கருத்தையே முன்வைத்தார். இந்த புதிய உபாயம் அமெரிக்காவில் “ரேகன்வாதம்” என்ற பெயரிலும் இங்கிலாந்தில் “தட்சர்வாதம்” என்ற பெயரிலும் செயற்படத் துவங்கியதுடன், இலங்கையில் 1977 அதிகாரத்திற்கு வந்த ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சியில் “திறந்த பொருளாதாரம்” என்ற பெயரில் செயற்படுத்தப்பட்டது. இலங்கையை போன்ற பிற்போக்குத்தனமான முதலாளித்துவ நாடொன்றில் நவதாராளமய முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான அரசியல் பலத்தை பெற்றுக் கொள்வதற்கு, சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையொன்றும் அடங்கிய புதிய அரசியலமைப்பு 1978ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

9. நவ தாராளமய முதலாளித்துவத்தின் அரசியல் அணுகுமுறையானது, உலக மூலதனம் உலகம் பூராவும் பயணிப்பதற்குத் தடையாக இருந்தவற்றை அகற்றுதல் மற்றும் வணிக முதலாளித்துவத்திற்கு சவால் விடும் அனைத்து கட்டமைப்பு ரீதியிலான பண்புகளையும்

மறுசீரமைப்பதாகும். அதன் மூலம் பொருளாதாரம் சார்ந்த விடயங்களில் அரச தலையீட்டை நீக்குதல், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார எல்லைகள் மற்றும் விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல், அரச முயற்சிகளை தனியார் மயமாக்குதல், சமூக பாதுகாப்பு சேவைகளை அகற்றி அவற்றை வியாபாரப் பண்டங்களாக ஆக்குதல், மக்கள் மீது சுமையேற்றும் விதத்திலும், மூலதன முதலீட்டாளர்களுக்கு நன்மை பயக்கும் விதத்திலும் வரிக் கொள்கையை மாற்றியமைத்தல், உற்பத்தித் துறைக்கு சமமாக சேவைகள் துறையை பரந்தளவில் விரிவாக்கல் போன்ற கட்டமைப்பு ரீதியிலான பல மாற்றங்கள் பொருளாதாரத்தில் இணைக்கப்பட்டன. முதலீட்டாளர்களுக்கு அதிக இலாபத்தை உறுதி செய்வதற்காக சிறப்பு வரிச் சலுகை பெற்றுக் கொடுத்தல், முதலாளித்துவ சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்கள் கூட செல்லுபடியாகாத சிறப்பு பொருளாதார வலயங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளும் பல நாடுகளில் எடுக்கப்பட்டுள்ளன. உலகில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டம் இலங்கைக்கே உரித்தான பிற்போக்குத்தனத்துடனும் சர்வதேச நிதி நிறுவனங்களின் அணுகுமுறைக்கு ஏற்பவும், பொருளாதாரம், ஏகாதிபத்திய மூலதனத்திற்கு கீழ்ப்படிந்தும் இலங்கையில் செயற்படுத்தப்பட்டது.

10. நவ தாராளமய முதலாளியத்தின் இரண்டாம் கட்டம் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பாரதூரமான அழிவுகளை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதோடு, பொதுவில், இலங்கையில் உலக ஏகாதிபத்திய நிறுவனங்களின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டமையும், ஒப்பந்த முறைகள் மற்றும் பல்வேறு மோசடி வியாபாரங்கள் ஊடாக உள்நாட்டு முதலாளிகளின் வளர்ச்சி மாத்திரமே அதிகரித்துள்ளது. நவ தாராளமய

முதலாளித்துவம் 35 வருடங்களாக நவ தாராளமய மறுசீரமைப்புகள் நடைபெற்றதன் பின்னர் பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்கள் நடந்துள்ளன.

அ) இலங்கையில் நவ தாராளமய முதலாளித்துவத்திற்குள் அரச முயற்சிகளை தனியார்மயப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டதோடு, அதனால் அரச முயற்சிகள் மீளுருவாக்கல் ஆணைக்குழு (பர்க்) என்ற பெயரில் தனி நிறுவனமொன்றும் அமைக்கப்பட்டது. 1978ல் இருந்து 2003க்கு இடைப்பட்ட 25 வருடங்களில் 83 அரச நிறுவனங்கள் விற்றுத் தள்ளப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை வெளிநாட்டு பல்தேசிய கம்பனிகளால் விலைக்கு வாங்கப்பட்டன. ஆனால், அதற்கிடையில் தனியார் முதலாளிகள் மத்தியிலிருந்து தேசிய முதலாளித்துவம் உருவாவதையும் காணக்கூடியதாக இருந்தது. அரச முயற்சிகளை தனியார் மயப்படுத்தியமை பொருளாதாரத்தில் அரச பங்களிப்பை குறைக்கும் உபாயத்தின் ஒரு பகுதியாகும்.

ஆ) பொருளாதாரம் தொடர்பிலான வரம்புகளை அகற்றி இலங்கையின் பொருளாதாரத்தை உலக மூலதனத்திற்கு திறந்து விட்டமை நவ தாராளமய முதலாளித்துவத்தின் பிரதான பண்புகளாகும். ஒரு நாடு வெளிநாடுகளுடன் மேற்கொள்ளும் நிதி மற்றும வர்த்தக உறவுகளைக் குறித்து வைக்கும் ஆவணம் கொடுக்குமதி நிலுவை ஆவணம் என அறியப்படுவதோடு அது நடைமுறைக் கணக்கு, மூலதன நிதிக் கணக்கு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு ஆகிய 3 கணக்குகளினதும் சேர்க்கையாகும். நவ தாராளமய உபாயம் என்பது இந்த கணக்குகளை திறப்பதுதான். 1978ல் நவ தாராளமய முதலாளித்துவத்தின் முதல்

கட்டத்தில் நடைமுறை கணக்குகள் திறக்கப்பட்டன. நடைமுறைக் கணக்குகள் திறக்கப்பட்டமை காரணமாக இறக்குமதிகள் மீதிருந்த வரம்புகள் நீக்கப்பட்டு வர்த்தக நிலுவை அதிகரிக்கப்பட்டது.

இதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளை கீழே அட்டவணையில் காணலாம். 1978ல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் 76.8% க்கு சுங்கவரி அறவிடப்பட்டதுடன், 2002 ஆகும்போது அது 28% வரை குறைந்திருந்தது. இறக்குமதிக்கான சுங்கவரி விகிதாசாரமும் 13.9%லிருந்து 4.6% வரை குறைந்துள்ளது.

| வருடம் | இறக்குமதி சுங்கவரி விகிதம் | சுங்கவரி அறவிடும் இறக்குமதி பகுதி விகிதம் |
|---|---|---|
| 1978 - 1980 | 13,9 | 76,8 |
| 1981 - 1983 | 15,2 | 59,4 |
| 1984 - 1986 | 18,6 | 68,8 |
| 1987 - 1989 | 14,5 | 58,9 |
| 1990 - 1994 | 11,8 | 45,3 |
| 1995 | 7,9 | 39,5 |
| 1996 | 8,5 | 38,7 |
| 1997 | 7,7 | 36,4 |
| 1998 | 7,4 | 35,7 |
| 1999 | 7,0 | 34,0 |
| 2000 | 4,5 | 29,3 |
| 2001 | 4,9 | 25,0 |
| 2002 | 4,6 | 28,0 |

இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரம்புகள் நீக்கப்பட்டமை வர்த்தக நிலுவை அதிகரிப்பதற்கு காரணமாக

இருந்தது. விஷேடமாக ஏற்றுமதி குறைந்த இலங்கையை போன்ற பலவீனமான நாடு இதனால் மோசமாக பாதிக்கப்பட்டது. பின்னர் நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்கி வைத்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி 2011 வரவு செலவு திட்டத்தின் மூலம் மூலதன கணக்கொன்றை ஆரம்பிப்பதாக அறிவித்தது. மூலதனக் கணக்கு திறக்கப்படுதல் என்பது வெளிநாட்டு அரசுகள் மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டும் தமது மூலதனத்தை இலங்கையில் முதலீடு செய்யவும் சொத்துக்களை விலைக்கு வாங்கவும் விதிக்கப்பட்டிருந்த வரம்புகளை நீக்குவதாகும். (இதுவரை அமுலிலிருந்த சட்டங்களின்படி எந்தவொரு நபரும் 500 அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட பணத்தை அறிவிக்காமல் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்ல முடியாது) இதனால், வியாபாரிகளுக்கு, இலங்கையிலுள்ள கறுப்புப் பணத்தை நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்ல அனுமதி கிடைப்பதோடு, உலக மூலதனம் எவ்வித தடையுமின்றி பொருளாதாரத்திற்குள் நுழைவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். ஏகாதிபத்திய நாடுகள் மூலதன கணக்குகளை திறப்பது, அவர்களது உபரி மூலதனத்தினால் வறிய நாடுகளை விழுங்கும் நோக்கிலேயாகும். நடைமுறை கணக்கு குறைந்த மதிப்பில் காணப்படும் ஒரு நாடு மூலதனக் கணக்கை திறப்பதன் விளைவாக நாட்டின் பொருளாதாரம் முற்றாக ஏகாதிபத்திய பார்வைக்குள் சிக்கிவிடும். இலங்கையின் வர்த்தக நிலுவை கீழே அட்டவணையில காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | இறக்குமதி | ஏற்றுமதி | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|
| 2009 | 11172618 | 813911 | -358707 |
| 2010 | 1519772 | 974387 | -545350 |
| 2011 | 2241488 | 1167588 | -1073900 |
| 2012 | 2441879 | 1245531 | -1196348 |
| 2013 | 2323128 | 1344054 | -9790074 |

இ) நவ தாராளமய முதலாளித்துவத்தின் இன்னொரு பண்பு, உற்பத்தி துறைக்கும் மேலாக நிதி சேவைகளை முன்னெடுப்பதாகும். அதன் விளைவாக விவசாய உற்பத்தித் துறை மேலும் வீழ்ச்சியடையும். 1963லிருந்து 2013 வரையிலான 50 வருட காலத்தில் விவசாயத்துறையில் உழைப்பாளிகளின் விகிதாசாரம் 53% லிருந்து 31% வரை சரிந்தது. கைத்தொழில் துறையில் உழைப்பாளிகளின் விகிதாசாரம் 10லிருந்து 26,1% வரை அதிகரித்ததோடு, சேவைகள் துறையின் பங்களிப்பு 36,9லிருந்து 57“5% வரை உயர்ந்தது. பொருளாதாரத்தில் அரைவாசிக்கும் மேல் சேவைகளை நம்பியிருக்க வேண்டிய நிலை உருவாகியதோடு, பாட்டாளி வர்க்க அமைப்பிலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. இங்கு சேவைகள் என்ற வகையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டிருப்பது உற்பத்தி சார்ந்த சேவைகளோ, சமூகம் சார்ந்த சேவைகளோ அல்ல. நிதி மூலதனம் சார்ந்த சேவைகளாகும். தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து வசதிகளை விஸ்தரிப்பதற்கே இங்கு முன்னனுரிமையளிக்கப்பட்டது.(போக்குவரத்து வசதிகள் விடயத்தில் பணக்கார வர்க்கத்தின் போக்குவரத்து தேவைக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக அதிவேக நெடுஞ்சாலை பராமரிப்புக்கு பெருமளவில் பணம் செலவிடப்படுகிறது. ஆனால், அதிவேக நெடுஞ்சாலை மூலம் கிடைக்கும் வருமானமான ஒரு பில்லியன் ரூபாயை விட பன்மடங்கு அதன் பாராமரிப்பிற்காக செலவிடப்படுகிறது. அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்தாத பெரும்பான்மை மக்களுக்கே அந்த உரியையும் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது) 2002லிருந்து 2012வரையில் வைத்தியசாலைகளில்

கட்டில்களின் எண்ணிக்கை 5,88 வீதத்தாலும், சுத்தமான குடிநீர் தேவைப்படும் குடும்பங்கள் 25 வீதத்தாலும் திகரிக்கப்படும்போது, கையடக்கத் தொலைபேசிப் பாவனை 1130 வீதத்தால் உயர்ந்துள்ளது. இது அபிவிருத்தி என கருதப்பட்டாலும், அடிமட்ட மக்களின் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் காணக்கூடியதாக இல்லை.

ஈ) நவ தாராளமய முதலாளியத்தின் இன்னொரு பண்பாக இருப்பது சமூக பாதுகாப்பு சேவைகளை ஒழித்து வர்த்தக பண்டங்களாக்குவதுதான். நவ தாராளமய முதலாளியத்தின் முதற் கட்டத்தில் தொடங்கி இதுவரை கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது கல்வி - சுகாதாரம் போன்ற சேவை துறையாகும். கடந்த பல வருடங்களாக கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கான செலவீனம் மொத்த தேசிய உற்பத்தியில் விகிதாசார அடிப்படையில் வீழ்ச்சியடைந்த விதம் கீழே அட்டவனையில் தரப்படுகிறது.

| வருடம் | 1994 | 2004 | 2013 |
|---|---|---|---|
| சுகாதாரம் | | 1'65% | 1'38% |
| கல்வி | 3'1% | | 1'7% |

இவ்வாறு கல்வி சுகாதாரம் போன்ற துறைகளுக்கான அரச ஒதுக்கீடு குறைந்ததன் விளைவாக அதன் சுமை முழுவதும் மக்கள் மீது சுமத்தப்பட்டு, பொருளாதார ஆற்றல் குறைந்த அடிமட்ட வர்க்கத்திற்கு அந்த உரிமைகள் மறுக்கப்பட்டது. உதாரணமாக, உலக வங்கியின் புள்ளி விபரங்களின்படி உழைப்பாளிகள் தமது மாதச் சம்பளத்தில் கல்விக்காக ஒதுக்கும்

விகிதாசாரம் 1978ல் 1,6% லிருந்து 2010ல் 3,2% வரை இரு மடங்காகியுள்ளது (இந்த மதிப்பீடு அரசாங்க கல்வி நிறுவனங்களில் ”இலவச” கல்விக்காக பிள்ளைகளை சேரப்பவர்களுக்கு மட்டுமே. த னி யா ர் கல்வி நிறுவனங்களில் செலவு இதைவிட அதிகமாகும்) மருத்துவ சிகிச்சைக்காக மாதாந்த சம்பளத்தில் செலவிடும் விகிதாசாரம் 1978ல் 1,7% லிருந்து 2010ல் 4,6% வரை இரு மடங்காக அதிகரித்துள்ளது. போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் செலவு 4,5% லிருந்து 9,8% வரை இரு மடங்காகியுள்ளது. இதன் விளைவாக உணவு பானங்கள், ஆடை அணிகலன்கள், அத்தியாவசிய நுகர்வுகள் குறைந்துள்ளன. உழைப்பாளர்கள் தமது மாதாந்த சம்பளத்தில் உணவுக்காக செலவிடும் விகிதாசாரம் 1978ல் 56,7% லிருந்து 2010ல் 42,3% வரை குறைந்துள்ளது, கொழும்பு நுகர்வோர் விலை சுட்டியின்படி உணவிற்கான செலவு 1978ல் 237.5 அலகுகளிலிருந்து 6143.3 வரை 26 மடங்காக அதிகரித்த நிலையில் தான், ஆடை அணிகலன்களுக்காக செலவிடும் விகிதாசாரம் 1978ல் 10.6 வீதத்திலிருந்து 2010ல் 2.9 வீதமாக கடுமையாக வீழ்ச்சியடைந்தது. நாளாந்த நுகர்வல்லாத நீடித்து உழைக்கும் பொருட்களை வாங்குவதற்காக செலவிடும் பணத்தின் விகிதாசாரம் 1978ல் 4.6% வீதத்திலிருந்து 2.5% வீதம் வரை சரிந்துள்ளது. இது, 1956ல் நிலவிய 3.2மூ வீத மதிப்போடு ஒப்பிடும்போது கடுமையான வீழ்ச்சியாகும். கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற சேவைகளை இலாபநோக்கில் மாத்திரம் முன்னிலைப்படுத்திய பொருட்களாக ஆக்கப்பட்ட நிலையில் உணவு, உடுதுணிகள் போன்ற அத்தியாவசிய செலவுகளை குறைக்க வேண்டிய நிலை

ஏற்பட்டது. வாழ்வதற்கான வீடு, பிள்ளைகளுக்கு கல்வி, நோய்நொடிகளுக்கு மருந்து சிகிச்சை போன்றவற்றுக்கு செலவிடும்போது, உணவு பானங்கள், ஆடை அணிகலன்களுக்கு பணம் மீதப்படுவதில்லை என்பதற்கு புள்ளி விபரங்கள் இல்லையாயினும், இவை அனைவரும் அனுபவிக்கும் வாழ்க்கை அனுபவங்களாகும். சமூகத்திற்கான சேவைகளை வியாபார மயமாக்கும் நவ தாராளமய தந்திரத்தினால் மக்கள் வாழ்க்கை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பது இப்படித்தான்.

ஏ) பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து அரசு விலகியதுடன் அரசுக்கு கிடைக்கும் வருமானம் சரிந்தது. இதற்கு நவ தாராளமய முதலாளித்துவ கட்டமைப்பிற்குள் தீர்வானது வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதுதான். இது குறித்த இலங்கையின் அனுபவங்களை எடுத்துக் கொண்டால், 2014 வரவு செலவு அறிக்கைக்கு ஏற்ப அரச வருமானத்தில் 86.74% விகிதம் அதாவது 1284.6 பில்லியன் ரூபாயை வரி விதிப்புகளின் ஊடாக பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரிகளிலிருந்த நேரடி வரி, அதாவது, அதிக வருமானம் பெறுபவர்ளிடமிருந்து அறவிடப்படும் வரி வருமானம் 283.3பில்லியன் ரூபாய் அல்லது மொத்த வரி வருமானத்தில 22.2 விகிதமாகும். அதில் 54சத விகிதம் மக்களின் நுகர்வுப் பொருட்களான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும்

சேவைகள் மூலம் பெறப்படுகிறது. வரி வருமானத்தில் எஞ்சிய பகுதி சுங்க வரி தீர்வை வரி ஆகியவற்றிலிருந்து கிடைப்பதோடு, அவை பொருட்களின் விலையோடு சேர்வதால் அதன் சுமையும் மக்கள் தலை மீதே விழுகிறது, அட்டவணையில் காணப்படுவது 2014

வரவு செலவு திட்டத்தின் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரிகள் சம்பந்தமான விபரங்களாகும்.

திருத்தப்பட்ட புது வரிகள் 213 நவம்பர்

| பொருள் | கிலோகிராம் ஒன்று ரூபா |
|---|---|
| | |
| சீனி | 28 |
| பருப்பு | 22 |
| நெத்தலி | 26 |
| டின் மீன் | 102 |
| மாசி | 302 |
| எனைய கருவாடு | 102 |
| பாம் ஒயில் | 110 |
| யோகட் | 625 |
| வெண்ணெய் | 880 |
| மாகரின் | 175 |
| கொத்தமல்லி | 202 |

உணவுப் பொருட்களுக்கு மட்டுமல்ல கையடக்க தொலைபேசி மீதான வரி கடந்த வரவு செலவு திட்டத்தில் 25% விகிதமாக உயரத்தப்பட்டது. மக்கள் தொலைபேசிகளை பாவிக்கும்போது அதனூடாக அரசாங்கம் 41,415 பில்லியன் ரூபாயை வருமானமாக பெறுகிறது. இந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் ஆடம்பர

பேனாக்கள், கழுத்துப்பட்டிகள் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்டிருந்த வரிகளும். சொகுசு அதிவேக வாகனங்கள் மீதான 300% விகித வரியும் குறைக்கப்பட்டது. புதிதாக பங்குச் சந்தையில் நுழையும் நிறுவனங்களுக்கு 50% விகித வரிச்சலுகையும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. முதலாளிகளுக்கு இவ்வாறு வரிச் சலுகைகள் வழங்குவதோடு, சாதாரண பொதுமக்கள் மீது வரிகளை சுமத்துவதே நவ தாராளமய முதலாளித்துவ கொள்கையாகும்.

| நாடு | நேரடி வரி விகிதம் | மறைமுக வரி விகிதம் |
|---|---|---|
| அமெரிக்கா | 58% | 4% |
| சிங்கப்பூர் | 26% | 17% |
| பாகிஸ்தான் | 23% | 29% |
| இந்தியா | 25% | 28% |
| இலங்கை | 22% | 54% |

11 சுருக்கமாக பார்த்தால் நவ தாராளமய முதலாளியத்தில் இலங்கை ஆளும் வர்க்கம் நம்பிக்கை வைத்திருப்பது, முக்கியமாக, உலக மூலதன முதலீடு சம்பந்தமான விடயத்தில் தான். வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கைக்கு வரவழைப்பதன் மூலம் நிதிச் சுழற்சி அதிகரிப்பதாகவும், வெளிநாட்டு செலவாணி கிடைப்பதாகவும், தொழில் வாய்ப்புக்கள் பெருகுவதாகவும் நம்பப்பட்டது. முதலீட்டாளர்கள் இலங்கையில் கைத்தொழில்களை ஆரம்பிக்குமிடத்து அந்தப் பணம் ”கசியும் செயற்பாடு” (Trickling down effect) சமூகத்தின் அடித்தள மக்களுக்கு கிடைப்பதாகவும், அதனால் சமூகத்தின் வாழ்க்கைத் தரம் உயருமெனவும் கூறப்பட்டது. இந்த முதலீட்டு கனவுக்காக முதற்கட்ட செலவுகளை செய்ய

வேண்டுமென வாதிக்கப்பட்டது. வெளிநாட்டு கடனை கொண்டு அடிப்படை வசதிகளை செய்தால் முதலீட்டாளர்களை கவர முடியுமெனவும், அந்த முதலீட்டாளர்கள் ஊடாக கிடைக்கும் பணத்தினால் கடனை அடைக்க முடியுமெனவும், 1978லிருந்து இன்று வரை ஆட்சிலிருந்த, இருக்கும் ஒவ்வொரு ஆட்சியளாரும் வாதிட்டனர். நவ தாராளமய முதலாளியத்தின் முதற் கட்டத்தில் முதலீட்டாளர்களுக்கு தடையாக இருப்பது மின்சக்தி தட்டுப்பாடுதான் என அறியப்பட்டது. அதன்படி, வெளிநாடுகளின் கடனை கொண்டு மின்சக்தி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மகாவலித் திட்டம் துரிதப்படுத்தப்பட்டது. என்றாலும், எதிர்ப்பார்த்தபடி முதலீட்டாளர்கள் கவரப்படவில்லை.

இரண்டாவது கட்டத்தில் பாதை தொகுதிகள் சீராக இல்லாமை பிரச்சினையாக அறியப்பட்டது. அதற்கேற்ப பெருமளவில் கடன் பெற்று பாதைகள் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளாலும் முதலீட்டாளர்களை கவர முடியவில்லை. முதற் கட்டத்தில் சாதாரண தொழில் சட்டங்கள் செல்லுபடியாகாத ”சுதந்திர வர்த்தக” வலயங்கள் அமைக்கப்பட்டதன் ஊடாகவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பங்களாதேசம் போன்ற நாடுகளில் உழைப்பு இலாபமாக கிடைப்பதால் அவற்றோடு போட்டியிட முடியாமை, விஸ்தீரணமான நிலங்களை விடுவிக்க முடியாமை, முதலீட்டு செயற்பாட்டில் பரிசுத்தத் தன்மை இல்லாமை போன்ற பல்வேறு காரணிகளால் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாதுள்ளது. அதன் விளைவாக முதலீட்டு எதிர்ப்பார்ப்பினால் ”பூர்வாங்க செலவுகள்” என்ற வகையில் அடிப்படை வசதிகளுக்காக எடுத்த கடனைச் செலுத்த முடியவில்லை. 2013 ஆகும்போது, செலுத்த வேண்டிய வருடாந்த கடன் வட்டி தவணை ஒட்டுமொத்த அரச வருமானத்தில் 39% வீதம் அல்லது ரூ. 444.07 பில்லியனாகும். 2014 ஜுலை 28ம் திகதி முதலீட்டாளர்களின் கூட்டத்தில், கடன் தவணையை செலுத்துவதற்கு அரச

வருமானத்தில் 102% வீதம் தேவைப்படுவதாக அமைச்சர் சம்பிக ரணவக கூறினார். 1977ல் இந்த மதிப்பு 28% விகித எல்லைக்குள் இருந்தது. 2014 ஆகும்போது கொடுபடாத அரச கடன் ரூ. 6793.25 பில்லியனாகும். 10 வருடத்திற்கு முன்பு அந்த மதிப்பு ரூ. 2139.53 பில்லியனாக இருந்தது. அதன்படி, 2004 - 2014க்கு இடைப்பட்ட 10 வருடத்தில் கொடுபடாத அரச கடன் மூன்று மடங்குக்கும் மேல் அதிகரித்துள்ளது. இந்தளவு கடன்பட்டு முதலீட்டாளர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கப்பட்ட பின்பும், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் எதிர்பார்த்த அளவு அதிகரிக்கப்படவில்லை.

2013ல் இலங்கைக்கு வந்த நேரடி முதலீடுகள் 1.3 பில்லியன் டொலராகும். 2014ல் அதனை 2.5 பில்லியன் டொலராக உயர்த்த எதிர்பார்த்திருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. எவ்வாறாயினும், இதுவரையில் இலங்கைக்கு வந்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் அளவு மொத்த தேசிய உற்பத்தியில் 0,10 வீத மதிப்பை கொண்டிருந்தது. 2011ல் 0,10 வீதமாக இருந்தது. அது 2008ல் ஆகக்கூடிய 0,17% பெறுமதியை காட்டியது. ஆகக் குறைந்த 0.05% மதிப்பு 2009ல் காணப்பட்டது. என்றாலும், அனைத்து முயற்சிகளையும் செய்த பின்பு 35 வருடத்திற்குள் மொத்த தேசிய உற்பத்தியில் 0,1%க்கு மேலான முதலீடுகளை பெற்றுக்கொள்ள ஆளும் வர்க்கத்தினால் முடியவில்லை. அண்டை நாடுகளான இந்தியா 0,5% , மலேசியா 5,5%, சீனா 1,4%, ஹொங்கொங் 1,4%, ஜப்பான் 1,4%, தென் கொரியா 1,4% , சிங்கப்பூர் 1,4%, தாய்லாந்து 3,5%, வியட்நாம் 0,8%, நாடுகளுடன் ஒப்பிடும்போது அது மிகக் குறைந்த பெறுமதியாகும்.

### இலங்கைக்கு கிடைத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகள் (டொலர் பில்லியன்)

| வருடம் | 1970 | 1977 | 1980 | 1985 | 1990 | 1994 | 2000 | 2005 | 2010 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு | 0,30 | 1,20 | 0,43 | 0,26 | 0,43 | 1,66 | 1,72 | 0,20 | 0,47 | 1,30 |

நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அடிப்படையிலான உபாயம்

தோல்வியடைந்திருப்பதையே இது காட்டுகிறது. என்றாலும், இலங்கை ஆட்சியாளர்களின் பிரதான உபாயமாக இருப்பது வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைப்பதுதான்.

நவ தாராளமய முதலாளியத்தின் இரண்டாவது கட்டத்தில் பொருளாதாரத்தின் பயணப்பாதை

12. 1980களின் கடைசியில் நவ தாராளமய முதலாளியத்தை நோக்கி உலகம் பயணிக்க தொடங்கினாலும், உலக சோஷலிஸ முகாமின் இருப்பும், பனிப்போரும் காரணமாக உலக அரசியலின் எதிர்வினைகள் உலக மூலதனத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் அசமந்த போக்கை ஏற்படுத்தியது. 1990களின் ஆரம்பத்தில் சோவியத் நாடு உட்பட சோஷலிஸ முகாம் வீழ்ந்தமையும், அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய முகாம் தனி அதிகாரத்தை நிலை நாட்டிக் கொண்டதுடன் நவ தாராளமய முதலாளித்துவ உபாயத்திற்கு உடன்பட வேண்டிய நிலை முழு உலகுக்கும் ஏற்பட்டது அனைத்து தடைகளையும் தகர்த்து, எல்லைகளையும் கடந்து உலக மூலதனம் உலகம் பூராவும் நுழையக்கூடியநிலை நவ தாராளமய முதலாளியத்தின் இரண்டாவது கட்டமென பெயரிடப்பட்டது. இலங்கையில் இந்த சகாப்தத்தை ஆரம்பிப்பதற்காக "மனிதநேய வடிவத்தை கொண்ட திறந்த பொருளாதாரம்" என்ற பெயரில் சந்திரிகா பண்டாரநாயகவும்,"மீளெழும் சிறிலங்கா" (Regaining Sri Lanka) என்ற பெயரில் ரணில் விக்ரமசிங்கவும் முயற்சி செய்தார்கள். என்றாலும், அதற்கான காலம் கனிந்திருக்கவில்லை. 2009ல் 30 வருடகால யுத்தம் முடிவுக்கு வந்தது. 2010 ஜனவரியில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தராஜபக்ஷ இரண்டாவது முறையும் அதிகாரத்திற்கு வந்தார். 2010 பொதுத் தேர்தலின் பின்னர் பல்வேறு நன்கொடைகள் மற்றும் வரப்பிரசாதங்களை கொடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கி

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிகாரத்தை நிலைநாட்டியது. 18வது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவந்து ஜனாதிபதிக்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்ட கையோடு நவதாராளமய முதலாளியத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுப்பதற்கான பின்புலம் உருவானது. இந்த இரண்டாம் கட்டவேலைத் திட்டம், ”மஹிந்த சிந்தனை முன்னோக்கு” மற்றும் ”தேசிய இயற்பியல் திட்டம்” (தேசிய பௌதீக திட்டம்) ஆகிய திட்டங்களில் எழுத்துருவில் அடங்கியுள்ளது.

13. வெளிநாட்டு முதலீடுகளுக்காக இதுவரை கடைப்பிடித்த உபாயங்களில் குறிப்பிட்டளவு மாற்றங்கள் ”மஹிந்த சிந்தனை முனனோக்க”த்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பல்வேறு தொழிற்சாலைகளை நிறுவுதற்காக வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்துக் கொள்ளவே அதுவரை முயற்சிக்கப்பட்டது. நவ தாராளமய முதலாளித்து முதற் கட்டத்தில் ஜப்பான், கொரியா போன்ற நாடுகளின் முதலீட்டாளர்களை வரவழைத்து தைத்த ஆடை தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கட்டுநாயக, கொக்கல போன்ற சுதந்திர வர்த்தக வலயங்களில் பெருமளவில் ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. 2011 ஆகும்போதும், முதலீட்டுச் சபை ஊடாக இலங்கையில பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 450,913 பேரில் 276,551 பேர் துணிமணிகள், தைத்த ஆடைகள் மற்றும் தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். விகிதாசாரத்தில் இது 61,33% மாகும். என்றாலும், இரண்டாம் கட்ட வேலைத் திட்டத்தில் இலங்கையை ஐந்து சக்திகளையுடைய மையமாக ஆக்குவது சம்பந்தமாக கூறப்பட்டது. வர்த்த மையம், சுற்றுலா மையம், மின்சக்தி மையம், வான் மற்றும் கடல்சார் மையம் மற்றும் அறிவு

மையம் ஆகியனவாகும். அதன்படி, 'ஷொப்பிங் மால்' போன்ற வியாபார நிலையங்களை நிர்மாணிக்கவும், ஹோட்டல்களை நிர்மாணிக்கவும் மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களை நிர்மாணிக்கவுமே முதலீட்டாளர்களை இலங்கைக்கு வரவழைக்க முயற்சிக்கப்பட்டது. மின்சக்தியை ஏற்றுமதி செய்வதன் மூலமும், கப்பல் மற்றும் விமானங்களுக்கு சேவைகள் வழங்குவதன் மூலமும், சுற்றலா தொழிற்றுறையின் மூலமும் வருமானம் பெற முயற்சிக்கப்படுகிறது. நாடு பூராவும் ஹோட்டல்கள் கட்டுவதற்காக வெளிநாட்டு கம்பனிகளுக்கான காணிகள் ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளன. காலி முகத்திடல் சங்க்ரீலா கம்பனிக்கும், கிரிஸ் ஹோட்டல் குழுமத்திற்கு கொழும்பு கோட்டையில் காணியும் வழங்கப்பட்டமை பிரபல சம்பவங்களாகும். வர்த்தக மையங்களை கட்டுவதற்குத் தேவையான காணிகளை கம்பனிகளிடம் ஒப்படைப்பதற்காக கொழும்பின் நகர்புற ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்விடங்களிலிருந்து விரட்டப்படுகிறார்கள். சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனை கொண்டு சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரம் ஹோட்டல் மற்றும் வர்த்தக நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டதாகும்.

அ) வர்த்தக மையம் - கொழும்பு நகரை வியாபார மத்திய நிலையமாக ஆக்குவதாயின், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஹொங்கொங் போன்ற ஆசியாவின் வேங்கைகள் என அழைக்கப்படும் நாடுகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது. பொருட்கள் விற்பனையில் தற்போது சிங்கப்பூரும் மலேசியாவும் வகிக்கும் இடம் இலங்கைக்கு கிடைக்குமென நினைப்பது கடினமாகும். மறுபுறம், பங்குச் சந்தை முதலீடுகளை எடுத்துக் கொண்டாலும், அதற்கான மாற்றீடுகள் பல பிராந்தியத்தில் உள்ளன. கொழும்பு பங்குச் சந்தையில் நாளொன்றின் கொடுக்கல் வாங்கல்கள் 6 மில்லியன் டொலர்களாகும் போது,

இந்தியாவின் மும்பாய் நகரப் பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்கள் 75 மடங்குக்கும் அதிகமாகும். கல்கத்தா பங்குச் சந்தை கொழும்பை விட உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. இந்த நிலையில் கொழும்பு நகரை வர்த்தக மையமாக ஆக்கப்போவது
எப்படி என்பதும் கேள்விக் குறியாகும்? ஆனால் இலங்கை ஆட்சியாளர்களால் ஒன்று மட்டும் செய்ய முடியும். அதாவது, உலகிலுள்ள வியாபாரிகள் வசமிருக்கும் கறுப்பு பணத்தை முதலீடு செய்யக் கூடிய இடமாக இலங்கையை ஆக்குவதுதான். ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் "இரவு நகரம்" என்ற கோட்பாட்டை கொண்டு வந்ததும் அதற்காகத்தான். இப்படியான திட்டங்கள் நாட்டின் பொருளாதாரத்தை மாத்திரமன்றி கலாச்சாரத்தையும் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வது நிச்சயம்.

ஆ) சுற்றுலா மையம் - 2012ல் இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை

முதன் முறையாக பத்து லட்சத்தை தாண்டியதுடன், 2013ல் அது 1,274,593 வரை அதிகரித்தது. 2014ல் 15 இலட்சம் உல்லாசப் பிரயாணிகளை வரவழைக்கவும், 2016ல் அதனை 25 இலட்சமாக அதிகரிக்கவும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. 2013ல் உல்லாசப் பிரயாணத்துறையால் கிடைத்த வருமானம் ரூ.221 பில்லியனாகும். இலங்கையில 25 லட்சம் பெரிய தொகையாக தெரிந்தாலும், ஆசிய நாடுகளான தாய்லாந்து மற்றும் மலேசியாவிற்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை வருடமொன்றுக்குத் தலா 250 லட்சமாகும். உல்லாசப் பயணத்துறையால் ஓரளவு வருமானம் பெற முடிந்தாலும், அது நம்பிக்கை தரக்கூடிய

நிலையான வருமான இலக்கல்ல. சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் ஏற்படக்கூடிய அதிர்வலைகளினால் அது திடீரென சரியக் கூடும். மறுபுறம், உலகம் பூராவும் பயணம் செய்யும் உல்லாசப் பிரயாணிகளின் பயண முடிவு தொடர்பில் ஆசியாவிற்கு முதலிடம் கிடைப்பதில்லை. உல்லாச பிரயாணிகளின் வருகையில் 55% விகிதம் ஐரோப்பாவிற்கும், 19% விகிதம் ஆசிய - பசுபிக் பிராந்தியத்திற்கும், 17% விகிதம் அமெரிக்க தீபகற்பத்திற்கும், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவிற்கு தலா 5% விகிதமும் கிடைக்கிறது. அவற்றில் பெரும் பங்கு சீனா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு இழுபடுகிறது. ஆசியாவிற்கு வருகை தரும் உல்லாசப் பிரயாணிகளில் 56,4% விகிதம் வடகிழக்கு ஆசியாவுக்கும், 31,7% தென் கிழக்காசியாவுக்கும், 6,8மூ அவுஸ்திரேலியா நியூசிலாந்து உட்பட கடல்சார் (oceanic) நாடுகளை இலக்காக கொள்கின்றனர். ஆசியாவுக்கு வருகை தரும் உல்லாச பிரயாணிகளில் 5,1% பேர் தெற்காசியாவுக்கு வருகின்றனர். அவர்களிலும் கணிசமானோரின் பயன முடிவு இந்தியாவாகும். தெற்காசியாவை தெரிவு செய்யும் உல்லாசப் பிரயாணிகளில் இலங்கைக்கான பங்கு 5,1% விகிதம் மாத்திரமே. இலங்கையை ஆசியாவின் உல்லாசப் பிரயாண கேந்திர நிலையம் ஆக்குவதற்கான இலக்கு இவ்வளவு தொலைவில் உள்ள நிலையில், உல்லாச பிரயாணத் துறையை மேம்படுத்துவதற்காக சுற்றுச் சூழல் அழிக்கப்பட்டு சமூகமும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லப்படுகிறது. உல்லாசப் பிரயாணிகளை கவருவதற்கான நகர அலங்கரிப்புக்காக நகர்புற ஒடுக்கப்பட்ட மக்கள்

தமது வாழ்விடங்களில் இருந்து விரட்டப்படுகிறார்கள். சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்காக வன பாதுகாப்பு சட்டங்கள் மாற்றப்பட்டமையால் சூழல் ரீதியிலான ஆபத்துக்களை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். இந்த சுற்றுச் சூழல் அழிவு சம்பந்தமாக சமீபத்தில் அதிகமாக பேசப்பட்ட விடயம், நில்கல வனாந்திரத்தை சுற்றுலாவலயமாக அறிவிக்கப்பட்டமை மற்றும் சிவனொளிபாத மலையை சுற்றியுள்ள வனம் சரணாலயம் என்ற நிலையிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பிலாகும். உல்லாசப் பிரயாணத் துறைக்காக நிறைவேற்றப்பட்ட சூதாட்ட சட்டம், கலிடோ கடற்கரை தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் ஆகிய சட்ட திட்டங்கள் மூலம் ஏற்படக்கூடிய சமூக ரீதியிலான அழிவுகள் சம்பந்தமாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இ) மின்சக்தி மையம் - இலங்கையில் மின்சார பற்றாக்குறை நிலவுகிறது. இந்த நிலையில் இலங்கையை அண்டை நாடுகளுக்கு மின்சக்தியை ஏற்றுமதி செய்யும் நாடாக ஆக்குவதென்பது ஒருவித கேலிக் கூத்தாகும். இலங்கையில் மின்சார உற்பத்தியை எடுத்துக் கொண்டால் இந்த நெருக்கடியை நன்றாக அறிந்து கொள்ள முடியும். நீர் மின்சாரத்திற்கான அனைத்து மூலங்களும் பயன்படுத்தப்பட்டுவிட்டன. அனல் மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் ஏற்படும் சுற்றாடல் அழிவு குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. நிலக்கரி அழியக்கூடிய வளமாக இருப்பதால் அது நீண்ட காலத்திற்கான மாற்றீடு அல்ல. தற்போது அமைக்கப்பட்டுள்ள நுரைச்சோலை அனல் மின் நிலையம் தோல்வியடைந்த ஒன்றாகும். 2011 பெப்ரவரி 23ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 29 முறை அது

செயலிழந்துள்ளது. சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பில் அனைத்து நன்மைகளும் இந்தியாவுக்கு கிடைக்கும் விதத்திலேயே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. டீசல் மின் நிலையங்களில் மின்சார விலை அதிகமாகும். இலங்கையில் கனிம எண்ணெயோ எரிவாயு படிமங்களோ கிடையாது. படிமங்கள் காணப்படுவதாக அடிக்கடி செய்திகள் வந்தாலும், அவற்றை சுத்திகரிப்பது அதிக செலவாகுமென அனுமானிக்கப்படுகிறது. கனிம எண்ணெய் கொண்டு வருவதற்கு பெருந்தொகை பணம் செலவிடப்படுகிறது. 2013ல் மசகு எண்ணெய் மெ.தொன். 17.43 லட்சமும், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மெ.தொன். 32.01 லட்சமும் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கு செலவிடப்பட்ட பணம் ரூ. 535,048 மில்லியன். அதாவது, ரூ. 535 பில்லியன். கொண்டுவரப்பட்ட மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்தமையால் ரூ. 55 பில்லியன் வருமானம் கிடைத்துள்ளது. ஆகவே, கனிம எண்ணெய்க்கான மொத்த செலவு ரூ.480 பில்லியன். 2012ல் இலங்கையில் பாவிக்கப்பட்ட மின்சாரம் கிகா வோட் மணித்தியாலம் 11940.88. அவற்றில், இலங்கை மின்சார சபை உற்பத்தி செய்த மின்சாரம் கிகா வோட் மணித்தியாலம் 8807.95. ஒட்டுமொத்த மின்சாரத்தில் 26வீதம், அதாவது, கிகா வோட் மணித்தியாலம் 3141.93ஐ தனியார் துறையிடம் விலைக்கு வாங்க நேரிட்டது. இந்த நிலையில் மின்சாரத்தை ஏற்றுமதி செய்வது எதார்த்தமாகாது. அணு உலையொன்று ஆரம்பித்தால் மாத்திரமே அவ்வாறு ஏற்றுமதி செய்ய முடியும். இலங்கை மின்சார சபை வெளியிட்ட ”நீண்டகால மக்கள் செயற்திட்டத்”தில் அணு உலையொன்று ஆரம்பிப்பது குறித்து ஆலோசனை முன்வைக்கப்பட்டிருப்பதுடன், இலங்கைக்கும்

இந்தியாவுக்குமிடையில் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான பேச்சுவார்த்தைகள் மே மாதம் 4 - 5ஆம் திகதிகளில் இரகசியமாக நடந்துள்ளன. அவ்வாறு, அணு மின் சக்தியை நோக்கி செல்வது ஆபத்தாகும். இலங்கை சிறிய நாடாக இருப்பதால், அணுசக்தி விபத்துகள் நடக்கும் பட்சத்தில் இலங்கையின் ஒட்டுமொத்த மக்களும் ஆபத்தில் விழக்கூடிய நிலை உருவாகும் (தற்போது ஐரோப்பிய நாடுகளில் அணு உலைகள் மூடப்பட்டு வரும் நிலையில், உலகம் பூராகவும் அதன் பாதுகாப்பற்ற தன்மை குறித்து பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ள நிலையிலும் இலங்கையில் அணு உலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன) எனவே, இலங்கையை மின்சக்தி கேந்திர நிலையமாக ஆக்கும் இலக்கு தீர்மானிக்கப்படுவது மக்கள் வாழ்வை ஆபத்தில் தள்ளிவிடத்தான் என்பது தெரிகிறது.

ஈ) வான் மற்றும் கடல்சார் மையம் - சமீப காலமாக இலங்கையை வான் மற்றும் கடல்சார் கேந்திர நிலையமாக்குவதற்காக பெருந்தொகையான பணம் செலவிடப்படுகிறது. அதற்காக மத்தல சர்வதேச விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டதோடு, ஹம்பந்தோட்டை மாகம்புர துறைமுகம் கட்டப்பட்டது. இந்த இரு திட்டங்களும் தோல்வியடைந்துள்ளன. மத்தல விமான நிலையத்தில் 2014 மே மாத வருமானம் ரூ. 16185.00 என்பது நாடளுமன்றத்தில் வெளிச்சத்திற்கு வந்தது. ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு வந்த கப்பல்களின் வரவுகூடவில்லை, குறைந்திருக்கிறது. 2005ல் 4139 கப்பல்களும், 2010ல் 4067 கப்பல்களும் இலங்கைக்கு வந்துள்ளன. ஆனால், 2013ல் 3976 கப்பல்கள் மாத்திரமே வந்துள்ளன.

| வருடம் | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | 2005 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கப்பல் | 3,976 | 4,134 | 4,332 | 4,067 | 4,456 | 4,814 | 4,710 | 4,469 | 4,139 |

வருமானத்திற்கான வழி என்ற வகையில் அபிவிருத்தி செய்வதாயின் கொழும்பு துறைமுகத்தையும் கட்டுநாயக விமான நிலையத்தையுமே அபிவிருத்தி செய்ய வேண்டும், ஆனால், வான் மற்றும் கடல்சார் கேந்திர நிலையமாக ஆக்குவதற்கு இலங்கை போதுமானதாக இல்லை. கட்டுநாயக விமான நிலையம் ஊடாக செல்லும் பயணிகளின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு 70 லட்சமாகும்போது, ஹொங்கொங் விமான நிலையத்தின் ஊடாக 600லட்சம் பேர் பயணிக்கின்றனர். சிங்கப்பூர் விமான நிலையத்தின் ஊடாக 530 லட்சம் பேர் பயணிக்கின்றனர். தாய்லாந்து சுவர்ண பூமி விமான நிலையத்தின் ஊடாக 410 லட்சம் பேர், மலேசிய கோலாலம்பூர் விமான நிலையம் ஊடாக 325 லட்சம் பேர் என்ற வகையில் பயணிக்கின்றனர். அதன்படி, வான் மற்றும் கடல்சார் கேந்திர நிலையமாக்குவதற்கு இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும்.

எ) அறிவுமையம் - அறிவுமையம் சம்பந்தமான கோட்பாட்டின் ஊடாக கல்வியை வியாபார பண்டமாக்க முயற்சிக்கப்படுகிறது. இலங்கை பல்கலைக் கழகங்கள் சர்வதேச தரத்தைவிட கீழ் மட்டத்தில் இருப்பதனால் அவற்றிற்கு வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்துக் கொள்ள முடியவில்லை. அவ்வாறாயின், அதற்கு மாற்றீடாக வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் கிளைகளை இங்கு ஸ்தாபிக்க வேண்டும். அதனால், கல்வி முழுமையாக தனியார் மயப்படுத்தப்படுவது நிச்சயம். அரசாங்கத்திற்கு சொந்தமான தனியார் பல்கலைக் கழகங்களை ஸ்தாபிக்க அரசாங்கம் இப்போதே முயற்சியில் இறங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு, மீன்பிடித் துறை அமைச்சு போன்ற அமைச்சுகளும் மட்டுமின்றி சனச வங்கியும் இதன் முதல் கட்டமாக தனியார் பல்கலைக் கழகங்களை ஆரம்பித்துள்ளன. தவிரவும், மாலபே சைடம் நிறுவனத்திற்கும், அக்வைனாஸ் நிறுவனத்திற்கும் தனியார் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் பிரித்தானிய பல்கலைக் கழகங்கள் சிலவற்றை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தங்கள் சமீபத்தில் கைச்சாத்திடப்பட்டன.

14. எவ்வாறாயினும், இதுவரை எந்த வருமான வழியும் பொருளாதாரத்தில் எதார்த்த பூர்வ மாற்றங்களாக இருக்கவில்லை. 2013ல் பொருட்கள் இறக்குமதியின் மூலம் கிடைத்துள்ள வருமானம் டொலர் 10.394 பில்லியன். பொருட்கள் இறக்குமதிக்கு செலவிடப்பட்ட தொகை டொலர் 18.003 பில்லியன். அதாவது அண்ணளவாக 8 பில்லியன் டொலர் பற்றாக்குறை நிலவுகிறது. உல்லாச பிரயாணதுறையை பெருமளவில் நம்பியிருந்த போதிலும் 2013ல் உல்லாசப் பயணத்துறை மூலம் 1.7 பில்லியன் டொலர்கள் மாத்திரமே வருமானமாக கிடைத்துள்ளது. உல்லாச பிரயாணதுறை மூலம் கிடைக்கப் பெற்ற ஆகக் கூடிய வருமானம் இதுதான். வெளிநாடுகளில் வேலை செய்யும் எமது உழைப்பாளிகள் அனுப்பும் வெளிநாட்டு செலவாணியை கொண்டே முழு நாடும் பராமரிக்கப்படுகிறது. வெளிநாட்டில் உழைக்கும் எமது உழைப்பாளிகளிடமிருந்து கிடைத்த வருமானம் 2013ல் டொலர் 6.4 பில்லியன். இலங்கை பாரதூரமான வெளிநாட்டுச் செலவாணி நெருக்கடியில் சிக்காமலிருக்க காரணம் மிகக் கஷ்டமான நிலையிலும் உழைப்பை சிந்தி வெளிநாடுகளில் உழைக்கும் இந்நாட்டு உழைப்பாளிகள்தான். 2013ல் 293105 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்று சென்றிருக்கிறார்கள்.

இதுவரை சுமார் 20 லட்சம் பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்று சென்றுள்ளார்கள். அது நாட்டின் உழைப்பு படையணியில் நான்கில் ஒரு பங்காகும் (மத்திய வங்கி அறிக்கையின்படி, 2010ல் இந்தத் தொகை 19,32,245 அதாவது 23,8 வீதமாகும். 2013ல் தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்களில் 93,22% மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளனர். அதே ஆண்டு வெளிநாடுகளுக்கு வேலைக்கு சென்றவர்களில் 33,1% வீட்டுப் பணிப் பெண்களாகவும், 24,2% பயிற்றப்படாத உழைப்பாளர்களாவும் சென்றுள்ளனர். பயிற்றப்பட்ட தொழிலாளர்களாக சென்றுள்ளவர்கள் 1,7% விகிதம் மாத்திரமே. நடுத்தர தொழிலுக்கு 5,6% பேரும், 9,1% பேர் எழுதுவினைஞர் தொழிலுக்கும் வெளிநாடு சென்றுள்ளனர். வெளிநாடுகளில் உழைப்பவர்களிடமிருந்து கிடைக்கும் மொத்த வருமானத்தில் அரைவாசிக்கும் மேல், அதாவது, 55,6% மத்திய கிழக்கு நாடுகளில் பணி புரிபவர்களிடமிருந்தே கிடைக்கிறது. இதன்படி, இலங்கை, உலகிலேயே மிகப்பெரிய மனித சக்தி (Man Power) வழங்கும் நிறுவனமாக வேடமிடப்பட்டிருப்பதோடு, இந்த ஊழியர்கள் அடிப்படை தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்பட்டு கஷ்டத்தில் வாழ்க்கையை கடத்துகிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக செல்லும் பெண் ஊழியர்களின் விதி பயங்கரமானது என்பதை விளக்கத் தேவையில்லை. இலங்கையை வணிக, வான் - கடல், சுற்றுலா, அறிவு, மின்சக்தி மையமாக உருவகப்படுத்தும் திட்டம் எதார்த்தத்தில் இலங்கையை அடிமை வியாபாரத்தின் மைய நிலையமாக ஆக்கும் நிலைக்கு இலங்கை முதலாளித்துவம் வீழ்ந்துள்ளது.

15. 2011 நவம்பர் 15ம் திகதி அரசாங்கம் வெளியிட்ட தேசிய பௌதீக திட்டத்தின் மூலம் உலக மூலதன தேவைகளுக்கு ஏற்புடையதாக இலங்கையின் பொருளாதாரம், சமூகம் மற்றும்

சுற்றுச் சூழலை மறுசீரமைப்பது சம்பந்தமான திட்டமொன்று முன்வைக்கப்பட்டது. இதில் சில பிரதான பண்புகள் உள்ளன.

அ) இலங்கையின் சனத்தொகை பரம்பல் முறையை முழுமையாக மாற்றுவது குறித்து இத்திட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது. இலங்கை வரலாற்றில் முதலாளித்துவ அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு சமூகத்தில் ஒவ்வொரு மனிதனதும் தலைவிதியை தீர்மானிக்கும் கடுமையான நடவடிக்கையாக இது வரலாற்றில் பதியப்படும். இத்திட்டத்தின்படி,

சனத்தொகையில் பெரும் பகுதியினர் ஐந்து பெருநகர் வலயங்களில் குடியமர்த்தப்படுவர். மேல்மாகாண பெருநகர் வலயத்தில் 35 லட்சமும், வடமத்திய பெருநகர வலயத்தில் 40 லட்சமும், வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பெருநகர் வலயங்களில் தலா 10 லட்சம் என்ற வகையில் ஒரு கோடியை விஞ்சிய மக்கள் இந்த பிரதேசங்களில் குவிக்கப்படவுள்ளனர். மேல் மாகாணத்தில் தற்போது குடியிருக்கும் 56 லட்சம் மக்களை 35 லட்சமாக குறைப்பதாயிருந்தால் மாகாணத்திலிருந்து 21 லட்சம் மக்களை வெளியேற்ற நேரிடும். சனத்தொகையில் எஞ்சிய பாதி நகரங்களில் இடத்துக்கிடமும், சிறப்பு கிராமப்புற சனத்தொகை வலயங்களிலும் குடியமர்த்தப்படும்.

ஆ) இவ்வாறு சனத்தொகை குடியமர்த்தலை தெரிவு செய்த பிரதேசங்களுக்கு வரையறுப்பதால் விடுவிக்கப்படும் நிலம் வணிகப் பயிர் செய்கைக்காக பல்தேசிய கம்பனிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிலக்கடலை, பாம் எண்ணெய், பழங்கள், மரக்கறி மற்றும் வணிக மரங்கள் பயிர் செய்கைக்கு இத்திட்டத்தில் சிறப்பு விவசாய வலயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அனுராதபுரம் மற்றும் மொணராகலை மாவட்டங்களில் குறிப்பிட்ட பகுதியும், வட மாகாணத்தின் ஒட்டுமொத்த நிலத்தில் மூன்றில் ஒரு பகுதியும் பல்தேசியக் கம்பனிகளிடம் கையளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், பெருநகர் வலயங்கள் மற்றும் ஏனைய நகரங்கள் ”கைத்தொழில் நகரங்க”ளாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போதைய கட்டுநாயக, பியகம, மல்வத்த, கண்டி, மிரிச்ஜவல, வத்துபிட்டிவல, ஹொரணை, மாவத்தகம, மீரிகம மற்றும் பொல்காவலை ஆகிய பிரதேசங்கள் ஏற்றுமதி திட்டமிடல் வலயங்களாக விரிவாக்கப்படுவதுடன், முல்லைதீவு, மாங்குளம், மன்னார், கப்பல்துறை, தம்புள்ள, மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிறப்பு சலுகைகளை வழங்கும் ஏற்றுமதி வலயங்களை நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ) இந்த பெருநகர் வலயங்கள் மற்றும் கைத்தொழில் நகரங்களை இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலை தொகுதி மற்றும் புகையிரதப் பாதை வலைப்பின்னல் சம்பந்தமான தகவல்கள் தேசிய பௌதீக திட்டத்தில் அடங்கியுள்ளன. 2005 ஜூலை 4ம் திகதி 36 நாடுகள் சேர்ந்து ஒப்பந்தமொன்றை நிறைவேற்றிக் கொண்டுள்ளன. தற்போது அமைக்கப்பட்டு வரும் கொட்டாவ - ஹம்பாந்தோட்டை அதிவேக நெடுஞ்சாலையை தவிர கொழும்பு - கட்டுநாயக அதிவேகப் பாதை, கொழும்புக்கு வெளி சுற்றுவட்டப் அதிவேகப் பாதை ஊடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையோடு இணைக்கப்படவிருக்கிறது. மேலும், கொழும்பு - கண்டி, கொழும்பு - இரத்தினபுரி ஊடாக ஹம்பாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை - அம்பாறை ஆகிய அதிவேகப்

பாதைகளும், கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், யாழ்ப்பாணம் அதிவேகப் பாதையும், புத்தளம் - மன்னார் அதிவேகப் பாதையும் அமைக்கப்படும். அதிவேக பாதைப் பின்னல் மன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஸ்கோடி வரை செல்லும் அதிவேகப் பாதைகள் ஊடாக ஆசிய அதிவேக நெடுஞ்சாலை பின்னலுடன் இணைக்கப்படும். புகையிரத பாதை தொகுதியை விஸ்தரிக்கவும், நாட்டுக்குள் உள்ளக விமானப் பயணத்திற்கு விமான நிலைய பின்னலை தாபிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தவிரவும், சீ ப்ளேன் - நீரில் தறையிறக்கப்படும் விமானம் - திட்டமொன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈ) இத்திட்டத்தில் ஒட்டுமொத்த கடற்கறை பிரதேசமும் சுனாமி ஆபத்து வலயமாக பெயரிடப்பட்டுள்ளதுடன், மலையகம் மண்சரிவு ஆபத்து வலயமாக பெயரிடப்பட்டுள்ளது. 21 கடற்கரை நகரங்களை நாட்டுக்குள் கொண்டு வருவதனாலும், சுனாமி ஆபத்து என்ற போர்வையில் மக்களை அகற்றுவதனாலும் விடுவிக்கப்படும் நிலம் சுற்றுலாத் துறைக்கு பயன்படுத்தப்படவிருக்கின்றது, முழு கடற்கரை பிரதேசமும் சுற்றுலா வலயமாக பெயரிடப்பட்டுள்ளது. "நகர அலங்கரிப்பு" என்ற பெயர் பலகையின் கீழ் தமது வாழ்விடங்களிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் வெளியேற்றப்படுகிறார்கள். எதிர்காலத்தில் "இடர் முகாமைத்துவம்" என பெயர் பலகை மாறலாம். தவிரவும், சிலாபத்திலிருந்து வடக்கு மற்றும் தெற்கும், அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி போன்ற வரலாற்று நகரங்களும், பிபிலை, நில்கல, போன்ற வன பாதுகாப்பு பகுதிகளும் சிறப்பு சுற்றுலா வலயங்களாக பெயரிடப்படவுள்ளது.

இ) இதன் மூலம் சமூக ரீதியிலான பாதிப்புகளும், கடுமையான சுற்றுச் சூழல் பாதிப்புகளும் உண்டாகும். அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுவதனாலும் தொலைத் தொடர்பு கேபிள்கள் போடப்படுவதானாலும் 39 வனாந்திரங்கள் இரண்டாக பிரிக்கப்படுகின்றன. சுற்றாடல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வனங்களான சிங்கராஜ வனம் மூன்று பகுதிகளாக பிரிகிறது. பிபிலை - நில்கல வனப் பாதுகாப்பு உட்பட பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குள் ஹோட்டல்கள் கட்டுவதாலும், பாதைகள் அமைப்பதாலும் சுற்றுச் சூழல்கள் அழிக்கப்படுகின்றன. ஆரம்ப காடுகளை அழிப்பதில் உலகில் நான்காவது இடத்தை வகிக்கும் இலங்கை, இத்திட்டம் நிறைவேறியதன் பின்னர் முதலாவது அல்லது இரண்டாவது இடத்திற்கு வந்துவிடும். திட்டத்தின்படி 2030 ஆகும்போது இன்றிருக்கும் காடுகள் 13 வீதத்திலிருந்து 10 வீதமாக குறைந்து விடும்.

16. இவ்வாறாக ஒடுக்கப்பட்ட வர்க்கம், சமூக கலாச்சாரம், இயற்கை சூழல் போன்றவற்றை நாசமாக்கிக் கொண்டுதான் நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டம் இலங்கையில் ஆரம்பமாகிறது. ஜேம்ஸ் பெட்ராஸ் போன்ற ஆய்வாளர்கள் நவ தாராளமய இரண்டாம் கட்டத்தை ”நவ தாராளமய மிலேச்சத்தனம்” என குறிப்பிடுகிறார்கள். இலங்கையை பொறுத்த வரையிலும் இதுதான் உண்மை என்பதை இந்த உதாரணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதுவரை நடைமுறையிலிருந்த, எதிர்காலத்தில் உருவாக்கப்படவிருக்கும் பொருளாதாரம் பற்றிய விமர்சனங்களை ஊழல், மோசடி, விரயம், உறவினர் உபசரிப்பு என முன்வைக்க முடியாது. ஏனெனில் அதன் அடிப்படையே பிரச்சினைதான். எனவே இன்றைய பொருளாதாரத்தின் அடிப்படை முரண்களை

பகுப்பாய்வு செய்வதன் மூலமாகவே தீர்வுக்கான வழியை கண்டறிய முடியும்.

## 3. தற்போதைய பொருளாதாரத்தில் உள்ள பிரச்சினைகள் எவை?

17. ஊழல், மோசடி, விரயம், உறவினர் உபசரிப்பு போன்றவையே தற்போதைய பொருளாதாரத்தை பற்றி முன்வைக்கப்படும் விமர்சனங்களாக உள்ளன. இவற்றுக்கு மத்தியில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல், தனிநபர் வருமானம் உயர்ந்து நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கையை உயர்த்துவது, வேலையற்றோர் குறைவது, வறுமை குறைவது போன்ற புள்ளி விபரங்களை ஆட்சியாளர்கள் முன்வைக்கின்றனர். இந்த புள்ளி விபரங்களை கொண்டு பொருளாதாரம் சம்பந்தமான சரியான சித்திரத்தை வடிவமைக்க முடியாது. நல்லாட்சியை கொண்டு வருவதன் மூலம் மாத்திரமே பொருளாதார நீதி கிடைக்கும் என்ற கருத்தை ஒருபுறம் வைத்தாலும், பொருளாதார வளர்ச்சியை பெறுவது கடினம். இலங்கையின் பொருளாதாரம் சம்பந்தமாக ஆட்சியாளர்களின் உபாயத்தில் கீழ் வரும் பண்புகளை காண முடியும்.

(அ) இலங்கையின் பொருளாதாரம் உற்பத்திக்கே அல்லாது நிதி சேவையை விரிவாக்கும் பொருளாதாரத்திற்கே முக்கியத்துவமளிக்கின்றது. இந்த நிலையில் கைத்தொழில் துறை, விவசாயத் துறை மற்றும் உற்பத்தியோடு தொடர்புடைய துறைகளின் வளர்ச்சியும் தடைபட்டுள்ளது. ஆகவே, தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட விவசாயத்திற்கும், அரிதான கைத்தொழில் துறைக்கும் பொருளாதாரம் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் குறைந்து வர்த்தக நிலுவை

உயர்ந்துள்ளது.

(ஆ) இலங்கையின் பொருளாதாரம் கட்டுக்கோப்பான அத்திவாரத்தின் மீது தங்கி இருக்கவில்லை. உதாரணமாக, இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 4.5 பில்லியன் டொலர் தைத்த ஆ டை ஏற்றுமதியின் மூலமும், 1.5 பில்லியன் தேயிலை ஏற்றுமதியின் மூலமும் கிடைக்கின்றது. தவிரவும், சுற்றுலாத் துறையின் மூலம் 1.7 பில்லியனும், வெளிநாடுகளில் உழைப்பை சிந்தும் இலங்கையர்களிடம் இருந்து 6.4 பில்லியனும் கிடைக்கிறது. வெளிநாட்டு செலவாணியை பெற்றுத்தரும் இந்த வழிகள் அனைத்தும் நிரந்தரமற்றவை. தேயிலை மற்றும் தைத்த ஆடைகள் அத்தியாவசியப் பொருட்களோடு சேர்க்கப்பட மாட்டாது. வேறு நாடுகளில் ஏற்படும் பொருளாதரா நெருக்கடியின்போது அல்லது இலங்கை மீதான அரசியல் பிரச்சினைகளின்போது அந்த வருமான வழிகள் மறைக்கப்படக் கூடும். இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் 24 வீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் 31 வீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே, ஏற்றுமதி வருமானத்தில் அரைவாசி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தே கிடைக்கிறது. கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின்போது மேற்படி நாடுகளே பெரிதும் பாதிக்கப்பட்டன. உல்லாசப் பிரயாணிகளிலும் பெரும்பாலானோர் ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஆசியாவிலிருந்தே வருகின்றனர். தேயிலை உற்பத்தியை எடுத்துக்

கொண்டால், இலங்கை உலக சந்தையில் கீழ் மட்டத்தில் உள்ளது. உதாரணமாக, 2012ல் இலங்கை 328.4 மில்லியன் கிலோகிராம் தேயிலையை உலக சந்தைக்கு அனுப்பும் அதே நேரம், சீனா 1789.8 மில்லியன் கி.கிராமும், இந்தியா 1126.3 மில்லியன் கி.கிராமும், கென்யா 369.6 மில்லியன் கி.கிராமும் அனுப்பியுள்ளன. 2012ல் 4624.6 மில்லியன் கி.கிராமாக இருந்த உலக தேயிலை சந்தையில் இலங்கை பங்கு 7.1%. இலங்கையின் பொருளாதாரம் விவசாயம் அல்லது

கைத்தொழில் உற்பத்திகள் மீது தங்கியிராத, வெளிநாடுகளுக்கு உழைப்பாளிகளை வழங்கும் பொருளாதாரமாக இருப்பதால், இது போன்ற எந்த வருமானமும் நிரந்தரமானதல்ல.

(இ) நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம் மற்றும் வரிக் கொள்கை உட்பட பொருளாதார வரம்புகள் நாட்டின் பெரும்பாலான மக்களை கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்படுவதில்லை. சிறு குழுவினரின் கண்ணோட்டத்திலேயே ஒட்டுமொத்த பொருளாதாரமும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இலங்கை உழைப்பு படையணியில் 84 லட்சம் பேர் உள்ளனர் அவர்களில் 15.1 வீதம் அரச ஊழியர்களும், 40.6% தனியார் துறையிலும், 32.2 வீதம் சுய தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். 9.1 வீதம் வீட்டுக்குள்ளேயே சம்பளமில்லாது வேலை செய்கின்றனர். அதன்படி, உழைப்பு படையணியில் 97 வீதம் ஊதியம் பெறும் தொழிலாளர்களாகவோ, ஒடுக்கப்பட்டவர்களாகவோ உள்ளனர். தொழில் வழங்குநர்கள் அல்லது

முதலாளிகள் 3.1 வீதம் மாத்திரமே உள்ளனர்.

எண்ணிக்கையில், 12 லட்சம் அரச துறையிலும், 33 லட்சம் தனியார் துறையிலும் பணியாற்றுவதோடு. 25 லட்சம் சுய தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். வேலை வழங்குனர்கள் அல்லது முதலாளிகளின் எண்ணிக்கை 231,087. தொழில் திணைக்களத்தில் வேலை வழங்குனர்களாக 75,543 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 100க்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் 3611 உள்ளன. 56,717 நிறுவனங்கள் 10க்கும் குறைந்த ஊழியர்களை கொண்ட சிறு நிறுவனங்களாகும். இதன்படி, இலங்கை முதலாளித்துவ வர்க்கம் மற்றும் சிறு முதலாளித்துவ மேல் தட்டு வர்க்கம் சனத் தொகையில் சிறு குழுவினராக இருப்பதுடன், பெரும்பாலானோர் ஒடுக்கப்பட்ட வர்க்க மக்கள் என்பது வெளிப்படை. ஆனால், இந்த சிறு குழுவினரின் அபிலாசைக்கு ஏற்புடையதாகவே பொருளாதாரம் திட்டமிடப்படுகிறது.

(ஈ) இலங்கையின் பொருளாதார வளர்ச்சி குறித்து வாய்ச் சவடால் விட்டாலும், கடுமையான சுரண்டலின் மூலமே அந்த வளர்ச்சி கிடைத்துள்ளது. உதாரணமாக, நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டு செலவாணியை பெற்றுத் தரும் வெளிநாட்டில் பணியாற்றும் ஊழியர்கள் விடயத்திலும், தைத்த ஆடை தொழித்துறை மற்றும் தேயிலை தொழித்துறை விடயத்திலும் சேவை நிபந்தனைகள் மோசமாக உள்ளன. 8 மணித்தியால வேலை நாள், தொழிற்சங்க உரிமை போன்ற ஆகக் குறைந்த உரிமைகள் கூட கிடையாது. தேயிலை தொழித்துறையில் ஈடுபட்டுள்ள

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள், சுகாதார வசதிகள், கல்விக்கான உரிமைகள் மட்டுமல்லாது

மாத சம்பளமும் கிடையாது. நாள் சம்பளம் மட்டுமே கிடைக்கிறது. வெளிநாட்டு தொழில் துறைகளிலும், ஆடை தொழித்துறைகளிலும் கூடுதலான பெண்கள் தொழில் செய்கிறார்கள். அவர்கள் பாலியல் இம்சைகளுக்கும் பல்வேறு சித்திரவதைகளுக்கும் ஆளாவதற்கான

வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. பொருளாதாரத்தின் எதிர்கால நம்பிக்கைகள் என ஆட்சியாளர்கள் முன்வைக்கும் திட்டங்கள், இந்த உழைப்பு சுரண்டலை மேலும் அதிகரித்து அதனூடாக மூலதனத்தை திரட்டும் நோக்கத்திலேயே முன்வைக்கப்படுகின்றன.

(எ) இலங்கையில் உழைக்கும் மக்களின் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது. அதனை ஒரு உதாரணத்தை கொண்டே அறிய முடியும். மத்திய வங்கி புள்ளி விபரங்களின்படி நான்கு பேரை கொண்ட ஒரு குடும்பத்தின் மாதாந்த செலவு ரூ. 52,134. என்றாலும் உழைக்கும் போதே வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது, சுமார் 80,00,000 உழைப்பு படையணியில் ரூ. 50,000க்கு மேல் வருமானம் பெறுவோர் 5,30,000. பேர் மாத்திரமே என்பது தெரிகிறது. அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த மாதச் சம்பளம் ரூ. 11,700. தனியார் துறை ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் ரூ. 6,700. எனவே, உழைக்கும் மக்கள் மிகக் கஷ்டத்துடனேயே வாழ்கிறார்கள். இலங்கை மக்களின் நுகர்வு மட்டம் உயர்ந்திருப்பதாக கருத்தொன்று நிலவினாலும், புள்ளி விபரங்களை ஆராயும்போது, அந்தளவு வசதிகள் இல்லாத

மக்கள் பெருமளவில் இருப்பது தெரிய வருகிறது. உதாரணமாக, இங்கு வாழும் குடும்பங்களில்

மூன்றில் ஒன்றுக்கு குளிர்சாதன பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம், தையல் மெசின், மின் விசறி, எரிவாயு

- மின்சார - மண்ணெண்ணெய் அடுப்பு போன்ற எதுவுமே இல்லை. எந்த வாகனமும் இல்லாத, சைக்கிளாவது இல்லாத குடும்பங்கள் 41.8 வீதம். வாகனம் பயன்படுத்துவோரில் 5.6 வீதம் பேர் மாத்திரமே கார் அல்லது வான் வைத்துள்ளார்கள். 28.5 வீதம் பேர் மோட்டார் சைக்கிளும், 6.5 வீதம் பேர் முச்சக்கர வண்டியும் வைத்துள்ளனர். நாட்டின் பெரும்பாலானோருக்கு அப்படியான வசதிகள் இல்லை என்பது இதன் மூலம் தெரிகிறது.

18) பொருளாதாரத்தின் பலன்கள் பிரிந்து செல்வதில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. குடிமக்களில் 20 வீதமானோர் தேசிய வருமானத்தில 53.5 வீதத்தை அனுபவிக்கின்றனர். ஆகக் குறைந்த வருமானம் பெறும் 20 வீதமானோருக்கு தேசிய வருமானத்தில் 4.4 வீதம் மாத்திரமே கிடைக்கிறது. 20 வீத வறியவர்களுக்கு வருமானத்தில் கிடைக்கும் பங்கு 1953ல் 5.1 வீதமாக இருந்தது. 60 வருடத்திற்குப் பின்னர் இது 4.4 வீதமாக சரிந்துள்ளது. ஆகவே, நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை ஒரு சிறு குழுவினர் விழுங்குகின்றனர். வருமான வரி செலுத்தக்கூடிய அளவில் வருமானம் பெறுவோர் சனத் தொகையில் 4 வீதம் மாத்திரமே என்பதும் அவதானிக்க வேண்டிய விடயமாகும்

.

## தேசிய வருமானத்தில் உரிய பங்கு

1* கூடுதல் வருமானம் பெறும் 20%

2* குறைந்த வருமானம் பெறும் 20%

| வருடம் | 1953 | 1963 | 1973 | 78 - 79 | 81-82 | 86-87 | 96-97 | 2003 -04 | 2006-07 | 2009-10 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1* | 56'7 | 55'2 | 45'9 | 54'1 | 56'8 | 56'8 | 53 | 54'7 | 54'7 | 54'1 | 53'5 |
| 2* | 5'1 | 3'9 | 5'0 | 3'8 | 3'7 | 3'6 | 4'1 | 3'8 | 4'6 | 4'5 | 4'4 |

19. தற்போதைய கடுமையான பொருளாதார முரண்களும், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் தொகை அதிகரிப்பும், சமூக பாதுகாப்பு சேவைகள் பறிக்கப்பட்டு அவை வர்த்தகப் பண்டங்களாக்கப்படுவதும் காரணமாக பிரச்சினைகள் மேலும் தீவிரமடைந்து சமூகத்தில் பல நெருக்கடிகள் உருவாக்கியுள்ளன. சமூகத்தில் அடித்தள மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாதிருப்பதுடன், தேவைகளை நிறைவேற்ற முடியாத சிலர் வாழ்க்கையை கைவிட வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். உதாரணத்திற்கு, அநேகமானோர் நிரந்தர தொழில் இல்லாமல் தவிப்பதோடு, மேலும் அநேகமானோர் நாளொன்றுக்கு அதிக நேரம் வேலை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பொதுவாக, வாரமொன்றுக்கு 40 மணி நேரம் வேலை செய்வது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்த போதிலும், உழைக்கும் மக்களில் 37.9 வீதமானோர் 40 - 49 மணி நேரம் உழைப்பதோடு, மேலும் 36.1 வீதமானோர் 50 மணித்தியலாளங்களுக்கு மேல் உழைக்கின்றனர். இது குறித்து கீழே அட்டவணை பார்க்கவும்.

| வேலை 1 | 0 | 1 - 9 | 10 - 19 | 20 - 29 | 30 - 39 | 40 - 49 | 50..... |
|---|---|---|---|---|---|---|---|
| வேலை 2 | 4,1% | 0,9% | 3,3% | 8,5% | 11,8% | 37,9% | 36,1% |

1 வேலை செய்யும் மணித்தியாளங்கள்

2 வேலை செய்வோர விகிதம்

இவ்வாறு அவர்களுக்கு ஓய்வு, பொழுதுபோக்கு,

மனித உறவுகள், சமூக உறவுகள் போன்ற அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக உழைப்பாளி மன உளைச்சலுக்கு ஆளாகிறார். தற்கொலை செய்வோர் அதிகமாக உள்ள நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காவது இடத்தை வகிக்கிறது. ஒவ்வொரு நான்கு முதியவர்களிலும் ஒருவர் தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டிய நிலையில் மன நோயாளியாக உள்ளார். அதிகரித்து வரும் குற்றச் செயல்களை பார்க்கும்போது அடித்தட்டு வர்க்கத்திற்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலின் தன்மை புரிகிறது.

20. நவ தாராளமய உபாயத்தின் செயற்பாடுகள் காரணமாக சுற்றுச் சூழல் பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன. இயற்கை சூழல் விற்பனைப் பண்டமாக்கப்படுள்ளமையால் மனித சமூகம் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உலக மட்டத்தில் வெப்பம் அதிகரித்தல், ஓசோன் படலம் அழிதல், கடுமையான சூழல் அழிவுகள், நிலம், நீர், கடல், வாயு மண்டலம் மாசடைதல் போன்றவை மூலம் இந்த அழிவுகள் வெளிப்படுகின்றன. இலங்கையில் குடிநீர் மாசடைதல் காரணமாக சிறுநீரக செயலிழப்பு நோயினால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ரத்துபஸ்வல, ஹங்வெல்ல, ஹபராதுவ மற்றும் கொபைகனே போன்ற பகுதிகளில் சமீபத்தில் நடந்த மக்கள் போராட்டங்களுக்கு காரணமாக இருந்ததும் இந்த அபிவிருத்தியினால் உருவான சூழல் மற்றும் சமூக நெருக்கடிகள் தான்.

21. இந்த நெருக்கடியின் முன்னால் தனி மனித வாழ்க்கையும், சமூகமும், சுற்றுச் சூழலும் நாசமாக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடி சமூக - பொருளாதார - கலாச்சார, அரசியல், மனோவியல் என்ற வகையில் பல்வேறு நெருக்கடிகளுக்கும் ஆட்பட்டுள்ளது. சமூகத்தில் பெரும் பகுதியினர்

அந்நியமாதலுக்கு (தனது உற்பத்திகளுக்கு, உற்பத்தி செயற்பாடுகளின் தீர்மானங்களுக்கு மாத்திரமல்ல தனது சரீரம் தொடர்பில் தீர்மானமெடுக்கும் உரிமையும் பறிக்கப்பட்டு, தானும், தனது உழைப்பும், சமூகமும் "அந்நிய"மாக்கப்பட்டுள்ள நிலைக்கு) பலியாகியுள்ளனர். மேலும் பலர் தமது அடிப்படை தேவைகளையேனும் நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த நெருக்கடி சமூக புரட்சியாக மாறுவதை தடுப்பதற்கு அடக்குமுறை, சித்தாந்த ஏமாற்று போன்ற ஆயுதங்களை ஆட்சியாளர்கள் கைக்கொள்கின்றனர். ஆட்சியாளர்களின் சித்தாந்தம் நுகர் பொருட்கள் விடயத்திலும், பண விடயத்திலும் நாட்டத்தை ஏற்படுத்தி, இனவாதம் - மதவாதம் - குலவாதம் (சாதியம்) தரபேதம் என போதையேற்றி வர்க்கத்தை பிளவுபடுத்தும் நிலைவரை வியாபிக்கச் செய்துள்ளது. தவிரவும், ஒவ்வொரு நபரையும் சமூக உறவுகளிலிருந்து பிரித்து தனிமைப்படுத்தும் திட்டம் தனித்துவம், தனி மனித சுதந்திரம் போன்ற முழக்கங்களுக்குள் மறைந்து செயற்பட்டு வருகிறது. தனித்துவ மற்றும் சுயநல அரசியல் செயற்பாடுகளிலிருந்து ஓரமாக்கப்பட்ட சமூகத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளும் துரிதமாக செயற்படுகின்றன. தற்போதைய நவ தாராளமய முதலாளித்துவ பொருளாதார மாதிரியை துடைத்தெறிந்து மக்கள் சார்பு மாற்றீடை நிலைநிறுத்துவதில் நாங்கள் சந்திக்கும் சவால்களாக இவை இருக்கின்றன.

## 4. பொருளாதாரத்திற்கான மாற்றீடு எது?

22. பொருளாதார நெருக்கடி காரணமாக பல துறைகள் சரிந்துள்ளதன் மூலம் தற்போதைய நவ தாராளமய முதலாளித்துவ பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கியிருப்பது தெரியவந்துள்ளது. நெருக்கடியை மறைக்க ஆட்சியாளர்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் சுரண்டலை மேலும்

உக்கிரமடையச் செய்து, சமூக சுற்றாடல் அழிவுகளை தீவிரப்படுத்துவதாகவே அமையும். நெருக்கடி இல்லை என காட்டுவதற்கு மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு மற்றும் தனி நபர் வருமானம் அதிகரிப்பு என்ற வாதங்களே ஆளும் தரப்பால் முன்வைக்கப்படுகிறது. மொத்த தேசிய உற்பத்தி 2000ல் ரூ.1,125,259 மில்லியனிலிருந்து 2013 ரூ.8,673,870 மில்லியன் வரை 670 விகிதத்தால அதிகரித்திருப்பதாகவும், அது 7.3 சதவீத வளர்ச்சி எனவும் அரசாங்க புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அந்த தரவுகளின்படி, 7.7 சதவீத வளர்ச்சியை கொண்ட சீனாவை தவிர ஆசியாவிலேயே அதிவேக வளர்ச்சி கொண்ட பொருளாதாரம் இலங்கையிலேயே உள்ளது. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் வடக்கு கிழக்கு விவசாய மற்றும் மீன் உற்பத்தி சேர்ந்தமையும் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சிக்கு காரணமாக உள்ளது. நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்தின் முதல்தர உபாயமாக இருப்பது செயற்கையாக பணத்தை செலுத்தி பொருளாதார வேகத்தை அதிகரிப்பதுதான். இதுவரை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் சீனா போன்ற நாடுகளின் வங்கிகளிலிருந்து வருடமொன்றிற்கு பாரிய தொகையை கடனாகப் பெற்றதனால் பொருளாதாரத்தில் மேலதிக பெறுமதி சேர்ந்திருக்கின்றது. அடிப்படை வசதிகளின் அளவுகடந்த மேல்கட்டமைப்பகளுக்காக (Over building infrastructure) அந்தப் பணம் செலவிடப்படுகிறது. இதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரிப்பது சம்பந்தமாக புள்ளி விபரங்களை காட்ட முடிந்தாலும், அது ஒரு மாயை மாத்திரமே. இந்த மதிப்பீட்டை அப்படியே வைத்திருப்பதற்காக அடிக்கடி பணம் உட்செலுத்தப்படுகிறது. உற்பத்தியின் மூலம் புதிய மதிப்புகளை சேர்ப்பதில்லை. எனவே, பணம் உட்செலுத்தப்படுவது குறையும் பட்சத்தில் இந்த புள்ளி விவரம் சரிந்துவிடும்.

பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரிக்கப்படுவது குறித்த பிரச்சாரங்கள் தேர்தல் பரப்புரைகளுக்கு பொருந்தினாலும், பொருளாதார ரீதியில் எந்த முக்கியத்துவமும் கிடையாது. தனி நபர் வருமானமும் இப்படித்தான். நாட்டின் மொத்த வருமானத்தை சனத்தொகையியால் வகுப்பதன் மூலம் தனி நபர் வருமானம் கணக்கிடப்படுகிறது. ஆனால், தற்போது உக்கிரமடைந்துள்ள சமத்துவமின்மையால் அதனை அடிப்படியாக வைத்து எந்த கருத்தையும் எடுக்க முடியாது. 1948ல் இலங்கையில் தனிநபர் வருமானம் 120 அமெரிக்க டொலர். 50 வருடங்களுக்கு பின்னர் 1998ல் 814 டொலரால் மட்டுமே அதிகரித்தது. ஆனால், அரசாங்கம் சொல்வதை போன்று இதுவரை (2013 ஆகும்போது) 3280 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. அதோடு, 2016 ஆகும்போது அது 4000 டொலர் இலக்கை அடைந்துவிடும். இதன்படி பார்த்தால், ஏனைய நாடுகளான இந்தியா (1500 டொலர்), பங்களா தேசம் (900 டொலர்), நேபாளம் (700 டொலர்) ஆகிய நாடுகளையும் தாண்டியிருப்பதுடன், தென்கிழக்காசிய நாடுகளான வியடநாம் (1900 டொலர்), பிலிப்பைன் (2800 டொலர்) ஆகிய நாடுகளையும் தாண்டி, ஆசிய வேங்கைகள் என பிரபலமான இந்தோநேசியா (3600 டொலர்), தாய்லாந்து (5700 டொலர்) ஆகிய நாடுகளை இலங்கை நெருங்கியுள்ளது. ஆனால், நாட்டின் பெரிய செல்வந்தர்கள் 20 வீதம் பேர், தேசிய வருமானத்தில் அரைவாசிக்கும் மேல் 54 சத வீதத்தை அனுபவிக்கும் நிலையில், ஏனைய அனைவரும் சொச்சத்தையே அனுபவிக்கும் நாட்டில், சனத்தொகையில் 8.9 வீதம் வறுமை கோட்டுக்கும் கீழ் வாழும் நாட்டில்தான் இந்த மதிப்பீடு வெளியிடப்படுகிறது. எனவே, பொருளாதார சமத்துவமின்மையை ஒழிப்பதன் வாயிலாகவே பலமான பொருளாதார மாற்றீடுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும்.

23. பொருளாத மாற்றீடு சம்பந்தமான விடயத்தில் மோசடி, ஊழல்,

உறவினர் உபசரிப்பு போன்றவற்றை ஒழிப்பது சம்பந்தமான கருத்தையே முன்வைக்கிறது. ஊழலும் மோசடியும் இலங்கையின் முதலாளித்துவ பிற்போக்குத்தனத்துடன் கைகோர்த்துள்ள பிரச்சினையாகும். ஊழல், மோசடி சம்பந்தமான குற்றச்சாட்டுகள் பெரும்பாலும் அதிகாரிகள் மீதும், அரசியல்வாதிகள் மீதும் வைக்கப்படுகின்றன. அரச அதிகார மற்றும் அரசியல் கட்டமைப்பை நோக்கும்போது, சமூகத்தின் அடித்தள மக்களிலிருந்தே அவை பெரும்பாலும் நிரப்பப்படுகின்றன. அநேகமாக, ஊழல் மோசடிகள் ஊடாகவே இவர்கள் வர்க்க ரீதியில் ஒருபடி மேலே உயர்த்தப்படுகின்றனர். அடித்தட்டு நடுத்தர மக்கள் கடுமையான பொருளாதார அழுத்தத்தில் சிக்கியிருப்பதுடன், அரச கட்டமைப்பு நிர்மாணிக்கப்பட்டதன் பின்பு ஊழல், மோசடிகளின் ஊடாகவே தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றனர். இலங்கை அரசியல் கலாச்சாரத்திற்கு ஊழலும் மோசடியும் சர்வ சாதாரணமாக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஊழல் மோசடி சம்பந்தமான பிரச்சினை பொருளாதார முரண்களுடன் பிணைந்துள்ள பிரச்சினை என்பதோடு, ஆணைக் குழுக்களை நியமிப்பதன் மூலம் அவற்றுக்கு தீர்வுகாண முடியாது. பிற்போக்கான நாட்டில் நவ தாராளமயம் செயற்படும்போது தோன்றும் இந்த நிலையை மாற்றுவது பொருளாதார தேகத்தில் ஏற்படும் பாரிய மாற்றங்களுடன் பிணைந்துள்ளது.

24. பொருளாதாரம் சம்பந்தமாக முதலாளித்தவ சிறு முதலாளித்துவ சக்திகள் முன்வைக்கும் கருத்தானது. உற்பத்தி தொடர்ந்து வளர்ச்சியடைய "தேசிய உற்பத்தியை உயர்த்துவோம் - அப்போது சமூகத்தின் அடித்தட்டுக்கும் அதன் ஒரு பகுதி கசியும்". அவர்கள் இப்படியான வாதத்தையே முன்வைக்கிறார்கள். ஆனால், "செல்வந்தர்களின் சாப்பாட்டு பீங்கானை மேலும் மேலும் நிரப்புங்கள் அப்போது தான் உங்களுக்கு கிடைக்கும் எச்சில் சாப்பாடு கூடுதலாக

இருக்கும்" என்ற வாதத்தை அதற்கு பதிலாக முன்வைக்க முடியும். ஆனால் கடந்த காலங்களில் அப்டியான கசிவுகள் அடித்தட்டுக்கு கிடைத்ததாக இல்லை. ஆகவே இந்த வாதம் கூட எடுபடாது. உண்மையிலேயே, அடித்தட்டுக்கு கிடைக்கும் பங்கு பறிக்கப்பட்டுள்ளது. 1973ல் இருந்து 2013 வரையில் 40 வருட காலத்தை எடுத்துக் கொண்டால் மிகப்பெரிய செல்வந்தர்களான 20 வீதம் பேர் தேசிய உற்பத்தியில் 45.9 வீதத்திலிருந்து 53.5 வீதம் வரை அபகரித்துக் கொள்கிறார்கள். அதேநேரம், வறுமை கோட்டுக்கும் கீழுள்ள 20 வீதம் பேருக்கு கிடைப்பது தேசிய உற்பத்தியில் 5 வீதத்திலிருந்து 4.4 வீதம் வரை மாத்திரமே. உண்மையிலேயே நடப்பது, மேல் தட்டால் பறிக்கப்பட்டு மூலதனம் ஒருமுகப்படுவதுதான். அடித்தட்டு மக்களின் வாழ்க்கை நிலை உயர்வதாக காட்ட வீடுகளில் இலத்திரனியல் உபகரணங்கள் அதிகமாக பாவிக்கப்படுவது சம்பந்தமாக புள்ளி விபரங்கள் முன்வைக்கப்பட்டாலும், அது முதலாளியத்தின் இருப்புக்கு தேவையான கருவிகளாக இருக்கின்றன. உதாரணமாக தொலைக்காட்சி பாவிக்கும் குடும்பங்கள் 80 வீதமாகவும், வானொலி பெட்டிகள் பாவிக்கும் குடும்பங்கள் 75.4 வீதமும் உள்ளன. பாரிய ஏகபோக நிறுவனங்களுக்கு இலாபம் சம்பாதித்து கொடுக்கும் வழியான கையடக்க தொலைபேசிகள் சனத் தொகைக்கு சமமாக உள்ளன. ஆனால் வீடுகளில் 8.3 வீத வீடுகளின் சுவர்கள் உடைந்து விழும் நிலையில உள்ளன. 11.3 வீத வீட்டு மனைகள் உறுதியற்று காணப்படுகின்றன. 14 வீத கூரைகள் சிறிது காற்றடித்தாலே பறந்துவிடும். 12.3 வீத வீடுகளுக்கு சுத்தமான குடிநீர் வசதிகள் இல்லை. 10.5 வீத வீடுகளுககு கழிப்பறைகள் கிடையாது. பொது கழிப்பிட வசதியோ, வேறு எந்த கழிப்பிட வசதியோ இல்லாத வீடுகள் 2.5 வீதம். ஒரு மனிதனுக்கு நாளொன்றுக்கு தேவையான கலோரி (உணவினால் உடலுக்கு கிடைக்கும் சக்தி) 2006ல்

2118ல் இருந்து 2010ல் 2094 வரை சரிந்துள்ளது. வறிய மக்களின் கலோரி நுகர்வு 2006ல் 1606ல் இருந்து 2010ல் 1472 வரை சரிந்துள்ளது. அபிவிருத்தி என்ற பெயரில். மூலதன திரட்சிக்குத் தேவையான பாதைகள் அகலமாயிருக்கின்றன. வாழ்க்கை நிலையில் எந்த வளர்ச்சியும் கிடையாது.

## நீதியான பொருளாதாரம்

26.தற்போதைய பொருளாதாரத்தில் நிலவும் பாரதூர பிரச்சினையான பொருளாதாரத்தின் பலன் பிரிந்து செல்வதில் காணப்படும் சமத்துவமின்மையை மற்றும் அநீதியை நீக்க வேண்டும். இன்றைய பொருளாதாரத்தின் முக்கிய அம்சம்தான் பொருளாதாரத்தின் நன்மைகள் உற்பத்தியில் பங்கேற்கும் பெரும்பாலான உழைக்கும் மக்களுக்கு கொடுபடாமல் வரப்பிரசாதம் பெற்ற சிறு குழுவினரால் பகற்கொள்ளையடிக்கின்றமை. உழைக்கும் மக்கள் மீதான சுரண்டல் அதிகரிக்கும் அளவுக்கு முரண்களும் அதிகரிக்கப்படுகின்றன. வாழ்க்கை தரமும் கீழிறங்குகிறது. பொருளாதார முரண்களை ஒரு பாஷனாக (Fashion) வைத்திருந்து காலந்தள்ள முயல்கின்றனர். பொருளாதாரத்தின் நன்மைகள் நீதியாகவும் சமத்துவத்தின் அடிப்படையிலும் பிரித்தால் மாத்திரமே பொருளாதார முரண்களை நீக்க முடியும். ”ஓடாவியின் வீட்டில் நாற்காலி இல்லை” என்ற நிலையை மாற்றி உற்பத்தியின் பலனை உற்பத்தியாளனுக்கே ஒப்படைப்பதுதான் எமது பொருளாதார திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஒரே துறையில் நிலவும் சம்பள முரண்பாட்டை ஒழிப்பதே முதற்கட்ட பணியாகும். எவ்விதத்திலும் ஏற்க முடியாத தற்போதைய சம்பளத்தை பல மடங்காக உயர்த்துவது உழைக்கும் வர்க்கத்தின் அடிமட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஏதுவாக இருக்கும். தொழில்களில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை முறையாக குறைத்து பயிற்றப்பட்ட - பயிற்றப்படாத உழைப்பின்

அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும் பொருளாதார கொள்கையை நோக்கி பயணிக்க வேண்டியுள்ளது. சாதாரண சேவைக்கு 08 மணித்தியால வேலை நாள், உடல் உழைப்பை அதிகமாக சிந்தும் தொழில்கள் விடயத்தில் 06 மணித்தியால வேலை நாள், உடல் மற்றும் மனநலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கு 4 மணித்தியால வேலை நாள் உறுதி செய்யப்பட வேண்டும். விவசாய மற்றும் மீன்பிடித்துறை, சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளர்களின் வருமானத்தை உயர்த்துவதற்கு உற்பத்திக்கு நியாய விலை, திடீர் விபத்துக்களின்போது சமூக பாதுகாப்பு, சமூக நலன்புரி திட்டங்கள், தொழிலுக்கு தேவையான உபகரணங்களின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் போன்ற திட்டங்களை செயற்படுத்த வேண்டும். அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான வரியை ரத்துச் செய்தல், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற சேவைகளை வியாபாரப் பொருட்களாக்குவதற்கு பதிலாக இலாப நோக்கத்தில் அல்லாது தமது தேவையின் அடிப்படையில் சமூக பாதுகாப்பு சேவைகளாக்குதல் போன்ற செயற்பாட்டின் ஊடாக முரண்களை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

## மக்கள் பங்கேற்பு பொருளாதாரம்

27. தற்போதைய பொருளாதாரத்தில் தீர்மானங்கள் எடுக்கும் செயற்பாட்டிலிருந்து உழைக்கும் மக்கள் நீக்கப்பட்டிருக்கின்றனர். உற்பத்தியாளன் உற்பத்தியிலிருந்தும், உற்பத்தி ஊடகங்களின் உரிமையிலிருந்தும். உற்பத்தி செயற்பாட்டின் அதிகாரத்திலிருந்தும் நீக்கப்பட்டிருக்கிறான். உற்பத்தியில் தீர்மானிக்கும் மற்றும் கட்டுப்படுத்தலும் உழைக்கும் மக்கள் கைக்கு வந்தால் மாத்திரமே மக்கள் பங்களிப்பு பொருளாதாரத்தை கொண்டுவர முடியும்.

நாட்டில் செயற்படும் பாரிய கைத்தொழில்கள், பெரிய கம்பனிகள், பாரிய திட்டங்கள், மேலத்தேய தொழில் போன்ற உற்பத்தி ஊடகங்களை சமூகமயமாக்குவதே அவ்வாறான பொருளாதரத்தின் முக்கிய பண்பாகும். தனியுடமையின் அடிப்படையில் சில செல்வந்தர்களின் சட்டைப் பையை நிரப்பும் ஊற்றாக மாறியிருக்கும் பொளாதாரத்தை அதன் உண்மையான உரிமையாளர்களான உழைக்கும் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் (உலகத்திலேயே மிகப்பெரிய 85 பணக்காரர்களின் வருமானம் உலக மக்கள் தொகையில் அரைவாசிப் பேரின் வருமானத்திற்கு சமமாகும்) அதன்போது முறையாக பொதுவுடமை முறையை இணைக்க வேண்டியதுடன், இக்காலத்தில் அரச உடமைகளை பரவலாக்குவதன் ஊடாக அரச தலையீடுகளும் இடம்பெறும். இது தற்போதைய அரச முயற்சிகளை தனியார் மயப்படுத்தும் நவ தாராளமய முதலாளித்துவ உபாயத்திலிருந்து வேறுபடுவதுடன், அனைத்து உற்பத்தி ஊடகங்களும் அரசமயம் என்ற பெயரில் அரசியல் அதிகாரிகள் சிலரிடம் ஒப்படைக்கும் அரச ஏகபோக முதலாளித்துவத்திற்கு மாற்றமானதாகும். அதன் இலக்கானது, தரத்தை தீர்மானிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் உரிமை உழைக்கும் மக்களிடம் ஒப்படைப்பதன் மூலம் உற்பத்திற்கும் உற்பத்தியாளனுக்கும் மத்தியில் உறவுகள் உறுதி செய்யப்படும்.

## உற்பத்தி பொருளாதாரம்

28. பொருளாதார முரண்களையும், சுரண்டலையும் ஒழிப்பதாயின் முதலில் ”பற்றாக் குறையை” ஒழிக்க வேண்டும். அதற்கு உற்பத்தியில் பாரிய அளவில் தரமான வளர்ச்சி தேவைப்படுகிறது. அதற்காக நிதி சேவைகள் சார்ந்த துறைகளை மட்டும் நீடிக்கச் செய்யும் தற்போதைய நவ தாராளமய உபாயங்களிலிருந்து வேறுபட்ட, உற்பத்தியை

முதன்மையாகக் கொண்ட பொருளாதார திட்டமொன்று தேவை. சுதந்திர போட்டியின்போது முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்திற்கு மாறும்போது ஏற்பட்ட முதலாவது மாற்றமானது, நிதி மூலதனம் நிலைபெற்றதும், உலக அரசியல் ஏகாதிபத்தியத்தை கைப்பற்றிக் கொண்டதுமாகும். மூலதனம் என்பது ஏகாதிபத்திய யுகத்தின், நவ தாராளமய முதலாளித்துவத்தின் இன அடையாளமாகும். உற்பத்தித் துறைக்குள் நுழைந்து உபரி மதிப்பை பெற்றுக் கொள்வதன் ஊடாக மூலதனம் நீடிக்கிறது. இது மூலதனத்தின் முக்கிய பண்பு கைத்தொழில் மூலதனத்திற்கு நேரடியாக நுழைவதுடன். வணிக மூலதனத்திற்கும் வங்கி மூலதனத்திற்கும் மறைமுகமாக நுழைவதும்தான். என்றாலும் நிதி மூலதனம், உபரி மதிப்பிற்கு நேரடியாகவும், அதனால் நிர்மாணிக்கப்படாத துறைகளுக்கும் வியாபிக்கிறது. அது, உபரி மதிப்பை நிர்மாணிக்கும் கடமையில் மறைமுகமாக சம்பந்தப்படுகிறது. பொருளாதாரத்தின் உற்பத்திசார் உழைப்பு துறைக்கும், உற்பத்தியல்லாத உழைப்புத் துறைக்கும் மத்தியில் சமநிலை இருக்க வேண்டும். நவ தாராளமய உபாயத்திற்குள் இந்த சமநிலை சிதைவதுடன், நிதி மூலதனத்தில் பெரும் பகுதி ஊகிக்கக் கூடிய துறைகளில் ஈடுபத்தப்பட்டு, மீண்டும் பொருளாதாரத்திற்கான உற்பத்தியல்லாத துறைகளுக்கு விஸ்தரிக்கப்படுகிறது. அதனை மாக்ஸ் தேங்கும் மூலதனம் அல்லது மதிப்பை பெற்றுத் தராத மூலதனம் என குறிப்பிடுகிறார். ஆரம்பக் கட்டத்தில் இந்த நீர்க்குமிழி பொருளாதாரம் தற்காலிக வளர்ச்சி மாயை காட்டினாலும், 2008 பொருளாதார நெருக்கடியினால் அதன் நிலையற்ற தன்மையை வெளிக்காட்டியது. ஆகவே நீர்குமிழி பொருளாதாரத்திற்கு மாற்றாக உற்பத்திக்கு முக்கியமளிக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். அது நாடு என்ற வகையில் உணவு பாதுகாப்பும், எரிபொருள் தன்னாதிக்கம் என்ற

ரீதியில் ஏகாதிபத்திய பார்வையிலிருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கான நிலையை உருவாக்கும். அதன் படி நாங்கள் முன்வைக்கும் மாற்றீடு, ஏகாதிபத்திய நிதி மூலதனத்தை கெஞ்சி அதன் எச்சிலால் அபிவிருத்தி அடைந்து ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் கடன் மீது தங்கி நிற்கும் பொருளாதார உபாயத்திற்கானதல்ல. முற்றாக பரஸ்பர உற்பத்தியை விருத்தி செய்வதன் ஊடாக சமூகத் தேவைகளை நிறைவேற்ற முக்கியத்துவமளிக்கும் பொருளாதாரத்திற்காகத்தான்.

## திட்டமிட்ட பொருளாதாரம்

முதலாளித்துவ உற்பத்தியின் நடவடிக்கை இயந்திரமானது மூலதனத்தை திரட்டுவதற்கான போட்டியாகும். உற்பத்தியின் நோக்கம் முதலாளிக்கு இலாபத்தை குவிப்பதேயன்றி, சமூக தேவைகளை நிறைவேற்றுவதல்ல. ஒவ்வொரு முதலாளியும் இலாபத்தை அதிகரித்துக் கொள்ள முயற்சிப்பதோடு, ”அதிக இலாபம், துரித இலாபம், இலகுவில் இலாபம்” என்பதே முழக்கமாக கொண்டுள்ளனர். முதலாளித்துவத்தின் பிரதான காரணியானது மூலதனத்தை எப்போதுமே மீளுற்பத்தி செயற்பாட்டில வைத்திருப்பதுதான். அதற்காக ஒவ்வொரு முதலாளியும் சந்தையின் பெரும் பகுதியை தம்மிடம் வைத்திருக்க வேண்டியதுடன். அதிகமாக உற்பத்தி செய்து அதிகமாக விற்க வேண்டும். தடையின்றி செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதாயின் உழைக்கும் மக்களிடமிருந்து அதிகமதிகமாக பறித்துக் கொள்ள வேண்டும். உழைக்கும் மக்களிடத்தில் பொருட்களை விலைக்கு வாங்குவதற்காக வாங்கும் சக்தியை அதிகரிக்க செய்ய வேண்டும். இது ஒன்றுக்கொன்று முரணாகும். அதே போன்று, இலாபத்தை உறுதி செய்வதற்காக உற்பத்தி ஊடகங்கள் உற்பத்தி மற்றும் நுகர் பொருள் உற்பத்திக்குமிடையில் நிலையான மூலதனம் மற்றும் மாறும் மூலதனத்திற்குமிடையில் சம நிலையை

பேணிக் கொள்ள வேண்டும். ஆனால், தனித்தனி முதலாளிகள், தனிப்பட்ட முறையில் தமக்கான இலாபத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்துடனேயே செயற்படுகின்றனர். அதற்காக அவர்களிடத்தில் போட்டியும் நிலவுகிறது. இந்த போட்டியினால் அநீதி இழைக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் இலாபத்தை பெறுவதற்கான முதலாளித்துவ போட்டியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறையற்றது. குழப்பமானது. உற்பத்தியின் பல்வேறு துறைகளுக்கிடையில் இருக்க வேண்டிய சமநிலையை சிதைப்பதன் மூலம் அது வளர்ச்சியடைகிறது. இது உற்பத்தி அராஜகத்தை தோற்றுவிக்கின்றது. உலக பொருளாதாரம் அடிக்கடி வீழ்ச்சியடைவதற்கும், ஒவ்வொரு வீழ்ச்சியும் முன்னைய நெருக்கடியை விட ஆழமாகவும், நிலைக்கக் கூடியதுமான நெருக்கடிகளாக மாறுவதற்கும் காரணம் முதலாளித்துவத்தின் இன அடையாளமான போட்டியும் தோல்வியுமாகும். நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக திட்டமிட்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்பி, அநீதியை கட்டுப்படுத்த வேண்டும். இப்படி திட்டமிடல் என்பது எல்லாம் வல்ல நிறுவனத்தினால் அனைத்தையும் கட்டுப்படுத்துவதல்ல. நெருக்கடியை தவிர்க்கும் விதத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிடலாகும். அது உற்பத்திக்கான வழிகாட்டியாகும். உழைக்கும் மக்களின் பங்களிப்போடு நிர்மாணிக்கப்படும் திட்டமாக இருப்பதுடன் அது மையப்படுத்திய நிலையிலேயே செயற்படுத்தப்படும். அப்போது, அடுத்தவரை விட அதிக இலாபம் பெறும் போட்டியாக அல்லாமல், உற்பத்தியின் அளவும் தரமும் உயர்த்தப்படுவதற்கான போட்டியே நிலவும். அது முதலாளித்துவ போட்டியை போன்று அநீதியை பெற்றுத் தராதது மாத்திரமல்ல, அநீதியையும் தடுக்கும். பொருளாதார திட்டமிடல் சார்ந்த எமது கொள்கை ஜனநாயக மத்தியப்படுத்தலாகும்.

## சமூக நலன்சார் பொருளாதாரம்

30. தற்போதைய இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திற்கு பதிலாக சமூக நலன்சார் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும். முதலாளித்துவ முறையில் உற்பத்திற்கான வலிமையும் இலக்கும் நிர்ணயிக்கப்படுவது சமூகத் தேவைக்காக அல்ல. இலாப நோக்கத்திற்காகத் தான். பொருள் உற்பத்தியின்போது இலக்காக கொள்வது சமூகத்தையல்ல, சந்தையை. முதலாளித்துவ உற்பத்தி மற்றும் விநியோக நுகர்வுச் செயற்பாட்டிற்குள் மனிதர்கள் காணமாலாவதோடு, புலப்படுவது சந்தை மாத்திரமே. எனவே, அதனூடாக நுகர்வாளர்களின் சரீர சுகத்திற்கு, மனநிலைக்கு, சமூக கலாச்சாரத்திற்கு அல்லது சுற்றாடலுக்கு ஏற்படும் அழிவுகள் குறித்து எவருக்கும் அக்கறையில்லாத நிலை உருவாகும். தேவைக்காக அல்லாது இலாப நோக்கத்திற்காகவே உற்பத்திகள் செய்யப்படும். அவற்றை விற்றுத் தள்ளுவதற்கு தேவைகள் செயற்கையாக உருவாக்கப்படும். பொருளாதாரத்தின் இந்த நிலையை மாற்றி, சமூகத்தின் தேவைக்காக என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும். சமூகத்திற்காகவே உற்பத்திகள் இருக்க வேண்டும். இலாபத்தை கருதி அவ்வாறான தேவைகள் நிர்மாணிக்கப்படுவது தடுக்கப்படும். கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகள் முதலாளிகளின் இலாபத்திற்காக என்ற நிலையை மாற்றி, சமூக பாதுகாப்பு சேவைகளாக அவை மாற்றப்படும்.

## நிலையான அபிவிருத்தி

31. உற்பத்திச் செயற்பாட்டின் போது மனிதனால் சூழல் மாற்றமடைந்தாலும், சூழலுக்கும் மனித சமூகத்திற்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. இலாபத்தை மட்டுமே குறியாகக் கொண்ட பொருளாதாரம் சுற்றுச் சூழலுக்கு பாரிய

அழிவை உண்டாக்கியுள்ளது. தொடர்ந்தும் அழித்து வருகிறது. முதலாளித்துவ வளர்ச்சியை மிகப்பெரிய வெற்றியாக தூக்கிப் பிடித்தாலும், காலம் கடந்தாவது அந்த வெற்றி போலியானது என்பதையும், சுற்றுச் சூழலுக்கு ஏற்படுத்திய அழிவுக்காக இயற்கை பல மடங்கு நஷ்டத்தை பெற்றிருப்பதையும் கண்கூடாக காண முடியும். சூழல் மாசடைந்ததன் காரணமாக மனித உயிர்களை பலியெடுக்கும் சமூக துயரங்களை நிர்மாணிக்கும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. அதற்கு எதிரான மாற்றுப் பொருளாதாரம் சூழல் சார்புக் கொள்கையின் அடிப்படையிலேயே நிர்மாணிக்கப்படல் வேண்டும். அதிநுகர்வுவாத பேராசைக்கு பதிலாக எதிர்கால தலைமுறையிடம் இயற்கைச் செல்வங்களை ஒப்படைக்கும் பொறுப்புடனான பொருளாதாரத் திட்டத்தை நிர்மாணிப்பதன் ஊடாக அதற்கு தீர்வுதேட முடியும்.

32. தற்போதைய நவ தாராளமய முதலாளித்துவ பொருளாதாரம் நிலைத்திருப்பதோடு, ஊழல் மோசடிகளை ஒழித்தல், முதலாளிகளுக்கு சுரண்டித் தின்னும் வாய்ப்புக்காக சம சந்தர்ப்பங்களை உறுதி செய்தல், வினைத்திறனை மேம்படுத்தல், விரயத்தை குறைத்தல் போன்ற மேல் பூச்சு திட்டங்களை வகுப்பதற்கு பதிலாக, தற்போதைய பொருளாதார கொள்கையின் அடிப்படைகளுக்கு முற்றாக மாற்றமான கொள்கையின் அடிப்படையில் பொருளாதாரத்தை நிர்மணிக்க வேண்டும். எனவே, பகற்கொள்ளையடிக்கும் தற்போதைய பொருளாதாரத்திற்கு சமமான ஒன்றை நிர்மாணிபதற்கல்ல, அதற்கு மாற்றீடை நிர்மாணிப்பதற்கே நாங்கள் தோற்றி நிற்கின்றோம். அது உற்பத்தியின் பலனை நீதியாக பகிர்ந்தளித்தல், தீர்மானிக்கும் செயற்பாட்டில் உழைக்கு மக்களையும் பங்கேற்கச் செய்தல், நிதி சேவைகளுக்கு பதிலாக உற்பத்தித் துறையின் வளர்ச்சியை இலக்காக கொள்ளுதல், ஏகாதிபத்திய பார்வையிலிருந்து

பொருளாதாரத்தை விடுவித்தல், இலாபத்திற்கு பதிலாக சமூக தேவைகளுக்கு முன்னிலையளித்தல், சூழல் விடயத்தில் பொறுப்பேற்றல் போன்றவற்றை உள்ளடக்கிய மாற்றுப் பொருளாதாரமாகும். தற்போதைய பொருளாதார உபாயத்தினால் உலக பொருளாதாரம், சமூக, சுற்றாடல் நெருக்கடிக்குள் இழுத்து வீசப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், பண்பாட்டு நெருக்கடி வரை அது வளர்ந்துள்ளது. எனவே மாற்றீடொன்றை நிர்மாணிப்பதும் அதனை வெற்றி பெறச் செய்வதும் மனித சமூகத்தினதும், சுற்றுச் சூழலினதும் நிலைத்தலுக்கு அத்தியாவசிய காரணியாக உள்ளது.

# 4

# இலங்கையின் தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கான வழி

## I. இலங்கை இனம் நிர்மாணிக்கப்படாமை

(1) தேசிய பிரச்சினை என்பது "இனங்களின் விடுதலை மற்றும் சுதந்திர அபிவிருத்தியின்அடிப்படைப் பிரச்சினையாகும்" மனித சமூகத்தின் வரலாற்றை ஆராயும் போது, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கு சமாந்தரமாக இனங்களும் தோன்றியதாக தெரிகிறது. எனவே, வரலாற்றில் இனத்தை உருவாக்குவது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைச் சார்ந்ததாகும். ஆனால், முதலாளித்துவம் உலகம் பூராவும் ஒரே சமயத்தில் தோன்றவில்லை. நாட்டில் முதலாளித்துவம் தோன்றி வளர்ச்சியடைவதிலும், உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு காலகட்டங்களில் முதலாளித்துவம் உருவாவதிலும் வியாபிப்பதிலும் அதன் பெருக்கத்திலும் சமமாக இருந்ததில்லை. ஆகவே முதலாளியத்தின் பிறப்பும் அதன் பல்வேறு வரலாற்று மற்றும் புறநிலை காரணிகளுக்கும் ஏற்ப, சில விஷேட நாடுகளில், பொதுவில், இலங்கை போன்ற

பிற்போக்கான முதலாளித்துவ அபிவிருத்தியை கொண்ட நாடுகளில் முதலாளித்துவ வர்க்கம் தோன்றுவதற்கு தடைகள் இருந்தன. அதாவது பல்வேறு தேசிய இனங்கள், தேசிய ஒடுக்குமுறையினாலோ தேசிய சமத்துவமின்மையாலோ அல்லது இனவாதத்தின் வற்புறுத்தலினாலோ இன்றி, ஒவ்வொரு கலாச்சாரங்களுடன் ஜனநாயக ரீதியில் ஊடாடி மிகச்சிறந்த கலாச்சார அம்சங்களைபரஸ்பரம் உள்ளீர்த்து தனியொரு தேசிய பொருளாதாரத்திற்குள் சங்கமித்து, நாடு என்ற வகையில் ஒருமித்து சிந்திக்கும் மக்களாக இருக்கவில்லை. இலங்கையின் அனுபவங்களுக்கேற்ப புரிந்து கொள்வதாயின், பொருளாதார மையப்படுத்தலின் அடிப்படையில், சமூக- அறிவியல்நன்மைக்காக முதலாளித்துவ இனம் உருவாகவில்லை. அதனால் இலங்கையைப் பற்றிய பொது சிந்தனையின் பக்கம் திரும்பாததுடன், அதன் வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலைகள் கிடைக்காதமையால் நிலைமையை புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே,இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டாலும், இது, இலங்கையின் தேசியப் பிரச்சினை தொடர்பில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக எஞ்சியுள்ளது.

(2). இனம் என்பது முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு இசைவான மனித சமூகத்தின் வரலாற்று முறையாக இருப்பதுடன், முதலாளித்துவ சமூக பொருளாதார கட்டமைப்புடன் முன்னேறி முதலாளித்துவத்திற்குள் மனித சமூகம் ஒருங்கிணைந்து பரவலாக தோற்றி நிற்கிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையில் பல்வேறு இனக் குழுமங்கள் (தேசிய இனக்குழுமங்கள்) மத்தியிலான பிளவுகளை ஒழித்து, நாட்டில் பல்வேறு பிரதேசங்களுக்கிடையில் பொருளாதார பிணைப்புகளை ஒன்றிணைத்து, பிரதேச சந்தைகளை தேசிய சந்தைக்குள் ஐக்கியப்படுத்தி அதன் மூலம் நாட்டினதும் சமூகத்தினதும் பொருளாதாரத்தை உறைய

வைப்பதற்கு தேவையான பின்புலத்தை உருவாக்குகிறது. இலங்கையில் தேசிய முதலாளித்துவம் இயல்பாக வளர்ச்சி பெறவில்லை. காலனித்துவ ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்டது (super - imposed). இந்த திணிக்கப்பட்ட முதலாளித்துவத்தின் கீழ், கடந்த வரலாற்றில் ஆசியான் உற்பத்தி தொடர்புகளை துடைத்தெறிந்து முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை நிலைநாட்டும் பணி, ஒவ்வொரு உற்பத்தி துறையிலும் தேவையான அளவு விரிவாகவும், சம வேகத்துடனும் நடைபெறவில்லை. மறுபுறம் முழுமையான முதலாளித்துவமயமாக்கும் தேவை பிரத்தானிய காலனித்துவவாதிகளுக்கு இருக்கவில்லை என்பதும் தெரிகிறது. அதாவது, இலங்கையை மனப்பூர்வமாக முழுமையான முதலாளித்துவ இராச்சியமாக்கும் தேவைக்கு ஏற்புடையதாக அல்லாது, பிரித்தானிய காலனித்துவ பொருளாதார அரசியல் நோக்கங்களின் வரம்புகளுக்கு உட்பட்டே இலங்கை முதலாளித்துவமயமாக்கப்பட்டது. என்றாலும், நிலைமைகள் இவ்வாறு வரிசைப்படுவதால் இலங்கையை முதலாளித்துவ இராச்சியமாக அறிந்து கொள்வதில் தடையேதும் கிடையாது. அதாவது,பின்தங்கிய பொருளாதாரம் மற்றும் சமூக உறவுகள் நிலவியபோதிலும், பொதுவாக முதலாளித்துவ சமூக-பொருளாதார வடிவமைப்பு என்ற வகையில் இலங்கை மக்கள், அறிந்து கொள்வதற்கு போதுமான கைத்தொழில், விவசாயம் மற்றும் வியாபாரத்துறையின் ஆரம்ப உற்பத்தி தொடர்புகள் முதலாளித்துவ மயமாக்கப்பட்டிருந்தன. அதாவது, பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் குறித்த காலகட்டத்திற்குப் பின்னர், இலங்கை சமூகத்தின் பொருளாதார வாழ்க்கை முக்கியமாக, மூலதன- உழைப்பு நகர்விற்கு பொருத்தமான முதலாளித்துவ தொடர்புகளுக்கு ஏற்ப இலங்கை மக்களின் வாழ்க்கை நிரணயிக்கப்பட்டது. அதற்காக குறிப்பிட்டளவு சீர்திருத்தங்கள் காலனித்துவ ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில் கொண்டுவரப்பட்டன.

இதன் காரணமாக இன்றைய இலங்கை ஆரம்பத்தில் காலனித்துவத்திற்கும் பின்னர் நவகாலனித்துவத்திற்கும், நவதாராளமயத்திற்கும் பலியாகி பின்தங்கிய (Backward) வளர்ச்சியுடனான நாடாக அறிந்துகொள்ளத் தேவையான புறநிலைக்காரணிகள் உருவாகியுள்ளன. எனவே,இலங்கையின் பல்வேறு இனக் குழுமங்கள், பல்வேறு பிரதேச மற்றும் சுய பொருளாதார கூறுகளுக்குள் முடங்குவதற்குப் பதிலாக, தேசிய பொருளாதார தேக்கத்திற்குள் குறிப்பிட்டளவு முறையாக மையப்பட்டுள்ளன. ஆனால், பொருளாதார வாழ்க்கையில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் அந்த மையப்படுத்தலுக்கு சமாந்தரமாக சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கையில் இலங்கையர் என்ற இனத்தை நிர்மாணிப்பதற்கான குணாம்சங்களை இலங்கைச் சமூகம் பெற்றிருக்கவில்லை. பல்வேறு இனக்குழுமங்களுக்கிடையில் தேசிய பொருளாதார தேவைகளுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் அத்திசையில் நடக்க வேண்டிய ஜனநாயக ஒருங்கிணைப்பின் பணிகள் முழுமையாகவில்லை. எனவே, இதன் விளைவாக ஜனநாயக அடிப்படையில் பல்வேறு இனக் குழுமங்களுக்கிடையில் தேசிய மட்டத்தில் சமத்துவம் நிலைநாட்டப்படவில்லை.சிறுபான்மை மக்கள் மீது தொடுக்கப்படும் தேசிய அழுத்தங்களிலிருந்து அவர்களுக்கு விமோசனம் கிடைக்கவில்லை.

### (அ) பின்தங்கிய இலங்கை முதலாளியத்திற்குள் தீர்க்கப்படாத தேசியப் பிரச்சினை

3. முன்னைய ஆசியான் சமூக முறையின் உள் முரண்கள் (internal contradictions) முற்றியதன் விளைவாக உருவாகும் நவமுதலாளித்துவ உற்பத்தித் தொடர்புகளின் அடிப்படையில் இலங்கை முதலாளித்துவம் உருவாவதற்குப் பதிலாக, பிரித்தானிய காலனித்துவத்தின் பொருளாதார, அரசியல் தேவைகளுக்கு ஏற்பவும், அவர்களால

விதிக்கப்பட்டுக் கொண்ட பல்வேறு வரம்புகளுக்கு உட்பட்டு இலங்கையில் முதலாளித்துவம் திணிக்கப்பட்டது. அதாவது, சில தோன்றவில்லை. பிரித்தானியாவில் ஏற்கனவே நிலைநாட்டப்பட்டிருந்த முதலாளித்துவத்தை கொண்டுவந்து இலங்கையில் நிலைநாட்டப்பட்டது. ஆகவே, இலங்கை முதலாளித்துவம் ஆரம்பத்திலிருந்தே பொருளாதாரம், சமூகம், அரசியல் என்ற வகையில் பின்தங்கியிருந்தது. இதன் காரணமாக ஐரோப்பியா அல்லது உலகின் முதலாளித்துவ நாடுகளுக்கு ஒப்பாக, முதலாளித்துவ வளர்ச்சியினால் வரலாற்று ரீதியில் நிறைவேற்றப்படாத அநேகமான முதலாளித்துவ ஜனநாயக பணிகளை (bourgeois democratic tasks) இலங்கை முதலாளித்துவத்தினால் நிறைவேற்ற முடியவில்லை. அவ்வாறு தீர்க்கப்படாத ஜனநாயக பிரச்சினைகளில் தேசியப் பிரச்சினை முதலிடத்தில் இருக்கின்றது.

4. முதலாளித்துவ முறை நன்றாக நிலைநாட்டப்பட்ட சமூகங்களில் முதலாளித்துவ உற்பத்தித் தொடர்புகள் பரவலாக நிலைநிறுத்தப்பட்டதன் காரணமாக அதுவரை நிலவிய மதம், குலம் (சாதிய) மற்றும் வேறு பிரதேச பிளவுகளையும் சமூக தனித்துவங்களையும் கடந்து வர்க்க அடையாளங்கள் வளர்க்கப்படுகின்றன. அதன் மூலம் மேற்குறிப்பிட்ட விதத்தில் பல்வேறு தனித்துவங்களுக்குள் நிலவும் பலவீனமான பண்புகளை முறையாக பின்தள்ளி ஒட்டுமொத்த முதலாளித்துவ சமூகத்தையும் வர்க்க தனித்துவத்திற்குள் வேகமாக நிலைக்கச் செய்கிறது. எனவே, பொருளாதார வாழ்க்கை மாத்திரமல்ல, சமூக வாழ்க்கையிலும் பல முக்கியமானவற்றை தான் சார்ந்த வர்க்க இயல்பினை கொண்டு நிர்ணயிக்கும் நிலை உருவாகும். ஆனால்,இலங்கை உட்பட சில உலக நாடுகளில் காணப்பட்ட இனம், சமயம், குலம் (சாதியம்) அல்லது வேறு பிரதேச தனித்துவங்களைக் கொண்ட பிற்போக்கான அடையாளங்கள் வரலாற்று மேடையிலிருந்து விரட்டியடிக்க வேண்டியிருந்தன.

ஆனாலும், இவை சமூக- கலாச்சார வாழ்க்கையில் மற்றும் அரசியல் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் பாத்திரத்தை தொடர்ந்தும் வகித்து வருகின்றன.சமூகம் எதிர்கொள்ளும் பிற்போக்குத்தனங்களை சரியாக புரிந்து கொள்வதால் மாத்திரமே நிலைமைகள் இவ்வாறு வரிசைப்படுவதை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது அவ்வாறான பிற்போக்குகள் உருவாவதற்கான வரலாற்று மூலங்களை விளங்கிக் கொள்வதால் மாத்திரமே.

5. இலங்கையின் அனுபவங்களை பார்க்கும்போது காலனித்துவவாதத்தின் பின்னர் பல்வேறு காலகட்டங்களில் இலங்கை முதலாளித்துவ சமூகம் பல்வேறு பொருளாதார சீர்த்திருத்தங்களைச்சந்தித்திருக்கின்ற போதிலும் அதற்கு பொருந்தக்கூடிய அளவில் அல்லது தரத்திலான மாற்றங்கள் கலாச்சார வாழ்வில் வெளிப்படவில்லை என்ற விடயம் கவனிக்கப்பட வேண்டியதாகும். உதாரணமாக, திறந்த பொருளாதாரத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தி மூன்று தசாப்தங்கள் கடந்த நிலையிலும் இலங்கை சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கையில் மாத்திரமல்ல, அரசியல் வாழ்க்கையிலும் காணக்கூடிய தீங்குகளையும் பிற்போக்குகளையும் ஆராயும்போது இது குறித்து சரியான கருத்தை பெற முடியும்.

### (ஆ) தனித்துவங்கள் நெருக்கடியாக மாற்றம் பெறல்

6. இதற்கு பல காரணிகள் தாக்கத்தை செலுத்தியிருப்பது தெரிகிறது. அவற்றில் முதல் காரணியானது மேற்குறித்தவாறு இலங்கையின் முதலாளித்துவமயத்திற்கு சார்பான நிலைமைகள் தேவையான அளவிலும், சீராகவும் இல்லாமையேயாகும். தவிரவும், இன, மத, குல, மற்றும் பிரதேச ரீதியில் உருவாகிய பல்வேறு சமூக தனித்துவங்கள் சமூக வாழ்க்கையில் சுய நிலைத்தலை ஓரளவு பெற்றிருந்தமையும்

ஒரு காரணமாகும். அதாவது, பல்வேறு வரலாற்று மற்றும் மனோவியல் காரணிகளும் இவ்வாறான தனித்துவங்கள் குறித்து கோட்பாடுகளின் இருப்பும், அவ்வாறான கோட்பாடுகளை உருவாக்கும் வரலாற்றாசிரியர்களினதும், சித்தாந்திகளினதும் பங்களிப்புகளும் இவ்வாறான சுய இருப்பிற்கு உந்துசக்தியாக இருந்தன. இன்னொரு முக்கியமான காரணியானது, இலங்கை பின்தங்கிய முதலாளித்துவ அரசியலினால் தனது தேவைகளுக்கேற்ப இப்படியான தனித்துவங்களுக்குள் அடங்கிய பிற்போக்கு பண்புகளை வளர்த்து தமது வர்க்க மற்றும் அரசியலின் இருப்பிற்காக பயன்படுத்தியதாகும். அது சம்பந்தமான நீண்ட வரலாற்று அனுபவங்கள் இலங்கை சமூகத்திடம் உண்டு. இலங்கையின் முதலாளித்துவ அரசியல் அதிகாரப் போட்டியில் இனவாதமும், மதவாதமும், குலவாதமும் (சாதியம்) மற்றும் பிரதேசவாதங்களும் செய்த பிற்போக்கான வேலைகள் குறித்து இலங்கை வரலாற்றில் போதுமானளவு ஆதாரங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

பொருளாதார தளத்தை தனியாக எடுத்துக் கொண்டால் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் என்ற வகையிலும், பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் ஒற்றைக் கோட்பாட்டுடனும் முன்வைக்கப்படும்போது நவதாராளமய முதலாளித்துவம் என்ற வகையிலும் விசேடமாக 1977க்கு பிந்திய காலகட்டத்தில் வெளிச்சத்திற்கு வந்த இலங்கை முதலாளித்துவத்தின் புதிய கட்டம், இலங்கை சமூகத்தில் நவ-கொன்ஷர்வேடிவ் வடிவத்திலேயே தொடங்குகிறது. அதாவது, உலக முதலாளித்துவத்தின் ஆரம்பத்திலிருந்தே அதன் தனித்துவம், இன அடையாளமாக தோன்றிய கூட்டுறவுக்கு எதிரான தனித்துவத்தை முதன்மையாகக் கொண்ட பயனீட்டுவாத மற்றும் பல்வகையான தீங்குகளின் பக்கம் ஒட்டுமொத்த சமூகத்தையும் பலிகொடுக்கும் நவதாராளமய முதலாளித்துவ காலகட்டம், சமூகத்தில்

நிலவும் பிற்போக்கானதும் தீங்குவிளைவிக்கக் கூடியதுமான சிந்தனைகளை விரட்டுவதற்குப் பதிலாக அதனோடு இணைந்திருப்பதையே விரும்புகிறது. இதனால், ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டுறவுக்கு எதிராக இந்த சமூக தனித்துவங்களில் பல்வகைப்பட்ட பிற்போக்குத்தனங்களை பயன்படுத்தும் ஆற்றல் கிடைத்துள்ளது, அதிகாரத்திற்கு வந்த அனைத்து குழுக்களும் இந்த பின்பற்றி நடக்கும் கொள்கையையே கடைப்பிடித்தன. தொடர்ந்தும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றன.

### (இ) பிரித்து ஆளுதல்

7. காலத்திற்கு காலம் இலங்கையை ஆக்கிரமித்த போத்துக்கேயர், ஒல்லாந்தர் விஷேடமாக இலங்கையில் முதலாளித்துவ உற்பத்தித் தொடர்புகளை நிர்மாணிப்பதில் முக்கிய பங்காற்றிய பிரித்தானிய முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் நோக்கங்களை முதன்மையாகக் கொள்ளும் காலனித்துவ ஆட்சியின் தந்திரோபாயங்களுள் ஒன்றான ஒவ்வொரு இனக் குழுமங்களையும் தனித்தனியாக பிரித்து ஆளும் (devide and rule)தந்திரத்தை பெரும்பாலும் கையாண்டன. இது ஏற்கனவே பிரித்தானியர்களால் உலகின் பல நாடுகளில் பரீட்சித்துப் பார்த்து வெற்றியடைந்த தந்திரோபாயமாகும். பெரும்பாலான காலனித்துவ நாடுகளில் தேசிய முதலாளிகள் இந்த தந்திரத்தில் சிக்கியதால் காலனித்துவத்திற்கு எதிராக பலம் வாய்ந்த முதலாளித்துவ தேசிய இயக்கமொன்றை நிர்மாணிக்க முடியவில்லை என்பது தெரிகிறது. இலங்கைஅனுபவத்தில் பல்வேறு இனக்குழுமங்கள் ஒன்றிணைந்த பலமான தேசிய இயக்கமொன்றை (national movement)காலனித்துவவாதிகளுககு எதிராக நிர்மாணிக்க முடியாமல் போனதைப் போன்று, போலி சுதந்திரத்தின் பின்பு ஆட்சிக்கு வந்த தேசிய முதலாளித்துவம் காலனித்துவவாதிகளின் பொறியில் சிக்கி தமது அரசியல் அதிகார நோக்கத்திற்காக,

துரதிர்ஸ்டவசமாக, இனவாதமாக (chauvinism) மாறிய தேசியவாதத்தையே (Nationalism) பெரும்பாலும் பயன்படுத்தியது. பிரித்தானிய காலனித்துவவாதிகளின் நிழலில் புதிதாக உருவான இலங்கை வணிக முதலாளித்துவ வர்க்கத்திற்குள் (இது கைத்தொழில் முதலாளித்துவ வர்க்கம் அல்ல) நிலவிய போட்டியை முகாமைப்படுத்துவதற்காக, சர்வசன வாக்கெடுப்பை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், அறிமுகப்படுத்திய பல்வேறு மறுசீரமைப்புகளின் ஊடாக அரச நிர்வாகத்தில் இவர்களை இணைத்துக் கொள்வதில், தேசிய மட்டத்திலான வேறுபாடுகள் மாத்திரமல்ல குல (சாதிய) மற்றும் பிரதேச காரணிகளும் பிரித்தானிய காலனித்துவவாதிகளால் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. கடற்கரைப் பிரதேசங்களில் சில காலங்களாக நிலவிய ஐரோப்பிய ஆக்கிரமிப்பு காரணமாக விரைவில் பணக்காரர்களாகும் சாத்தியமுடைய அந்தப் பிரதேச மக்கள் மத்தியிலிருந்து உருவான புதிய பணக்கார வர்க்கம் மற்றும் பரம்பரை மேட்டுக்குடி வர்க்கத்தின் வழித்தோன்றலான பணக்கார வர்க்கத்திற்குமிடையில் குலத்தை (சாதியம்) காரணியாகக் கொண்ட மோதலை தொடரச் செய்து தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியில் பிரித்தானிய காலனித்துவவாதிகள் ஈடுபட்டனர். ஆகவேதான், பிரித்தானியர்களின் பிரித்து ஆளும் உபாயம் ஒரு தேசிய இனத்தை மாத்திரம் அடிப்படையாக கொண்டதாக இருக்கவில்லை.

### (ஈ) பிரிவினை

போலிச் சுதந்திரம் கிடைக்கும்போது இலங்கை முதலாளித்துவ வர்க்கம் தனி அரசியல் இயக்கமாக நிறுவகப்பட்டிருக்கவில்லை. இவர்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என தனித்தனியாக பிரிந்து தமது இனத்துவ அடையாளங்களின் ஊடாக பல்வேறு அரசியல் கட்சிகளுக்குள்

நிறுவகப்பட்டிருந்தனர். முதலாளித்துவ வர்க்கத்தின் பிளவை ஒடுக்கப்பட்ட மக்களின் பிளவாக ஆக்கியதன் காரணமாக, நவகாலனித்துவ (neo-colonial) காலத்தில் முதலாளித்துவத்திற்கு எதிராக பல்வேறு இனக்குழுமங்களின் பங்களிப்புடன் நடக்கவிருந்த ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் ஒன்றிணைந்த போராட்டத்திற்கான வாசல் மூடப்பட்டது. நாட்டில் இதுவரை அதிகாரத்திற்கு வந்த பல்வேறு கட்சிக் கூட்டணிகளைச் சேர்ந்த முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, அவர்களுடன் பல சந்தர்ப்பங்களில் கூட்டுச்சேர்ந்த சிறு முதலாளித்துவ மற்றும் இடதுசாரிகள் என கூறிக் கொள்ளும் கட்சிகளும், அதேமுறையில் தமது வர்க்க மற்றும் குறுகிய அதிகார நப்பாசைக்காக தேசியப் பிரச்சினையை இனவாத அடிப்படையில் முகாமைத்துவம் செய்யும் நிலைக்குள் வீழ்ந்தன. முதலாளித்துவ தேர்தல்களின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை தீர்மானிப்பதில் தமது அரசியல் அதிகார தேவைக்காக சிங்கள முதலாளித்துவ கட்சிகள் தயக்கமின்றி சிங்கள இனவாதத்தினதும், பௌத்த சம்பிரதாயத்தினதும் பாதுகாவலர்களாகவும் நடித்து பெரும்பான்மை வாக்குப்பலத்தினை பெற்று ஆட்சியில் பெரும் பங்கு வகிக்கும் உரிமையை பெற்றுக் கொண்டன. அதற்குச் சளைக்காத தமிழ் முஸ்லிம் முதலாளித்துவ அரசியல்வாதிகள் அதற்கு பதிலடியாக இனவாதத்தை விதைத்து பெற்றுக்கொள்ளும் அரசியல் அதிகாரத்தை தமது வர்க்கத் தேவைகளுக்காகவும், உடன்பாடுகளுக்காகவும் பேரம் பேசினர். இலங்கை அரசியல் வரலாற்றில் இந்த முதலாளித்துவ மற்றும் சிறு முதலாளித்துவ குழுக்கள் இன அடையாள பேதங்களின்றி எப்போதாவது ஐக்கியப்பட்டார்கள் என்றால், அது, இடதுசாரிகளிடமிருந்து வரும் சவால்களை எதிர்கொள்வதற்கு மாத்திரமே. வரலாறுபூராவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பணக்காரத் தலைவர்கள் இனவாத அடிப்படையில்

தமது வர்க்க மற்றும் கட்சியின் அதிகார தேவைக்காக ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு இனவாதத்தை பயன்படுத்தியமைதான் தேசியப் பிரச்சினை இந்தளவு தூரம் வளர்வதற்கு காரணமாக இருந்தது.

8. இன்று இலங்கை மண்ணில் பரவலாக வாழும், அப்படி வாழக்கூடிய உரிமையுள்ள அனைத்து இன மக்களும் நில அடிப்படையில் பிரிக்கப்படும் நிலை இதனால் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் தேசியப் பிரச்சினை தற்போதைய நிலையிலிருந்து மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாட்டில் வாழும் மக்களில் பெரும்பான்மையல்லாத தேசிய இனக்குழுமங்களுக்கு எதிராக (செயற்கையான) தேசிய நெருக்கடியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நெருக்கடியிலிருந்து அவர்களை மீட்பதும், சகலவித இனவாதங்களையும் தோற்கடிப்பதும், சமத்துவத்தின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும், ஜனநாயக ரீதியில் இலங்கையர் இனம் (Lankan nation) முழுமையாக உருவாவதற்குத் தேவையான சமூக-பொருளாதார மற்றும் அரசியல் பின்புலத்தை நிர்மாணிப்பதும், இலங்கை சமூக அபிவிருத்தி (social development) தொடர்பில் அத்தியாவசியமானதும், முதலாவதுமான பணியாகும்.

## தீர்வுக்கான வழிமுறைகள்

9. பிரித்தானிய காலனித்துவவாதிகளின் செயற்பாடுகள் உட்பட பல்வேறு வரலாற்றுக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தேசியப் பிரச்சினை கடந்த ஆறு தசாப்தங்களாக இலங்கையின் பின்தங்கிய முதலாளித்துவத்தினால் முன்னோக்கு இல்லாத சிக்கலான நிலைக்கு இழுத்து வரப்பட்டுள்ளது. அதனால் எந்தவொரு சமூகப் பொருளாதார பிரச்சனைக்கும் நியாயமான தீர்வை முன்வைப்பதில் தோல்வியுற்ற இலங்கை முதலாளித்துவம் இலங்கையின் இனப்பிரச்சனைக்கும் தீர்வை

முன்வைக்க இயலாமையை தனது வரலாற்று பயனீட்டின் மூலம் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது. தேசிய இனப் பிரச்சனையை தீர்க்கும் ஆற்றல் மற்றும் எவையாயினும் இன்றைய நவதாராளவாத முதலாளித்துவ கட்டமைப்பினால் இந்த பிரச்சனை மேலும் தூண்டிவிடப்பட்டு தமது நீண்டகால இருப்புக்காக வெறுக்கத்தக்க வகையில் பயன்படுத்தி வருகிறது. எனவேதான் இலங்கையின் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான வரலாற்றுப் பொறுப்பு கட்டாயமாக இலங்கையின் சோசலிஸ புரட்சியினால் பொறுப்பேற்க வேண்டிய ஒன்றாக மாறியுள்ளது. எனவே சாதாரண நிலமைகளில் மிகவும் பலம்வாய்ந்த முதலாளித்துவ முறைமைக்குள் தீர்க்கப்பட வேண்டிய தேசிய இனப்பிரச்சினை இன்னும் பலவீனமான பிற்படுத்தப்பட்ட இலங்கை முதலாளித்துவத்திற்குள் தீர்க்கப்படும் சாத்தியப்பாடுகள் காணப்படவில்லை. பலம்வாய்ந்த முதலாளித்துவ முறைமை மற்றும் அதன் மூலதன செயற்பாட்டுக்கு அவசியமான அனைத்து வகையான இன மத சாதி மற்றும் பிரதேச வேறுபாடுகளில் இருந்து விடுபட்ட சுதந்திர முறைமையினை உருவாக்கிக் கொள்ளும் செயற்பாட்டை இலங்கையின் பிற்படுத்தப்பட்ட முதலாளித்துவத்திற்கு சிறப்பாக மேற்கொள்ள முடியாமல் போனது. பிற்படுத்தப்பட்ட முதலாளித்துவம் காரணமாக எஞ்சியிருக்கும் அவ்வாறான அடையாளங்கள் பிரிவினைகள் உழைப்புச் சுரண்டலை பாதுகாத்துக் கொள்வதற்கும் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்குமே பயன்படுகிறது.

10. ஒற்றுமை,சமாதானம், சகோதரத்துவம் சமத்துவம் மற்றும் முன்னேறிய மனித உறவுகள் நிரம்பிய ஒருமைப்பாடுடைய மனித சமூகமாக முழு உலக மக்களையும் மாற்றுவதற்கான செயற்பாடுகளை அடிப்படையாக கொண்ட கம்யூனிஸ சமூக முறைமையை உருவாக்குவதற்கான (இடம்பெயரும்) பொறுப்பு சோஸலிசத்திடம் ஒப்படைக்கப்படும். எனவே சோஸலிசத்தின்

கீழ் மனித சமூகத்தினது வரலாற்று படிவங்களும் வடிவத்தை எடுக்கக் கூடும். பாட்டாளி வர்க்கத்தினால் வெல்லப்படும் அரச அதிகாரம், ஒரு வர்க்கத்தினால் இன்னொரு வர்க்கம் சுரண்டப்படுவதனை இல்லாதொழிப்பதற்கும், அனைத்து தேசிய இனப்பிரிவினருக்கும் ஜனநாயகத்தையும் சம உரிமையினையும் உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும். பாட்டாளி வர்க்கம் அந்த அரசியல் பலத்தை பயன்படுத்துவது பாட்டாளிவர்க்க ஜனநாயக வழிமுறையிலாகும் (proletarian democracy).தேசிய இனப்பிரிவுகளுக்கிடையே முதலாளித்துவம் உருவாக்கிய சந்தேகம், அவநம்பிக்கை என்பவற்றை ஒழிக்கவும், ஒடுக்கப்பட்ட தேசிய இனக்குழுமங்களின் கௌவரம், பெருமிதம்மற்றும் அவர்களது ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கும் இதன் மூலம் வழிவகை செய்யப்படும்.இலங்கையின் தேசியப் பொருளாதார கட்டமைப்பிற்கு ஏற்புடையதாக உள்ளீர்க்கப்பட்டுள்ள, ஆனாலும் சமூக கலாச்சார வாழ்வில் பூரணமான இலங்கை இனம் உருவாகக்கூடிய அளவில் உள்ளிணைக்கப்படாத சிங்கள, தமிழ், முஸ்லிம் இன சமூகங்களை தொடர்ந்தும் உள்ளீர்ப்பதற்கு சோஸலிச அரசாங்கமானது ஜனநாயக ரீதியானதும் நம்பிக்கையளிக்கக் கூடியதுமான செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

## கொள்கைரீதியிலான நிலைப்பாடு

சகல மக்கள் சமூகங்களுக்கும் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தி பாட்டாளிவர்க்க ஜனநாயக அடிப்படையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சாத்தியப்பாடான செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்படும் அடிப்படை கொள்கைகளை ஆதாரமாக கொண்டுள்ளது.

1 தன்னிச்சையான மத்தியத்துவப்படுத்தலுக்கும் அதேபோல்

தன்னிச்சையான பரவலக்களுக்கும் எதிரான கொள்கையின் அடிப்படையில் சோசலிஸ அரசின் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

2 தேசியம் அல்லது மதத்தை அடிப்படையாக கொண்ட அரசியல்ரீதியிலான பிளவுகளுக்கு மாற்றாக அனைத்து தேசிய இனக்குழுமங்களும் சோசலிஸ அரசாங்கத்தில் சமத்துவம் மற்றும் ஜனநாயக அடிப்படையில் ஐக்கியமாக வாழ்வதற்கு தேவையான நிலமைகளை உறுதிப்படுத்துவதனூடாக மட்டுமே அனைத்து இனக்குழுமங்களினதும் சமூக அபிவிருத்தியை பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை ஏற்றுக்கொள்வதோடு சோசலிஸ அரசின் ஆட்சி பரந்த ஜனநாயக மத்தியப்படுத்தலை அடிப்படை நியதியாக கொண்டு முன்னெடுக்கப்படும்.

3 தாய்மண் கோட்பாடு வேறு பூமி நிர்ணயத்தின் மீது சிங்கள தமிழ் முஸ்லிம் தேசிய இனக்குழுமங்கள் தேசியத்தின் அடிப்படையில் குறித்த நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்ட தனித்துவ அடையாளத்திற்குள் நிலைத்தலை அல்லது அடையாளம் காண்பதை தவிர்ப்பதோடு ஒட்டுமொத்த இலங்கை மண்ணில், இலங்கைக்குள் வாழும் ஒவ்வொரு தேசிய இனக்குழுமத்தினதும் தாய்மண்ணாக ஏற்றுக் கொள்ளவும், அது, சகல தேசிய இனக்குழுமங்களையும் பிரதநிதித்துவப்படுத்துகின்ற ஒவ்வொரு உறுப்பினரினதும் அடிப்படை மனித உரிமை என்பதும் சோசலிஸ அரசினால் உறுதிப்படுத்தப்படும்.

4 இதன்மூலம் பல்வேறு மக்கள் பிரிவினரிடையே உண்மையான சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கு செயல்ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, பொருளாதார மற்றும் சமூக- கலாச்சார அபிவிருத்தியினை பெற்றுக்கொள்வதற்கான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக விஞ்ஞானரீதியில் பரந்த பிரதேச சுயாட்சி (autonomy) உறுதி செய்யப்படும்.

மத்தியப்படுத்தப்பட்ட அரசிற்கும் பிரதேச சுயாட்சி பிரதேசங்களுககுமிடையேயான செயற்பாடுகள் ஜனநாயக மத்தியப்படுத்தலினது அரசாட்சியின் அடிப்படை நியதி நடைமுறைக்கு கொண்டுவரப்படும்.

5. இலங்கை ஒரு பன்மைச் சமூகத்தை கொண்டதுடன் சிறுபான்மையினர் தேசிய இன ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இந்த தேசிய இன ஒடுக்குமுறைகள் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் அரசாங்கம் ஒன்றின் கீழேயே இல்லாதொழிக்கப்படும். அதேவேளை ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் உத்தரவாதப்படுத்துகின்ற ஒரு முற்றுமுழுதான சுய தன்னாட்சி அலகுகள் இனம் கலாச்சாரம் பொருளாதாரச் சிறப்பம்சங்கள் மற்றும் செறிவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு விஞ்ஞானபூர்வமாக வடிவமைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய உருவாக்கப்படும்.

6. இனப் பிரச்சனையானது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் ஆட்சியின் கீழ் மட்டுமே முற்றுமுழுதாக தீர்க்கப்பட முடியும் என்றபோதிலும் நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு நிரந்தரமான இனப்பிரச்சனைக்கான தீர்வு தமிழ் முஸ்லீம் சமூகங்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களுடன் ஏற்கனவே இருக்கக்கூடிய குறைந்தளவிலான ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களுடன் மக்களுக்கான பரந்த உரிமைகளை வெல்லுதற்கான போராட்டங்களுடன் ஒன்றுபட்டு நின்று அந்த உரிமைகளை ஒரு பரந்த சோசலிஸ சமூக மாற்றத்துக்கான போராட்டத்துடன் ஒருங்கிணைத்தல் மூலம் மேற்கொள்ளப்படும்.

7. ஜனநாயக மத்தியப்படுத்தலின் அடிப்படை நியதி சகல தேசிய இனக்குழுமங்களையும் பிரதநிதித்துவப்படுத்தும், உழைக்கும் மக்கள் மற்றும் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஜனநாயக உரிமைகள் அடங்கிய புதிய அரசியலமைப்பு

மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்படும்.

8. சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்படும்.

1) சகல அரச நிறுவனங்களிலும் மக்கள் பிரதிநிதிகளுக்கு நாட்டில் நடைமுறையில் இருக்கும் எந்தவொரு தேசிய மொழியிலும் பேசும் உரிமை உறுதி செய்யப்படுவதோடு, அந்த மொழிகளில் மொழி மாற்றம் தேவைப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அனைத்து தேசிய மொழிகளிலும் முன்வைக்கப்படும்.

2) சகல சட்ட நடவடிக்கைகள் அரச திட்டங்கள், அறிவித்தல்கள் மற்றும் கட்டளைகள் ஒவ்வொரு தேசிய மொழியிலும் வெளியிடப்படும்.

3) கல்விச் செயற்பாடுகளின்போது தனது தாய்மொழியிலோ அல்லது தான் விரும்பும் எந்தவொரு தேசிய மொழியிலோ கல்வி பெற அனைத்து தேசிய இனக்குழுமங்களையும் பிரதநிதித்துவப்படுத்தும் சகல மக்களுக்கும் இருக்கும் உரிமை சோசலிச அரசியலமைப்பினாலேயே ஏற்றுக்கொள்ளப்படும்.

4) அரசாங்கத்துடன் தனது தாய்மொழியிலோ அல்லது தான்விரும்பும் எந்தவொரு தேசிய மொழியிலோ தொடர்புகளை பேணுவதற்கு சகல பிரஜைகளுக்கும் உள்ள உரிமையை ஏற்றுக்கொள்வதோடு, இது விடயத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5) மொழி வேறுபாட்டின் மீது சமூக- பொருளாதார மற்றும் அரசியல்ரீதியில் எந்தவொரு பாரபட்சமும் எந்தவொரு பிரஜைக்கும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வது அரசின் கடமையாக இருப்பதுடன் அதற்காக செயற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6) ஒவ்வொரு பிரஜையும் தேசிய மொழிகளை பயன்படுத்துவதில் சம உரிமையினை அனுபவிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

7. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று தேசிய மொழிகளையும் கற்பதற்குதேவையான துரித தேசிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுவதோடு, அதற்காக பாடசாலை பல்கலைக்கழகம் மொழி கல்விபீடங்களை ஒருங்கிணைத்து தேசிய மொழிக் கல்வி நிறுவனமும் அதன்பிரதேச கிளைகளும் ஆரம்பிக்கப்படும்.மொழிக் கல்வியின் பரந்த வளர்ச்சிக்கு சமமாக சமூக- கலாச்சார ரீதியில் மேலும் உள்ளிணைக்கும் வகையில் சகல தேசிய இனங்களையும் ஊக்குவிக்கும் நோக்கத்திலான தேசிய வேலைத்திட்டமொன்றுசெயற்படுத்தப்படும்.

8. தேசிய இனங்கள் ஒன்றோடொன்று உள்ளிணைக்கும் செயற்பாட்டினை, பொருளாதார சமூக- கலாச்சார மட்டத்தில்,பாட்டாளி வர்க்க நோக்கத்தில் முன்னெடுப்பதற்கு, விரிவான ஜனநாயக செயற்பாடுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

9. பல்வேறு தேசிய இனப்பிரிவுகளின் சமூக கலாச்சார உள்ளிணைப்பு என்ற வகையில் சோசலிஸ அரசின் எதிர்பார்ப்பானது, பல்வேறு இனம் அல்லது பல்வேறு கலாச்சார அடையாளங்கள் கிரமமாக அழிவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையாக இருக்காது என்பதுடன்,அதற்கு நேர்மாறாகஅவற்றில் காணப்படும் சிறந்த ஜனநாயகத்தையும் ஐக்கியத்தையும் முதன்மையாகக் கொண்ட முற்போக்கு அம்சங்களை, பரந்தளவிலான பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தை வளர்ப்பதில் பங்களிப்பு செய்வதற்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும். அதனால், பல்வேறு இனங்களுக்கு மத்தியிலான உள்ளீர்ப்புச் செயற்பாடு

என்பது பல்வகை தேசிய கலாச்சாரங்களை வரலாற்று மேடையிலிருந்து அழித்துவிடுவது என்று அர்த்தமாகாது என்பதுடன்,அப்படிச் செய்வது சோசலிஸ அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். பொருளாதார வாழ்வில் சமத்துவத்தை கட்டிமெுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் தீர்க்கமான தலையீட்டின் அடிப்படை மீது ஒவ்வொரு கலாச்சாரத்தையும் பயன்தரக்கூடிய வகையில் பரஸ்பரம் பிணைப்புறச் செய்வதே (interactive) இதன் கருத்தாகும். உள்ளீர்ப்பு என்பது பொருளாதார சமத்துவத்தை கட்டியெழுப்ப, ஏனைய கலாச்சார வேற்றுமைகளை வேரோடு பிடுங்கி எறிவதன் ஊடான கலாச்சார அழிவல்ல. அது பல்வேறு கலாச்சார வேற்றுமைகளுக்கிடையிலான பிணைப்புறுதலின் வழியாக, பொதுவில், பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தினை வளர்த்தெடுத்து தரத்தை பெற்றுக் கொள்வதன் மூலம் வெளிப்படும் தொடர் செயற்பாடாகும்.

10. ஒவ்வொரு தேசிய இனப்பிரிவினரும் தமது வரலாற்று வளர்ச்சியில் பெற்றுக் கொண்டுள்ள பல்வேறு சமூக கலாச்சார அம்சங்கள் தொடர்பாக அவர்களுக்குள் தெளிவான புரிதலைக் கடடியெழுப்ப சோசலிஸ அரசாங்கம் நேரடியாக தலையீடு செய்யும். ஒவ்வொரு மக்கள் சமூகங்களுக்குள் நிலவும் கலாச்சார வேறுபாடுகளை ஜனநாயக ரீதியிலல்லாது அழித்துவிடுவதை எதிர்க்கும் சோஷலிஸ அரசு,அவற்றில் காணப்படும் பயனுள்ள அம்சங்களை, அவற்றில் இருக்கும் கலாச்சார வேறுபாடுகளை் ஜனநாயகபூர்வமல்லாத வகையில் அழிப்பதற்கு எதிராக சோசலிஸ அரசாங்கத்தின் அவற்றில் காணப்படும் சாதகமான அம்சங்களை சோஷலிஸ சமூகம் என்ற வகையில் பாட்டாளி வர்க்க கட்சிக்குள் உறிஞ்சுவதற்கான நிலை உருவாக்கப்படும். பல்வகை கலாச்சாரங்களுக்கு மத்தியில் வளர்ந்து வரும் பரஸ்பர சமூக- பொருளாதார மற்றும் கலாச்சார ஊடாடல் சமத்துவத்தை நிர்மாணிக்கும்

வெற்றிகரமான தளமாக கருதப்படும்.

11. ஒரு தேசிய இனக்குழுமத்தினால் இன்னொரு தேசிய இனக்குழுமமும், ஒரு சாதியினரால் இன்னொரு சாதியினரும் சமூகரீதியில் துன்புறுத்தப்படுவதை முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதனூடாக இனவாதம் மற்றும் சாதியவாதம் என்பனவற்றை முற்றாக ஒழிப்பதற்கு தீர்க்கமானதும் இறுதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனை மீறுபவர்களுக்கு எதிராக சட்டத்தின் வாயிலாக தன்டனையளிக்கப்படும்.

12. இலங்கைப் பிராஜாவுரிமை வழங்கப்படாத பெருந்தோட்டத்துறையில் வேலை செய்யும் தமிழ் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமையினை பெற்றுக்கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும். இம்மக்கள் எதிர்கொண்டுள்ள சமூக- பொருளாதார- அரசியல் மற்றும் கலாச்சாரப் பிரச்சினைகளை வேரறுக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

13. ஒடுக்கப்பட்ட தேசியப் பிரஜைகள் சமூக, கலாச்சார மற்றும் மொழி சம்பந்தப்பட்ட துறைகளில் முகம் கொடுக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை அறிந்து அவற்றை நீக்குதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

14. ஒடுக்கப்படும் மக்களின் கௌரவத்தையும் பெருமிதத்தையும், பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்குமான அவர்களது உரிமைகளை பாதுகாப்பதற்கும் முக்கிய கவனம் செலுத்தப்படும்

15 சகல தேசிய இனங்களினதம் கலாச்சார அடையாளங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அவற்றின் மீது மேலாதிக்கரீதியிலான, ஆக்கிரமிப்பு ரீதியிலான தலையீடுகளை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

16 இன மத சாதி மற்றும் வேறு பிரதேச வேறுபாடுகள்,

ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள் பாராது, எந்தவொரு தேசிய இனத்தையும் பிரதநிதித்துவப்படுத்தும் உறுப்பினருக்கு வேகமாக விரிவடையும் சோசலிஸ பொருளாதாரத்திற்கு தமது தேவைக்கேற்ப பங்குகொள்வதற்கும் அதன் பலனை அனுபவிப்பதற்குமான உரிமை உறுதிசெய்யப்படும்.

17 எந்தவொரு தேசிய இனப்பிரிவினருக்குள்ளும் வரலாற்றுரீதியாக கட்டியெழுப்பப்பட்டிருக்கும் மேலாதிக்கவாத மனோநிலையைப் போன்றே இன ஒடுக்குமுறையையும் இல்லாதொழிப்பதற்கு விஞ்ஞானபூர்வ மனிதநேய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

18 அனைத்து தேசிய இனங்களுக்கும் எந்தவொரு முக்கியத்துவமோ பாகுபாடோ இன்றி அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமையும் சுதந்திரமும் உறுதி செய்யப்படும்.

19 பௌத்த சாசனம் இந்து சமய நடவடிக்கைகள் மற்றும் இஸ்லாமிய சமய நடவடிக்கைகள் என்ற பெயரில் மதச்சார்பற்ற தன்மைக்கு ஊறு விளைவிக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் உடனடியாக கலைக்கப்படும். எந்தவொரு தனிநபருக்கும் தான் விரும்பிய மதம் அல்லது வேறு நம்பிக்கைகளின் அடிப்படையிலான நடவடிக்கைகள் மக்களின் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு முன்னெடுக்கும் சுதந்திரம் உறுதி செய்யப்படும். அதோடு, சோஷலிஸ அரசாங்கம் அதற்கு எவ்வித அனுசரணையும் வழங்காது என்பதுடன் இடையூறு விளைவிக்கவும் மாட்டாது.

20 சோசலிஸ ஆட்சியின் கீழ் நிலம் பொதுச் சொத்தாக கொள்ளப்படுவதோடு இலங்கையில் வசிக்கும் சகல தேசிய இனப்பிரிவினருக்கும் முழு இலங்கை நிலத்தின் மீதும் உள்ள உரிமை உறுதி செய்யப்படும். இலங்கையின் நிலப்பரப்பானது இங்கு வாழும் தமிழ் முஸ்லிம் மற்றும்

சிங்கள அனைத்து மக்களினதும் தாய் நிலமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எந்தவொரு இலங்கையருக்கும் இன மத அல்லது வேறு எந்தவொரு வேறுபாடும் இல்லாது நாட்டில் எந்தவொரு பகுதியிலும் குடியேறவும், எந்தவொரு இடத்திலும் தமது கலாச்சார அடையாளத்தோடு வாழ்வதற்கும் தேசிய பொருளாதாரத்திற்கு தாம் விரும்பிய வகையில் பங்களிப்பு செய்வதற்குமான உரிமை உறுதி செய்யப்படும்.

21 அனைத்துவகையான இன ஒடுக்குமுறைகளையும் வேரறுப்பதற்காக செயல்ரீதியில் தலையிடுவதுடன் இன அடக்குமுறையை அடிப்படையாகக் கொண்ட எவ்வித செயற்பாடுகளையும் மிக வன்மையாக கண்டிப்பதுடன் அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

22 பல்வேறுபட்ட வரலாற்றுக் காரணங்களினால் மிகவும் வளர்ச்சி கண்டுள்ள இனவாத கோட்பாடுகளை தோற்கடிப்பதற்கான சாத்தியமான செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியதுடன்,அதனூடாக பொதுமக்களிடம் அரசியல் அறிவை கொண்டுசெல்ல வேண்டியுள்ளது.

## உரிமைகளை வென்றெடுக்கும் வழி போராட்டமே

(1) சோஷலிஸ அரசொன்றின் மூலமே மேற்குறிப்பிட்ட கொள்கைகளை முழுமையாக அமுல்படுத்த முடியும். இன்றைய முதலாளித்துவ முறைமையில் இருந்து சோஷலிஸம் வரை கடினமானதும் சவால்மிக்கதுமான வழியை கட்டாயமாக கடக்க வேண்டியுள்ளது. இன ஒடுக்குமுறைக்கும், இனவாதத்திற்கும் எதிராக சமத்துவத்தை வெற்றிகொள்ளும் போராட்டத்தின் ஊடாகவே இதனை கடக்க முடியும். அதனை தவிர்த்து அங்கு சென்றடைவதற்கு வேறு அரசியல் மார்க்கம் கிடையாது. மிக விரிவாக குறிப்பிடுவதாயின், நடைமுறையில் உள்ள முறைமைக்கு எதிராக நடத்தப்படும் வர்க்கப் போராட்ட்டதினூடு

மட்டுமே அதனை அண்மிக்க முடியும். அதாவது, முறைமைக்கு எதிரான போராட்டப் பாதை. தேசியப் பிரச்சினையினால் உருவான நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான போராட்டத்தை, பொருளாதார மற்றும் ஏனைய சமூக ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழிக்கும் போராட்டத்தில் இருந்து பிரிக்க முடியாது. எனவே,தேசியப் பிரச்சினையை அடிப்படையாக கொண்ட போராட்டத்தைஏனைய போராட்டங்களுடனும் ஒன்றிணைத்து நடாத்துவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். பொருளாதார வாழ்விற்குரிய சமத்துவ அடிப்படை அல்லதுஅரச அதிகாரத்திற்குரிய அதீதவளர்ச்சி கண்ட ஜனநாயக சமூகம் உருவாக்கப்படாமல், தேசியப் பிரச்சினை காரணமாக உருவாகிய பிரச்சனைக்கு மட்டும் தனியாக தீர்வு காணப்படும் தூய்மை சமூகமொன்றை உருவாக்கலாம் என்ற மாயைக்குள்விழ வேண்டியதில்லை. ஆதலால், ஏனைய போராட்டங்களோடு ஒன்றிணைக்க கூடிய போராட்டத்தை தேசியப் பிரச்சினை தொடர்பில் முன்வைக்கப்பட வேண்டுமென முன்னிலை சோஷலிஸ கட்சி முன்மொழிகிறது. இப்போராட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டியது, அனைத்து இனக்குழுமங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒடுக்கப்பட்ட மக்களாகும். இந்த தேசிய இனங்களிடையே இருக்கும் சலுகை(உடமை வர்க்க) பெற்ற பிரிவினர் அதற்கு உதவாதிருக்கலாம். அதற்கு தெளிவான காரணங்கள் உண்டு. அதாவது, அப்படியான சலுகை பெற்ற (உடமை) வர்க்கத்திற்கு தேவைப்படுவது,இன அடிப்படையில் பிரித்தாளும் முதலாளித்துவ ஆட்சியேயாகும். ஆதலால் எங்களால் முன்வைக்கப்படும் போராட்டத்தை, தேசிய இனப்பிரிவுகளுள் ஒடுக்கப்படும் சக்திகளை பிரதநிதித்துவப்படுத்தும் பரந்த சமூக இயக்கமாக ஆக்கிக் கொள்ளல் வேண்டும். அதனை, சோசலிஸ சமூகத்தை கட்டியெழுப்பும் வரையிலும் தொடர்ந்து செயற்படுகின்ற விரிவான சமூக அமைப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும். அது தேசியப் பிரச்சினையினால் உருவான பிரச்சனைகளுக்கு சிறியளவிலான மறுசீரமைப்பு

கோரிக்கைகளை மாத்திரம் பெறுவதற்கான அமைப்பாக மட்டும் இருக்கக் கூடாது. அவ்வாறு மறுசீரமைப்புகளுக்காக மட்டும் வரையறுக்கப்பட்டால் அதனுடாக இவ்வாறான இயக்கங்களின் தந்திரோபாய நோக்கங்கள் சிதைந்துவிடக்கூடும். இதனூடு, அந்த அமைப்பு சீர்திருத்தவாத அமைப்பாக மாறிவிடும். அது மறுசீரமைப்புவாத அமைப்பாக மாறுவதே ஆளும் வர்க்கத்தின் நோக்கமாகும். எனவே, தற்போதைய நிலவரத்தில் துரித மாற்றங்களை கொண்டுவருவதற்கான கோரிக்கை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன், இறுதி வெற்றிவரை செல்லும் தொடர் போராட்டமாக ஆக்கிக் கொள்வதன் மூலம் இச்சமூக அமைப்பின் நோக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும்

## (அ) இனவாதத்திற்கு எதிரான கருத்தியல் போராட்டம்.

இனவாதத்திற்கு எதிரான நேர்மையான அரசியல் செயற்பாட்டிற்கு, பல்வேறு மட்டங்களில் செயற்பட்டு வருகின்ற இடதுசாரிய ஜனநாயக சக்திகளிடையே காணப்படுவது, இலங்கையின் தேசிய பிரச்சினை தொடர்பாக ஒரே மாதிரியான தீர்வுத் திட்டங்களல்ல. அதனால், இது தொடர்பில் பலவேறுபட்ட வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தேசியப் பிரச்சினை தொடர்பான தீர்வு போலவே, அது தொடர்பிலானசித்தாந்ததலையீடுகள் மற்றும் செயற்பாடுகள் விடயத்தில் இந்த வேறுபாடு வெளிப்படுத்தப்படுகிறது.

## (ஆ)பெரும்பான்மையினரின் இனவாதம்

இலங்கைமக்கள் தொகையில் பெரும்பான்மையினர் சிங்களவர்கள் என்ற காரணத்தினால் (சிங்கள ஒடுக்கப்படுகின்ற மக்கள் அல்ல) சிங்கள முதலாளித்துவ வர்க்கம், முதலாளித்துவ அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டு ஆட்சி நடத்தும்போது சிறப்புரிமைகளை பெறும் நிலையிலுள்ளது. மறுபக்கத்தில் முன்னேறிய முதலாளித்துவ

நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியில் பெற்றுக்கொள்ளப்பட்ட அநேக ஜனநாயக அம்சங்கள் இலங்கையின் பிற்பட்ட முதலாளித்துவத்தினால் பெறமுடியாமல் போனமை தொடர்பாக இந்த ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. முதலாளித்துவ பொருளாதார தேவைகளுக்காக சுதந்திர உழைப்பாளியை உருவாக்கும் அரசியல் தேவைக்காக துடைத்தெறிய வேண்டிய முந்தைய முதலாளித்துவ பொருளாதார சமூக மற்றும் கலாச்சார பண்புகளை முழுமையாக துடைத்தெறிவதில் பின்தங்கிய இலங்கை முதலாளித்துவம் தோல்வி கண்டுள்ளது. அதனால், இலங்கையின் கட்டமைப்பிற்குள் குறிப்பிட்டளவிற்கு தொடர்ந்தும் நிலைத்திருக்க இடமளிக்கப்பட்டது. ஆகவே, முதலாளித்துவ சமூக வாழ்வுக்குள் ஆசியான் பழமைவாத பண்புகளில் அநேகமானவை நிலை பெற்றுபரவலாக சித்தரிக்கப்படும் நிலமையே காணப்படுகின்றது. இலங்கையின் முதலாளித்துவ ஆட்சியினால் தொடர்ந்தும் முதலாளித்துவ சுரண்டலை மேலும் தீவிரப்படுத்துவதற்காக இந்த நிலவரங்கள் பல்வேறு வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால், இலங்கையின் முதலாளித்துவ ஆட்சி தனது வர்க்க அரசியல் நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதில் வர்க்கக் காரணங்களைத் தவிர இனவாதம் அல்லது வேறு சமூகரீதியாக வெளிப்படுத்தப்படுகின்ற பாகுபாடுகளை பயன்படுத்திக் கொள்ளுதல் ஆரம்பம் தொட்டே இடம்பெற்று வருகின்ற அனுபவமாகும்.

(2) இத்தேவையை நிறைவேற்றுவதில் சிங்கள முதலாளித்துவ வர்க்கம் இனவாதத்தை பயன்படுத்தும் போது, சிங்கள இனவாதத்தின் தாக்கம் ஏனைய இனவாதங்களையும்விட பலமான ஆக்கிரமிப்பு நிலையை எடுக்கிறது. எனவே, அது சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையில் மேலாதிக்க இனவாத வடிவத்துடன் முன்வருவது பற்றிய கருத்து தவறானதல்ல. ஆகவேதான், ஏனைய இனவாதங்கள் எப்போதும் பேரினவாதத்திற்கு எதிர்வினையாக அதன் ஆரம்ப எழுச்சி குறிக்கப்பட்டது. வேறு இனவாதங்கள்

தலைதூக்குதல் சார்ந்த அகநிலை காரணிகள் இவ்வாறு குறிக்கப்பட்டாலும் மேற்படி விடயங்கள் சுட்டிக்காட்டப்படுவதால், ஏனைய அனைத்து இனவாதங்களினாலும் ஏற்படக்கூடிய அழிவுகளைக் குறைத்து மதிப்பிடுவது சரியாக இருக்காது. அந்த இனவாதங்கள் அனைத்தும் முற்போக்கானதாக இருக்காது என்பதுதான் காரணம். மறுபுறம், இடதுசாரிய மற்றும் விரிவான ஜனநாயக அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இனவாத கருத்தியல்கள், தெளிவாகவே, முதலாளித்துவ ஆட்சியாளரின் தேவைகளை நிறைவேற்றும் கொள்கையோடு சேர்ந்து அணிவகுக்கிறது. எப்படியான இனவாதமாக இருப்பினும், ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களின் சர்வதேசவாத தரத்திற்கு முற்றிலும் எதிரானதாகும்.

## இடதுசாரிகள் எல்லாவகையான இனவாதத்திற்கும் எதிரானவர்கள்

இடதுசாரி இயக்கம்அனைத்து இனவாதத்திற்கும் எதிரான பாத்திரத்தில் தேசிய பிரச்சினை தொடர்பிலான தமது வேலைத்திட்டத்தை ஓரிடத்திற்கு கொண்டுவர வேண்டும். உணர்ந்தோ, உணராமலோ --- ஓர் இனவாதத்திற்கு அல்லது இன்னோர் இனவாதத்திற்கு ஏதோவொரு வகையில் நெகிழ்வுத்தன்மையை காட்டும் வகையிலான அரசியல் வேலைத்திட்டத்தின் பக்கம்சாய்வது சரியாக இருக்காது. இடதுசாரி அமைப்பு அரசியல்ரீதியில் முரண்பட வேண்டியது முதலாளித்துவ வர்க்கமாகும். முதலாளித்துவ வர்க்க ஆட்சியாகும். அதனூடு ஒவ்வொரு பிரிவினதும் சித்தாந்த போக்குகளல்ல.அதற்குப் பதிலாக இடதுசாரி கருத்தியலின் இலக்காக வேண்டியது முதலாளித்துவ சித்தாந்தத்தின்அனைத்தின் மீதும்தான். அவ்வாறன்றி, தனியாக பிரித்தெடுத்த சித்தாந்தவாத பிரிவொன்றை அல்லது அதன் பலிக்கடாவான பல்வேறு அரசியல் போக்குகளை இலக்கு வைப்பதினால் இடதுசாரி அமைப்பின் நோக்கம் நிறைவேறாது.

## இனவாதம் எப்போதும் பிற்போக்கானதாகும்

அனைத்து முதலாளித்துவ சித்தாந்தங்களுக்குமிடையில் இனவாத கருத்தியல் அதன் ஒரு போக்கை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்கிறது. இனவாதம் உட்பட மேலும் பல முதலாளித்துவ கருத்தியல்கள் சாதாரண பொது மக்களை பலிக்கடாக்களாக வைத்துள்ளது. இலங்கை முதலாளித்துவ அரசியலில் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் இனவாதக் கருத்தியல் அனைத்தும் ஒன்றுக்கொன்று பராமரித்துக்(உரமூட்டிக்) கொண்டு பொதுவில் இனவாத கருத்தியலாக ஊட்டம் பெறுகிறது. இதனால், வர்க்கக் கருத்தாக்கத்தினால் ஏற்பட வேண்டிய வெகுஜனப் போராட்டம் மழுங்கடிக்கப்படுகிறது. எனவே சம உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்திற்கு முன்வந்திருக்கும் இடதுசாரிய சக்திகளினால் மேற்கொள்ளப்படும் கருத்தியல் மட்டத்திலான போராட்டத்தில் ஒரு இனவாதத்திற்கு எதிராக மாத்திரம் தமது போராட்டத்தை வரையறுப்பது அரசியல்ரீதியில் சரியானதல்ல. அதன் மூலம் முதலாளித்துவ கருத்தியலான இனவாத கருத்தியலுக்கு எதிரான போராட்டத்தின் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சித்தாந்த கருத்தியல்களும் இலங்கை கட்டமைப்பிற்குள் செயற்படும் அளவை விடவும், அனைத்து இனவாதங்களினாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதன் பிற்போக்குத்தன்மையினால் இலங்கை சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் செயலிழக்கச் செய்திருக்கும் நிலை குறித்த அவதானிப்புடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு தேசிய இனக்குழுமத்திலிருந்தும் எடுத்துக்காட்டாக கொள்ளக்கூடிய போர்க்குணம் குன்றியிருப்பது குறித்து நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள அழிவுகள் மீது இடதுசாரி இயக்கம் தனது கவனத்தை திருப்ப வேண்டும். இல்லாவிடின். அவ்வாறான அமைப்பினூடு செயலுருவாக்கப்படும் இனவாத சிந்தனைக்கு எதிராக பொதுவானதும் விரிவானதுமான போராட்டம் செயலற்றுவிடும்.

பொதுவில், இனவாதம் என்ற அடிப்படையில் இந்த பிற்போக்கு சிந்தனையை நோக்குமிடத்து அதனால் ஏற்படும் பிற்போக்கு உணர்வுகளை முன்னமேயே அறிந்து அதற்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆகவே, இனவாதத்திற்கு எதிரான கருத்தியல்ரீதியிலான போராட்டத்தில் இதனை நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும். பல்வேறு இனவாதங்கள் தமது இருப்பிற்கான ஏற்பாடுகளை செய்வதும் ஓர் அல்லது இன்னோர் இனவாதத்திற்கு பரஸ்பர எதிர்வினைகளின் அடிப்படையில்தான்.

## முன்னிலை வகிக்க வேண்டியது யார்?

தேசியப் பிரச்சினை தொடர்பிலான இன்றைய நிலை சம்பந்தமாக நீதியானதும். தர்க்கரீதியிலுமான திறனாய்வொன்று தேவைப்படுவது அதற்கு தீர்வை தேடுவதற்கான சரியான வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்து கொள்வதற்காகும். ஆதலால் மேற்குறிப்பிட்ட காரணங்களை அடிப்படையாக கொண்டு இனவாதத்தை தோற்கடிப்பதற்கான நடைமுறை வேலைத்திட்டத்தை உருவாக்குவதில் நாம் கவனம் செலுத்த வேண்டியது அந்த உயிரோட்டமுள்ள தளத்தில் எம்மால் பின்பற்றப்பட வேண்டிய சரியான செயற்பாட்டு வழிமுறைகளைக் கண்டறிவதற்காகவேயாகும். இனவாதத்தின் நாசகார அழுத்தம் உளவியல் காரணி என்ற எல்லையையும் கடந்த பொருளாயத யதார்த்தமாகியுள்ள நிலைமையில், அதற்கெதிரான போராட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவது இன்றியமையாததாகும். இந்த நடைமுறை வேலைத்திட்டத்தை செயலுருவாக்குவதில், பல்வேறு இனவாதிகளின் நாசகார செயல்களுக்கு ஏற்புடையதான அரசியல் தலையீட்டை உண்மையான வழக்காற்றுக்கு கொண்டுவர முடியும். இங்கு, முதல் நடவடிக்கையாக தேசத்தின் பெரும்பான்மையை பிரதிநிதித்துவம் செய்யும் ஒடுக்கப்பட்ட மக்களை முதன்மையாகக் கொண்டு இனவாதத்திற்கு எதிரான சாத்தியமான போராட்டத்தை

முன்னெடுக்க வேண்டும். அதாவது, நடைமுறைத் தளத்தில் சிங்கள ஒடுக்கப்பட்ட மனிதன் இனவாதத்திற்கெதிரான போராட்டத்தில் முன்னிலை வகிக்க வேண்டுமென்பது இதன் மூலம் குறித்துரைக்கப்படுகிறது. இனவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் ஆரம்பத்தைப் போன்றே, அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்திலிருந்து அளவுக்கதிகமான அர்ப்பணிப்புகளை பெற்று தேசத்தின் சிறு குழுவினரை பிரதிநிதித்துவம் செய்யும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே இனவாதத்திற்கு எதிரான போராட்டம் குறித்து நம்பிக்கையை வளர்க்க வேண்டும்.சிறுபான்மை மக்கள் மத்தியிலுள்ள சந்தேகத்தையும், அவநம்பிக்கையையும், ஓரங்கட்டப்படுவதையும் அவ்வாறான போராட்டத்தின் வாயிலாக ஒழித்துக்கட்ட செயற்பாட்டு ரீதியில் தலையிட வேண்டும். அப்படியான நடவடிக்கைகள் மூலம் மாத்திரமே, பெரும்பான்மையினரை கவ்விக் கொண்டுள்ள இனவாதத்தையும், சிறுபான்மையினரை கவ்விக்கொண்டுள்ள சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையையும், அனைத்துவித இனவாதங்களையும் தோற்கடிப்பதற்கான ஆரம்பத்தை எடுக்க முடியும். இப்படியான நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகள் ஊடாக மட்டுமே இன்றைய நாளில் இனவாதத்திற்கு எதிராக பெரும்பான்மை மக்களுக்கான கல்வியை வழங்கக் கூடியதாக இருக்கும். இதனை தர்க்கரீதியாக பகுப்பாய்வு செய்ததன் பின்பு, தர்க்கத்தின் வரம்பையும் கடந்து அடி எடுத்து வைக்கும் செயற்பாட்டுத் தளத்தில் தீர்வைத் தேடுவதற்காக ஆரம்பிக்கப்பட வேண்டிய பிரச்சினையாக இருப்பது அதனால்தான்.

## பேரினவாதத்திலிருந்து மீளும் வழி

பல்வேறு முதலாளித்துவ சித்தாந்தங்களுக்கு பலியான ஒடுக்கப்பட்டவரை அதிலிருந்து மீட்கும் போராட்டத்தில், அச்சித்தாந்தத்திற்கு பலியான மனிதனின் இன்றைய நிலை மாத்திரமல்ல, அப்படியான நிலைக்கு அவனை ஆளாக்கிய

ஒட்டுமொத்த முதலாளித்துவ அரசியலையும் விமர்சிப்பதற்கு முக்கியத்துவமளிக்க வேண்டியுள்ளது. இனவாதத்தை மாத்திரமல்ல, வேறு அவ்வாறான முதலாளித்துவ சித்தாந்தங்களுக்கு பலியான இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் பெரும்பான்மையான ஒடுக்கப்பட்ட வர்க்க மக்களையேசமூக மாற்றத்தின்போது மீண்டும் உந்துசக்தியாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்பதை நாங்கள் அறிந்துள்ளோம். ஆனால் இப்போது எங்கள் முன் நிற்கும் ஒடுக்கப்பட்ட மனிதனை போலல்லாது, பொது மக்களின் உணர்வுகளை புரிந்த, வேறுபட்ட நற்பண்புகள் நிறைந்த ஒடுக்கப்பட்ட மனிதனாகும். ஆனால், இந்த ஒடுக்கப்பட்ட அந்த மனிதனுக்கு எதார்த்தத்தை ஆய்வு செய்வதற்கான வாய்ப்பை போராட்டத்தின் ஊடாக ஏற்படுத்திக் கொடுப்பதனால் மாத்திரமே மக்கள் உணர்வுகளை வலுப்படுத்தும் போராளியின் பாத்திரத்திற்கு உயர்த்த முடியுமேயல்லாது, அதற்கான முயற்சிகளையாவது எடுக்காமலேயே அவன் வீழ்ந்திருக்கும் துன்பநிலை குறித்து அவனை அவமானத்திற்கு ஆளாக்குவதாலல்ல. அவ்வாறு அவமதிக்கப்படுவதற்கு தூண்டுதலாக இருந்த காரணிகளை வெளிப்படுத்துவதனாலும், ஏனைய இனக்குழுமங்களினது உரிமைகளுக்காக போராட அவன் தூண்டப்படுவதன் ஊடாக மாத்திரமே இந்த அவமானங்களிலிருந்து விடுதலையாக முடியுமென்பது அவனுள் நிலைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமே பல்வேறு முதலாளித்துவ மற்றும் சிறு முதலாளித்துவ அரசியல் சக்திகளினால ஒடுக்கப்பட்ட மக்கள் குழுமங்களை முடமாக்குதற்கு பயன்படுத்தும் இனவாதம் நுழையாமல் தடைபோடப்படும். இதன் மூலம் இடதுசாரிய சக்திகளுக்கும், இவ்வொடுக்கப்பட்ட மக்களுக்குமிடையில் அநாவசிய இடைவெளி ஏற்படாதிருக்க தேவையான பின்புலத்தை உருவாக்க முடியுமாயிருக்கும்.

## பொது மக்கள் கற்கைக்கான வழி போராட்டமே

இப்போதிருக்கும் நிலையிலேயே தேர்தலொன்றின்போது அல்லது வேறொரு அரசியல் தேவைக்காக இம்மக்களின் வாக்குகளை பெறுவதற்கு அல்லது அதிகரித்துக் காட்டும் தேவைக்காக இச்சக்திகளை பயன்படுத்துவதாக இதன் மூலம் கருத முடியாது. அதனால் சம உரிமைக்காக போராடும் அமைப்பிற்கோ, உண்மையான இடதுசாரி ஜனநாயக அமைப்பிற்கோ எவ்விதத்திலும் நீண்டகால பிரயோஜனம் கிடைக்காததுடன், அதனூடு விரிவான வெகுஜன அமைப்பை கட்டியெழுப்பும் நோக்கம் பலவீனமடைந்துவிடும். ஆனால், நடக்க வேண்டியது, விமர்சனத்தின் தரத்தை முதலாளித்துவ சித்தாந்தத்திறகு எதிராக வைத்திருப்பதோடு, நடைமுறைச் சாத்தியமான அரசியல் செயற்பாட்டிற்குள் இனவாதத்திற்கு எதிரான போராட்ட அநுபவங்களை அவர்களுக்கு கிடைக்கச் செய்வதினூடு, வெகுஜனக் கல்வியை உயர்மட்டத்திற்கு கொண்டு வருவதாகும். போராட்ட வழிகளை அவர்களுக்கு நெருக்கமாக கொண்டு வருவதன் மூலம், குறுகிய தனித்துவத்திற்குள் சிறைப்படுத்தப்பட்டுள்ள ஒடுக்கப்பட்டவர்களை ஐக்கியத்தின் அரசியலின் பக்கம் அழைத்துவர முடியுமென்பதனை ஏற்றுக்கொள்வதாயின், அதே வடிவத்தில் இனவாத கோட்பாட்டிற்கு எதிரான போராட்டத்தையும் அவரிடம் நெருங்க வைப்பதற்கு இவ்வாறான அமைப்பு பொறுப்பேற்க வேண்டும்.

முன்னிலை சோஷலிஸக் கட்சி முன்வைக்கும் தேசியப் பிரச்சினை சம்பந்தமான கொள்கைகளை செயற்படுத்துவதாயின் அதற்கான மக்கள் சக்தியை கட்டியெழுப்ப வேண்டும். பரந்தளவிலான பொதுமக்களை ஒருங்கிணைத்து நடத்தும் போராட்டத்தின் மூலமே அப்படியான மக்கள் சக்தியை கட்டியெழுப்ப முடியும். இன்றைய நிலையில் இலங்கையின் தேசியப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினைகள் விடயத்தில் தலையிடுமிடத்து, அனைத்து

தேசிய இனக்குழுமங்களும் சமவுரிமையை பெறும் நோக்கத்தில், அவ்வாறான தொடர் போராட்டத்திற்காக விரிவானதும் தந்திரோபாயமானதுமான வெகுஜன அமைப்பு என்ற வகையில் அனைத்து தேசிய இனக்குழுமங்களுக்கும் சமத்துவத்தை பெற்றுத்தரும் அமைப்பொன்றை நிர்மாணிக்க வேண்டும். அதற்காக கீழ் காணப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டத்தை முன்னிலை சோஷலிஸக் கட்சி முன்வைக்கின்றது.

## 1. பொருளாதார வாழ்வில் தனித்துவ பேதமின்றி சம வாய்ப்பு-களை பெற்றுக்கொள்ள அனைத்து இனக்குழுமங்களுக்கும் உள்ள உரிமையை உறுதி செய்தல்.

அரச அல்லது தனியார் துறையில் தொழில் கிடைக்குமிடத்து அல்லது கைத்தொழில், விவசாய, மீன்பிடி அல்லது சுய தொழில் என பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபடுமிடத்து அல்லது அதற்குத் தேவையான பல்வேறு சேவை வசதிகள், நிலம் மற்றும் நீர் உட்பட ஏனைய வசதிகள் வழங்கப்படுமிடத்து அல்லது பொருளாதார செயற்பாட்டில் பங்கேற்குமிடத்து நாட்டில் வாழும் எந்தவொரு இனக்குழுமத்தினதும் இன அல்லது சமய அடையாளங்கள் அதற்குத் தடையாக அமையக் கூடாததோடு, அவ்வாறான நிலைமைகள் உருவாகும் எந்தவொரு தருணத்திலும் அதற்கெதிராக போராடவும், அவ்வுரிமைகளை உறுதி செய்யவும் இந்த சமூக அமைப்பு உடனடியாக தலையீடு செய்யும்.

## 2. மொழி விடயத்தில் சம வாய்ப்புகளை பெறுவதற்கான உரிமை

தமிழ் பேசும் இலங்கை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தமது சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை சுதந்திரமாகவும், தாம் விரும்பிய மொழியிலும் மேற்கொள்வதற்குத் தேவையான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாக

இருப்பதுடன், அதற்குத் தேவையான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அதேபோன்று அரச தலையீட்டுடன் தமிழ்மொழி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் மொழிரீதியிலான திரிபுகளை இவ்வமைப்பு எதிர்ப்பதுடன், அம்மொழிகளின் சுய வளர்ச்சிக்குத் தேவையான நிலைமைகளை உருவாக்க வேண்டும். மொழித் துறையில் தமிழ் பேசும் மக்களுக்கு இந்த உரிமைகள் மறுக்கப்படும் எந்தவொரு தருணத்திலும் அதற்கெதிராக நடவடிக்கையெடுக்க தயங்காது.

### 3. கலாச்சார வாழ்வில் சமவுரிமை

பரந்த ஜனநாயக அடிப்படையில் மற்றும் பொதுமக்களின் சுய பங்களிப்புடன் பலதரப்பட்ட கலாச்சாரங்களின் மிகச் சிறந்த அம்சங்களை பரஸ்பரம் உள்ளீர்த்துக் கொள்வதற்காக இச்சமூக அமைப்பு தோற்றி நிற்கிறது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்குள் வரலாற்று ரீதியில் உருவாகியுள்ள பல்வேறு கலாச்சார அடையாளங்களின் நிலைத்தலை ஏற்றுக்கொள்வதும், ஒவ்வொரு கலாச்சாரங்களும் ஜனநாயக ரீதியில் ஒன்றாக நிலைத்திருப்பதற்குத் தேவையான சுற்றுச்சூழலை உருவாக்குவதும் இன்றைய முதலாளித்துவ அரசின் பொறுப்பாதல் வேண்டும். அதேபோன்று, பல்வேறு கலாச்சார அடையாளங்களின் வளர்ச்சிக்காக அனைத்து இனக்குழுமங்களுக்குமுள்ள ஜனநாயக உரிமை உறுதி செய்யப்படல் வேண்டும். தவிரவும், இன மற்றும் சமய கலாச்சார அடையாளங்கள் மீதான அரச மற்றும் அரச அநுக்கிரகம் பெறும் பல்வேறு அரசியல் அதிகாரங்களினால் ஏற்படும் மேலாதிக்க தலையீடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். அது மாத்திரமல்ல, இன்றைய சமூக- பொருளாதார மற்றும் அரசியல் சுற்றுச்சூழலினால் இலங்கை சமூகத்திற்குள் உச்சத்தில் வைத்திருக்கும் பல்வேறு இன, சமய, மற்றும் வேறு எந்தவொரு வடிவத்தையும் அடிப்படையாகக் கொண்ட குறுகிய தனித்துவவாத பிற்போக்குகளுக்கு எதிராக இந்த சமூக அமைப்பின்

மூலம், அவ்வாறான பிரச்சினைகள் எழும் எந்தவொரு துறையிலும் தேவையான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும். இலங்கை மக்கள் சமூகத்தின் கலாச்சார வாழ்வில் மற்றும் இருப்பில் நெருக்கடியை ஏற்படுத்தும் மேலாதிக்க தலையீட்டை கண்டிக்கும் (சமவுரிமை) இயக்கம் பல்வேறு இனக்குழுமங்களினதும் அவ்வாறான கலாச்சார உரிமைகள் மீறப்படும் எந்தவொரு தருணத்திலும் அதனால் பாதிக்கப்படும் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரோடு இணைந்து அதற்காக போராட நடவடிக்கை எடுக்கப்படும.

## 4. அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழ்வதற்கான சமவுரிமை

இன அடையாள பேதமின்றி அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய உரிமை தற்போதைய ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஆட்சி செய்த மற்றும் ஆட்சி செய்யும் அரசாங்கங்களினாலும், அரசாங்கத்தின் நேரடி தலையீடுகளினாலும் தமிழராக அல்லது முஸ்லிமாக இருப்பதனால் அவர்கள் மீதான ஒடுக்குமுறையும் விஷேட அடக்குமுறையும் கட்டவிழ்த்துவிடப்படுகிறது. யுத்தத்தை காரணம் காட்டி கடந்த ஆட்சிக்காலத்தில் படிப்படியாக வளர்ந்து வந்த இந்த ஒடுக்குமுறையும், அடக்குமுறையும் இன்று உச்சக்கட்டத்திற்கு வந்துள்ளது. தவிரவும், அரசாங்கத்தின் ஆசியுடன் வளர்ந்துவரும் அடிப்படைவாத, இனவாத கருத்துக்களும், அக்கருத்தியலின் அரவணைப்பில் அரச ஆசீர்வாதத்துடன் வளர்ந்துள்ள பல்வேறு அடிப்படைவாத அரசியல் குழுக்களினால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து வன்முறைகள் தொடுக்கப்படுகின்றன. நாட்டின் சட்டதிட்டங்களுக்கு முரணாக தமிழ் பிரஜைகளை கைது செய்தல், கடத்துதல், தடுத்து வைத்தல் போன்றவை தொடர்ந்தும் நடந்தவண்ணமுள்ளன. இன்று, இது, முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் செயற்படுவதானது அதன் அசுர வளர்ச்சியை காட்டுகிறது. ஆகவே, சிங்களவரல்லாத மக்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையை உருவாக்குதல்,

நாட்டில் வாழும் பெரும்பான்மை சிங்கள மக்களை விட வேறுபட்ட விதத்தில் விசாரணைக்கு உட்படுத்தல், பாதுகாப்பின் பெயரில் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தல் போன்றவை சமூகத்தில் சர்வசாதாரணமானதாக கணிக்கப்படுகின்றன. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் முகம் கொடுக்கும் இந்த விஷேட அடக்குமுறை நிலைமையை ஜனநாயகத்தை மதிக்கும் சக்திகள் எதிர்க்க வேண்டியதுடன், அனைத்து இனக்குழுமங்களுக்கும் இன, மத, தனித்துவ பேதங்களின்றி சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமைக்காக செயற்பாட்டு ரீதியான தொடர் போராட்டத்தில் பங்கேற்பது இயக்கத்தின் முழுமுதற் கடமையாக இருக்கும்.

## 5. அரசியலில் சமவுரிமை

எந்தவொரு இனக்குழுமத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் எந்தவொரு பிரஜைக்கும் இன அடையாள பேதமின்றி தான் விரும்பும் அரசியல் கருத்தைக் கொண்டிருக்கும் உரிமை உறுதி செய்யப்பட வேண்டும். இலங்கையில் இதுவரையிலான ஆட்சிக்காலத்திலும், குறிப்பாக தற்போதைய ஜனநாயக விரோத ஆட்சியிலும், அந்த உரிமை, பெரும்பான்மை சிங்கள ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் மறுக்கப்பட்டிருப்பதை விஷே டமாக வலியுறுத்த வேண்டும். என்றாலும் இன்று வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விஷேடமாகவும், ஏனைய பகுதிகளில் வாழும் அம்மக்களுக்கு பொதுவாகவும் தாம் விரும்பிய அரசியற் கருத்தை கொண்டிருக்கவும், செயற்படுவதற்குமான உரிமை இன ஒடுக்குமுறை ஊடாக பறிக்கப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் முஸ்லிம் இனக்குழுமங்கள் மத்தியிலிருந்து அரசாங்கத்தினதும், அரசாங்கத்தின் ஆசிபெற்றதுமான அரசியல் குழுக்களுக்கு மாத்திரம் அரசியலில் ஈடுபடும் உரிமை வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையை உடனடியாக மாற்ற வேண்டியதுடன், தாம் விரும்பும் எந்தவொரு அரசியல் கருத்தையும் கொண்டிருக்கவும்

செயற்படவும் அல்லது அதற்காக ஒருங்கிணையவும் அல்லது இனம், சமயம் அல்லது கலாச்சார அடையாளங்களோ தடையாக இருக்கக் கூடாது. இந்த உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து மக்கள் குழுமங்களுடனும் சேர்ந்து செயல்ரீதியிலான நடவடிக்கை எடுக்க இந்த சமூக அமைப்பு செயல்ரீதியிலான நடவடிக்கை எடுக்கும்.

மேற்படி நோக்கத்தை பயனுள்ளதாக ஆக்குவதற்கு அனைத்து இனக்குழுமங்களுடனும் இணைந்து இந்த அமைப்பு தனது வேலைத்திட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவர எதிர்பார்க்கும் முதற்கட்ட செயற்பாடுகளை கீழ்வருமாறு வரிசைப்படுத்த முடியும். காலத்திற்கு ஏற்றவாறு தோன்றும் பல்வேறு அரசியல் மற்றும் சமூக- பொருளாதார நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இது மேற்குறித்த அடிப்படையிலும் காரணிகளுக்கும் ஏற்புடையதான விதத்தில் மாற்றங்களும் செய்யப்படலாம்.

## செயற்பாடுகளின் வரிசை

1. ஆட்பதிவுத் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம் உட்பட அனைத்து அரச நிறுவனங்களிலும் தமிழ் பேசும் மக்களுக்காக தமிழ் மொழியில் தமது காரியங்களை செய்து கொள்வதற்கு ஏதுவாக மொழி வசதிகளை பெற்றுக்கொள்ள போராட வேண்டும்.

2. அரசியலமைப்பு சட்டத்தில் அரசகரும மொழி சம்பந்தமான உறுப்புரையில் சிங்களம் அரசகரும மொழி எனவும், தமிழும் அரசகரும மொழியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தமிழும் அரச கரும மொழியாகும் என்ற இணைப்பினால் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் அரசகரும மொழியாக

ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

3. யுத்தத்தினால் அழிந்த உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்காக நியாயமான இழப்பீட்டுத் தொகையை அதனால் பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அனைத்து மக்களுக்கும் கிடைக்கக் கூடிய உரிமையை அவசரத் தேவையாக ஏற்று அதனை நிறைவேற்றுதற்காக போராட வேண்டும்.

4. வடக்கு- கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் சில காணிகள் மற்றும் அரசின் தலையீட்டுடன் பறிக்கப்பட்டதற்கு எதிராக செயல்ரீதியில் தலையிட வேண்டும். அதேபோன்று, வடக்கு - கிழக்கு மக்கள் தமது விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்காக காணி வழங்குமாறு வற்புறுத்தும் போராட்டத்தின் பக்கம் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை அழைப்பதற்கு தலைமைத்துவமளிக்க வேண்டும்.

5. யுத்தத்தினால் அழிந்த வடக்கு - கிழக்கு அனைத்து மக்களினதும் பொருளாதார வாழ்வை உயர்த்துவதற்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக அனைத்து மக்களோடும் இணைந்து போராட வேண்டும். வேலையற்ற பட்டதாரிகளின் வேலை கிடைக்காத இளைஞர்களின் பொதுப் போராட்டத்தோடு வடக்கு- கிழக்கு இளைஞர்களை துன்புறுத்தும் பிரச்சினைகள் சம்பந்தமான போராட்டத்தை இணைத்தல், விவசாயிகளுக்கு தேவையான காணி, நீர், பசளை உள்ளிட்ட ஏனைய நிவாரணங்களை பெற்றுக் கொள்வதற்காக போராட வேண்டியதுடன், அப்போராட்டத்தை ஒட்டுமொத்த விவசாயிகளின் போராட்டத்தோடு ஒன்றிணைக்க வேண்டும்.

6. வடக்கு- கிழக்கு பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பாதுகாப்பு என்ற பெயரில் நடக்கும் இடையூறுகளை நீக்குவதற்காக போராட வேண்டும். தவிரவும், யுத்தத்தின் காரணமாக மீன்பிடி உபகரணங்கள் மற்றும் ஏனைய

சேவை வசதிகள் இன்மையால் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் வாய்ப்பை இழந்த மக்களின் தேவைகளை பெற்றுக்கொள்ள போராட வேண்டும். தென்னிந்தியாவின் தேசியவாத அரசியலின் நோக்கத்திற்காக நெருக்கடிகளை உருவாக்கும் விதத்திலான இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து ஜனநாயக ரீதியில் தலையிட வேண்டியதுடன், இப்பிரச்சினையில் இரு நாட்டினதும் ஒடுக்கப்பட்ட மீனவர்களுக்கிடையில் மோதல் ஏற்படாதவாறு, இரு நாட்டு மீனவர்களினதும் உரிமைகளுக்காகவும், அவர்களது ஒற்றுமைக்காகவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண போராட வேண்டும்.

7. யுத்தத்தினால் வீடுகளை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறித்த கால எல்லைக்குள் வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு போராட வேண்டும்.

8. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளினதும் தகவல்களை அவர்களது உறவினர்களுக்கு பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும்.

9. தடுப்புக்காவலிலுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்வதற்காக அவர்களுடன் இணைந்து போராட வேண்டும்.

10. புலம்பெயர் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை முறையாக குடியேற்ற அவர்களோடு இணைந்து போராட வேண்டும்.

11. தமிழ் மற்றும் முஸ்லிம் சமய நிலையங்களை தாக்குதல் உள்ளிட்ட முதலாளித்துவ அரசின் தலையீட்டினை கொண்டு நடத்தும் மதரீதியிலான துன்புறுத்தல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. யுத்தத்தினால் கணவனை இழந்த விதவைகளின் பொருளாதார வாழ்வையும் சமூக வாழ்வையும் கட்டியெழுப்பும்

சமூகப் பொறுப்பை வலியுறுத்தி, அதற்காக அவர்களை ஒருங்கிணைத்து, அவர்களுடன் இணைந்து போராட வேண்டும்.

13. வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் விவசாயம் செய்வதற்கும், மீன்பிடித்துறையில்ஈடுபடவும் மற்றும் வசிப்பதற்கு நிலமில்லாத அனைத்து மக்களினதும்உண்மையான பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வினை பெற்றுக்கொள்ள ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களோடு இணைந்து போராட வேண்டும்.

14. பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் மற்றும் தேசிய அடையாள அட்டையில் 'இனம்' சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் இந்தியத் தமிழரென குறிக்கப்படுவதற்குப் பதிலாக 'இலங்கையர்' என குறிப்பிடப்பட நடவடிக்கை எடுத்தல் ( இது பலதரப்பட்ட கலாச்சார அடையாளங்களுக்கு ஏற்ப பல்வேறு இனக்குழுமங்களுக்கு இடையூறு விளைவிக்கும் நோக்கத்தில் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை குறைக்கும் நோக்கத்தை கொண்ட செயற்பாடாகுமென்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும்), மேலும், உத்தேச அடையாள அட்டையின் ஊடாக செயற்படுத்த முயற்சிக்கும் ஜனநாயக விரோத அடக்குமுறை தரவுகளை சேகரிக்கும் செயற்பாட்டை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15. பெருந்தோட்டத்துறையை அண்டிய தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கை பிரஜைக்குரிய அடிப்படை உரிமைகள், அதாவது, வீடு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை பெற்றுக்கொள்ள அந்த மக்களுடன் சேர்ந்து போராட வேண்டும்.

16. அம்மக்களுக்கு நாள் சம்பளத்திற்கு பதிலாக, முதலாளித்துவத்தினால்கூட ஏற்றுக் கொள்ளப்பட்டதும் ஆகக்குறைந்த அடிப்படை தொழிலாளர் உரிமையான நிரந்த மாதச் சம்பளம் பெறும் நோக்கத்தை கொண்டதுமான போராட்டத்திற்குள் அவர்களை ஒன்றிணைக்க வேண்டியதுடன்,

அதற்காக ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கத்துடனும் இணைந்து போராட வேண்டும்.

17. அந்த மக்கள் மத்தியிலுள்ள படிப்பறிவின்மையை வேரறுப்பதற்காக அம்மக்களின் பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகளை கொண்ட பாடசாலை தொகுதியும், அம்மக்களின் கலாச்சார வாழ்வை சிறந்த முறையில் நடாத்திச் செல்வதை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டம், முதியோர் கல்வித்திட்டம் போன்றவற்றை பெற்றுக்கொள்ள போராட வேண்டும். பல யுகங்களாக ஏமாற்றப்பட்டுவரும் இம்மக்களை அதிலிருந்து மீட்பதற்காக சமவுரிமை இயக்கத்தின் தலையீட்டினால் நடைமுறைச் சாத்தியமான கலாச்சார மற்றும் கல்வித்திட்டம் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். நடைமுறையிலுள்ள சட்டரீதியான ஒதுக்கீடுகள் ஒருபோதும் போதுமானதாக இல்லை என்பதாலும், பெருந்தோட்டத் துறை பிள்ளைகள் விடயத்தில் அச்சட்டம் செயற்படும் வரையறைகள் காரணமாகவும் பெருந்தோட்டத் துறை தொழிலாளர்களினது குடும்பங்களை சார்ந்த பிள்ளைகள் உட்பட அனைத்து பிள்ளைகளையும் அடிமைச் சேவைக்கு பலியிடுவதற்கு எதிராக சட்டரீதியானதும், பண்பாட்டு ரீதியிலுமான ஒதுக்கீடுகளை உறுதிசெய்து வலுப்படுத்த போராட வேண்டும்.

18. பாதுகாப்பு என்ற பெயரில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடத்தும் இராணுவ மாதிரி ஆட்சியை ஒழித்து சிவில் நிர்வாகத்தை தாபிப்பதற்காக போராட வேண்டும். இராணுவ வற்புறுத்தலுடன் பிணைந்த அடக்குமுறை செயற்பாடுகளை நீக்குவதும், வீடுகளில் குடும்பப் படங்களை தொங்க வைத்தல் உள்ளிட்ட அனைத்து ஜனநாயக விரோத ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான அனைத்து மக்களுடனும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

19. அரச நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் நடக்கும்

சமய மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்கான அரசியல் தலையீட்டை ஒழிப்பதுடன், இந்நிறுவனங்களில் மதச்சார்ப்பற்ற நிலையை உறுதி செய்வதற்கு போராட வேண்டும்.

20. இலங்கையின் தேசியப் பிரச்சினையின் காரணமாக தோன்றிய யுத்தத்தினால் வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்டமையினாலும், இன ஒடுக்குமுறையினாலும் துன்பத்திற்குள்ளாகி தமது குடும்பங்களின் உயிர் பாதுகாப்புக்காக, உயிரை பணயம் வைத்து வெளிநாடு செல்ல முயலும் மற்றும் அவ்வாறான முயற்சிகளினூடு புலம்பெயர் நிலைமைக்கு தள்ளப்பட்டு 'அகதி வாழ்க்கை' வாழும் குடிமக்கள் உண்மையான மனிதநேய வாழ்வை பெற்றுக்கொள்ள தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் போராடப்படும்.

21. யாழ்ப்பாணம் மாத்திரமன்றி ஏனைய பல்கலைக்கழகங்களிலும் கல்வி பெறும் தமிழ் மாணவர்களை இலக்கு வைத்து நடக்கும் பாதுகாப்பு புலனாய்வு பிரிவினரின் அத்துமீறல்களை நிறுத்தவும், அந்த மாணவ மாணவிகள் தமது கல்வி மற்றும் அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ளவும் தேவையான சுதந்திரம் உறுதி செய்யப்படுவதற்காக ஏனைய மாணவர் சமூகத்தினரையும் மற்றும் அனைத்து மக்களையும் இணைத்துக் கொண்ட போராட்டத்திற்கு தலைமை வழங்க வேண்டும்.

22. தமிழ் ஊடகவிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகவியலாளர்களையும் இலக்கு வைத்து மேற்கொள்ளும் விஷேட அரச அடக்குமுறையை உடனடியான முடிவுக்கு கொண்டுவர, தேசிய மற்றும் சர்வதேச அனைத்து ஊடகவியலாளர்கள் மற்றும் மற்றும் முற்போக்கு மக்களை இணைத்துக் கொண்ட போராட்டத்திற்கு தலைமை வழங்க வேண்டும்.

23. இலங்கை மண்ணில் தமக்கான உரிமை மறுக்கப்படும் என்ற

மனநிலைக்கு தள்ளப்பட்டுள்ள சிங்களவரல்லாத மக்களுக்குள் அந்த உணர்வு தீவிரமடையும் விதத்திலான அனைத்துவித அரச மற்றும் அரசு அல்லாத சித்தாந்த தலையீடுகளுக்கு எதிராக சமூக மற்றும் கலாச்சார மட்டத்திலான செயற்பாடுகளை முன்னிலைக்கு கொண்டுவரவும் இச் சமூக இயக்கம் நடைமுறை சாத்தியமான பல்வேறு திட்டங்களை செயற்படுத்தும்.

24. இலங்கையின் தற்போதைய முதலாளித்துவ ஆட்சியின் காரணமாக வளரும் நெருக்கடி, அந்நெருக்கடியின் காரணமாக அதிகரித்துள்ள வேலையில்லாப் பிரச்சினையினால் இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையில் இணையும் ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் இளைஞர் யுவதிகளின் மனநிலையில் ஜனநாயகத்திற்கு முரணாக தினிக்கப்பட்டுள்ள 'போர் வீரர்' மனோநிலையையும், ஆட்சியாளர்களின் குறுகிய தேவையை நிறைவேற்றுதற்காக தமது உயிரைப் பணயம் வைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள துன்பநிலை சம்பந்தமாக அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் அறிவுறுத்துவதற்காக நாடு தழுவிய சமூக- கலாச்சார நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

25. பொதுவில் இலங்கை மக்கள் சமூகத்திற்குள் வளர்க்கப்பட்டுள்ள இனவாத கருத்தியலையும், அதனூடு மொழி விடயத்தில் மற்றும் மரபுவழி பழக்க வழக்கங்களிலும் உறுதியாக்கப்பட்டுள்ள அதன் கலாச்சார ரீதியிலான வெளிப்பாடுகளுக்கு எதிராகவும் சமூகத்தை அறிவுறுத்தும் கலாச்சார - கல்வித் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். இதனை பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வேலைத்தலங்கள், கிராமங்கள் மற்றும் நகரங்களை மையமாகக் கொண்ட வேலைத்திட்டமாக ஆக்குதல் வேண்டும். இதன் மூலம், தற்போதைய இனவாதத்தை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள

பிற்போக்கு கலாச்சார அடையாளங்களை தோற்கடிக்கும் நோக்கில் மொழியில்,மரபுவழி பழக்க வழக்கங்களினூடு புதிய கலாச்சாரத்தை அறிமுகப்படுத்துவதற்காக செயல்ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும. இதனை குடும்பம், கிராமம், நகரம், பாடசாலை, பல்கலைக்கழகம், வேலைத்தளம், சேவை நிலையம் மற்றும் விவசாய குடியேற்றங்களை மையமாகக் கொண்ட வேலைத்திட்டமாக கொண்டுவரவேண்டும்.

26. பல்வேறு இன மக்கள் வாழும் சமூகத்தில் இலக்கியத்தில் பல்வேறு கலைகளில் மற்றும் கலாச்சாரங்களோடு கலத்தலை நோக்கமாகக் கொண்டு தொடர்ச்சியானதும் ஒன்றிணைந்ததுமான கலைநிகழ்ச்சிகளை நாடுதழுவிய ரீதியில் ஏற்பாடு செய்ய இந்த சமூக அமைப்பு நடவடிக்கை எடுக்கும். இது அரச நிறுவனங்களினதோ, திணைக்களங்களினதோ தொடர்பின்றி பரவலான மக்கள் பங்கேற்றலை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்வது அத்தியாவசியமாகும். இதற்குத் தேவையான விளக்கமும், தொழில்நுட்ப உதவியும் பெற்றுக்கொள்ள தேசிய பல்கலாச்சார மையத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

27. பரஸ்பர மொழி கற்கைக்காக தொண்டரடிப்படையிலான படையணியை நிர்மாணிக்கவும், ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக இந்தச் சமூக அமைப்பினது தலைமையில் தேசிய மொழி கற்கை மையமொன்றை அமைக்கவும நடவடிக்கை எடுக்கப்படும்.

28. எவ்வகையான சாதிய ஒடுக்குமுறைக்கும், பல்வேறு சமய அல்லது கலாச்சார காரணங்களினால் பெண்களினது அல்லது சிறுவர்களினது மனித உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராக, சமவுரிமை இயக்கம் எந்தவொரு இனக்குழுமத்திலும் தோன்றக் கூடிய அவ்வாறான போக்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் குறித்து

அறிவுறுத்துவதற்கு நாடுதழுவிய வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கும்.

29. அதிகாரமற்ற ஆயுதக் குழுக்களை நிராயுதபாணியாக்குதல் மற்றும் அதிகாரபூர்வ ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளை முற்றாக அரசியலிலிருந்து விலக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, அதிகாரபூர்வ நடவடிக்கைகளுக்குள் மறைந்து நடாத்திச் செல்லப்படும் அரச பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படும் நோக்கத்தில் நெறிமுறையொன்றை பின்பற்ற வேண்டும். இதற்காக ஆயுதப்படைகள், பொலிஸ் மற்றும் நீதித்துறை போன்றவற்றை ஒன்றிணைத்த புரட்சிகர மாற்றங்களை முன்வைக்க வேண்டும்.

5

# உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிபடையாகக் கொண்ட, வெளிநாட்டுக் கொள்கையைத் தயாரிப்பது எப்படி?

முன்னிலை சோஷலிஸ கட்சி

## நுழைவு

1980களின் இறுதிப் பாதியில் சோவியத் தேசம் முதற்கொண்டு சோஷலிஸ நாடுகளின் வீழ்ச்சிவரை உலக அரசியலில் சோஷலிஸ முகாம் எனவும் ஏகாதிபத்திய முகாம் எனவும் முரண்பட்ட இரு அணிகள் இருந்தன. சோஷலிஸ நாடுகளில் வாழ்ந்த மக்கள் சிறந்த சமூக வாழ்வையும் பொருளாதார வாழ்வையும் பெறுவதை நோக்காகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் அந்த நாடுகளில் செயற்படுத்தப்பட்டன. இதனால், அவர்களது சமூக வாழ்க்கையும் பொருளாதார வாழ்க்கையும் முன்பிருந்ததை விடவும், சமகால முதலாளித்துவ உலகின் வாழ்க்கைத் தரத்தை விடவும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை கொண்டிருந்தது. சோஷலிஸ நாடுகளில் செயற்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள் முதலாளித்துவ

நாடுகளில் வாழ்ந்த மக்களையும் கவரக் கூடியனவாக இருந்தன. சமவுடமை சம்பந்தமாக அந்த மக்களிடம் காணப்பட்ட வரவேற்பை தடுப்பதற்கு, தமது நாட்டில் பல்வேறு சமூக பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்தும் விடயத்தில் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகள் ஆர்வம் காட்டின. ஆகவேதான் சமூக நலன்புரிவாதம் அதாவது பொருளாதாரத் துறையில் அரச தலையீடு அதிகரிக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட அரச நலன்புரி முதலாளித்துவ (கென்ஸிய பொருளாதாரக் கொள்கைகள் இதன்போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டன) மாதிரிக்குள் இலாபத்தை தேவைக்கேற்றவாறு அதிகரித்துக் கொள்ளும் மூலதனத்தின் தேவைகளுக்கு ஒருவித தடை ஏற்பட்டது. மூலதனம் தொடர்ந்து விரிவடைவதற்கு அரச ஏகபோக முதலாளியத்தில் இருந்த தடைகளைத் தகர்த்து நெருக்கடியை நீக்கும் நோக்கில் 1970களின் நடுப் பகுதியில் நவ தாராளமயம் உலகம் பூராவும் கடை விரித்தது. அதாவது, பொருளாதாரத்தில் அரச தலையீடுகளை இயன்றவரை குறைத்து தனியார் மூலதனம் சுதந்திரமாக நகர்வதற்கு முடிந்தவரை இடவசதிகளை திறந்துவிடும் காலகமாக இருந்தது. இதனால் தமது நாடுகள் மட்டுமல்ல இந்த பொருளாதார வலையில் சூழவுள்ள நாடுகளையும் சிக்கவைக்க ஏகாதிபத்திய பலவான்கள் வற்புறுத்தினர். அதாவது, தமது நாடுகளில் அத்தியாவசியத் துறைகளை பாதுகாக்கும் கொள்கையில் நிலைத்திருந்து சூழவுள்ள நாடுகளின் பொருளாதாரத்தை முற்றாக திறந்துவிட வற்புறுத்துவதாகும். அவ்வாறு சூழவுள்ள நாடுகளின் பொருளாதாரத்தை திறந்துவிட்டு அந்த நாடுகளில் நிலவிய பொருளாதார பாதுகாப்பு சட்ட திட்டங்களை முடிந்தவரை நீக்கிவிட்டு நவ தாராளமய முதலாளித்துவம் தனது விளையாட்டைத் துவங்கியது. தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஓர் அரசியல் அதிகார சபையும் நிர்மாணிக்கப்பட்டது. இலங்கையில் 1977இல் ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமும்,

இந்தியாவில் சிறிது காலமே ஆட்சியிலிருந்த மொரார்ஜி தேசாயின் அரசாங்கமும், பாகிஸ்தானில் சியாவுல் ஹக்கின் அரசாங்கமும் உருவாவதற்கான சமீபத்திய மற்றும் தெற்காசிய பிராந்திய உதாரணங்கள்தான் இவை. கிழக்காசியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் உலகின் பல பிராந்தியங்களில் இந்த பொருளாதாரமும் அரசியலும் நன்றாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. ஆகவே, நவ தாராளமய முதலாளித்துவத்தின் சமூக - பொருளாதார அரசியல் நுழைவு தற்செயலாக ஏற்பட்டதல்ல. அது சமூக - பொருளாதார மற்றும் அரசியல் என்ற வகையில் அதுவரை நிலவிய வரலாற்றை விடவும் வித்தியாசமான தோற்றுவாயாகும். என்றாலும் ஏகாதிபத்தியம் முதற்கொண்டு முதலாளித்துவத்தின் புதிய வடிவமாக உருவெடுத்த நவ தாராளமய முதலாளித்துவம் தனது வரலாற்றுக் கடமையை முழுமையாக நிறைவேற்றுவதில் அன்றைய சோஷலிஸ நாடுகள் தடையாக இருந்தன.

## முன்னைய சோஷலிஸ முகாமின் வீழ்ச்சியும் ஏகபோக அதிகாரமும்

உள்வீட்டு பலவீனங்கள் காரணமாகவும் ஏகாதிபத்தியம் உட்பட முதலாளியத்தின் பல்வேறு தலையீடுகள் காரணமாகவும் 1980களின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட சோஷலிஸ நாடுகளின் வீழ்ச்சியினால், உலக மூலதனம், தனது அரசியல் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உலகம் பூராகவும் சுதந்திரமாக பயணிப்பதற்கான வழியைத் தேடிக் கொண்டது. அதுவரை சோஷலிஸம் மற்றும் முதலாளித்துவம் என முரண்பட்டிருந்த உலக நிலை மாறி அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய தலைமைக்கு வேண்டியவாறு முழு உலக அரசியலை வழி நடத்தும் நிலை உருவானது.

சோவியத் தேசம் செயற்பட்ட காலத்தில் இருந்த சோஷலிஸ நாடுகள் மாத்திரமல்ல ஆபிரிக்கா, ஆசியா, மத்தியகிழக்கு மற்றும் தென்னமெரிக்காவில் ஏகாதிபத்தியத்திய எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட சோவியத் முகாமொன்று உருவாக்கப்பட்டிருந்தது. அதற்கு

தேவையான அளவு பொருளாதார உதவிகளையும் சோவியத் நாடு செய்தது. இந்த சோவியத் முகாமின் பராமரிப்பிற்காக சோவியத் தொழிலாளர்களின் உபரி உற்பத்திகளிலிருந்து பெருமளவு ஒதுக்கப்பட்டது. மறுபுறம் சோவியத்தின் அரசியல் வழிகாட்டலின் கீழ் அணிசேரா நாடுகள் என்ற பெயரில், இந்த இரு முகாங்களையும் பெயரளவில் எதிர்த்த சர்வதேச நிறுவனம் மேற்படி முரண்களின் காரணமாகவே உருவாகியது. ஆகவேதான் 1990இற்கு முன்பிருந்த பனிப்போர்க் காலத்தில் ஏனைய முதலாளித்துவ நாடுகள் அமெரிக்காவின் தலைமையிலான முதலாளித்துவ முகாமின் யுத்த, பொருளாதார ஒப்பந்தங்களுக்கு வேறு விதத்தில் கட்டுப்பட்டிருந்தன. நேட்டோவிற்கு எதிராக சோஷலிஸ முகாமின் வார்ஸோ ஒப்பந்தமும், உலகின் பல்வேறு பிராந்தியங்களில் பல்வேறு முதலாளித்துவ நாடுகளுடன் சேர்ந்து அமெரிக்காவின் தலைமையில் சோவியத் நாட்டுக்கு எதிராக உருவாக்கிய சியெடோ, சென்டோ போன்ற போர் ஒப்பந்தங்களும் அன்றைய உலக முரண்கள் வெளிப்பட்ட முறை குறித்து உதாரணங்களை தருகின்றன. விஷேடமாக, பனிப்போர் காலம் பூராவும் ”சோவியத் தாக்குதலுக்கு” ஐரோப்பிய நாடுகள் தயாராக வைக்கப்பட்டன. எனவே, ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் அமெரிக்க யுத்த பலத்தின் மீது தங்கிச் செயற்பட்டன. இந்த நிலை அரசியல் ரீதியில் மட்டுமல்ல, பொருளாதார ரீதியிலும் அமெரிக்காவுக்கு நன்மையாக அமைந்தது. சோவியத் உள்ளிட்ட சோஷலிஸ நாடுகளின் வீழ்ச்சியோடு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் அமெரிக்க பிணைப்பிலிருந்து ஓரளவு விடுபட்டன.

### 1990களின் பின்னர் நிலைமையில் மாற்றம்

1980களின் இறுதியில் சோவியத் நாட்டின் சோஷலிஸம் வீழ்ச்சியடைந்தது. 1990களில் பேர்லின் சுவர் உடைக்கப்பட்டது. இதனால், கிழக்கு ஐரோப்பாவில் அதுவரையிருந்த சோஷலிஸ நாடுகள் ஒவ்வொன்றாக முதலாளித்துவத்தின்பால் சாய்ந்தன.

உலக வரலாற்றில் முதன் முதலாக, 1917இல் சோஷலிஸ நாடொன்றை உருவாக்கி, முந்தைய நூற்றாண்டுகளில் காணக் கிடைக்காத புதுமைகளையும் முன்வைத்த இருபதாம் நூற்றாண்டு, நூற்றாண்டின் இறுதியில் பல சவால்களை 21ஆம் நூற்றாண்டுக்கு வைத்துவிட்டு வரலாற்று மேடையிலிருந்து விலகிச் சென்றது. 1990களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட இந்த உலக நிலைமையின் முன்னால் பொருளாதார, அரசியல் மற்றும் யுத்த நோக்கங்களுக்காக ஏகாதிபத்திய நாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் பிரபலங்களுக்கிடையில், சோஷலிஸ முகாம் நிலைத்திருந்த காலத்தில் மறைக்கப்பட்டிருந்த போட்டி வெளிச்சத்திற்கு வந்தது. அதன் விளைவாக உலகம் பூராகவும் பல அதிகார மையங்கள் உருவாகின. உலக அரசியலில் வியாபித்து வரும் அரசியல் நடப்புகளை ஆராயும்போது இதனை அறிய முடியும்.

## புதிய முரண்கள் உருவாதல் அல்லது ஏகாதிபத்திய முரண்கள்

மனித சமூகம் எதிர்கொண்ட மிக மோசமான அழிவுகளை சந்தித்த முதல் உலக யுத்தம் மற்றும் இரண்டாவது உலக யுத்தம் உருவானதற்கு காரணம் முதலாளித்துவ முகாமுக்கும் சோஷலிஸ முகாமுக்கும் இடையிலான முரண்பாடுகளல்ல. முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் நிலவிய முரண்பாடுகளே காரணம். அரசியல் மற்றும் பொருளதாதார ரீதியில் பகிர்ந்து கொண்டிருந்த உலகை மீண்டும் பகிர்ந்து கொள்வதற்காக உலக பலவான்களுக்கிடையில் நிலவிய போட்டியின் விளைவே உலக யுத்தம். இவ்வாறு குறிப்பிடக் காரணம் ஏகாதிபத்தியத்திற்கு இடையிலான முரண்கள் காரணமாக யுத்தம் ஆரம்பமாகாவிடினும், உலகம் பூராகவும் யுத்த - அரசியல் மோதல்கள் பெருமளவில் நடப்பதுதான். ஈராக்கிலும், சிரியாவிலும், ஆப்கானிஸ்தானிலும், உக்ரேனிலும் நடக்கும் யுத்தம் தற்செயலானது அல்ல. அதன் பின்புலத்தில் ஏகாதிபத்திய தேவைகள் குவிந்திருப்பதை

நுணுக்கமாக ஆராய்ந்தால் அறிந்து கொள்ள முடியும். தற்போதைய ஏகாதிபத்தியத்தின் முரண்களை புரியாது உலகம் பூராவும் செயற்படும் அரசியலை புரிந்து கொள்ள முடியாது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றமும், யூரோவை அறிமுகப்படுத்தியமையும் காரணமாக அமெரிக்காவை முழுமையாகச் சாராத பொருளாதார மையம் உருவாகியது. 11 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டு 1993இல் ஆரம்பிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் இன்று 28 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அரசியல் ரீதியில் அமெரிக்காவிலிருந்து விலகியிருந்தாலும், பொருளாதார அதிகார மையம் என்ற வகையில் சர்வதேச நாணயத்திற்குச் சமமான ஐரோப்பிய மத்திய வங்கியையும் அமைத்து செயற்படுகிறது. புதிய ஏகாதிபத்திய மையமாக முன்னேறுவதற்கான சகல அடையாளங்களையும் காட்டி வரும் ரஸியாவிற்கு எதிரான முரண்களின்போது அமெரிக்காவின் கொள்கையையே ஐரோப்பிய ஒன்றியமும் கடைப்பிடிக்கிறது. தற்போதைய உக்ரேனிய பிரச்சினையின் போது இதனை நன்றாக அவதானிக்க முடியும். அங்கே அமெரிக்காவும், ஐரோப்பாவின் பலம் பொருந்திய நாடுகளும் உக்ரேனை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் நிலைப்பாட்டிலேயே உள்ளன.

## ஐரோப்பாவும் உக்ரேனும்

சோவியத் தேசத்தின் வீழ்ச்சியோடு புதிய முதலாளித்துவ பலவானாக உருவெடுக்கும் ரஸியாவை மையமாகக் கொண்ட புதிய அதிகார மையமொன்று உருவாகி வருகிறது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான முரண்களின் பல்வேறு வடிவங்கள் இந்த பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த இரு தசாப்தங்களாக செயற்பட்டு வருகின்றன. பழைய சோவியத் தேசத்துடன் இணைந்திருந்த சோவியத் கூட்டரசாங்கங்களில்

செயற்பட்ட நிறப் புரட்சியின் ஊடாக இந்த நாடுகள் சோவியத் மையத்திலிருந்து மேற்கத்தியத்தின்பால் ஈர்த்துக் கொள்ளும் திட்டமொன்றும் செயற்பட்டது. இது இன்னும் முடிவுக்கு வரவில்லை. விஷேடமாக சமீபத்தில் உக்கிரமடைந்த உக்ரேனிய பிரச்சினையின் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய முகாமுக்கும், ரஸியாவுக்குமிடையில் அரசியல் அதிகாரப் போட்டி அரங்கிற்கு வந்தது. இது ஐரோப்பிய தீபகற்பத்தில் யுத்தமொன்றுக்கான சூழலையும் உருவாக்கியது.

### மத்திய ஆசியா

சீனாவிற்கும் ரஸியாவுக்கும் இடையில் அமைந்துள்ள மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கும் வாசலாக இருக்கும் மத்திய ஆசியாவின் ஆப்கானிஸ்தான் விடயத்தில் அமெரிக்கா முதன்மையாக மேற்கத்திய வல்லாதிக்கவாதிகளின் யுத்த - அரசியல் தலையீடு இந்த ஏகாதிபத்திய முரண்களின் இன்னொரு பக்கமாகும். சீனாவினதும், ரஸியாவினதும் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ள சங்காய் கோப்ரேஷன் மேற்கத்திய தலையீட்டுக்கு எதிரான நடவடிக்கையாகும்.

### ஆசியா

தென் சீன கடற்பிராந்திய தேச எல்லை சம்பந்தமாக சில காலமாக நிலவிவரும் பிரச்சினையை வைத்து அமெரிக்க அதிகார மையத்திற்கும், சீன அதிகார மையத்திற்குமிடையில் பனிப்போர் உருவாகியுள்ளது. தென் சீன கடலில் ஸ்ப்ரோலி என அழைக்கப்படும் தீவுகளை சீனா வலுக்கட்டாயமாக அபகரித்துள்ளதாகவும், அவை மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்னாமுக்குச் சொந்தமானவை எனவும் கூறி அமெரிக்கா அந்த நாடுகளுக்கு ஆதரவாக செயற்படுகிறது. இத் தீவுகள் யாருக்கு சொந்தமாயிருப்பினும், அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையிலான அதிகார அரசியலை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த

எல்லைப் பிரச்சினை பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவு. ”சென்காகு” தீவுகளுக்கு ஜப்பானும் சீனாவும் பரஸ்பர உரிமை பாராட்டுவதால் ஏற்பட்டிருக்கும் நிலைமையும் இதைப் போன்றதுதான். இந்த தீவுகளுக்கு அருகாமையில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும், எண்ணெய் அகழ்வு போன்ற செயல்களில் ஈடுபடவும் இரு நாடுகளும் உரிமை கோருவதால் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகின்றன. 2011 செப்டம்பர் 8ஆம் திகதி ஜப்பானுக்கு சொந்தமான கடற்படை பாதுகாப்புப் படகும் சீனாவின் ட்ரோலர் படகும் மோதியதால் ஏற்பட்ட பிரச்சினையும், 2011 மார்ச் 2ஆம் திகதி பிலிப்பைன்சின் எண்ணெய் அகழ்வுப் படகொன்று சீனப் படகுகளால் சுற்றி வளைக்கப்பட்டமையால் ஏற்பட்ட பிரச்சினையும் பிரபல உதாரணங்களாகும்.

ஆசிய பசிபிக் பிராந்தியங்களை அடிப்படையாக கொண்டு, ஜப்பானும் அவுஸ்திரேலியாவும் மறுபுறம் கிழக்காசிய நாடுகளையும் சம்பந்தப்படுத்தி அமெரிக்கா, அந்த நாடுகளுடன் செய்து கொண்ட பல்வேறு யுத்த - அரசியல் ஒப்பந்தங்களின் ஊடாக சீனாவை சுற்றி வளைக்கும் திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. வடகொரிய தாக்குதல் குறித்து பயமுறுத்தி ஜப்பானிய அரசியலை ஒழுங்குபடுத்தும் ஆற்றலையும் அமெரிக்கா கொண்டுள்ளது. தென்கொரியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அமெரிக்க இராணுவ தலையீட்டின் மூலம் இப்பிராந்தியம் சந்பந்தமாக அமெரிக்காவின் நிலைப்பாடு தெளிவானது. சீனாவின் முத்துச்சரம் திட்டம் இதற்கு எதிராக தயாரிக்கப்பட்டதுதான் என்பதை நெருக்கமாக ஆராயும்போது தெரியும். உலகின் முதல் தர பொருளாதார பலவான் என்ற வகையில் சீனா, ஆசிய பிராந்தியத்திலும், அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பானுடனும் நெருங்கிய பொருளாதார தொடர்புகளை வைத்துள்ளது. ஆசியான் அமைப்பைச் சேர்ந்த நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களை செய்தும் உடன்பாடுகளுக்கு வந்தும் சீனா தனது ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. பலவேறு

பொருளாதார மையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியும், சில வேளைகளில் அதற்கு முரணான அரசியல் மையங்களுக்கு இணையாக யுத்த - அரசியல் ஒழுங்குப் பத்திரத்துக்கு அமைய செயற்படுகின்றமை பல பிராந்தியங்களில் புதிய அனுபவத்தை தந்துள்ளது.

## ஆபிரிக்காவும் லத்தீன் அமெரிக்காவும்

ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தில் அமெரிக்கா வசமிருந்த பொருளாதார ஆதிக்கம் நலிவடைந்து சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இன்னொரு புறம், அமெரிக்க எதிர்ப்பு அரசியல் வலுவடைந்து 2000ஆம் வருடத்தின் ஆரம்பத்தோடு லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றில் அமெரிக்காவுக்கு எதிரான மக்கள் எழுச்சி தலைதூக்கியது. லத்தீன் அமெரிக்காவில் அல்பா போன்ற அமைப்புகளின் தோற்றமும், வெனிஸ்யூலா, பிரஸீல் போன்ற நாடுகளின் பொருளாதார தலையீடும் புதிய பொருளாதார - அரசியல் மையமொன்றை உருவாக்கியது.

## மத்திய கிழக்கு பிராந்தியம்

ஈரான், ஈராக், லிபியா மற்றும் சிரியா போன்ற நாடுகளின் அரசியல் அதிகாரத்திற்கு எதிராக அமெரிக்கா கடந்த தசாப்தங்களில் செயற்பட்ட விதம் முழு உலகும் அறிந்ததே. பொருளாதார அழுத்தத்தையும், சில மத்திய கிழக்கு நாடுகளில் நீண்ட காலமாக நிலவிய தன்னிச்சையான ஆட்சிக்கு எதிராக, அந்நாடுகளின் மக்கள் மத்தியில் உருவான எதிர்ப்பையும் தமது நோக்கத்திற்காக அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய நாடுகள் முகாமைத்துவம் செய்த விதம் வெளிப்படையாக தெரிகிறது. 2010 டிசம்பர் 18ஆம் திகதி ருனீஸியாவில் ஆரம்பித்து எகிப்து, லிபியா, யேமன், பஹ்ரைன், சிரியா போன்ற நாடுகளில் பரவிய மக்கள் போராட்ட அலை பொதுவில் ”அரேபிய வசந்தம்” என அழைக்கப்படுகிறது. இந்தப் போராட்டங்களில் காணப்பட்ட சிறப்பம்சமானது, சர்வாதிகார

ஆட்சிக்கு எதிராக ஜனநாயகத்திற்கான மக்கள் எழுச்சியாகும். ஆனால், வேறு முதலாளித்துவ குழுவொன்று அந்த மக்கள் எழுச்சியை பயன்படுத்தி அதிகாரத்திற்கு வர முயற்சித்ததோடு, போராடிய மக்களின் ஜனநாயகத்திற்கான நம்பிக்கையும் காட்டிக் கொடுக்கப்பட்டது. 2011 ஜனவரி 14ஆம் திகதி டினீஸிய சர்வாதிகாரி பென் அலியை பதவியிலிருந்து தூக்கி எறிந்ததோடு இந்தப் போராட்டத்தின் முதற்கட்டம் ஆரம்பமாகியது. 2011 பெப்ரவரியில் எகிப்தின் ஹுஸ்னி முபாரக் அரசாங்கம் மக்களால் கவிழ்க்கப்பட்டது. அதன் பின்னர் அதிகாரத்திற்கு வந்த மொஹம்மத் முர்ஸியின் ஆட்சிக்கு எதிராகவும் மக்கள் கிளர்ச்சி செய்தனர். 2013 ஜூலை மாதம் முர்ஸி விரட்டப்பட்டார். லிபியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியின்போது 2011 ஆகஸ்டில் கேணல் கடாபி கொல்லப்பட்டதோடு ஆட்சியும் கவிழ்க்கப்பட்டது. யேமனில் அல் அப்துல்லா சாலியின் ஆட்சி 2012 பெப்ரவரியில் கவிழ்க்கப்பட்டது. இந்த ஆட்சிகளை விரட்டியடிப்பதற்கான மக்கள் போராட்டம் தீவிரமடையும்போது, அதனை தமது பொம்மை அரசாங்கங்களை உருவாக்குவதன் மூலம் முடிவுக்கு கொண்டுவர ஏகாதிபத்தியவாதிகள் கடைசி வரை முயன்றமை உலகறிந்த ரகசியமாகும். தமது கட்டளைக்கு இந்த நாடுகளை அடிபணிய வைப்பதற்காக பொருளாதாரத் தடை, யுத்தி ரீதியில் தலையிடல், பொம்மை அரசாங்கங்களை உருவாக்குதல் வரை விரிவான திட்டத்தோடு மத்திய கிழக்கு அரசியலுக்கு எதிரான அமெரிக்க செயற்பாடுகள் அணிவகுத்துள்ளன.

### சீன - ரஸிய அதிகார மையம் உருவாதல்

வளர்ந்து வரும் ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான முரண்களை மேலும் அதிகரிக்கச் செய்து அமெரிக்கா உட்பட மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சீன - ரஸிய அதிகார மையமொன்று உருவாகி வருகிறது. உலகின் பல பாகங்களிலும் உருவாகிவரும் அரசியல் மோதல்களின் மத்தியில் வெளிப்படும்

பலவான்களின் பொருளாதார ஆதிக்கத்திற்கான மோதல்களினால் சீன - ரஸிய அதிகார மையம் படிப்படியாக வளர்ந்து வருகிறது. மத்திய ஆசியா தொடர்பிலான மோதல்களின் போதும், மத்திய கிழக்கு தொடர்பிலான மோதல்களின்போதும், உக்ரேனிய பிரச்சினையின் போதும் இந்த சீன - ரஸிய அதிகாரம் பலம் பொருந்தி வருவதை அவதானிக்க முடியும்.

## தெற்காசிய பிராந்தியமும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையும்

தெற்காசியப் பிராந்தியத்தில் அரசியல் பொருளாதார மற்றும் யுத்த ரீதியிலான அதிகாரத்திற்காக சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் உள்ள முரண்பாடுகளும், சீனாவுக்கு எதிராக இந்தியா அமெரிக்காவுடன் வைத்திருக்கும் நட்புறவுக் கொள்கையும் பிராந்திய அரசியல் சம்பந்தமாக அவதானிக்கையில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும். இலங்கையில் தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை எடுத்துக் கொண்டால் அரசியல் என்ற வகையில் சீனா மற்றும் ரஸியாவின் பக்கம் சாய்வதாக தெரிந்தாலும், மறுபுறம் பொருளாதார ரீதியில் மேற்கத்திய அல்லது இந்திய உறவுகளுக்கு தடை ஏற்படாதவாறு செயற்படுவதும் தெரிகிறது.

## வெளியுறவுக் கொள்கையை தயாரிப்பது எங்ஙனம்?

இன்றைய நிலையில் உலகின் பலவீன நாடுகளும் சூழவுள்ள நாடுகளும் பல்வேறு ஏகாதிபத்திய அதிகார மையங்களுக்கிடையிலான முரண்பாடுகளில் சிக்கியுள்ளன. பாரிய முரண்பாடுகளுடனும், நெருக்கமாகவும் அல்லாது, சில வேளைகளில் இந்தியாவுக்கும் சில வேளைகளில் சீனாவுக்கும் மேலும் சில வேளைகளில் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்ப ஆட்டம் போடும் நவ தாராளமய பொருளாதார உபாயத்தை சுமந்துள்ள ராஜபக்ஷ ஆட்சியை நாம் இந்த கோணத்தில் தான் பார்க்க

வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பை மேலோட்டமாக காட்டுவதற்காக சீனாவை விடவும் நெருக்கமாக உள்ளதாக வெளிப்படுத்திய போதிலும், உள்ளுக்குள் அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார அரசியல் நோக்கங்களுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தயாராக இருப்பதனால் அவர்களுடனும் எந்த முரண்பாடுகளும் கிடையாது. மனித உரிமைகள் மீறல், யுத்தக் குற்றச் செயல்கள் போன்றவற்றால் ஏற்பட்டுள்ள ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினையை ஐரோப்பிய நாடுகள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஆயுதமாக கையாள்கின்றன. எனவே, தற்போதை சிறிய முரண்களை வைத்து நிபந்தனையின்றி இன்றைய அரசாங்கத்தை மாற்றும் தேவை அவர்களுக்கு இல்லை. இதை விட சிறப்பாக தமது உபாயங்களை முன்னெடுத்துச் செல்ல ஏதுவான அரசாங்கமொன்றை உருவாக்க முடியுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தை தவிர்க்க வேண்டிய தேவையும் அவர்களுக்கு இல்லை.

இந்த நிலையில், பாட்டாளி வர்க்க மக்களின் வெற்றிக்காக செயற்படும் புரட்சிகர அமைப்பு தனது வெளியுறவுக் கொள்கையை தயாரிப்பது எப்படி? அதன் முக்கிய நோக்கமும் இலக்கும் எத்தகையது? உலக முதலாளித்துவத்தை பாடைகட்டாமல் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற முடியாது. ஆகவே, உலக முதலாளியத்தை தோற்கடிக்கும் நோக்கத்தோடு பாட்டாளி வர்க்க சர்வதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். சோஷலிஸ முகாமின் வீழ்ச்சியின் பின்னர் நிறுவன மற்றும் கருத்தியல் ரீதியில் இடதுசாரிய அரசியல் செயற்பாடு மற்றும் அது குறித்த பேச்சுக்களும் நலிவடைந்து முதலாளித்துவ கருத்தியல் முழு உலகையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. ஆகவே உலக முதலாளித்துவத்தை தோற்கடிக்க கருத்தியல் மட்டத்திலும், நிறுவன மட்டத்திலும் விரிவான இடதுசாரிய உரையாடல்களையும் செயல் திட்டத்தையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட

கொள்கையை பின்பற்ற வேண்டும். உலக மூலதனத்திற்கு எதிராக போராடும் உலக ஒடுக்கப்பட்ட மக்களும், அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் முற்போக்கு அமைப்புகள், அரசியல் இயக்கங்கள் ஆகியவற்றுடன் கைகோர்த்த சர்வதேசவாத கொள்கையை கடைபிடிக்க வேண்டும். ஏகாதிபத்தியம் தனது நிகழ்ச்சி நிரலின்படி வழிநடத்தும் யுத்த, பொருளாதார - அரசியல் நோக்கங்களுக்காக உலக மக்களின் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் ஐக்கிய நாடுகள் மன்றம் போன்ற நிறுவனங்களிடம் மனித உரிமை மீறலுக்கு எதிராக நீதியை வழங்குமாறு கெஞ்சுவதற்கு பதிலாக, மனித உரிமைகள் மறுக்கப்பட்டு தமது உரிமைகளுக்காக போராடும் முற்போக்கு அமைப்புகள், இடதுசாரிய இயக்கங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மீது நம்பிக்கை வைத்து சர்வதேச மட்டத்தில் அவர்களது ஒன்றிணைவுக்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோன்று, உருவாக்கப்படும் சோஷலிஸ நாடுகளின் பாதுகாப்பு விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தி, உலக நாடுகளோடு நட்புறவும் மனிதநேயமும் கொண்ட வெளியுறவுக் கொள்கையை கடைபிடித்தல் வேண்டும். மேற்குறித்த கொள்கைகளின் அடிப்படையில் செயல் ரீதியாக கீழ்வரும் விடயங்களை கடைபிடிக்க எதிர்ப்பார்க்கப்படுகிறது.

01. உலக மூலதனத்தின் வெளிப்படையான சுரண்டலுக்கு எதிராக உலகின் எந்தவொரு இடத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கு சார்பாக உதவி ஒத்தாசைகளை வழங்குவதுடன், உலக ஒடுக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மானுட முன்னேற்றத்திற்காக உலக சோஷலிஸ புரட்சியின் தேவைக்காக போராடப்படும்.

02. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் இராணுவ தலையீடுகளுக்கு எதிராக உலக ஒடுக்கப்பட்ட மக்களினால் நடத்தப்படும் போராட்டங்களுக்கு சார்பும் ஒத்துழைப்பும் வழங்கப்படும்.

03. உலக நாடுகளில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை வைத்து தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள ஏகாதிபத்தியம் கையாளும் பொருளாதார, அரசியல் மற்றும் யுத்த ரீதியிலான தலையீடுகளுக்கு எதிராகவும், அந்த நோக்கத்துடன் ஒப்பந்தங்களுக்கு வருதல், நாடுகளில் யுத்த முகாம்களை நிறுவுதல், யுத்த நடவடிக்கைகளுக்காக பூமி, கடல் மற்றும் வான் எல்லை போன்றவற்றை பயன்படுத்துவதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

04. உலகின் எந்தவொரு இடத்திலும் நடக்கும் பாட்டாளி வர்க்க போராட்டங்கள் மற்றும் விடுதலை போராட்டங்களில் பங்கெடுக்க விரும்பும் எந்தவொரு தொண்டருக்கும் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அந்த போராட்டதிக்கு பொருள் ரீதியில் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

05. சோஷலிஸ நாட்டின் பாதுகாப்பையும் ஆளுமையையும் பாதுகாத்து மக்கள் அபிலாஷைகளை நிறைவு செய்வதற்காக உலக நாடுகளுடன் நட்புறவு மற்றும் மனிதநேயத்துடனான வெளியுறவுக் கொள்கையை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அந்த மக்களுக்கு சிறந்த மானுட வாழ்வை பெற்றுக் கொடுப்பதற்கு சுதந்திர வர்த்தக கொள்கையில் செயற்படுவதற்காக தேவைப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். சோஷலிஸ பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான தொழில் நுட்ப அறிவையும், நவீன தொழில் நுட்ப வெற்றிகளையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

06. ஏகாதிபத்திய மற்றும் ஏகாதிபத்திய சார்பு நாடுகளுடனும், அமைப்புகளுடனும் வரலாறு பூராவும் ஏற்படுத்திக் கொண்டுள்ள அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் சம்பந்தமாக நாட்டு மக்களின் செயல் ரீதியிலான

ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் முறையான திறனாய்வின் பின்னர் மக்களை பாதிக்கக் கூடிய அவ்வாறான ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

07. உலகின் ஏகாதிபத்திய சார்பு பொம்மை மற்றும் அனுசரணை அரசாங்கங்களும், மக்கள் விரோத சர்வாதிகார அரசாங்கங்களும் மக்களை கொடுமைப்படுத்துவதை கண்டிப்பதோடு, அதற்கு எதிராக உருவாகும் மக்கள் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

08. உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச நாணய நிதியம் ஆகிய ஏகாதிபத்திய பொருளாதார அரசியல் நோக்கங்களுக்காக செயற்படும் நிறுவனங்களிலிருந்து வெளியேறுவதுடன், அந்த நோக்கங்களுக்கு எதிராக உருவாக்கப்படுவதும் செயற்படுவதுமான நிறுவனங்களுடன் ஒத்துழைப்போடு செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

09. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல், யுத்த நோக்கத்திற்காக உலகம் பூராகவும் நடந்து வரும் மனித உரிமை மீறல் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களுக்கு எதிராக அந்த மக்களோடு இணைந்த போராட்டத்திற்கு செயல் ரீதியில் தலையீடு செய்யப்படும்.

இன்றைய நிலையில் சமூகத்தில் உக்கிரமடைந்துள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் இல்லாவிட்டாலும் விவாதத்திற்குட்பட்டுள்ள சில துறைகள் சம்பந்தமாகவாவது தீர்வுகளை முன்வைக்கவும், அந்த பிரச்சினைகள் சம்பந்தமாக பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தில் ஆராய்வதற்கும் இந்த ஆக்கம் முயற்சித்துள்ளது. அந்த பிரச்சினைகளுக்கான தீர்வு, நவ தாராளமய முதலாளியத்தை தோற்கடிப்பதன் ஊடாகவும், இடதுசாரிய மாற்றீடை கட்டியெழுப்புவதன் ஊடாகவுமே உள்ளதென்பது உறுதியாகும் நிலையில் மேல்பூச்சு அரசியல் செல்லுபடியாகாதென்பது மேலும் உறுதியாகிறது. போலி பயனீட்டுவாத பெயர் பலகையோடு சரிந்து விழும் நாறிக்கிடக்கும் சமூக முறைக்கு முட்டுக் கொடுக்க நாம் தயாராக இல்லை என்பதுடன், “செய்யக் கூடியது என்ன?” என்ற கேள்விக்கு விடை காண்பதை விட “செய்ய வேண்டியது என்ன?” என்ற கேள்விக்கு விடை தேடுவதே எமது நிலைப்பாடாகும். உலக கம்யூனிஸ நாடுகளின் தோல்விகள், பின்வாங்குதல்கள் மற்றும் சரிவுகளின் முன்னால் 25 வருடங்களுக்கு பின்னர் இலங்கை இடதுசாரிய அமைப்பினால் எடுக்கப்படும் இந்த நடவடிக்கை சமூகம் என்ற வகையில் பாரிய வளர்ச்சிப் பாய்ச்சலின் முதலாவது நிமிடமாவதைக் காண்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**முன்னிலை சோசலிச கட்சி**

அன்பளிப்பு 200/=

**இடதுசாரிய நடவடிக்கை முன்னிலை சோசலிச கட்சி**